
மாயம்
செய்தாயோ!
பிரேமா
மாயம்
செய்தாயோ!
பிரேமா

# முன்னுரை

அன்பார்ந்த வாசகர்களே,

உங்களை என்னுடைய ஏழாவது கதையில் சந்திப்பதில் மிகவும் சந்தோஷமடைகிறேன். உங்களின் தொடர் ஆதரவிற்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்தக் கதையில் பெண்கள் சந்திக்கக் கூடிய பிரச்சனையைப் பற்றி எழுதி உள்ளேன். வாசகர்கள் என்னுடைய கதைகளைப் படித்து முடிக்கும் பொழுது சந்தோஷ மனநிலையில் இருக்க வேண்டும் என்பதே எனது ஆசை. அதனால் அந்தப் பிரச்னைகளின் அடி ஆழம் வரை சென்று அவற்றை விளக்காமல் மேலோட்டமாகவே எழுதி, இதை ஒரு காதல் கதையாகவே படைத்துள்ளேன். இக்கதையினை படித்துவிட்டு உங்களது கருத்துக்களை எனது premaarumugam@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு தெரியப்படுத்துங்கள்.

என்னுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் 'அருணோதயம்' திரு. அருணன் ஐயா அவர்களுக்கு என்றென்றும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிக்கு,

பிரேமா

# மாயம் செய்தாயோ!

## 1



சிங்காரச் சென்னையில் காலை ஐந்து மணிக்கே மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும். ஆறரை மணியில் இருந்தே பள்ளி செல்லும் குழந்தைகளை சாலையில் காணலாம்.

காலை ஆறரை மணிக்கு அந்த மத்திய தர வீட்டில் இருப்பவர்கள் கல்லூரிக்கும், வேலைக்கும் செல்ல வேண்டி இருப்பதால் ஏற்படும் பரபரப்பையும் மீறி இன்று அங்கு குதூகலம் எட்டிப் பார்த்தது.

''ஹேப்பி பர்த்டே அருண்!'' என்று வாழ்த்திக் கொண்டே கிரிக்கெட் விளையாடத் தேவையான மட்டை ஒன்றைப் பரிசளித்த ஜீவாவிற்கு வயது இருபத்தி ஏழு. பொறியியல் கல்லூரியில் லெக்சரராகப் பணியாற்றுகிறான்.

''தேங்க்ஸ் அத்தான். பேட் சூப்பரா இருக்கு'' என்று நன்றி சொல்லி அருண் வாங்கிக் கொண்டான்.

''ஹேய்! பேட்டா ஜீவா? சூப்பர்'' என்று சொல்லிக் கொண்டே மதுமதி அங்கே வந்தாள்.

இன்று பிறந்த நாள் கொண்டாடும் அருண் பொறியியல் கல்லூரியில் முதலாண்டு மாணவன். அவனது அக்கா மதுமதி வேறொரு பொறியியல் கல்லூரியில் இறுதி ஆண்டு பயில்கிறாள்.

''அவனுக்கு பேட் வாங்கிக் கொடுத்திட்டே! எனக்கு என்ன வாங்கிட்டு வந்தே ஜீவா?'' என்று மதுமதி கேட்டதும் ஜீவா விழித்தான்.

'இன்னைக்கு ஜீவா செத்தான். பக்கத்து ஏரியாவில் வீடு இருக்கு என்பதற்காக வேலைக்குப் போகும் முன்னாடி காலங்கார்த்தாலே இங்கே வந்து மாட்டிக்கிட்டான்' என்று சமையலறையில் வேலையாக இருந்த மதுமதியின் தாய் கீதா தன் மனதுக்குள் தன் அண்ணனின் மகனுக்காகப் பரிதாபப்பட்டார்.

''உனக்கா? கிஃப்ட்டா? எதுக்கு? உன் தம்பிக்கு தானே இன்னைக்கு பர்த்டே. உனக்கு எதுக்கு நான் ஏதாச்சும் வாங்கித் தரணும்?'' என்று ஜீவா கேட்கவும்,

''அவனுக்கு பேட் வாங்கிட்டு வந்தீங்க இல்ல. எனக்கு அட்லீஸ்ட் ஒரு பட்டனாவது நீங்க வாங்கிட்டு வர வேண்டாமா அத்தான்?'' என்றாள்.

''அந்த அத்தானை இன்னொரு தடவை அழுத்திச் சொல்லு. நான் காது குளிரக் கேட்டுக்கிறேன்'' என்று ஆசையாக ஜீவா கேட்க,

''என் கேள்விக்கு பதில் சொல்லுடா ஜீவா'' என்றாள்.

''இதுக்கு நான் கேட்காமலே இருந்திருக்கலாம்'' என்று புலம்பிய ஜீவா,

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அத்தையும், மாமாவும் அருணுக்கு என்ன கிஃப்ட் வாங்கித் தந்தாங்க?'' என்று அவளையே கேள்வி கேட்டான்.

''டிரஸ் வாங்கித் தந்தாங்க.''

''ம்ம்ம்... அவனுக்கு டிரஸ் வாங்கித் தந்தவங்க உனக்கு ஒரு துப்பட்டாவாச்சும் வாங்கித் தந்தாங்களா?''

''எனக்கு ஒண்ணும் வாங்கித் தரலை. இன்னைக்கு அருணுக்கு தானே பர்த்டே?! அப்போ அவனுக்குத் தானே டிரஸ் வாங்கித் தருவாங்க'' என்று நியாயம் சொன்னவளின் நியாயம் ஜீவாவிற்கு புரிபடவில்லை.

''அதைத் தானே நானும் படிச்சு படிச்சு சொல்லிக்கிட்டு இருக்கேன். நீ தான் எனக்கு என்ன வாங்கிட்டு வந்தேன்னு என்னை நச்சு பண்ணிக்கிட்டு இருக்கே!'' என்று ஜீவா அலுத்துக் கொள்ளவும்,

''ஹேய்! அவங்களும் நீயும் ஒண்ணா? நீ எப்படி என்னை விட்டுட்டு அருணுக்கு மட்டும் வாங்கிட்டு வந்தே?'' என்று மீண்டும் அவள் அதே கேள்வியிலேயே நிற்க,

அருண் அவர்களின் சம்பாஷணையில் இடை புகுந்தான்.

''அத்தான், இன்னைக்கு மட்டும் அவளுக்கு ஏதாச்சும் வாங்கிக் கொடுத்தீங்க... அப்புறமா நான் உங்க கூட சண்டைக்கு வருவேன்.''

தம்பியின் புறம் திரும்பிய மதுமதி, ''நீ எதுக்குடா ஜீவா கூட சண்டை போடப் போறே?'' என்று அவனிடம் எகிறினாள்.

''பின்னே... உன் பர்த்டேக்கு அத்தான் என்ன வாங்கிக் கொடுத்தார்? காஸ்ட்லியா ஒரு சுடிதார். ஆனா எனக்கு வெறும் பேட்'' என்றதும்,

''அம்மா, பாருங்கம்மா இந்த அருணை. என் மேலே கண்ணு வைக்கிறான்'' என்று சமையலறையை நோக்கி மதுமதி கத்தினாள்.

கீதா வெளியே எட்டிப் பார்த்தார்.

''இங்க பாருங்க. நீங்க எப்படியோ அடிச்சுக்கோங்க. கூடிக்கோங்க. என்னை பஞ்சாயத்து பண்ணக் கூப்பிடாதீங்க. உங்களை நம்பி நான் பஞ்சாயத்து பண்ண வருவேன். நடுவிலேயே ரெண்டு பேரும் ஒண்ணு சேர்ந்துக்கிட்டு பாசமலர் படம் ஓட்டிக் காண்பிப்பீங்க. இதெல்லாம் எனக்கு தேவையா?'' என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

''ஜீவா...'' என்று சொல்லிக் கொண்டே மது தன் கையை நீட்டினாள்.

''நான் ஒண்ணும் வைச்சு இருக்கலையே! பணம் வேணா தரவா?''

''அதெல்லாம் வேண்டாம்'' என்று சொன்னவள் அவன் சட்டைப் பாக்கெட்டை ஆராய்ந்தாள்.

''ஹேய் மதி! என்ன பண்ணுறே?''

''ஏதாச்சும் சிக்குதான்னு பார்க்கிறேன் ஜீவா'' என்றவள் அங்கே ஒன்றும் இல்லை என்றதும் அவன் சட்டையில் இருந்த பேனாவை உருவினாள்.

''பார்க்கர் பென். நான் இதை வைச்சுக்கிறேன் ஜீவா'' என்றதும்,

''ஹேய் மதி! அதைக் கொடு. ஷர்ட்டில் பேனா இல்லைன்னால் எனக்கு எப்படியோ வித்தியாசமாய் இருக்கும்.''

''வித்தியாசமாய் இருக்குமா? இல்லை அழகு... அதாவது கெத்து குறைஞ்சிடும் என்று நினைக்கிறாயா? நல்ல டிப்டாப்பா தான்டா காலேஜ் போகிறே! அப்ப தான் உன் காலேஜ் பொண்ணுங்க உன்னை சைட் அடிப்பாங்கன்னு பார்க்கிறாயா?'' என்று மதுமதி கிண்டல் பண்ணவும் ஜீவா ஆத்திரமடைந்து கத்தினான்.

''ஷட் அப் மதி! என்ன பேசுறோம் என்று யோசிச்சுப் பேசு. என் ஸ்டூடண்ட்ஸை போய் நான்... என்னால நினைச்சுக்கூடப் பார்க்க முடியலை. அருவருப்பா இருக்கு'' என்று அவன் முகம் சுளிக்கவும்,

''சாரி அத்தான். ரியலி சாரி. நான் ஏதோ கிண்டல் பண்ணணும் என்ற வேகத்திலே என்ன சொல்லுறோம் என்று புரிஞ்சுக்காமல் சொல்லிட்டேன். ரொம்ப சாரி'' என்று அவள் உணர்ந்து மன்னிப்பு கேட்டதும்,

ஜீவாவின் கோபம் தணிந்தது.

ஜீவா குரலை உயர்த்திக் கத்தியதும் எட்டிப் பார்த்த கீதா, மதுமதி மன்னிப்பு கேட்க ஆரம்பித்ததும் மீண்டும் தன் வேலைகளை தொடரச் சென்று விட்டார்.

''விடு மதி. ஆனால் இனிமேல் யோசிச்சுப் பேசு. நான் கிளம்புறேன். எனக்கு காலேஜுக்கு டைம் ஆச்சு'' என்றவன் அருணுக்கு இன்னொரு முறை வாழ்த்து தெரிவித்துவிட்டு,

''அத்தை நான் கிளம்புறேன். சாயங்காலம் பார்க்கலாம்'' என்று உள் நோக்கிக் குரல் கொடுத்தான்.

''சாரி ஜீவா. எனக்கு வேலை இருக்கு. உன் கூடப் பேச நேரம் இல்லை. பத்திரமா போயிட்டு வா'' என்று கீதா அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

ஜீவா வெளியேறிச் சென்றவுடன் கீதாவும் தன் வேலைகளில் மூழ்கிவிட அருண் தனது சகோதரியின் அருகில் வந்து, ''அக்கா உன் கிஃப்ட் எங்கே? எஸ்கேப் ஆகலாம் என்று பார்த்தியா?'' என்று நக்கல் பண்ண,

''சே! சே! அப்படியெல்லாம் இல்லைடா. நான் அதை உனக்கு கடைசியா கொடுக்கணும் என்று நினைச்சு தான் முதல்ல தராமல் தள்ளிப் போட்டேன். இப்ப தான் ஜீவா வந்துட்டுப் போயிட்டானே'' என்று சொல்லிக் கொண்டே தனது அறையில் இருந்து ஒரு பரிசுப் பொருளை எடுத்து வந்து தந்தாள்.

''என்ன மது வாங்கினே?''

''பிரிச்சுப் பாருடா. அதுக்குள்ளே என்ன அவசரம்?'' என்று கூறியவள் புன்னகையுடன் அருகே நின்றிருந் தாள்.

உள்ளே அழகிய கைக் கடிகாரம் இருந்தது.

''ஹேய் மது! வாட்ச் சூப்பரா இருக்கு. காஸ்ட்லியா இருக்குமே! உன் நிதி நிலைமை இதுக்கு இடம் தராதே. உண்மையைச் சொல்லு. அப்பாவைச் சோப்பு போட்டு அப்பாகிட்டே கொஞ்ச பணம் வாங்கினே தானே?'' என்று அருண் தன் அக்காவை சந்தேகப்பட்டு கேள்வி கேட்க,

அங்கு வந்த அவர்களின் தந்தை ராஜனின் கைக ளோடு தன் கைகளை கோர்த்துக் கொண்டவள்,

''நான் எதுக்குடா அப்பாவை சோப்பு போடணும்? நான் சும்மா கேட்டாலே அப்பா பணம் தருவார். அவர் என் அப்பா. இல்லப்பா?'' என்று தந்தையைப் பார்த்துக் கேட்டாள்.

''ஆமாடா மது!'' என்று ராஜன் உடனே தலையாட்டி அவளது கூற்றை ஆதரித்தார்.

''ம்ம்ம்...'' என்று தந்தையைப் பார்த்து முறுவலித்த வாறு சொல்லியவள் தன் தம்பியிடம் திரும்பி, ''கேட் டுக்கோ!'' என்றாள்.

மேலும், ''நான் என் பாக்கெட் மணியை சேர்த்து வைச்சு உனக்காக வாங்கினேன் தெரியுமா?'' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னாள்.

கீதா, ''இது என்ன புது பழக்கம் அருண்? கிஃப்ட் கொடுத்தா தாங்க்ஸ் சொல்லி வாங்குறதை விட்டுட்டு அவளை எதுக்கு இப்போ குறை சொல்லிக்கிட்டு இருக்கே?'' என்று மகனைக் கடிந்தார்.

இதற்கு அருண் பதில் சொல்லும் முன் அவனை முந்திக் கொண்டு மதுமதி பதிலளித்தாள்.

''இப்ப எதுக்கும்மா பர்த்டேயும் அதுவுமா அவனைத் திட்டுறீங்க. உங்களை யாராச்சும் இப்பக் கூப்பிட்டோமா என்ன?'' என்று மது தன் தாயிடம் சண்டைக்குச் செல் லவும்,

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வரைக்கும் உங் களுக்கு இடையே பஞ்சாயத்து பண்ண வரக்கூடாதுன்னு தெளிவாத் தான் இருந்தேன். ஏதோ ஞாபகத்திலே நான் வந்ததுக்கு...'' என்று அலுத்துக் கொண்டே அகன்றார்.

''மது வாட்ச் சூப்பரா இருக்கு. ஆனா இவ்வளவு காஸ்ட்லியா... நீ பாக்கெட் மணி எல்லாம் சேர்த்து வைச்சு வாங்கி இருக்கத் தேவையே இல்லை'' என்று அருண் கூறவும்,

''எனக்கு இருக்கிறதே நீ ஒரே தம்பி. உனக்கு செலவு பண்ணாம வேற யாருக்குடா நான் செய்யப் போறேன்'' என்றாள்.

''அதுக்கில்லை மதுக்கா. இது உனக்கு ஃபைனல் இயர். என்னோட அடுத்த பர்த்டேக்கு நீ வேலைக்குப் போயிடுவே. அடுத்த வருஷம் இந்த வாட்ச்சை வாங்கிக் கொடுத்து இருக்கலாம் இல்ல...''

''அருண், அடுத்த வருஷம் உனக்கு தங்கத்திலே ஏதாவது வாங்கித் தரேன்'' என்று ஆசையுடனும் பாசத் துடனும் சொன்னாள்.

பிள்ளைகளின் இந்தப் பாசப் பரிமாற்றத்தை ஒரு தந்தைக்கே உரிய பெருமையுடன் ராஜன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அன்று மாலை மதுமதி கல்லூரியில் இருந்து வீடு திரும்பினாள். வந்த உடன் அருகில் இருக்கும் கோவி லுக்குச் சென்று தம்பியின் பேரில் அர்ச்சனை பண்ணி விட்டு வந்தாள்.

''இந்தாங்கம்மா பிரசாதம்'' என்று தாயிடம் கோவில் பிரசாதத்தை நீட்டியவள்,

''அருண் இன்னுமா வரலை?'' என்று கேட்டாள்.

''அவன் அப்பவே வந்துட்டு பிரண்ட்ஸோட சினி மாவுக்குப் போயிட்டான் மது'' என்று கீதா சொன்னதும்,

''என்ன பிரண்ட்ஸோட சினிமாவா? என்னோட போன பர்த் டேக்கு நான் சினிமா போக பெர்மிஷன் கேட்டேன் இல்ல... அப்ப என்னை அனுப்புனீங்களா? இப்ப எதுக்கு அவனை மட்டும் போக விட்டீங்க?''

''அவன் பையன். அதனால போக விட்டேன்.''

''அப்ப பையனா இருந்தால் தான் வெளியே போக விடுவீங்களா? பொண்ணுங்க சினிமாவுக்குப் போகக் கூடாதா?''

''ஏன் நாங்க உன்னை சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போனது இல்லையா?''

''நான் கேட்பது பிரண்ட்ஸோட... என்னை விட மூணு வயசு சின்னப் பையன். அவனை இந்த வயசிலேயே பிரண்ட்ஸுடன் வெளியே போக விடுறீங்க. ஆனா என்னை விட மாட்டேன் என்று சொல்லுறீங்க. அப்படித் தானே?'' என்று மூச்சிரைக்க கத்தியவளைப் பார்த்து,

''நீ மதிய ஷோக்கு போ!'' என்றார்.

''அவன் ஈவினிங் ஷோக்கு தானே போயிருக்கான்'' என்று அப்பொழுதும் அவள் விடாமல் வாதாடினாள்.

''அதான் அப்பவே சொன்னேன் இல்ல... அவன் பையன் என்று.''

''அப்படின்னா அவனுக்கு ஒரு நியாயம். எனக்கு ஒரு நியாயமா?'' என்று மதுமதி எகிற,

''அப்படித் தான் என்று வைச்சுக்கோ'' என்று சொல்லி விட்டு கீதா அகன்றதும் மதுமதி கோபத்துடன் தனது அறைக்குள் சென்று அமர்ந்தாள்.

வேலையில் இருந்து திரும்பிய ராஜன் தன் மகள் கொதித்துப் போய் அமர்ந்திருப்பதைப் பார்த்து விஷயம் என்னவென்று மனைவியிடம் சென்று விசாரித்தார்.

அதன் பின் மகளைச் சமாதானம் செய்ய அவளது அறைக்குள் சென்றார்.

''அப்பா, முதல்ல நான் ஒண்ணு சொல்லிடுறேன். அம்மா செஞ்சது கரெக்ட்ன்னு சொல்லக் கூடாது. நீங்களும் நானும் ஒரே ரத்தம். நீங்க எனக்கு தான் சப்போர்ட் பண்ணணும்.'' என்று அவர் பேச ஆரம்பிக்கும் முன்னாடியே அவள் எச்சரிக்க,

அவர் சிரித்துக் கொண்டே அவள் அருகில் அமர்ந்து கொண்டு, ''நான் எப்பவுமே என் மதுக்குட்டிக்கு தான் சப்போர்ட் பண்ணுவேன். அருண் நம்மளை விட்டுட்டு சினிமாக்கு போனதால நாம அவனை விட்டுட்டு எங்கேயாவது போவமா?'' என்றவுடன் உற்சாகமாக மாறினாள்.

மகளது உற்சாகத்தைப் பார்த்த ராஜன், உன்னை எனக்குத் தெரியாதா என்பது போல் முறுவலித்துக் கொண்டார்.

''அப்பா, நாம நாளைக்கு எங்கேயாவது போறோம். ஆனா கடைசி நிமிஷத்திலே அருண் பாவம் என்று அவனையும் கூட்டிட்டுப் போகக் கூடாது'' என்றாள்.

''நான் அவனைக் கூப்பிட மாட்டேன். ஆனா இதே டயலாக்கை சொல்லி நீ அவனைக் கூப்பிடாமல் இருந்தால் சரி'' என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே நகர்ந்தார்.

அன்று இரவு எட்டு மணிக்கு ஜீவா தன் அத்தையின் வீட்டிற்கு வந்தான்.

''மதி, இந்தா உனக்கு புது பென் வாங்கிட்டேன். என் பென்னைக் கொடு'' என்று தன் பேனாவைத் திரும்பக் கேட்டான்.

அவன் புதிதாக வாங்கிக் கொண்டு வந்திருந்த பேனாவை வாங்கிப் பார்வையிட்டாள்.

அது அவனுடைய பழைய பேனாவைக் காட்டிலும் விலை உயர்ந்ததாகவும் அழகாகவும் இருந்தது.

''ஜீவா, உன்னுடைய பழைய பேனாவை யாராச்சும் உனக்கு கிஃப்ட்டா கொடுத்தாங்களா?''

''இல்லையேம்மா. ஏன் கேட்கிறே?''

''அது உனக்கு சென்ட்டிமென்ட்டான பேனாவா?''

''அப்படி எல்லாம் இல்லை மதி.''

''அப்படின்னா புது பேனாவை நீயே வைச்சுக்க. பழைய பேனாவையே நான் வைச்சுக்கிறேன்.''

''இல்லை மது. அது யூஸ் பண்ணின பேனா.''

''பரவாயில்லை ஜீவா. நீ தானே யூஸ் பண்ணினே. நான் அதையே வைச்சுக்கிறேன். இது இன்னும் அழகா இருக்கு. அதனால இதையே நீ உன் ஷர்ட்டில் வைச்சுக்க'' என்று சொல்லி அதை அவன் சட்டையில் செருகியும் விட்டாள்.

அவன் அவளைப் பார்த்து முறுவலித்துவிட்டு தன் வீட்டிற்கு சென்றான்.

## 2



அடுத்த நாள் மாலை, ''அம்மா! அம்மா!'' என்று உற்சாகமாகக் கூவிக் கொண்டே அருண் வீட்டிற்குள் நுழைந்தான்.

''எதுக்குடா வரும் போதே என்னை ஏலம் போடுறே?''

''ஏலமா? நீங்க முன்னே பின்னே ஏலம் நடக்கிறதைப் பார்த்ததில்லையா? ஏலம் விடும் போது மூணு தடவை சொல்லுவாங்க. நான் ரெண்டு தடவை தான் சொன்னேன்.''

''டேய்! மொக்கை போடாமல் விஷயத்துக்கு வா.''

''இதப் பாருடா. அம்மா வாயிலே கூட காலேஜ் பசங்க பாஷை சரளமா வருது'' என்று தாயைக் கிண்டல் பண்ண,

''எல்லாம் உன்கிட்டே கத்துக்கிட்டது தான். விஷயம் சொல்லப் போறியா... இல்லை நான் வேலையைப் பார்க்கப் போகட்டுமா?'' என்று கீதா கேட்டுக் கொண்டிருக்கும் போதே மதுமதியும் அவர்கள் அருகில் வந்து நின்றாள்.

''எங்க காலேஜில் இருந்து டூர் கூட்டிட்டுப் போறாங்க. டெல்லிக்கு'' என்று உற்சாகமாகக் கத்தினான்.

''எத்தனை நாளைக்குடா அருண்?'' என்று கீதா விசாரிக்கவும்,

''பத்து நாள் மா'' என்றான்.

''அப்பாகிட்டே கேளுடா. பணம் தந்தால் போயிட்டு வா'' என்றார்.

மதுமதி தன் தாயிடம், ''எங்க காலேஜிலே கோவா கூட்டிட்டுப் போனப்போ என்னைப் போக விட்டீங்களா? இப்போ இவனை மட்டும் டெல்லிக்கு அனுப்ப சம்மதிக்கிறீங்க. உங்களுக்கு ஏன்மா இந்த ஓர வஞ்சனை?'' என்று சண்டையிட ஆரம்பித்தாள்.

''அவன்...'' என்று கீதா தொடங்கியதும்,



''அவன் ஆம்பளை புள்ளை. நீ பொண்ணு. இதைத் தானே சொல்லப் போறீங்க. நீங்க சொல்லுறதைக் கேட்டுக் கேட்டு என் காது புளிச்சுப் போச்சு'' என்று அவள் கடுப்புடன் மொழிய,

''மது, காலம் கெட்டுக் கிடக்கும்மா. பொண்ணுங்களை அனுப்ப பயமா இருக்கு. மத்தவங்க அனுப்பலையான்னு கேட்காதே. என்னால இப்படித் தான் நடந்துக்க முடியும்'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டு அகன்றார்.

அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்று தனது அறைக்குள் நுழைந்தாள். அருண் அவள் பின்னோடு சென்றான்.

''அக்கா, இப்ப நான் டெல்லிக்கு போறது தானே பிரச்சனை. நான் டூர் போகலை. நீ வருத்தப்படாதே'' என்று அக்காவை சமாதானப்படுத்த முயற்சிக்க,

''நீ டூர் போறதாலே எனக்கு ஒண்ணும் வருத்தம் கிடையாதுடா. அம்மா என்னை விடலையேன்னு தான் எனக்கு வருத்தம். காலேஜ் டூர் போக முடியாமல் போச்சேன்னு நான் எத்தனை நாள் தெரியுமா வருத்தப்பட்டேன். அந்த வருத்தம் உனக்குமா... வேண்டாம் அருண். நீ போயிட்டு எஞ்சாய் பண்ணிட்டு வா'' என்றாள்.

அவனது பாசமிகு அக்காவாய் பேசிப் பேசி தம்பியை சம்மதிக்க வைத்தாள்.

சிறிது நேரத்தில் ராஜன் வந்தார். அருணுடைய சுற்றுலா பற்றி யாரும் வாயை திறக்கவில்லை.

அருண் தன்னால் வருத்தப்படக் கூடாது என நினைத்த மதுமதி சுற்றுலா பற்றி எதுவும் பேசக் கூடாது என்று முடிவு எடுத்தாள். ஆனால் தனக்கு மட்டும்

அனுமதி மறுக்கப்பட்டது அவளுக்குக் கஷ்டமாக இருந்த.

ராஜன் டீ குடித்து முடித்ததும் கீதா அவரிடம், "அண்ணி போன் பண்ணி நம்ம நாலு பேரையும் வரச் சொன்னாங்க. ஏதோ முக்கியமான விஷயமாம். வாங்க போகலாம்" என்று கூறினார்.

மதுமதிக்கு எங்கும் செல்லப் பிடிக்கவில்லை. ஆனால் மறுத்துப் பேசினால் திரும்பவும் ஒரு சண்டை கிளம்பிடுமோ எனப் பயந்து ஜீவாவின் வீட்டிற்கு செல்லக் கிளம்பினாள்.

அருணும் மதுவும் ஒரு வண்டியிலும், கீதாவும் ராஜனும் ஒரு வண்டியிலும் கிளம்பினார்கள்.

ஜீவாவின் பெற்றோர், மதுமதியின் பெற்றோர், ஜீவா, மதுமதி, அருண் என அனைவருமே ஜீவாவின் வீட்டில் கூடி இருந்தனர்.

பெரியவர்கள் தனியாகப் பேசிக் கொண்டிருந்தனர். ஜீவாவும் அருணும் தனியே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். மதுமதி மட்டும் தனித்து அமர்ந்து பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தாள்.

"என்னடா உங்க அக்கா ஓவர் சைலன்ட்டா இருக்கா?" என்று அருணின் காதை ஜீவா கடிக்க, அருண் நடந்ததைக் கூறினான்.

"ஓ! அப்ப உன்னோட டெல்லி டூர் தான் மதுமதிங்கிற ரேடியோவை ஆஃப் பண்ணி வைச்சிடுச்சா?" என்று ஜீவா வினவினான்.

"அண்ணி, என்னமோ முக்கிய விஷயம் பேசணும் என்று சொன்னீங்க. என்ன விஷயம்?" என்று கீதா தொடங்கி வைத்தார்.



"கீதா, நம்ம ஜீவாக்கு இருபத்தி ஏழு வயசாச்சு இல்ல. அதான் கல்யாணம் பண்ணலாம் என்று நானும் உன் அண்ணனும் முடிவு செஞ்சு இருக்கோம்" என்று ஜீவாவின் தாய் கலா சொன்னதும்,

கீதா முகம் மலர்ந்தவாறே, "ரொம்ப நல்ல விஷயம் அண்ணி. உடனே பொண்ணு பார்க்கிற வேலையை ஆரம்பிச்சிடலாம்" என்று அண்ணியிடம் சொன்னவர்,

"சொல்லு ஜீவா. உனக்கு எப்படியாப்பட்ட பொண்ணு வேணும்?" என்று தன் அண்ணன் மகனைப் பார்த்து கேள்வி எழுப்பினார்.

'இந்த அம்மா ஏன் இப்படி சொதப்புறாங்க? இப்போ இந்தக் கல்யாண விஷயமா பேசலைன்னு யாராச்சும் அழுதாங்களா? இப்படியா எல்லோர் முன்னாடியும் கேட்கிறது?

இந்த அத்தை... அதுக்கும் மேல. உனக்கு என்ன மாதிரி பொண்ணு வேணும் ஜீவான்னு கேட்கிறாங்க. ஐயோ! இவங்க ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு எனக்கு ஆப்பு அடிச்சிருவாங்க போலவே' என்று நொந்து கொண்டவன்,

அவர்களது உரையாடல் காதில் விழாத தினுசில் அருணுடன் பேசிக் கொண்டிருந்தான்.

அவனின் தந்தை கனகாரியமாக, "ஜீவா! அம்மாவும், அத்தையும் உன்கிட்டே தான் ஏதோ கேட்கிறாங்க பாரு" என்று அவனது கவனத்தை திசை திருப்ப முயன்றார்.

'இவருமா? அது சரி மனைவிக்கும், தங்கைக்கும் ஏத்தவரா இருக்க வேண்டாமா?!' என்று மனதிற்குள் அவன் தன் தந்தையைக் கேலி செய்து கொண்டிருந்தான்.

வேறு வழியில்லாமல் வேண்டா வெறுப்பாக, "என்னம்மா கேட்டீங்க?" என்று கேட்டு வைத்தான்.

"உனக்கு எப்படியாப்பட்ட பொண்ணு பார்க்கணும் என்று நான் தான் கேட்டேன்" என்று கீதா பதில் சொல்ல,

"அதை அப்புறம் பார்த்துக்கலாம் அத்தை. இப்ப என்ன அவசரம்?" என்று விஷயத்தை தள்ளிப் போட முயன்றான்.

ஆனால் கீதா விடுவதாக இல்லை. சுபஸ்ய சீக்கிரம் என்று முடிவெடுத்தவராய் அதே கேள்வியை மீண்டும் கேட்க,

இம்முறை அனைவருமே அவனின் பதிலுக்காக ஆர்வமாக அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டு அமைதி காக்க...

'இன்னைக்குன்னு பார்த்து மது அமைதியா இருக்காள். இவங்க வேற நேரங் காலம் தெரியாமல் என்னை நச்சரிக்கிறாங்க. என்ன செய்யலாம்?' என்று யோசித்தான்.

வேற வழியில்லை. தனது நினைப்பைச் சொல்லும் நேரம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த ஜீவா மதுமதியை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு, தன் அத்தையின் கண்களைப் பார்த்தவாறே,

"ஏன் அத்தை, நீங்க என்னை மாப்பிள்ளையா ஏத்துக்க மாட்டீங்களா?" என்று கேட்டான்.

அவன் சொல்ல வருவதும், தான் நினைப்பதும் சரிதானா என்று கீதா திகைத்துப் போனார்.

அவன் நினைப்பு ஒரு புறம் இருக்கட்டும். இதற்கு அண்ணனும், அண்ணியும் என்ன சொல்லப் போகிறார்கள் என்று கீதா நினைத்துக் கொண்டிருக்க,



கலா தன் மகனிடம், "அப்படின்னா நீ நம்ம மதுவைக் கட்டிக்கிறேன் என்று சொல்லுறியா?" என்று ஆச்சரியத்துடனும், ஆவலுடனும் கேட்க,

"ஆமாம்மா. எனக்கு மதியை கட்டி வையுங்க" என்று ஆமோதித்தான்.

கலா, "கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குடா" என்று சொல்லி கீதாவின் வயிற்றில் பால் வார்த்தார்.

கீதா ஜீவாவைப் பார்வையிட்டார். ஐந்தே முக்கால் அடியும், அதற்கேற்ற பருமனும், மாநிறமும், அலை அலையாய் படியும் கேசமும் எந்தப் பெண்ணையும் வசீகரிக்கும்.

எந்த ஆணும் நின்று திரும்பிப் பார்க்கும் அழகுடைய என் பெண்ணிற்கு இவன் பொருத்தமானவன். 'யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு மாப்பிள்ளை!' என்று கீதா பெருமிதம் அடைந்தார்.

இரு தந்தைகளுக்கும் இந்த திருமணத்தில் முழு திருப்தி என்பது அவர்களது மலர்ந்த முகத்திலேயே தெரிந்தது.

அருணைப் பற்றி கேட்கவே வேண்டாம். அவனுக்கு ஜீவா ஆதர்ஷ நாயகன். அதனால் அவனுமே இந்த திருமண விஷயம் கேட்டு குதூகலித்தான்.

இரு தாய்மார்களையும் கையில் பிடிக்க முடியவில்லை. முடிவு உடனே தெரிய வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர்கள் மதுமதியைப் பார்த்து,

"நீ என்ன சொல்லுறே மது?" என்று கேட்டனர்.

அவள் ஏற்கனவே ஜீவாவின் பதிலில் திகைத்துப் போய் இருந்தாள். அவர்கள் அவள் புறம் திரும்பிக் கேட்டதும் சற்றும் தாமதிக்காமல்,

''எனக்கு ஜீவா மேலே அப்படி ஒரு எண்ணம் இல்லைம்மா'' என்று கூறினாள்.

அவளது மறுப்பான பதில் அங்குள்ளவர்களின் மனதை வாட வைத்தது என்றால் ஜீவாவின் மனதை சுருங்க வைத்தது.

'நம்ம ஆசையை இன்னைக்கு சொல்லி இருக்கக் கூடாதோ? கடுப்பிலே இருந்ததால பட்டுன்னு வேண்டாம் என்று சொல்லிட்டாளா? ஆனால் டூர் போறதுக்கும், கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? அப்படின்னா ஏற்கனவே இருக்கிற கடுப்பிலே வேண்டாம் என்று பதில் சொல்லலையா? நிஜமாவே அவளுக்கு என் மேல் ஆசை இல்லையா?' என தனக்குள் வருந்தினான்.

இரு தாய்களும் அதிர்ந்து போய், ''என்ன மது...'' என்று அவளை விசாரிக்க ஆரம்பிக்க,

ஜீவா அவர்களைப் பார்த்து, ''அம்மா! அத்தை!'' என்று அதட்டலாக விளித்தவன், ''ரெண்டு பேரும் வேற வேலை இருந்தால் போய் பாருங்க'' என்று அங்கிருந்து அவர்களை நகர்த்தினான்.

மனமே இல்லாமல் இரு தாய்களும் அங்கிருந்து நகர்ந்து அடுக்களைக்குள் சென்றனர்.

ஜீவா ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படிப்பது போல் பாவனை செய்தான்.

ஜீவாவின் ஏமாற்றம் அவன் புத்தகத்தை தலை கீழாகப் புரட்டிக் கொண்டிருந்ததிலேயே அவன் தந்தைக்குப் புரிய... அவர் அவன் அருகே வந்து அவனது தோளை ஆதரவாக அணைத்தார்.



''நத்திங் பா. ஐயம் ஆல் ரைட்'' என்று கூறி புன்னகைக்க முயன்றான்.

ராஜன் தன் குடும்பத்தினரைக் கூட்டிக் கொண்டு தங்களது வீட்டிற்குச் செல்ல விரும்பினார். அப்பொழுது தான் ஜீவாவை அவனது பெற்றோர்களால் சமாதானப் படுத்த முடியும் என்று தீர்மானித்தார்.

அதனால் அவர் சமையலறை நோக்கி, ''கீதா, வா வீட்டுக்குக் கிளம்பலாம்'' என்று குரல் கொடுத்தார்.

கீதாவிற்கும் அதே எண்ணம் இருந்ததால் அவரும் உடனே வீடு செல்லக் கிளம்பினார்.

அருணுக்கு வெளியே வேலை இருந்ததால் அவன் மதுமதியின் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு சென்று விட்டான்.

அருண் தனியே சென்று விட்டதால் மதுமதி எப்படி வீடு வருவாள்? என்ன செய்யலாம்? என்று ராஜனும் கீதாவும் யோசித்துக் கொண்டிருக்க,

மதுமதி, ''நான் ஜீவா கூட வரேன் பா. நீங்க கிளம்புங்க'' என்று பெற்றவர்களைப் பார்த்துச் சொன்னவள்,

''ஜீவா, வா போகலாம்'' என்று அவன் முன் வந்து நின்றாள்.

ஜீவாவின் பெற்றோர் மட்டுமல்ல மதுமதியின் பெற்றோருமே ஆச்சரியம் அடைந்தார்கள்.

ஜீவாவிற்கு அவளிடம் தனியாகப் பேச வேண்டியிருந்ததால் அவன் அவளுடன் கிளம்பிச் செல்ல முடிவெடுத்தான்.

''நான் கொண்டு போய் விட்டுட்டு வரேன்'' என்று சொல்லி வண்டியைக் கிளப்பவும் நான்கு பெரியவர்களும் குழம்பிப் போனார்கள்.

'என்ன நடக்குது இங்கே? கொஞ்ச நேரத்துக்கு முன் னாடி நாம கேட்டது கனவா நனவா?' என்று திகைத்துப் போயினர்.

சம்பந்தப்பட்ட இருவரும் ஜோடியாக வெளியேறினர். கீதாவும், ராஜனும் கிளம்பாமல் அங்கேயே அமர்ந்து தங்களின் பிள்ளைகளைப் பற்றியும் அவர்களது முடிவு களைப் பற்றியும் பேச ஆரம்பித்தனர்.

ஜீவா தன்னுடைய தாய் தன்னிடம் திருமண விஷய மாக மேற்கொண்டு பேசும் முன்பு மதுமதியிடம் பேசி அவளது கருத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

அதனால் தெருமுனை தாண்டியதும், ''மதி நாம ரெண்டு பேரும் பீச்சுக்கு போவமா?'' என்று கேட்டான்.

''ஹையா! சூப்பர் ஜீவா. போகலாம்... தண்ணியிலே கால் நனைக்க விடுவாய் தானே?'' என்று கேட்டாள்.

'இவ இன்னும் வளரவே இல்லையே!' என்று ஜீவா எண்ணும்படி தான் அவளது அனைத்து நடவடிக்கை களும் அமைந்தன.

கீதா தன் அண்ணியிடம், ''ஜீவா இப்படிச் சொல்லு வான்னு நான் நினைச்சே பார்க்கலை அண்ணி. ஒரு பொண்ணுக்கு தான் ஒரு குழந்தையைப் பெத்து எடுக்கும் அந்த நிமிஷம் அதிக சந்தோஷமா இருக்கும். ஆனா நான் அன்னைக்கு சந்தோஷப்பட்டதை விட இன்னைக்கு ஜீவா அப்படிச் சொன்னதும் ரொம்ப சந்தோஷப்பட்டேன். எனக்கு சந்தோஷத்திலே பேச்சே வரலை'' என்றார்.

''நானுமே எதிர்பார்க்கலை கீதா. ஒரே வீட்டிலே வளரலைன்னாலும் ஒண்ணா வளர்ந்ததால அவன் மனசுக்குள் இப்படி ஒரு எண்ணம் இருக்கும் என்று நான் நினைச்சே பார்க்கலை'' என்று கலா சொன்னார்.

''நீங்க சம்மதிப்பீங்கன்னும் நான் எதிர்பார்க்கலை அண்ணி'' என்று கீதா சொன்னதும்,

''அவ நான் தூக்கி வளர்த்த பொண்ணு கீதா. ரொம்பப் பாசமானவள். என் மகன் மனசுக்கு பிடிச்சவள். இதை விட எனக்கு வேறு என்ன வேணும் சொல்லு?'' என்று கலா கேட்டதும்,

''நீங்க பெருந்தன்மையா உடனே ஒத்துக்கிட்டீங்க. ஆனா அவளுக்கு உங்க அருமை தெரியலையே. இப்படியா பட்டுன்னு வேண்டாம் என்று சொல்லுவாள்'' என்று கீதா பொரியவும்,

ராஜன் தன் மனைவியிடம், ''கீதா இப்ப எதுக்கு அவளைக் கரிச்சுக் கொட்டுறே? ஜீவாவுக்கு மதுவைப் பிடிச்சது. அதை அவன் எல்லோர் முன்னாடியும் சொன் னான். அதே மாதிரி அவ கருத்தை அவள் சொன்னாள். இதிலே எதுக்கு தப்பு கண்டு பிடிக்கிறே?'' என்று கேட்டார்.

''உங்க பொண்ணை ஒரு வார்த்தை குறையா சொல் லிடக் கூடாது. உடனே அவளுக்கு சப்போர்ட் பண்ண வந்துடுவீங்களே!'' என்று அதற்கும் அவர் குறைபட,

''நான் நியாயத்தைச் சொன்னேன். அவ்வளவு தான்'' என்றதும்,

''அதுக்கில்லைங்க. நல்ல சம்பந்தம் ஆச்சே! இதை வேண்டாம் என்று சொல்லிட்டாளேன்னு எனக்கு ஆதங்கமா இருக்கு'' என்று கீதா வருத்தப்பட்டார்.

''கல்யாணம் நடக்கவே நடக்காது என்று எப்படி அதுக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்தே?'' என்று ராஜன் கேள்வி எழுப்பியதும்,

''அப்ப நடக்கும் என்று சொல்லுறீங்களா?'' என்று ஆர்வமாக கீதாவும், கலாவும் ஒரு சேரக் கேட்க,

''எனக்குத் தெரிஞ்சு, என் பொண்ணுக்கு ஜீவாவைப் பார்க்காமல் இருக்க முடியாது. அவளுக்கு அவனில்லாமல் ஒரு அணுவும் அசையாது'' என்று ராஜனும்,

''என் பையன் தீர்க்கமா முடிவெடுக்கக் கூடியவன். நினைச்சதை நடத்திக் காட்டுவான். மது மனசில் தனக்கு ஒரு இடம் இருக்கு என்று அவன் மனசுக்கு தோன்றிய தால தானே நம்ம எல்லோரிடமும் தன் ஆசையை அவன் சொல்லி இருப்பான். அதனால் இந்த கல்யாணம் நடக்க வாய்ப்பு இருக்குன்னு தான் என் மனசுக்கும் படுது'' என்று ஜீவாவின் தந்தை சபாபதியும் கூற,

பெண்கள் இருவரும் முகம் மலர்ந்தார்கள்.

''அண்ணி, அப்ப நாமளும் நம்பிக்கையோட காத்து இருப்போம்'' என்று கீதா கூறவும், கலாவதி தலை அசைத்து தன் சம்மதத்தைத் தெரிவித்தார்.

## 3



மாலைப் பொழுதில் மீனாட்சி அம்மன் கோவிலில் பக்தர்களின் கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது.



மதுரை மாநகருக்கே பெருமை சேர்க்கும் விதமாய் அமைந்திருந்த அந்த கோவில் பழமையானது மட்டும் அல்ல பிரம்மாண்டமானதும் கூட.

மதுரை மாநகரத்தில் கோரிப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள அந்த நடுத்தர வர்க்க வீட்டில் சச்சரவு தொடங்கியது.

''இப்ப எதுக்கு மஞ்சு, நீ டி.வி. பார்க்க பக்கத்து வீட்டுக்குப் போகணும் என்று நினைக்கிறே?'' என்று மஞ்சுளாவின் தாய் அவளைப் பார்த்துக் கேட்க,

''ஏன்னா நாம வீட்டிலே டி.வி. இல்லை. இது ஒரு கேள்வியா? நம்ம வீட்டிலே டி.வி. இருந்தால், நான் ஏன் அடுத்த வீட்டுக்குப் போகப் போறேன்?'' என்றாள்.

''அதுக்காக தினம் தினம் அடுத்த வீட்டுக்குப் போகணுமா என்ன?''

''ஏன் போனால் என்ன தப்பு?''

''கொஞ்சமாச்சும் புரிஞ்சு பேசு மஞ்சு. அவங்க வீட்டிலே வயசுக்கு வந்த பசங்க இருக்காங்க.''

''யாரு அந்த ரெண்டு கருங்குரங்கைச் சொல்லுறீங்களா?'' என்று இகழ்ச்சியுடன் கேட்ட மஞ்சுளா நல்ல நிறமாய் அழகாய் இருந்தாள்.

மீன் மாதிரி கண்களும், குண்டு கன்னங்களும், சிவந்த உதடுகளும் என ஓவியர் மாருதி வரைந்த ஓவியம் போல் இருந்தாள்.

மகளது எடுத்தெறிந்து பேசும் தன்மையை வெறுத்த அவள் அம்மா, ''எதுக்கு அந்தப் பசங்களை இப்ப நீ குரங்குன்னு திட்டுறே மஞ்சு?'' என்று கடிந்து கொண்டார்.

''நீங்க தான் அங்க ரெண்டு பசங்க இருக்காங்கன்னு சொன்னீங்க. அவனுங்களைப் பார்த்து நான் ஒண்ணும்

மயங்கிட மாட்டேன். என் அழகுக்கு முன்னாடி, அவனுங்க என் கால் தூசு பெற மாட்டானுங்க. அதைத் தான் சொல்ல வந்தேன்'' என்றவள் தன் தங்கைகளின் புறம் திரும்பி,

''அந்த ரெண்டு குரங்குகளும் இவளுங்களை சைட் அடிச்சலாவது பொருத்தமா இருக்கும். ஏன்னா இவங் களும் அப்படித் தானே இருக்காளுங்க'' என்று எள்ளி நகையாடவும்,

அவளின் தங்கைகளின் மனம் சுருங்கியது.

அந்த நடுத்தர வர்க்க குடும்பத்தில் மொத்தம் ஐந்து உறுப்பினர்கள். மஞ்சுளாவின் பெற்றோர் மற்றும் இரு தங்கைகள்.

அவள் தகப்பன் குமாஸ்தாவாக இருந்தார். அவளது தாய் தன்னால் முடிந்த அளவிற்கு கூடை பின்னுதல், பூ கட்டுதல், தையல் வேலை செய்தல் என்று வீட்டிலேயே இருந்தபடியே சம்பாதித்து வந்தார்.

மஞ்சுளா கலைக் கல்லூரியில் கடைசி வருடம் படித்து வருகிறாள். அவளது மூத்த தங்கை அதே கல்லூரி யில் முதலாம் ஆண்டு படிக்கிறாள். இரண்டாவது தங்கை பன்னிரெண்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறாள்.

அந்த வீட்டிலேயே மஞ்சுளாவை மட்டும் ஆண் டவன் அதீத அழகோடு படைத்து விட்டான்.

தன் அழகைப் பற்றி மஞ்சுளா பெருமைப் பட்டால் பரவாயில்லை. ஆனால் மஞ்சுளா கர்வப்பட்டாள். சதா தன் தங்கைகள் தன்னளவிற்கு அழகில்லை என்று சொல்லிச் சொல்லி அவர்களிடம் ஒரு தாழ்வு உணர்ச் சியை ஏற்படுத்தி விட்டாள்.



மஞ்சுளாவிற்கு அழகை அள்ளிக் கொடுத்த ஆண் டவன் குணத்தை கிள்ளித் தான் கொடுத்து இருந்தான்.

அவள் வாய்க்குள் இருப்பது நாக்கா இல்லை சாட் டையா என்று அவளது தாய் எப்பொழுதுமே வருத்தப் படுவார்.

வழக்கம் போல் இன்றும் மூத்த மகள் தன் இளைய மகள்கலை குறை கூறியவுடன் வருத்தப்பட்டார்.

''மஞ்சு, அவங்க உன் கூடப் பிறந்த தங்கச்சிங்க தானே! அவங்களை ஏன் இழிவாப் பேசுறே?''

''இழிவாப் பேசுறேனா? உள்ளதைத் தானே சொன் னேன். அதுக்காக இவளுங்களை நடிகை நதியா மாதிரி அழகா இருக்காங்கன்னு பொய்யா சொல்லச் சொல்லு றீங்க?'' என்று எகத்தாளமாகக் கேட்கவும்,

'இவகிட்டே பேசினால், மனசை மேலும் நோகடிக்கத் தான் செய்வாள். இவளுக்கு அறிவுரை சொல்லுறதும் சுவத்திலே முட்டிக்கிறதும் ஒண்ணு' என்று நினைத்த அவளது தாய் பேச்சைத் திசை திருப்பினார்.

''நீ தினம் பக்கத்து வீட்டுக்கு டி.வி. பார்க்கப் போனால் அவங்க நம்மளைப் பத்தி என்ன நினைப்பாங்க மஞ்சு?''

''ம்ம்ம் ஒரு டி.வி. வாங்கக்கூட துப்பில்லைன்னு நினைப்பாங்க'' என்று சாட்டையடியாய் பதில் வந்து விழுந்தது.

''நம்ம வீட்டு நிலைமை தெரிஞ்ச நீயே இப்படிப் பேசலாமா மஞ்சு?'' என்று அவள் தாய் வருத்தத்துடன் வினவவும்,

''நம்ம வீட்டு நிலைமை எனக்குத் தெரியுறது இருக்கட்டும். அது உங்களுக்கும் அப்பாவுக்கும்

தெரியுமா?'' என்று எகத்தாளமாக எதிர்கேள்வி கேட்டாள்.

''எங்க ரெண்டு பேருக்கும் தெரியாமல் எப்படிம்மா போகும்?''

''அப்படித் தெரிஞ்சிருந்தும் நீங்க எதுக்கு எனக்கு அப்புறம் ரெண்டு பொம்பளை பிள்ளைங்களைப் பெத்தீங்க?'' என்று கேட்டாள்.

பெற்ற தாயைப் பார்த்துக் கேட்கக் கூடிய கேள்வியா இது என்றெல்லாம் அவள் யோசிக்காமல் போகலாம். ஆனால் அதைக் கேட்ட அவளின் தாய் துடித்துப் போனார். பேச்சற்றவராய் அமைதி காத்தார்.

அவரை அப்படியே விட்டுச் செல்லாமல், ''யோசிச்சு ஒரு பிள்ளையை மட்டும் பெத்து இருந்தீங்கன்னா இன்னைக்கு நம்ம வீட்டிலே தண்டச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இருந்திருக்காது'' என்று தன் தங்கைகளைப் பார்த்துக் கொண்டே சொன்னவள், தன் முகவாயை தோள் பட்டையில் இடித்துக் கொண்டே வெளியே சென்றாள்.

அவள் நடக்கும் போது அவளது நீண்ட பின்னல் அவளது நடைக்கு ஏற்ப தாளமிட்டு இடமும் வலமுமாக ஆடியது.

வெளியேறிய அக்காவைப் பார்த்து அவளது மூத்த தங்கை பெருமூச்சை வெளியேற்றினாள்.

'இவ வீட்டிலே இருந்தால் எங்களால இயல்பா மூச்சு கூட விட முடியாது. இவ எப்படி இந்த வீட்டிலே தப்பிப் பிறந்தாள் என்று தெரியலை' என்று எண்ணிக் கொண்டவள் தன் அக்காவின் பேச்சினால் அதிர்ந்து போன தங்கையையும், தாயையும் சமாதானப்படுத்தினாள்.

பக்கத்து வீட்டுக்குச் சென்று தொலைக்காட்சியைப் பார்க்கச் சென்ற மஞ்சுளா அங்கேயாவது அடக்க ஒடுக்கமா நடந்து கொண்டாளா என்றால் அது தான் இல்லை.

என்னமோ அவள் தான் அந்த வீட்டுக்கு உரிமைக்காரி என்பது போல் நடந்து கொண்டாள்.

சற்று முன் தன் தாயிடம் கருங்குரங்கு என்று வர்ணித்த அந்த வீட்டுப் பசங்களை தனக்கு வேலை செய்வதற்கென்றே பிறந்த வேலைக்காரர்களாக பாவித்து அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

மஞ்சுவின் தாயின் முகத்திற்காக அந்த வீட்டு அம்மா பொறுத்துப் போனாள்.

'இப்படியும் ஒரு பொண்ணா? இவகிட்டே எவன் மாட்டிக்கிட்டு சீரழியப் போறானோ?' என்று அந்த வீட்டுப் பெண்மணி மஞ்சுளாவைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.

தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பியவள், ''அம்மா, டி.வி.யிலே சினிமா நடிகை ஒரு புடவை கட்டி இருந்ததைப் பார்த்தேன். ரொம்ப நல்லா இருந்தது. அது மாதிரி ஒரு புடவையை நான் கட்டிட்டுப் போனேன்... எல்லோரும் மயங்கிடுவாங்க'' என்று தன்னை அந்தப் புடவையில் கற்பனை செய்து பார்த்து, அவள் வர்ணித்துக் கொண்டு இருந்தாள்.

மஞ்சுவின் தாய்க்கு, 'எதுக்கு எல்லோரும் உன்னைப் பார்த்து மயங்கணும்? உன்னைக் கட்டிக்கப் போறவன் உன்னைப் பார்த்து மயங்கினால் பத்தாதா?' என்று கேட்க ஆசையாக இருந்தது.

ஆனால் நினைப்பதை எல்லாம் கேட்டுவிட முடியுமா?

மஞ்சுளாவின் தகப்பனும் வீடு திரும்பி இருந்தார். அதனால் அவள் நேராக தந்தையிடம் வந்து,

''அப்பா, எனக்கு பணம் கொடுங்க. நான் நாளைக்கு அந்தப் புடவையை வாங்கணும்'' என்றாள்.

''தீபாவளியோ, பொங்கலோ பக்கத்திலே வரலை. இப்போ உனக்கு பிறந்த நாள் கூட இல்லையேம்மா. அப்புறம் எதுக்கு மஞ்சு, புது புடவை?''

''விசேஷத்துக்கு தான் புதுசு வாங்கணுமா என்ன?''

''எனக்கு நீ மட்டும் பொண்ணு இல்லைம்மா. இன்னும் ரெண்டு பொண்ணுங்க இருக்காங்க. மூணு பேருக்கும் புதுசு வாங்கணும் என்றால் விசேஷத்துக்கு மட்டுமே வாங்க முடியும். என் நிதி நிலைமை அப்படி.''

'ஐயோ! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எதுக்கு இன்னும் ரெண்டு புள்ளைங்களை பெத்தீங்கன்னு என்னைப் பார்த்துக் கேட்ட மாதிரி அவங்க அப்பாவையும் கேட்பாளோ?' என்று அவள் அம்மா கதி கலங்கிப் போய் நின்று இருந்தார்.

ஆனால் மஞ்சுளா வேறு விதமாய் கேட்டாள்.

''இவளுங்களுக்கு எதுக்கு புதுசு? அந்த புடவையை இவளுங்க உடுத்தினால் விளக்கமாத்துக்கு பட்டுக் குஞ்சலம் கட்டின மாதிரி இருக்காது. இவளுங்களுக்கு எப்படித் தான் மாப்பிள்ளை பார்த்துக் கட்டிக் கொடுக்கப் போறீங்களோ?'' என்று தங்கைகளின் மீது வழக்கம் போல் திராவகத்தை வீசினாள்.



''என்ன பேச்சுப் பேசுறே மஞ்சு!'' என்று அவளைக் கடிந்த அவளது தந்தை,

''உனக்கு மட்டும் புடவை வேணுமின்னா இன்னும் கொஞ்ச நாளில் உன் காலேஜ் படிப்பு முடிஞ்சிடும் இல்ல. அதுக்கு அப்புறமா வேலைக்குப் போய் உன் சம்பாத்தியத்திலே வாங்கிக்கோ. உன் சம்பாத்தியம் மொத்தத்தையும் நீயே செலவு பண்ணு. என்கிட்டே தர வேண்டாம்'' என்றார்.

''ஓ! நான் சம்பாதிச்சு உங்களுக்கு தருவேன் என்ற நினைப்பு வேற உங்களுக்கு இருக்கா?'' என்று எகத்தாளமாக மஞ்சுளா கேட்க,

''எனக்கு எந்த நினைப்பும் இல்லை. என் சம்பாத்தியத்திலே வயிறு வளர்க்கும் போதே நீ இந்தப் பேச்சுப் பேசுறே. அப்படி இருக்கும்போது உன் சம்பளத்தை மட்டும் வாங்கி நான் செலவு பண்ணினால்... எங்க எல்லோரையும் இந்த வீட்டை விட்டு வெளியே தள்ளி விட மாட்டே!'' என்று அவள் தந்தை திருப்பிக் கொடுக்கவும், அந்த இடம் விட்டு அகன்றாள்.

பெரிய மகள் அகன்றதும் தன்னுடைய சின்ன மகள்களை சமாதானம் செய்ய முயன்றார்.

''அக்கா உங்க அழகை குறைச்சுப் பேசிட்டான்னு வருத்தப்படாதீங்கம்மா. அவ எங்க அம்மா மாதிரி ரொம்ப அழகா இருக்காள். அழகிலும் சரி, வாய் பேச்சிலும் சரி அவ அப்படியே எங்க அம்மாவைக் கொண்டு பிறந்திட்டாள்.

எங்க அம்மாக்கு இருக்கிறது நாக்கா தேள் கொடுக்கான்னு நான் எப்பவுமே நினைப்பேன். அதே மாதிரி தான் இவளும் இருக்காள்.

எங்க அம்மா செத்தப்போ நானும் என் அப்பாவும் இனிமேலாவது நிம்மதியா இருக்கலாம் என்று நினைச்சோம் என்றால் பார்த்துக்கோங்க. அவங்க எந்த அளவுக்கு எங்களை படுத்தி இருப்பாங்கன்னு.

ஆனால் என் நிம்மதிக்கு ஆயுசு சொற்பம் போல. எங்க அம்மாக்கு பதிலா உங்க அக்கா அந்த இடத்துக்கு வந்திட்டாள். கடவுளுக்கு என் மேலே அப்படி என்ன கோபமோ இந்த ரெண்டு பேர்கிட்டேயும் என்னை மல்லுக்கட்ட வைச்சிட்டான்.

ஆனா என்னோட சேர்ந்து நீங்களும் கஷ்டப்படுறீங்க... அதை நினைச்சா தான் கஷ்டமா இருக்கு.

அக்கா பேசினதுக்கு வருத்தப்படாதீங்க. நீங்க ரெண்டு பேரும் அவ அளவுக்கு அழகு இல்லைன்னாலும் நீங்களும் பார்க்கிறதுக்கு லட்சணமாத்தான் இருக்கீங்க.

நீங்க ரெண்டு பேரும் உங்கம்மா மாதிரி இருக்கீங்க. குடும்பம் நடத்திறதுக்கு அழகு முக்கியமில்லையம்மா. குணம் தான் முக்கியம். அது உங்க அக்காகிட்டே சுத்தமா கிடையாது. எவன் இவ கிட்டே மாட்டிக்கிட்டு அவஸ்தைப் படப் போறானோ? ஒரு தகப்பனா நான் இதைச் சொல்லக் கூடாது. ஆனா உண்மையை ஒத்துக்கணும் இல்ல'' என்று கூறி பெருமூச்சு விட்டார்.

## 4



சென்னை மெரீனா கடற்கரைக்கு சென்று வண்டியை நிறுத்திவிட்டு ஜீவாவும், மதுமதியும் கடலை நோக்கி நடந்தார்கள்.



அவளது ஆசைக்காக தண்ணீரில் சிறிது நேரம் அவளுடன் சேர்ந்து நின்றான். இருவரும் கரைக்குத் திரும்பியதும்,

''மதி, நான் உன்கிட்டே கொஞ்சம் பேசணும்'' என்றான்.

சரி என்று தலை அசைத்தவள் சுற்றிலும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

'எப்படித் தொடங்குவது... என்னவென்று கேட்பது... எப்படிக் கேட்டால் அவள் என்னைத் தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டாள்' என்று அவன் பலவாறு யோசித்துக் கொண்டிருக்க,

''அத்தான், என்னமோ பேசணும் என்று சொன்னீங்க?'' என்று அவள் கேட்டதும்,

''அதென்ன... ஒண்ணு ஜீவான்னு பேர் சொல்லி நீ வா போன்னு ஒருமையிலே கூப்பிடுறே. இல்லைன்னா அத்தான் என்று சொல்லி மரியாதையா கூப்பிடுறே! ஏன்?'' என்று தன்னுடைய நெடுநாளைய சந்தேகத்தை அவள் முன் வைத்தான்.

''இதைப் பத்தி தான் என்கிட்டே கேட்க வந்தீங்களா?''

''இல்லை. ஆனா முதல்ல இந்த சந்தேகத்தை தீர்த்து வை.''

''எனக்கே தெரியலை. நான் எப்ப மரியாதை கொடுப்பேன். எப்ப விடுவேன் என்று. மரியாதை கிடைக்கும் போது சந்தோஷப்பட்டுக்கணும். இப்படியெல்லாம் ஆராயக் கூடாது'' என்றாள்.

''சரிங்க மேடம்...'' என்று அவன் ஆரம்பித்ததுமே,

''அது!'' என்று கெத்தாகச் சொன்னவள்,

''பார்த்தியா ஜீவா. நான் உனக்கு மரியாதை கொடுத்த உடனே நீயும் என்னை மரியாதையா மேடம் என்று சொல்ல ஆரம்பிச்சிட்டே. இதுக்கு தான் என்று வச்சுக்கோ'' என்று கண் சிமிட்டிச் சிரிக்கவும்,

'ஐயோ! என்னைக் கொல்லுறாளே!' என்று மனதுக்குள் புலம்பியவன் கண்களை அவள் புறம் இருந்து திருப்ப அரும்பாடு பட்டான்.

சில நொடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டவன், ''மதி, நீ யாரையாவது லவ் பண்ணுறியா?'' என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

''நானா? லவ்வா? இல்லையே ஜீவா. ஏன் கேட்கிறே? அப்படி லவ் பண்ணியிருந்தா உன்கிட்டே தானே முதல்ல வந்து சொல்லி இருப்பேன்.''

''அப்ப ஏன் என் லவ்வை மறுக்கிறே?'' என்று அவன் கேட்டதும்,

''நீ என்னை லவ் பண்ணுறியா? எப்போ அப்படிச் சொன்னே?'' என்று அவள் கேட்டதும்,

'என்னடா இவள் இப்படிக் கேட்கிறாள். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே நாம வீட்டில் வைச்சு விஷயம் சொன்னோம். அவ அதைச் சரியா காதிலே வாங்கிக்கலையா?!' என்று திகைத்துக் கொண்டே,

''என்ன மதி இப்படிக் கேட்கிறே. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே வீட்டிலே நான் எல்லோர் முன்னாடியும் சொன்னேன்'' என்றான்.

''அது என்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டம் என்று தானே சொன்னே.''



அவன் விழித்துக் கொண்டே, ''ஆமாம். அப்புறம் என்ன தெரியாத மாதிரி கேட்கிறே'' என்று கேட்டான்.

''லவ் பண்ணுறதுன்னா கிரீடிங் கார்டு, பொக்கே இப்படி ஏதாச்சும் கொடுத்து பிரபோஸ் பண்ணனும்'' என்று அவள் விளக்கமளித்ததும்,

''சினிமா படம் பார்த்திட்டு நிஜத்திலும் அப்படியே எதிர்பார்க்கக் கூடாது மதி'' என்று அவன் சற்றே எரிச்சல் மேலிட்ட குரலில் சொன்னான்.

''நானா சினிமா உலகத்திலே இருக்கேன். நீ தான் பழைய காலத்திலே இருக்கே. உங்க காலேஜிலே பொண்ணுங்களும், பையன்களும் எப்படி இருக்காங்கன்னு பார்க்க மாட்டியா? லெக்சரர்ங்கிறதுக்காக கடிவாளம் போட்ட குதிரை மாதிரி நேரா போயிட்டு நேரா வருவியா'' என்று நக்கல் பண்ணினாள்.

''இதுக்காக நான் அந்நியன் படத்திலே விக்ரம் ரெமோவா மாறின மாதிரி வேற ஒரு அவதாரமா எடுக்க முடியும்?'' என்று அவன் பதிலுக்கு நக்கலாகக் கேட்க,

''சே! சே! நீ ஜீவா வாவே இரு. புது அவதாரம் எதுவும் எடுக்க வேண்டாம். ஏன்னா நீ எப்படி பிரபோஸ் பண்ணினாலும் உன் மேல எனக்கு காதல் வராது. பாசம் மட்டும் தான் வரும்.

இப்ப எங்க அம்மா, அப்பா, அருண்... இவங்க மேலேயெல்லாம் நான் பாசம் வைச்சிருக்கேன் தானே?! அதே மாதிரி தான் உன் மேலேயும் பாசம் வைச்சிருக்கேன். அவங்க மேலே உள்ள பாசம் எப்படி லவ்வா மாறாதோ... அதே மாதிரி உன் மேல நான் வைச்சிருக்கிற பாசமும் காதலா மாறாது'' என்று விளக்கினாள்.

அவள் அது மாதிரி சொன்னவுடன் மனம் வெறுத்துப் போனவன் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆர்ப்பரிக்கும் அலையைப் போல அவன் மனதும் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

"அப்படின்னா நான் உனக்கு ஸ்பெஷல் இல்லையா மதி?"

"கண்டிப்பா. நீ எனக்கு ஸ்பெஷல் தான். அதிலே உனக்கு என்ன சந்தேகம்?"

'என்னடா இவள் இப்படிக் குழப்பி அடிக்கிறாள்' என அவன் நினைத்துக் கொண்டிருக்க அவளோ தொடர்ந்து பேசினாள்.

"நீ ஏதாச்சும் எனக்கு வாங்கித் தராமல் அருணுக்கு மட்டும் வாங்கித் தந்தால்... அவ்வளவு தான். உன்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவேன்."

"அருணுக்கு வாங்கித் தந்தால் சண்டை போடுவேன்னு சொல்லுறே. அப்ப நாளைக்கு நான் என் வைஃப்புக்கு வாங்கித் தந்தால் என்ன பண்ணுவே? அவ கூடவும் சண்டை போடுவியா?"

"ஆ..." என்று தொடங்கியவள் அப்படியே அமைதியானாள்.

'ஜீவாவோட மனைவியா? அப்படி ஒருத்தி வருவாளோ? வருங்காலத்தில் அவன் மனைவிக்கு இல்லாத உரிமை வேற யாருக்கு இருக்கும். அவளிடம் நான் எப்படி சண்டை போட முடியும்?! ஆனா அதுக்காக யாருன்னு தெரியாத ஒருத்திகிட்டே எங்க ஜீவாவை என்னால



எப்படி விட்டுக் கொடுக்க முடியும்?' என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தாள்.

தனது கேள்வியால் சின்னதாகிப் போன அவளது முகத்தையே ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என் மனைவிக்கு மட்டும் என்னை நீ விட்டுக் கொடுப்பியா?" என்று அவன் கேட்க, அவள் பதில் சொல்லாது மௌனித்தாள்.

'ஒரு பேச்சுக்கு கூட இவளுக்கு என்னை யாருக்கும் விட்டுக் கொடுக்க மனசில்லை. ஆனால் என்னைக் கல்யாணமும் பண்ணிக்க மாட்டாளாம். கேட்டால் என் மேலே காதல் இல்லையாம்.

வாடி! உன்னை உன் வழியிலே போய், உன்னை சரி பண்ணி 'ஜீவா நீ தான்டா என் ஜீவன்!' என்று சொல்ல வைக்கிறேனா இல்லையான்னு பாரு' என்று மனதுக்குள் சபதம் எடுத்துக் கொண்டான்.

ஐந்து நிமிடங்கள் கழிந்தும் அவள் முகம் தெளிவடையவில்லை. அதைப் பார்த்தவனுக்கு மனதில் நிம்மதி தோன்றியது.

"மதி வீட்டுக்குப் போகலாமா?" என்று கேட்டான்.

சற்று முன் அவன் கேட்ட கேள்வியை அந்த கடற்கரைக் காற்றில் பறக்க விட்டவளாய், தனது அதிமுக்கிய சந்தேகத்தை அவனிடம் கேட்டாள்.

"ஜீவா நீ மட்டும் ஏன் என்னை மதின்னு கூப்பிடுறே?! முன்னாடியெல்லாம் நீ மதுன்னு தானே கூப்பிடுவே. உனக்கு என்னாச்சு?"

'ம்ம்ம் என்னென்னவோ ஆச்சு. உன்னைப் பார்த்தாலே மது குடிச்சவன் மாதிரி மாறிடுறேன். இதிலே உன்னை

மதுன்னு கூப்பிட்டேன்... அவ்வளவு தான். நான் அடியோடு வீழ்ந்திடுவேன். எப்போ நீ என்னை ஏத்துக்கறியோ அன்னைக்கு கூப்பிடுறேன் மதுன்னு' என்று நினைத்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் கால் புதையப் புதைய மணலில் மெதுவாக நடக்க ஆரம்பித்தார்கள். மதுமதி மௌனமாக வந்தாள்.

ஜீவா அவளது குழம்பிய மனநிலையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்த விரும்பினான்.

''மதி, என் கல்யாணத்துக்கு அப்புறம் என் மனைவிக்கு தான் நான் முதலிடம் கொடுப்பேன். அப்போ என்கிட்டே நெருக்கமாப் பழகாமல் நீ கொஞ்சம் விலகி நிக்கணும்.

என் கல்யாணத்துக்கு அப்புறம் திடீர்ன்னு உன்னை அப்படி நடந்துக்கச் சொன்னால் அது உனக்கு வருத்தமா இருக்கும். என் வைஃப் மேலே உனக்கு தேவையில்லாத வன்மம் வளரும்.

அதனால இப்பவே எனக்குக் கல்யாணம் ஆனதா நினைச்சிக்கிட்டு என்கிட்டே இருந்து தள்ளி நின்னு பழகு.

உனக்கு முதல்ல கல்யாணம் ஆகி நீ வேற வீட்டுக்குப் போயிட்டால் இந்தப் பிரச்சனை வர வாய்ப்பில்லை. ஆனால் நீ இப்ப தான் கடைசி வருஷம் படிச்சுக்கிட்டு இருக்கே. உனக்குக் கல்யாணம் ஆக இன்னும் பல மாசம் ஆகலாம்.

ஆனா எங்க வீட்டிலே எனக்கு இப்பவே பொண்ணு பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க. அதனால இப்ப... இந்த நிமிஷத்தில் இருந்து நாம எட்ட நின்னே பழகுவோம். என்ன சொல்லுறே மதி?'' என்று கேட்டதும்,

''நான் உன்னைக் கல்யாணம் பண்ண சம்மதிக்கலை என்றதும் என்னை வெறுக்கிறியா ஜீவா?'' என்று அழுகுரலில் கேட்டாள்.

அவளது அழுகுரல் கேட்டவனின் மனதில் சாரல் அடித்தது.

''நான் ஏன் மதி உன்னை வெறுக்கப் போறேன். நாம ஒண்ணா வளர்ந்தவங்க. நடுவிலே ஏற்பட்ட இந்த உணர்வு சாத்தியப்படாது அப்படிங்கிறதுககாக உன்னை வெறுக்க முடியுமா?

என் வாழ்க்கையில் நான் என் மனைவிக்கு தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கணும் என்று நினைக்கிறேன். அது தப்பா? ஏன் நீ அப்படி நினைக்க மாட்டியா? வருங் காலத்தில் உன் கணவன் தான் உனக்கு சகலமும் ஆக இருக்கணும் என்று நினைக்க மாட்டியா?'' என்று அவளையே கேள்வியால் மடக்க,

ஆமாம் என்றோ இல்லை என்றோ சொல்லாமல் அவள் மையமாகத் தலையாட்டி வைத்தாள்.

பேசிக் கொண்டே ஜீவாவின் இரு சக்கர வண்டி நிறுத்தி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

வண்டியின் அருகே நின்றவளிடம் தனது பைக்கின் பின் இருக்கையைத் தடவிக் காட்டி,

''மதி இந்த இடம் என் மனைவிக்கானது. அதனால நீ ஆட்டோ பிடிச்சு வீட்டுக்கு போயிடுறியா?'' என்று அலட்டிக்காமல் கேட்டான்.

''என்ன ஜீவா விளையாடுறியா?'' என்று அவள் அதிர்ந்தாள்.

''நான் ஆட்டோவிலே தானே உன்னை போகச் சொன்னேன். அதுக்கு எதுக்கு இவ்வளவு டென்ஷன் ஆகுறே?''

''நான் ஹேண்ட் பேக் கொண்டு வரலை. என்கிட்டே காசு இல்லை.''

''உனக்கு காசு தானே வேணும். நான் தரேன்'' என்றதும்,

அழுது விடும் பாவனையில் அவனைப் பார்த்து அவள் பரிதாபமாக விழித்தாள்.

'இன்றைக்கு இது போதும்!' என்று நினைத்தவனாக, ''சரி இன்னைக்கு ஒரு நாள் மட்டும் ஏறிக்கோ. இது தான் கடைசி'' என்று சொல்லி அவளை ஏற்றி அவளது வீட்டு வாசலில் இறக்கி விட்டான்.

அவள் இறங்கியதும், அவளிடம் ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் விருட்டென்று கிளம்பிச் சென்றான்.

'ஒண்ணும் சொல்லாமக் கூட போறான் பாரு. எப்பவோ வரப் போற பொண்டாட்டி இவனுக்கு பெருசா போயிட்டாள். என்னைப் பார்த்தா உனக்கு இளக்காரமா இருக்காடா. போடா போ!' என்று கறுவிக் கொண்டு அவன் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''என்னங்க மகாராணி, வீட்டுக்குள்ளே வரும் எண்ணம் இல்லையா? ரோட்டையே பார்த்துக்கிட்டு இருக்கே'' என்று கீதா கேட்டதும் அவருக்கு பதில் சொல்லாமல் வீட்டிற்குள் விரைந்தாள்.

''உங்களுக்கு அப்புறம் கிளம்பின நாங்களே வீடு வந்து சேர்ந்திட்டோம். உங்க ரெண்டு பேருக்கும் வர இவ்வளவு நேரமா?'' என்று கீதா கேட்டதும்,

''ம்ம்ம் உங்க தத்து புத்திரன் தான் பீச்சுக்குக் கூட்டிட்டுப் போனான்'' என்று கடுப்பாக மதுமதி கூறவும்,

''வாயிலேயே போடுவேன். கூடிய சீக்கிரத்தில் அவனுக்குக் கல்யாணம் ஆகப் போகுது. நாளைக்கு அவன் பொண்டாட்டி முன்னாடியும் இப்படி அவன் இவன் என்று சொன்னால் நல்லாவா இருக்கும். இனிமேலாச்சும் மரியாதையா பேசப் பழகு'' என்று கீதா உத்தரவிட்டார்.

'அத்தையும் மருமகனும் ஒரே மாதிரி யோசிக்கிறாங்க' என்று திட்டிக் கொண்டே அந்த இடம் விட்டு நகன்றாள்.

அறைக்குள் சென்றவள் ஜீவாவைக் கரித்துக் கொட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

ராஜன் மகள் அருகே வந்து, ''என்னடா நீயா ஏதோ புலம்பிக்கிட்டு இருக்கே'' என்று கேட்டார்.

அதற்காகவே காத்திருந்தாற் போல், ''இந்த ஜீவா இருக்கானில்லப்பா... அவன் என்னை இறக்கி விட்டுட்டுப் போயிட்டு வரேன் என்றுகூட சொல்லாமல் விருட்டுன்னு போறான். அப்படி என்னப்பா இவனுக்கு என் மேல கோபம்?!'' என்று பொரிந்தாள்.

'ஜீவாவின் இந்தச் சின்னப் புறக்கணிப்பையே இவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவள் எப்படி ஜீவா இல்லாமல் இருப்பாள்?

எந்தக் காரணத்துக்காகவும் இவளால் ஜீவாவை விட்டு இருக்க முடியாது. ஆனால் இவள் எப்போது அதை உணரப் போகிறாள்?' என்று நினைத்துக் கொண்டே மகளைச் சமாதானம் பண்ணினார்.

கீதா அறைக்குள் நுழைந்து தன் மகளைப் பார்த்து, ''ஜீவாவை ஏன் கல்யாணம் பண்ண முடியாதுன்னு சொன்னே?'' என்று குரல் உயர்த்திக் கேட்டார்.

"எனக்கு அது மாதிரி எண்ணம் இல்லை. அதுக்கு நான் என்ன செய்வேன்?"

"நல்லா அழகா இருக்கான். நல்லா படிச்சிருக்கான். நல்ல வேலையிலே இருக்கான். மாமியாராகப் போறவங்க கூடவும் உனக்கு நல்ல உறவு இருக்கு. இதுக்கு மேல நீ என்ன எதிர்பார்க்கிறே?"

"எனக்குப் பிடிக்கலைன்னால் விடுங்களேன்" என்று அவள் சுள்ளென குரல் உயர்த்திக் கூற,

"இப்ப எதுக்குடி கத்துறே?" என்று கீதா கோபப்பட்டார்.

"அப்பா, பாருங்கப்பா இந்த அம்மாவை. எப்பப் பார்த்தாலும் என்னைத் திட்டிக்கிட்டே இருக்காங்க" என்று தந்தையிடம் புகார் கூறினாள்.

"அம்மா திட்டலைடா. உனக்கு நல்லதுன்னு எடுத்துச் சொல்லுறாள். அவ்வளவுதான்" என்று அவர் மகளைச் சமாதானம் செய்ய முயல,

"அப்பா, அவங்களும் ஜீவாவும் ஒரே ரத்தம். அதனால ஒண்ணா ஒட்டிக்கிறாங்க. நாம ரெண்டு பேரும் ஒரே ரத்தம். அதனால நீங்க எனக்கு தான் சப்போர்ட் பண்ணிப் பேசணும். எதிர் கட்சிக்கு தாவக் கூடாது சொல்லிட்டேன்" என்று சிணுங்கவும்,

கீதா ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்தார்.

இப்பொழுது எதையும் சொல்லாதே என்று ராஜன் சைகை செய்யவும் கீதா பேசாமல் அறையை விட்டு வெளியேறினார்.

'எல்லோரும் ஒரே நாளில் பேசக் கூடாது. மகளுக்கு யோசிக்க கொஞ்சம் நேரம் கொடுப்போம்' என்று எண்ணிய ராஜன் அவளது தலையை வருடிவிட்டு எழுந்து சென்றார்.

தந்தையும் தாயும் அகன்றதும் மதுமதி திரும்பவும் ஜீவா சொல்லாமல் போனதற்காக அவனை திட்டும் வேலையைத் தொடர்ந்தாள்.

'என் மேல உள்ள கோபத்திலே வண்டியை வேகமா ஓட்டினானா? இல்லை மிதமான வேகத்தில் தான் போனானா? அச்சோ! அதை நான் சரியா கவனிக்கலையே. பத்திரமா போய் சேர்ந்து இருப்பானா? பத்து நிமிஷம் கழிச்சு போன் பண்ணி கேட்போமா? இல்லை வேண்டாம். சொல்லாமல் போனவனை எதுக்கு நாம போன் பண்ணி விசாரிக்கணும்' என்று அவள் மனதுக்குள் விவாதம் நடத்திக் கொண்டிருந்தாள்.

## 5



வேண்டுமென்றே மதுமதியிடம் விடைபெறாமலே கிளம்பிய ஜீவா உற்சாக மனநிலையுடன் தன் வீட்டை அடைந்தான். வீட்டிற்குள் நுழைந்து வண்டியை நிறுத்தினான்.

மகன் வந்து விட்டதைப் பார்த்த கலாவதி தன் கணவரிடம், "என்னங்க நீங்களும் அண்ணனும் கல்யாணம் நடக்கும் என்று சொன்னதைக் கேட்டு எனக்கு நிம்மதியா இருந்துச்சு. ஆனா இப்ப என் பையன் என்ன

மனநிலையில வருகிறானோன்னு பயமா இருக்கு'' என்று புலம்பினார்.

''ஆமா கலா, மது வேண்டாம் என்று சொன்னதும் அவன் முகமே மாறிடுச்சு'' என்று அவரும் மனைவியும் சேர்ந்து வருத்தப்பட்டார்.

மகனின் மனநிலையைத் தெரிந்து கொள்வதற்காக அவர்கள் இருவரும் வாயிலைப் பார்த்திருந்தனர்.

ஜீவா வீட்டிற்குள் நுழைந்ததும், அவனது பெற்றோர்கள் கவலையுடன் அவனது முகத்தை ஏறிட்டனர்.

''என்னாச்சு? எனக்குத் தெரியாமல் இந்த வீட்டில் ஏதாச்சும் துக்கம் நடந்துச்சா? புதுசா ஏதாவது தொழில் தொடங்கி நஷ்டம் வந்துச்சா? இல்லை அதை விடப் பெரிய கஷ்டம் வந்து சேர்ந்துடுச்சா? அதான்ப்பா அம்மா ஏதாச்சும் சமைக்கிறேன் என்று நம்ம வயிறை பதம் பார்க்க ரெடி ஆகிட்டாங்களா?'' என்று கண்ணடித்துக் கொண்டு உற்சாகமாக பேசிய மகனைக் கண்டு அவனைப் பெற்றவர்கள் நிம்மதி அடைந்தனர்.

அதனால் அவனது அன்னை கலா கேலியில் இறங்கினார்.

''என் சமையலைப் பார்த்தா உனக்கு இளக்காரமா இருக்கா? இருக்கட்டும் டா. நாளைக்கு உன் பொண்டாட்டி வந்து எப்படி சமைச்சுப் போடுறாள் என்று நான் பார்க்கத் தானே போறேன்'' என்றதும்,

''ஐயோ அம்மா! நான் இனிமேல் உங்க சமையலைக் கிண்டல் பண்ணவே மாட்டேன். ஏன்னா நம்ம மதுவுக்கு சமைக்கவே தெரியாது. நல்லா சாப்பிடத் தான் தெரியும். நாளைக்கு என் பொண்டாட்டி, பிள்ளைங்க



எல்லோருமே உங்களை நம்பி தான் இருக்கோம்'' என்றதும்,

''ஹேய்! அப்ப மது ஓ.கே.ன்னு சொல்லிட்டாளாடா?'' என்று பெற்றவர்கள் இருவரும் ஆர்ப்பரித்தனர்.

''இல்லையே'' என்று சொல்லி அவன் தோள் குலுக்கவும், ''என்னடா குழப்புறே'' என்று சபாபதி கேட்டார்.

''அப்பா அவளுக்கு என் மேலே பாசம் இருக்காம். ஆனால் அது காதலா மாறாதாம்'' என்று ஜீவா சொன்னதும்,

''அப்புறம் எப்படிடா அவ தான் உன் பொண்டாட்டின்னு சொன்னே?'' என்று கலா சந்தேகம் கேட்கவும்,

''கூடவே இன்னொண்ணும் சொன்னாளே! நான் அவளுக்கு ரொம்ப ஸ்பெஷலாம். என்னை யார் கிட்டவும் விட்டுத் தர மாட்டாளாம். எப்படி இருந்தாலும் நாளைக்கு என் பொண்டாட்டிகிட்டே விட்டுத் தரணும் தானே என்று கேட்டால் அம்மணிக்கு ஆமாம் என்று சொல்ல மனசு வரலை'' என்று சொல்லிச் சிரித்தான்.

''உனக்கு நம்பிக்கை இருக்காடா?'' என்று சபாபதி கேட்க,

''நூறு சதவீதம் நம்பிக்கை இருக்குப்பா. நீங்க ரெண்டு பேரும் கவலைப்படாதீங்க'' என்று ஜீவா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவனது கைப்பேசி சிணுங்கியது.

பத்து நிமிடங்கள் கடந்த போது மதுமதியால் கையை கட்டிக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. அவளது விரல்கள் ஜீவாவின் எண்ணை கைப்பேசியில் அழுத்தின.

அவளிடமிருந்து அழைப்பு வந்ததைப் பார்த்த ஜீவா தன் தாய் தந்தையைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டே,

''அவ தான் கூப்பிடுறா. பேசிட்டு வரேன்'' என்று சொல்லி கைப்பேசியுடன் தனது அறைக்குள் நுழைந் தான்.

கைப்பேசியை இயக்கி காதில் வைத்தவன் ஒரு ஹலோவைக் கூட உதிர்க்காமல் மௌனம் காத்தான்.

அவன் போனில் ஹலோ சொன்னவுடன் நாம ஒன்றுமே பேசக்கூடாது என்று முடிவெடுத்து அழைத்த மதுமதி, எதிர்பக்கம் நிலவிய அமைதியில் குழம்பிப் போனாள்.

இருப்பினும் சில நொடிகள் அமைதி காத்தாள். அவனும் அதே பிடிவாதத்துடன் அமைதி காக்கவும் தன் பிடிவாதத்தைக் கைவிட்ட மதுமதி,

''ஜீவா! ஜீவா!'' என்று அழைத்தாள்.

அந்த அழைப்பு அவனுக்கு அமுத கானமாக இருந்தது. அவளது குரலில் தனது பெயர் உச்சரிக்கப் படுவதை ரசித்துக் கேட்டுக் கொண்டு இருந்தான்.

புன்னகைத்தவாறு அப்பொழுதும் அவன் மௌனத் தையே கடைபிடிக்க... மதுமதி தவித்துப் போனாள்.

'ஏன் ஜீவா பேச மாட்டேங்கிறான்? ஒரு வேளை போனை எடுத்தது ஜீவா இல்லையோ? அவனுக்கு ஏதாச்சும் அடிபட்டிருக்குமோ? அவன் போனை வேற யாரோ எடுக்கிறாங்களோ?' என்று நினைத்துக் கலங் கியவள்,



''ஹலோ! ஹலோ! நீங்க யார் பேசுறீங்க? இது ஜீவா போன் தானே?! அவன் நல்லா இருக்கான் தானே?!'' என்று பதறிக் கொண்டு கேட்டாள்.

அவளது பதட்டத்தைக் கேட்டதும் தன் மௌனத தைக் கைவிட்டவனாய், ''ஹலோ மதி!'' என்று கூப்பிட் டான்.

அவளது பரிவு கலந்த பாசம் அவனது தொண்டையை அடைக்கச் செய்தது. அதனால் ஒலித்த குரல் அவனது போல் இல்லாமல் வேறொருவரின் குரலாய் ஒலிக்க...

''ஜீவா... நீ தானா?'' என்று மதுமதி சந்தேகமும் பதட்டமுமாய் கேட்க,

தனது தொண்டையைச் செருமி சரி செய்து கொண் டவன், ''மதி, நான் ஜீவா தான் பேசுறேன். எதுக்கு இப்படிப் பதட்டப்படுறே?'' என்று கேட்டான்.

பேசுவது ஜீவா தான். அவனுக்கு ஒன்றும் ஆக வில்லை. அவன் நன்றாக இருக்கிறான் என்று தெரிந்த வுடன் அவளது பதட்டம் மறைந்தது.

''எதுக்குடா என்கிட்டே சொல்லாமல் கூட விருட் டுன்னு போனே?'' என்று சண்டைக்கு தயாரானாள்.

''உன்கிட்டே நான் எதுக்கு சொல்லிட்டுப் போக ணும்?'' என்று ஜீவா கேட்டதும், அடுத்த நொடியே அழைப்பைத் துண்டித்து விட்டாள்.

அவனது இதழில் முறுவல் பிறந்தது. தனது கைப்பேசிக்கு அழுத்தி முத்தம் பதித்தவன்,

''மது மது... இப்படிக் குழந்தையாய் இருக்கியே! உன்னை...'' என்று கொஞ்சிக் கொண்டே அவளது அலைப்பேசிக்கு அழைப்பு விடுத்தான்.

தொடர்ந்து ஐந்து முறை அழைப்பு விடுத்தும் அவள் எடுக்கவில்லை என்றதும் ஜீவா வாய்விட்டு நகைத்துக் கொண்டே வேறு வேலையைப் பார்க்கச் சென்றான்.

ஜீவா தன்னிடம் சொன்னவற்றை கலா தன் நாத்தனாருக்கு போன் செய்து பகிர்ந்தார்.

"அவனுக்கு நம்பிக்கை இருக்குன்னு சொல்லுறானா அண்ணி? அப்படின்னா இந்த கல்யாணம் நடந்திடுமா?" என்று அதிக எதிர்பார்ப்போடு கீதா கேட்க,

"நீ கவலைப்படாமல் இரு கீதா. கண்டிப்பா நடக்கும். அவன் தான் அவ்வளவு உறுதியாச் சொல்லுறானே" என்று கலா நம்பிக்கை அளித்தார்.

ஜீவா அன்று இரவு தனது நண்பன் ஒருவனை சந்தித்து விட்டு திரும்பும் போது வழியில் ஒரு வாழ்த்து அட்டைக் கடையைப் பார்த்ததும் வண்டியை நிறுத்தினான்.

'டேய்! சாயங்காலம் தானேடா அவகிட்டே கிரீடிங் கார்டெல்லாம் சினிமாவிலே தான் கொடுப்பாங்கன்னு சொன்னே. எதுக்கு இங்கே வந்து நிற்கிறாய்?!' என்று கேட்ட மனசாட்சியிடம்,

'அது என் நினைப்பு. ஆனால் அவ நினைப்பு வேறயா இல்ல இருக்கு' என்றான்.

'அப்ப அவளுக்கு இதை கொடுக்கப் போறியா?'

'கொடுப்பேன். ஆனா இப்போ இல்ல. என்னைக்கு அவ என் காதலை உணர்கிறாளோ அன்னைக்கு...' என்று பதிலளித்தான்.

முதல் முறையாக அந்தக் கடைக்குள் நுழைந்தவன் இத்தனை வகை வாழ்த்து அட்டைகளா என்று வியந்து தான் போனான்!



கடையைச் சுற்றி அலைந்து நாற்பது நிமிடங்கள் கடந்த நிலையில் இரு வாழ்த்து அட்டைகளைத் தேர்ந்தெடுத்து பணம் செலுத்தி வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இரவு உணவிற்குப் பின் தனது அறைக்குள் சென்றவன் ஒரு வாழ்த்து அட்டையை கையில் எடுத்துப் பிரித்தான்.

அதில் I LOVE YOU என்று எழுதி இருந்தது.

அந்த வரிகளையே ஆசையுடனும், ஏக்கத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தான்.

'இந்த அட்டையை இப்படியேவா கொடுப்பது? ஹூகும். நாமளே ஏதாச்சும் எழுதுவோம். கவிதை எழுதுவோமா?'

'டேய் ஜீவா! நீ கவிதை எழுதுவியா? உனக்கு ஒரு கடிதம் கூட எழுதத் தெரியாது. இது என்ன பாடம் எடுக்கிற வேலைன்னு நினைச்சியா? கற்பனை வேணும். கற்பனை வளம் இருந்தால் தான் எழுத முடியும்' என்று அவனது மனசாட்சி எடுத்துரைத்தது.

'நான் ஒத்துக்கிறேன். எனக்கு கவிதையும் எழுதத் தெரியாது. கற்பனை வளமும் கிடையாது. ஆனால் எனக்கு என் மதுவை காதலிக்கத் தெரியும். அவள் மீதான என் எண்ணங்களை எழுதி விட்டுப் போகிறேன்' என்று நினைத்தவனாய் பேனாவை எடுத்து அதில் எழுத ஆரம்பித்தான்.

**என் மீது**

**உனக்கு இருப்பது**

பாசம் மட்டுமே
என்று என் காதலை
நீ தூக்கி எறியலாம்!

என் மீது
உனக்குக் கோபம்
என்று எனது
கைப்பேசி அழைப்புகளை
நீ ஏற்க மறுக்கலாம்!

ஆனால்
எதைச் சொல்லி
உனக்குள்
இருக்கும் என்னை
நீ வெளியேற்றுவாய்?

என்று எழுதினான். அடுத்த வாழ்த்து அட்டையை எடுத்துப் பிரிக்க அதில்,

Love cannot be defined by words.

You have to feel it with all your Love.

என்ற வரிகள் அச்சிடப்பட்டு இருந்தது.

காதல் என்னவென்பதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதை உன் காதலால் தான் உணர வேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

அந்த வரிகளை ஒட்டி தனக்குத் தோன்றியதை எழுத ஆரம்பித்தான்.

நீ
எனக்குள்
நிறைந்திருக்கிறாய்!
அதை நான்
நொடிப்பொழுதும்
மறப்பதில்லை.
நான்
உனக்குள்
உறைந்திருக்கிறேன்!
அதை நீ
உணர்வது எப்போது?

அவன் எழுதியதை வாசித்துப் பார்த்தான். அவனுக்கு இதழில் புன்முறுவல் உதயமானது.

அந்த வாழ்த்து அட்டைக்கு முத்தம் வைத்தான். மதுவுக்கே கொடுத்தது போன்று சொக்கிப் போனான்.

இவன் இங்கே உருகிக் கரைய... இவனைப் பற்றிய நினைப்பே இல்லாமல் அவள் அங்கே நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவனது எதிர்பார்ப்பு நடக்குமா? அவனது கனவு பலிக்குமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

# 6



"அம்மா, நான் காலேஜுக்கு கிளம்பிட்டேன். போயிட்டு வரேன்" என்று மஞ்சுளா கிளம்பவும்,

''உன் தங்கச்சியும் அதே காலேஜுக்கு தானே கிளம்புறாள். ஒரு அஞ்சு நிமிஷம் காத்திருந்து அவ கூடவே போகலாம் இல்ல'' என்று அவள் அன்னை கேட்க,

''அவ கூடச் சேர்ந்து போகணுமா... அப்படிப் போனால் எங்களைப் பார்க்கிறவங்க எல்லாம் கருப்பு வெள்ளை டிவின்னு கிண்டல் பண்ணுறதுக்கா?'' என்று அன்றைய குத்தலை மஞ்சுளா தொடங்கி வைத்தாள்.

''சரி தாயே, நீ தனியாவே கிளம்பு. ஆனால் கரெக்ட் டயத்துக்கு வீட்டுக்கு வந்திடணும்'' என்று சொல்லி அனுப்பினார்.

மஞ்சுளாவின் வாய்க்கு பயந்து அவள் அம்மா சில விஷயங்களில் விட்டுக் கொடுத்துப் போனாலும் நேரத்திற்கு வீட்டுக்கு அவள் வரவில்லை என்றால் திட்டித் தீர்ப்பதோடு இல்லாமல் அன்று சாப்பாடு கூடப் போடாமல் பட்டினி போட்டு விடுவார்.

பருவ வயது பெண்களின் தாய்களுக்கே உரிய பயம் அவரிடமும் உண்டு. அதற்கு மேல் அவரது மகள் வேறு அழகாய் இருந்து தொலைத்தாளே.

அதனால் மஞ்சுவை கண்காணித்துக் கொண்டே தான் இருப்பார். அவ்வப்போது அறிவுரைகளையும் சொல்லி வருவார்.

மஞ்சுளா நிமிர்ந்த நடையுடன் கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்தாள். அது பாரதி கண்ட புதுமைப் பெண்ணிற்கான நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும் அல்ல. நான் அழ்கு என்ற கர்வம் தொனிக்கும் நடை.



தனது தோழிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று அனைவருக்கும் காலை வணக்கம் தெரிவித்தாள்.

''ஹேய் மஞ்சு! இன்னைக்கு சூப்பரா இருக்கேப்பா!''

''அவ என்னைக்கு அழகில்லாமல் இருந்தாள்?! இன்னைக்கு அழகா இருப்பதுக்கு.''

''நீ மட்டும் இன்னும் கொஞ்சம் ரிச்சா டிரஸ் பண்ணினே... அவ்வளவு தான்'' என்று தோழிகள் அனைவரும் ஆளுக்கொரு விமர்சனம் சொல்லி மஞ்சுளாவைக் கர்வப்பட வைத்தனர்.

''ஏன் மஞ்சு உனக்கு இருக்கிற அழகுக்கு நீ சினிமாவிலே நடிக்கப் போகலாமே?''

''சினிமாவா? நானா?'' என்று மஞ்சுளா அதிர்ச்சியுடன் கேட்க,

''ஆமா மஞ்சு. நீ மட்டும் ஏதாச்சும் டைரக்டர் இல்லை தயாரிப்பாளர் கண்ணிலே பட்டேன்னா கண்டிப்பா உன்னை அவங்க படத்துக்கு ஹீரோயினா ஆக்கிடுவாங்க.''

''சே சே! நான் சினிமாவிலே எல்லாம் நடிக்க மாட்டேன். எங்க அம்மா ஒத்துக்க மாட்டாங்க. முன்னாடி ஒரு தடவை நான் கேட்டேன் பா. எங்க அம்மா முடியாதுன்னு சொல்லிட்டாங்க'' என்று மஞ்சுளா மறுக்கவும்,

''அப்ப உங்க அம்மாகிட்டே அனுமதி கேட்காமல் சான்ஸ் தேடு. சான்ஸ் கிடைச்சால் வேண்டாம் என்றா சொல்லிடுவாங்க? நீ கதாநாயகியானால் இந்த தமிழ் நாட்டிலே உள்ள பட்டி தொட்டி எல்லாம் பேமஸ் ஆகலாம் தானே? பணமும் குவியும். அதை உங்க அம்மா வேண்டாம் என்று சொல்லிடுவாங்களா என்ன?''

"நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. என்னை வீட்டை விட்டுத் துரத்திடுவாங்க."

"ஹேய்! என்ன மஞ்சு சில்லியா பேசுறே? நீ ஹீரோயின் ஆகிட்டால் பெரிய ஸ்டார் ஹோட்டலில் நீ தங்குறதுக்கு ரூம் கொடுப்பாங்க. நீ ஓட்டு வீட்டைப் பத்தி பேசிக்கிட்டு இருக்கே!" என்று தோழி ஒருத்தி கிண்டலாய் உரைக்க,

மஞ்சுளா அமைதியானாள். அவளுக்கு வீட்டை விட்டுச் செல்வதில் விருப்பம் கிடையாது.

ஒரு குடும்பம் என்ற கூட்டமைப்பில் இருந்தால் மட்டுமே தன் அழகிற்கு பாதுகாப்பு என்பதை மஞ்சுளா நன்கு உணர்ந்து இருந்தாள்.

அவளுக்கு சினிமாக் கனவு கிடையாது. தன் அழகைப் பார்த்து மயங்கி பணக்கார வாலிபன் ஒருவன் தன்னை மணந்து கொள்வான். அதனால் தன் செல்வ நிலை உயரும். தன் தங்கைகளை விட தான் அதிக வசதியாய் வாழலாம். அவர்களை ஆயுளுக்கும் வம்பிழுத்துக் கொண்டு காலத்தை ஓட்டலாம் என்பது மட்டுமே அவள் கனவு.

அன்று மாலை கல்லூரி முடிந்து வகுப்பறையை விட்டு வெளியேறிய மஞ்சுளா எதையோ யோசித்துக் கொண்டு கல்லூரி வளாகத்தில் நடந்து கொண்டிருந் தாள்.

அப்பொழுது எதிரே வந்த வாலிபன் மீது மோதினாள்.

"சாரி. தெரியாமல் இடிச்சிட்டேன்" என்று அவனிடம் மன்னிப்புக் கேட்டாள்.



"இட்ஸ் ஓ.கே. இங்க எம்.எஸ்.சி. கிளாஸ் ரூம் எங்கே இருக்கு?" என்று அவன் மஞ்சுளாவிடம் விசாரித்தான்.

அவள் அவனுக்கு வழிகாட்டி விட்டு நகர்ந்தாள். அவளை ஒரு சில நொடிகள் கூர்ந்து பார்த்துவிட்டு அவனும் தன் வழியில் சென்றான்.

அடுத்த நாள் கல்லூரியில் இருந்து வெளியேறும் போது மீண்டும் அதே வாலிபனை மஞ்சுளா பார்த்தாள்.

அவன் காரில் இருந்து இறங்கவும், 'ஓ! இவன் கார் வைத்து இருக்கிறானா? அப்படி என்றால் பணக்காரனாக இருப்பான்' என்று மஞ்சுளா எண்ணிக் கொண்டாள்.

அவளிடம் "ஹாய்!" என்று சொல்லிப் புன்னகைத் தவன் வேறொன்றும் பேசாமல் அவளை தாண்டிச் சென்றான்.

பணக்கார வாலிபன் ஒருவன் தன்னைப் பார்த்து புன் னகைத்து விட்டுச் சென்றது மஞ்சுளாவிற்கு பெருமை யாக இருந்தது.

அவன் தினமும் மாலையில் கல்லூரிக்கு வந்தான். உடன் வரும் அவளது தோழிகள் பார்க்காதபோது மஞ் சுவைப் பார்த்து புன்னகைத்து விட்டுச் சென்றான்.

முதல் இரு தினங்கள் அவன் முதலில் புன்னகைத் தான். அதன் பின்பே மஞ்சுளா புன்னகைத்தாள். அதன் பின் வந்த நாட்களில் மஞ்சுளாவே அவனைப் பார்த் ததும் புன்னகைக்கத் தொடங்கினாள்.

வெறும் புன்னகையிலேயே இரு வாரங்கள் கடந்தன. அவனிடம் நின்று பேச மஞ்சுளாவிற்கு ஆசை இருந் தாலும் பெண் என்பதால் தயங்கினாள். அவனும் அவளிடம் பேச முயற்சி செய்யவில்லை.

மூன்றாவது வாரம் அவளது மனக் குறை நீங்கியது. அவனே வந்து அவளிடம் பேச ஆரம்பித்தான்.

மூன்றாவது வாரத்தில் ஒரு நாள் மஞ்சுளாவிற்கு பரிசோதனைக் கூடத்தில் வேலை இருந்ததால் அவள் வீடு திரும்ப சற்றுத் தாமதமானது. அவளது தோழிகள் அனைவரும் ஏற்கனவே வீட்டிற்குக் கிளம்பி விட்டனர். அதனால் அவள் தனியே நடந்து வந்து கொண்டிருந் தாள்.

அன்று அவன் 'ஹாய்!' என்று சொல்லிவிட்டு நகர்ந்து போகாமல் அங்கேயே நின்று அவள் முகம் பார்க்க, அவளுக்கு வெட்கமாக இருந்தது.

கடந்த இரு வாரங்களாக அவன் தன்னுடன் பேச மாட்டானா என்று அவள் ஏங்கியதற்கு காரணம் அவன் பணக்காரனாக இருந்தது மட்டுமல்ல. அழகானவனா கவும் இருந்ததே!

தான் இத்தனை நாட்களாக எதிர்பார்த்த ராஜகுமாரன் இவனாக இருப்பானோ என நினைத்துப் பார்த்து மஞ்சுளா மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

இன்று அவன் தன்னருகே வந்து அவளை உற்று நோக்கவும் அவளுக்கு வெட்கமாக இருந்தது.

''அழகா வெட்கப்படுறே மஞ்சு!'' என்று அவன் கூறியதும் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தவள்,

''என் பேர் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''டோன்ட் பீ சில்லி. இது கூடத் தெரியாமலா இருப்பேன்.''



அவனது பதிலில் அவளது உள்ளம் குளிர்ந்தது. தனது அழகு அங்கீகரிக்கப்பட்டதாக உணர்ந்தாள்.

''ஆனா எனக்கு உங்க பேர் தெரியாதே'' என்று அவள் அப்பாவியாய் கேட்க,

''அவ்வளவு தானே. இப்ப தெரிஞ்சுக்க. ஜீவசேகரன், நீ சேகர்ன்னு கூப்பிடு'' என்றான்.

''பேரைச் சொல்லியா?'' என்று அவள் தயங்க,

''கூப்பிடத் தானே பேர் வைக்கிறாங்க'' என்றான்.

முதலில் தயக்கத்துடன் ஆரம்பித்த பேச்சு அதன் பின் சரளமாக வளர்ந்தது. அரை மணி நேரம் தாண்டிய பின் அவள்,

''நேரமாச்சு. நான் கிளம்புறேன்'' என்றாள்.

''ப்ச்சு... இன்னும் கொஞ்ச நேரம் இருக்கக் கூடாதா?'' என்று அவன் கேட்கவும்,

''இல்லை... எங்க அம்மா தேடுவாங்க'' என்றாள்.

''நீ பஸ்ஸிலே தானே வீட்டுக்குப் போகணும். பஸ் ஸிலே போனால் எப்படியும் லேட்டாகும் தானே. நான் காரிலே உன்னை சீக்கிரமா கொண்டு போய் விடுறேன். அதனால இன்னும் கொஞ்ச நேரம் இரு'' என்றான்.

அவனுடன் மேலும் பேசிக் கொண்டிருக்க ஆசைப் பட்டோ இல்லை கார் சவாரி செய்ய ஆசைப்பட்டோ அவனுடைய முடிவிற்கு மஞ்சுளா கட்டுப்பட்டாள்.

எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு என்று நேரடியாகச் சொல்லிக் கொள்ளவில்லை என்றாலும் அவர்கள் இருவரது பேச்சுமே அது போல் தான் இருந்தது. தங் களுடைய விருப்பு வெறுப்புகளை பகிர்ந்து கொண் டார்கள். வருங்காலக் கனவு பற்றிப் பேசினார்கள்.

மேலும் அரை மணி நேரம் கழிந்த பின் அவனுடன், காரில் முன் இருக்கையில் அமர்ந்து கர்வத்துடனும் பெருமையுடனும் சவாரி செய்தாள்.

''தினமும் இங்க யாரைப் பார்க்க வந்தீங்க?'' என்று மஞ்சுளா கேட்டதும் அவளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு, பின் சாலையில் கவனம் செலுத்தி காரை ஓட்டினான்.

''ம்ம்ம் உண்மையைச் சொல்லவா? பொய் சொல்லவா?''

''ஏன் இப்படிக் கேட்கிறீங்க? உண்மையே சொல்லுங்க.''

''என் பிரண்டோட தம்பி இங்கே படிக்கிறான். முதல் நாள் அவனைப் பார்க்க வந்தேன். அதுக்கு அப்புறம் உன்னைப் பார்க்கத் தான் தினமும் வந்தேன்'' என்று சேகர் சொன்னதும் மஞ்சு சிறகில்லாமலே வானில் பறந்தாள்.

''நாளைக்கு மத்தியானம் வெளியே சாப்பிடப் போகலாம். வருகிறாயா?'' என்று கேட்டான்.

''ம்ம்ம் வரேன்'' என்று சம்மதம் தெரிவித்தாள்.

அவர்கள் வீடு இருக்கும் தெரு வருவதற்கு முன்பே மஞ்சுளா இறங்கிக் கொண்டாள். அங்கிருந்து நடந்தே வீட்டை அடைந்தாள்.

அன்று இரவு முழுவதும் ரகசியமாக சிரிதுக் கொண்டாள்.

மறுநாள் கல்லூரிக்குக் கிளம்பும் பொழுது அவள் தாய் மதியச் சாப்பாட்டினை டிபன் டப்பாவில் அடைத்துத் தந்தார். வேண்டா வெறுப்பாக அதைப் பெற்றுக் கொண்டாள்.

இன்று மதியம் சேகருடன் சாப்பிடப் போவதால் இது எதற்கு வேண்டாத சுமை என்று அவளுக்குத் தோன்றியது. ஆனால் அதை வீட்டில் சொல்ல முடியாத காரணத்தால் ஒன்றும் சொல்லாமல் பெற்றுக் கொண்டாள்.

அவள் தெருவில் நடந்து சென்ற பொழுது அவர்களது தெருவில் வடை சுட்டு வியாபாரம் செய்யும் பொன்னம்மா எதிரே வந்தார். அவர் மிகவும் சோர்வாகத் தெரிந்தார்.

அந்த தெருவில் இருப்பவர்கள் யார் கூடவும் மஞ்சுளா சரியாகப் பேச மாட்டாள். அவர்களுக்கும் இவளைக் கண்டால் பிடிக்காது.

மஞ்சு பொன்னம்மாளிடம் மட்டும் தான் நின்று பேச்சுக் கொடுப்பாள். அவருக்கும் இவளைக் கண்டால் பிடிக்கும். எந்த அளவிற்கு என்றால் இனாமாக வடை கொடுக்கும் அளவிற்குப் பிடிக்கும்.

எதனால் அவர்களுக்குள் அப்படி ஒரு பிணைப்பு என்ற காரணம் அவர்களுக்கே தெரியாது.

''என்ன பொன்னம்மா, ஏன் சோர்வா இருக்கீங்க?'' என்று கேட்டாள்.

''உடம்பு சரியில்லம்மா மஞ்சு. காய்ச்சல் அடிக்குது.''

''டாக்டர்கிட்டே போனீங்களா?''

''போனேன். மாத்திரை கொடுத்திருக்கார். கஞ்சி காய்ச்சணும். அதை குடிச்சதுக்கு அப்புறமா மாத்திரை போடணும். ஆனா கஞ்சி காய்ச்சுற அளவுக்கு உடம்பிலே தெம்பு இல்லை'' என்று அவர் புலம்பவும்,

''இந்தாங்க பொன்னம்மா. ரசம் சாதம் சாப்பிடுங்க'' என்று தன் மதியச் சாப்பாட்டை தூக்கிக் கொடுத்தாள்.

''ஐயோ வேண்டாம் பாப்பா. அப்புறம் மத்தியானம் நீ என்ன பண்ணுவே?'' என்று அதை வாங்கிக் கொள்ள மறுத்தார்.

''இல்ல பொன்னம்மா என் பிரண்டு ஒருத்தி எனக்கும் சேர்த்து இன்னைக்கு சாப்பாடு... பிரியாணி கொண்டு வரேன் என்று சொன்னாள். நான் மட்டும் நல்ல சாப்பாடு சாப்பிடப் போறேன்னு வீட்டிலே சொன்னா... என் தங்கச்சிங்க மனசு கஷ்டப்படும் இல்ல. அதான் சொல்லலை. எங்கம்மா கொடுத்த சாப்பாட்டை வாங்கிக்கிட்டு வந்திட்டேன்'' என்று என்னவோ தங்கைகளின் மீது மலை அளவு பாசம் வைத்துள்ள அக்கா போன்று நடித்தாள்.

அதை நம்பிய பொன்னம்மாவும் அவளுக்கு நன்றி கூறி அவள் தந்த சாப்பாட்டை வாங்கிக் கொண்டார்.

''சாயங்காலம் நானே வந்து டிபன் பாக்ஸை வாங்கிக்கிறேன்'' என்று சொல்லிச் சென்றாள்.

அன்று மதியம் சாப்பாட்டு வேளையில் கல்லூரியை விட்டு வெளியே வந்தாள். சற்று தொலைவில் மரத்தடியில் சேகர் தன் காரை நிறுத்தி வைத்துக் காத்திருந்தான்.

இவள் அவன் அருகே நெருங்கி, ''வந்து ரொம்ப நேரம் ஆச்சா?'' என்றாள்.

''இல்ல... இப்ப தான் ஒரு முக்கால் மணி நேரத்துக்கு முன்னாடி வந்தேன்'' என்று அவன் அலட்டிக்காமல் சொல்ல,



''ஐயோ! எனக்காக ரொம்ப நேரமா காத்து இருக்கீங்களா! சாரி'' என்றவள் அவனுடன் காரில் ஏறிச் சென்றாள்.

அடுத்த நாளும் பொன்னம்மாவிடம் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு சேகருடன் வெளியே சென்று சாப்பிட்டாள்.

அவர்கள் இரு தினங்கள் மட்டுமே மதிய இடைவேளையின் போது சந்தித்தார்கள். அதற்கு மஞ்சுளாவே முற்றுப் புள்ளி வைத்தாள்.

''மத்தியானம் பர்ஸ்ட் அவர் கிளாஸ் கட் ஆகிடுதுங்க. நாளையில் இருந்து நாம சாயங்காலம் பேசலாமா?'' என்று கேட்டதும்,

''சரி நான் இந்த மரத்தடியில் காத்து இருப்பேன். நீ வந்துவிடு'' என்றான்.

தினமும் அவளை ஏற்றிக் கொண்டு ஏதாவது ஹோட்டல், கோவில் என்ற பொது இடங்களில் சந்தித்துப் பேசிவிட்டு அவள் வீடு இருக்கும் பகுதியில் இறக்கி விட்டுச் செல்வதை அவன் வழக்கமாக்கிக் கொண்டான்.

அவனை தினமும் சந்தித்துப் பேசுவது தோழிகள் யாருக்கும் தெரியாமல் மஞ்சுளா பார்த்துக் கொண்டாள். அதற்குக் காரணம் தோழிகள் தன் மீது பொறாமைப் படலாமே என்று நினைத்தாள்.

தங்களது திருமணப் பத்திரிகையை அடித்த பின்பே அவர்கள் அனைவரிடமும் விவரம் தெரிவிக்க வேண்டும் எனத் தீர்மானித்தாள். ஆனால் அதே கல்லூரியில் படிக்கும் பெரிய தங்கையின் கண்களில் ஒரு நாள் பட்டு விட்டாள்.

''அக்கா, யாருக்கா அவன்? அவன் கூட உனக்கு என்ன பேச்சு?'' என்று அவள் விசாரிக்க,

''அவன் இவன் என்று மரியாதை இல்லாமல் பேசினே வாயிலே போடுவேன். என்ன... என்னை உளவு பார்க்கிறாயா? உன் வேலையை மட்டும் பாரு!'' என்று மிரட்டினாள்.

அவளது தங்கையும் அவள் மிரட்டலுக்கு கட்டுப் பட்டு அமைதியாக இருந்து விட்டாள்.

அடுத்த நாளும் மஞ்சுளா சேகருடன் பேசுவதைப் பார்த்தவள் அக்காவின் மிரட்டலை ஒதுக்கி விட்டு தன் தாயிடம் சென்று போட்டுக் கொடுத்தாள்.

மஞ்சுளாவின் தங்கை தன் அக்கா, யாரோ ஒரு அந்நிய ஆடவனுடன் இரு நாட்களாக பேசிக் கொண்டு இருப்பதாகத் தான் நினைத்துக் கொண்டாள். அவனுடன் சேர்ந்து மஞ்சுளா மதுரையைச் சுற்றி வருவது அவளுக்கு தெரிந்து இருக்கவில்லை.

அன்று வீடு திரும்பிய மஞ்சுவிடம் அவள் தாய் சேகர் பற்றி விசாரிக்க,

''என்னைப் பத்தி இல்லாததும் பொல்லாததும் எவ சொன்னாள்? உங்க ரெண்டாவது பொண்ணா? அவளுக்கு என் மேல பொறாமை. அவ என்ன மாதிரி கலரா, அழகா பிறக்கலை இல்ல... அதான். என்னைப் பத்தி தப்பு தப்பா உங்ககிட்டே சொல்லி இருக்காள்'' என்று வாய் கூசாமல் மஞ்சு பொய் சொன்னாள்.

''அவ என்னைக்கும் பொய் சொல்ல மாட்டாள்'' என்று அவள் அம்மா சொன்னதும்,

''அப்ப நான் பொய் சொல்லுறேனா? அவ சொல்லுறதை நம்புவீங்க. நான் சொல்லுறதை நம்ப மாட்டீங்



களா? நல்லா இருக்கும்மா உங்க நியாயம்'' என்று எகிறிவிட்டு சென்றாள்.

'இவ இவ்வளவு தூரம் சண்டை போடுறாள். அப்ப யார் சொல்லுறது நிஜம்? ஒரு வேளை கூடப் படிக்கிற வங்க கிட்டே பேசிக்கிட்டு இருந்ததை சின்னவள் தப்பாப் புரிஞ்சுக்கிட்டாள் போல!' என மஞ்சுவின் தாய் நினைத்துக் கொண்டார்.

அவளின் தாய் மகள் யாரையும் காதலிக்கின்றாளோ என்று சந்தேகப்படவில்லை.

மகளின் நடவடிக்கையில் பெரிய மாறுதல் தெரிந்தால் ஒரு தாய்க்கு சந்தேகம் வரும்.

காதலுக்கு உண்டான மாற்றங்கள் என்ன? தாமதமாக வீடு திரும்புவது. மஞ்சுளா சேகருடன் காரில் வருவதால் சரியான நேரத்திற்கு வீடு வந்து சேர்கிறாளே!

அடிக்கடி கண்ணாடி முன் நின்று அழகு பார்ப்பது. மஞ்சுளா இதை எப்பொழுதுமே செய்பவள்!

யாரென்று தெரியாத நபருடன் அடிக்கடி தொலைப் பேசியில் பேசுவது. அப்படிப் பேசுவதற்கு அவர்கள் வீட்டில் தொலைப்பேசி இல்லையே!

அடுத்த வாரம் அவளது படிப்பிற்கான கடைசி செமஸ்டர் என்பதால் அவனோடு சுற்றாது படிப்பில் கவனம் செலுத்தினாள். ஆனால் கடைசி பரீட்சை முடிந்த அன்று சேகர் அவளுக்காக 'ஐ மிஸ் யூ மஞ்சு!' என்ற வாக்கியத்தோடு காத்து இருந்தான்.

முறுவலித்துக் கொண்டே அவன் காரில் ஏறி அமர்ந்தவள் பேசாமல் அமைதியாக வந்தாள்.

''என்ன ஆச்சு மஞ்சு? நான் எவ்வளவு ஆசையா உன்னைப் பார்க்க வந்தேன். நீ என்னடான்னா...'' என்று அவன் அலுத்துக் கொள்ளவும்,

''நாளையில் இருந்து நான் காலேஜ் வர மாட்டேன். உங்களை எங்கே எப்படிப் பார்ப்பேன்'' என்று வருத்தத்துடன் மொழிந்தாள்.

''ஓ! ஆனால் எப்படின்னாலும் இன்னும் ஒரு மாசத்துக்கு என்னைப் பார்க்க முடியாது மஞ்சு.''

''என்னது ஒரு மாசமா? ஏன்?'' என்று மஞ்சு அதிர்ச்சியுடன் கேட்க,

''நான் வேலை விஷயமா சென்னைக்குப் போறேன் மஞ்சு. அதான்...'' என்றதும், அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தாள்.

அன்று வருத்தத்துடனே அவனை விட்டுப் பிரிந்து சென்றாள். அவனைப் பார்க்காத அந்த ஒரு மாதமும் அவளுக்கு நரக வேதனையாக இருந்தது. தவித்து திண்டாடிப் போனாள்.

கல்லூரி முடிந்து ஒரு மாதம் ஆகியும் கூட மஞ்சுளா எங்கேயும் வெளியே செல்லாததால் மஞ்சுவின் தாய் அன்று சின்ன மகள் மஞ்சுளாவைப் பற்றிச் சொன்னது தப்பென்று எண்ணிக் கொண்டார்.

ஒரு மாதம் கழித்து கல்லூரியில் அவள் பி.எஸ்ஸி முடித்ததற்கான சான்றிதழ் வாங்கச் சென்றாள்.

சான்றிதழை வாங்கிவிட்டு கல்லூரியை விட்டு வெளியே வந்தவளின் முகம் மலர்ந்தது. ஏனென்றால் சேகர் காத்துக் கொண்டு இருந்தான்.

துள்ளலுடன் அவனிடம் ஓடிச் சென்றவளின் வாயில் இருந்து, ''ஐ மிஸ் யூ!'' என்ற வாக்கியம், அவளையும் அறியாமல் வந்து விழுந்தது.



''பரவாயில்லையே... ஒரு மாசம் கழிச்சு என்னை மறந்திருப்பேன்னு நினைச்சு வந்தேன். இப்படி ஒரு வரவேற்பை நான் எதிர்பார்க்கலைம்மா'' என்று அவன் கிண்டல் பண்ணவும், அவனை முறைத்துப் பார்த்தாள்.

மதியச் சாப்பாட்டிற்காக அவளை ஒரு உயர் ரக ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

''போன வேலை முடிஞ்சிடுச்சா?'' என்று மஞ்சுளா கேட்க,

''இல்லை இன்னும் முடியலை. திரும்பவும் போகணும். நாளைக்கு என் பர்த்டே. அதை உன்கூடக் கொண்டா_ணும் என்று தான் ஓடி வந்தேன்'' என்றதும்,

அவள் உற்சாகமாக, ''அட்வான்ஸ் ஹேப்பி பர்த்டே!'' என்று வாழ்த்தினாள்.

''வாழ்த்தெல்லாம் இருக்கட்டும். நீ நாளைக்கு முழுசும் என் கூடவே இருக்கணும்'' என்றான்.

''நாளைக்கா...'' என்று அவள் இழுக்க,

''எந்த சாக்கு போக்கும் சொல்லாதே. நாளைக்கு உன்னை என் வீட்டுக்கு கூட்டிட்டுப் போறேன்'' என்றான்.

''உங்க வீட்டுக்கு நீங்க என்னை முறைப்படி கூட்டிட்டு போகணும்'' என்று வெட்கத்துடன் அவள் சொல்ல,

''முறைப்படியா? அது என்ன முறை? அதுக்காக நீ எங்க வீட்டுக்கு வான்னு பத்திரிகை அடிச்சா கூப்பிட முடியும்?'' என்று கேட்டான்.

''ம்ம்ம் பத்திரிகை அடிக்கணும். ஆனா, எனக்கு கொடுக்கிறதுக்காக இல்ல...'' என்று அவள் மீண்டும்

"ஓ! நீ அதைச் சொல்லுறியா. அப்ப எங்க வீட்டுக்கு வர மாட்டியா? ம்ம்ம்..." என்று யோசித்தவன், "என் பிரண்டு வீட்டுக்கு வருகிறாயா?" என்றான்.

அவள் தயங்கியவாறே சம்மதம் தெரிவித்தாள்.

# 7



ஒரு மாலைப் பொழுதில் மதுமதியும் அவளது தோழிகளும் கல்லூரியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"ஹேய்! ராஜா ராணி பார்த்தீங்களா?" என்று பேச்சை ஒருத்தி தொடங்கி வைத்தாள்.

"ராஜா ராணியை எல்லாம் பார்க்கிறதுக்கு நாம என்ன மன்னர் காலத்திலேயா இருக்கோம்?" என்று ஒருத்தி நக்கல் பண்ண,

"நான் உன் பக்கத்திலே வந்தேன்... செத்தடி மகளே!" என்று ஒருத்தி மிரட்டினாள்.

"அதிலே ஜெய் வந்த சீன் எல்லாம் நல்லா இருந்துச்சு இல்ல?"

"நான் ஒண்ணும் அழுகலை. கண்ணுல வேர்க்குது. அந்த வசனம் செமையா இருந்துச்சு இல்ல?!" என்று அவர்கள் அனைவரும் சமீபத்தில் வெளி வந்த திரைப் படத்தைப் பற்றி தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தனர்.



அப்பொழுது அவர்களை நோக்கி ஒரு இளைஞன் வந்தான்.

அவனைப் பார்த்தாலே பணக்காரன் என்று எளிதாக முத்திரை குத்தி விடலாம்.

அவனுடைய ஆடை அலங்காரமெல்லாம் அது போல் தான் அமைந்து இருந்தது. தலையை கலரிங் (தலைக்கு கலர் சாயம் அடிப்பது) பண்ணி இருந்தான். போட்டிருந்த கண்ணாடி, கைக்கடிகாரம், உடை, காலணி என அனைத்துமே உயர் ரகத்தைச் சேர்ந்ததாக இருந்தன. வாயில் பபிள் கம்மை மென்று கொண்டிருந்தான்.

"ஹேய்! யாருடி அவன்?"

"ஹீரோ மாதிரி இல்ல?!"

"ஆளு ஹேண்ட்சம்மா இருக்கான்டி!" என்று ஆளாளுக்கு அள்ளி விட, மதுமதிக்கு அவனைப் பற்றிப் பெரிதாக எதுவும் தோன்றவில்லை. அதனால் அவள் அமைதியாக இருந்தாள்.

மதுமதியின் வகுப்பில் படிக்கும் சுபத்ரா, 'இவன் எதுக்கு என் காலேஜூக்கு வந்திருக்கான்?' என நினைத்துக் கொண்டே அவனை நோக்கி நடந்தாள்.

அதற்குள் அவன் அவர்கள் அருகில் வந்துவிட்டதால் தன் தோழிகளிடம் திரும்பிய சுபத்ரா,

"ஹாய் பிரண்ட்ஸ்! இது என்னோட அண்ணன். என் பெரியம்மா பையன். பேரு நிதிஷ்" என்று அறிமுகப் படுத்தி வைத்தாள்.

அனைவரும் அவனிடம் "ஹலோ!" என்று சொன்னார்கள். மதுமதிக்கு அந்த ஹலோ கூட இயல்பாய் வரவில்லை.

அவளது அம்மாவின் கண்டிப்பான வளர்ப்பால் வகுப்பில் உடன் படிக்கும் ஆண் நண்பர்களைத் தவிர அவள் வேறு யாரிடமும் சகஜமாக பேச மாட்டாள்.

வெளி ஆண்களைக் கண்டால் அவள் சற்றே விலகிப் போகும் ரகம். அதனால் அவளால் அவனிடம் இயல்பாக பேச முடியவில்லை.

சுபத்ராவும் அவனும் சற்றே விலகிச் சென்று பேச ஆரம்பித்தார்கள்.

கல்லூரி முடிந்துவிட்டதால் மதுமதி வீட்டிற்கு செல்ல லாம் என முடிவு செய்தாள்.

அதனால் அவள் தோழிகளிடம், "ஹேய்! வீட்டுக்கு போகலாமா?" என்று கேட்டாள்.

"அதுக்குள்ளே என்ன அவசரம்? வீட்டிலே போய் வேலை ஏதாச்சும் பார்க்கப் போறியா என்ன?" என்ற தோழியின் கேள்விக்கு,

"சீக்கிரமாப் போனால் படிக்கலாமேன்னு பார்த்தேன்" என்றாள்.

"என்னது படிக்கப் போறியா?"

"எவளாவது 'நான் இளிச்சவாய்' என்று போர்டு எழுதி கழுத்திலே தொங்க விட்டுட்டு வருவாள். அவகிட்டே போய் சொல்லு. நீ வேலை செய்வேன் என்று சொன் னால் கூட நாங்க நம்புவோம். படிக்கிறேன் என்று சொன் னால்... நோ சான்ஸ்."

"அடச்சே! வர வர நாட்டிலே உண்மையைச் சொன் னால் கூட யாருமே நம்ப மாட்டேங்கிறாங்க" என்று வாய்விட்டுப் புலம்பிய மதுமதி,

சாதுவான தன் தோழி ஒருத்தியை பார்த்து, "நீயாவது என்னை நம்புறியா?" என்று கேட்டதும்,

"ஏன் என்னை பார்த்தா உனக்கு இவங்க சொன்ன இளிச்சவாயா தெரியுதா?" என்று அவள் நக்கலாகக் கேட்டாள்.

மதுமதி நிதிஷின் புறம் தன் பார்வையைத் திருப் பாமல் தன் தோழிகளிடம் உரையாடிக் கொண்டிருந்தாள்.

ஆனால் அந்த நிதிஷோ தன் தங்கையிடம் பேசிக் கொண்டிருந்தாலும் அவனின் பார்வை மதுமதியின் மீதே நிலைத்திருந்தது.

அவனும் அவனின் தங்கையும் மீண்டும் பெண்கள் கூட்டத்தின் அருகே வந்தனர்.

மதுமதி அவர்களை கவனிக்காமல், "நான் படிக்கப் போறதில்லை. ஒத்துக்கிறேன். பிராஜெக்ட் வேலையை முடிப்போமேன்னு பார்த்தேன். அது படிப்பு சம்பந்த மானது தானே?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பிராஜெக்ட் வேலை தானே. மெதுவா முடிக்கலாம்" என்று ஒருத்தியும்,

"உனக்கு தான் உன் வேலையை முடிச்சுக் கொடுக்க ஃப்ரீ ஆஃப் காஸ்ட்டில் ஆள் இருக்கே!" என்று பொறாமையோடும் பெருமூச்சோடும் மற்றொருத்தி சொல்ல,

"ஜீவாவை சொல்லுறியா. அவன் சில சமயம் செஞ்சு தருவான். சில சமயம் சட்டம் பேசுவான். நீ தான் இதை செய்யணும். இது உன் வேலை. அப்படி இப்படின்னு..." என்று மதுமதி தோள் குலுக்கினாள்.

நிதிஷின் காதில் 'ஜீவா' என்ற பெயர் தெளிவாக விழுந்தது.

'ஜீவா... அது யார்? இவள் அண்ணனோ? ஒரு வேளை இவள் பாய் பிரண்டா இருந்து தொலைப்பானோ?' என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

மதுமதி, ''ஓ.கே பிரண்ட்ஸ் நான் கிளம்புறேன்'' என்று சொல்லி நகர ஆரம்பித்தாள்.

அவளது கரம் பற்றி தடுத்த சுபத்ரா, ''மது, என்ன அவசரம். எங்க அண்ணனுக்கு பிசினஸிலே பெரிய ஆர்டர் கிடைச்சிருக்காம். அதுக்காக நம்ம எல்லோருக்கும் இன்னைக்கு ட்ரீட் தரேன் என்று சொல்லுறான். நாம எல்லோரும் 'காபி டே' போகலாம்'' என்று சொன்னாள்.

'இவன் எதுக்கு எங்களுக்கு ட்ரீட் தரணும்?' என்று மனதிற்குள் எண்ணிய மதுமதி,

''இல்லை சுபா. நான் வரலை'' என்று மறுத்தாள்.

மற்ற தோழிகள் யாரும் மறுக்கவில்லை. 'தன்னுடைய சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ள காபி வாங்கித் தரான். அவ்வளவு தானே!' என்று இலகுவாக எடுத்துக் கொண்டார்கள்.

''நீ எப்பவுமே இப்படித் தான். எங்கே கூப்பிட்டாலும் வர மாட்டே. எங்க வீட்டுக்கு கூப்பிட்டாலும் வர மாட்டே. வெளியே கூப்பிட்டாலும் வர மாட்டே. அம்மா திட்டுவாங்க ஆட்டுக்குட்டி திட்டும் அப்படின்னு கதை சொல்லுவே. இன்னைக்கு நான் உன்னை அதிக தூரம் கூட கூப்பிடலை. இதோ பக்கத்தில் இருக்கிற காபி ஷாப்புக்கு தானே கூப்பிடுறேன்'' என்று சுபத்ரா மனத்



தாங்கலுடன் சொல்லவும் மதுமதியின் மனம் லேசாக அசைந்தது.

'சரி போவோம். அம்மாவை சமாளித்துக் கொள்வோம்' என்று எண்ணியவளாய் அவர்களுடன் வர சம்மதித்தாள்.

அவளது தோழிகளை விட நிதிஷ் அதிக மகிழ்ச்சி அடைந்தான். பின்னே மதுமதிக்காகத் தானே அவன் அந்த மொத்த கும்பலுக்குமே செலவு செய்ய முடிவு பண்ணினான். ஒரு வேளை அவள் வரவில்லை என்றால் அனைத்தும் வீணாகிப் போகுமே!

''என் காரிலே வாங்க'' என்று பொதுப்படையாக அங்கிருந்த பெண்களைப் பார்த்து அவன் அழைக்க, சிலர் அவன் பின்னே சென்றனர்.

ஆனால் மதுமதி தன் ஸ்கூட்டியில் வருவதாகச் சொல்லிவிட்டாள்.

காபி ஷாப் இருக்கும் அந்த மாலுக்குள் சென்றதும், ''காபி குடிக்கும் முன்னாடி சும்மா ஷாப்பிங் பண்ணுவோமா?'' என்று நிதிஷ் கேட்கவும்,

அனைத்து பெண்களும் அவன் கருத்தை ஆமோதித்து அங்கிருந்த கடைகளுக்குள் நுழைந்தனர்.

மதுமதிக்கு சீக்கிரமாக வீடு செல்ல வேண்டும் என்று தோன்றியது. அதனால் அவளால் எதிலும் ஆர்வத்தோடு கலந்து கொள்ள முடியவில்லை.

மேலும் எந்தப் பொருளையும் வாங்குவதற்கு பணம் வேண்டுமே!

அவள் அம்மா அவளது ஸ்கூட்டிக்கு பெட்ரோல் போட பணம் தருவதோடு அவசரத் தேவைக்கென்று கை இருப்பாக ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடுவார்.

தினமும் மாலையில் கல்லூரியில் இருந்து திரும்பி வந்ததும் அதை கீதாவிடம் மதுமதி திருப்பிக் கொடுக்க வேண்டும். பணம் குறைந்தால் எதற்காக செலவு செய்தாள் என்ற காரணத்தைக் கூற வேண்டும்.

அத்தியாவசியச் செலவென்றால் ஒன்றும் சொல்ல மாட்டார். அநாவசியம் என்று அவருக்கு தோன்றினால் ஆயிரம் கேள்விகள், ஆயிரமாயிரம் அறிவுரைகள் என்று அவளை வறுத்து எடுத்துவிடுவார்.

அவளது குடும்பம் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தது. தந்தையின் சம்பளத்தில் அவளும் அவளது தம்பியும் பொறியியல் படிப்பு படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் மதுமதி பெரிதாக எதற்கும் ஆசைப்படவும் மாட்டாள்.

ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளுக்கு வீட்டின் நிதி நிலைமை, வரவு செலவு கணக்கு எல்லாம் மிக நன்றாக புரிபடும்.

அதனால் எந்த கடைக்குள்ளும் புகுந்து, எதையும் வாங்கும் ஆசை மதுமதிக்கு இல்லை.

மதுமதி நின்ற இடத்தில் நின்று கொண்டே சுற்றிலும் உள்ள கடைகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

மதுமதிக்கு எதையாவது பரிசளிக்க வேண்டும் என்று நிதிஷ் ஆசைப்பட்டான்.

'என்ன வாங்கித் தரலாம்?' என்று அவன் சுற்றிலும் பார்வையை ஓட்ட... அங்கே இருந்த டைட்டன் வாட்ச் கடையை பார்த்ததும் அவனுக்கு ஒரு கைக் கடிகாரம் வாங்கிப் பரிசளிக்கலாம் என்று முடிவு செய்தான்.



அவளது கையை அவன் வேகமாக பார்வையிட... அங்கே பழைய கடிகாரம் காட்சி அளிக்கவும் அக மகிழ்ந்து போனான்.

''மதுமதி வரீங்களா? நாம அந்த டைட்டன் வாட்ச் கடைக்கு போவோம். புது வாட்ச் வாங்குவோம்'' என்று அவளை அழைத்தான்.

நிதிஷ் தன்னிடம் நேரடியாக பேசியதும்... அதுவும் வெகு இயல்பாய் தன் பெயரைக் குறிப்பிட்டுப் பேசவும், மதுமதி சங்கடமுற்றாள்.

அப்பொழுது தான் அவள் தனித்து நிற்பதை உணர்ந்தாள். தோழிகள் சென்ற திசையில் நகர்ந்து கொண்டே,

''இல்லை. நான் வரலை'' என்று நிதிஷிடம் மறுத்தாள்.

''உங்க வாட்ச் பழசாகிடுச்சே! அதை மாத்தலாம் தானே! நான் வாங்கித் தரேன்'' என்று நிதிஷ் சொன்னதும்,

''இல்லையில்லை... எனக்கு வேண்டாம்'' என்று வேகமாக சொன்னவள்,

''இது ஜீவா தன்னோட முதல் மாச சம்பளத்திலே வாங்கித் தந்தது. அதனால நான் இதை மாத்த மாட்டேன்'' என்று பிடிவாதமாக மறுத்தவள் தோழிகளின் அருகில் சென்று நின்று கொண்டாள்.

''ஜீவா... அது யாரு?'' என்று நிதிஷ் மனதில் நினைத்த கேள்வி அவன் வாய் வழியாக வெளியே வந்து விழுந்தது.

மதுமதி பதிலளிக்கும் முன் அவளது தோழிகள் நிதிஷுக்கு வேண்டிய தகவல்களைத் தெரிவித்தனர்.

''ஜீவா... மதுவோட மாமா பையன்'' என்று ஒருத்தியும்,

''அவர் காலேஜில லெக்சரரா இருக்கார்'' என்று இன்னொருத்தியும் சொல்ல,

''ஓ! காலேஜில லெக்சரரா?!'' என்று இகழ்ச்சியாக நிதிஷ் கேட்டான்.

'அப்படின்னா அவனும் சுமாரான வசதி உள்ளவனாகத் தான் இருப்பான்' என்று நிதிஷ் மனதில் கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

மதுமதிக்கு அவன் ஜீவாவை குறைத்து மதிப்பிடும் வண்ணம் இகழ்ச்சியாக கேட்ட கேள்வி அறவே பிடிக்கவில்லை.

அவளுக்கு ஜீவாவை யாரும் குறை கூறினால் பிடிக்காது. அவள் முன் கலா அல்லது சபாபதி கூட குறை கூறி விட முடியாது. உடனே அவர்களிடம் சண்டையிடக் கிளம்பி விடுவாள்.

அவனை திட்டவும், குறை கூறவும் அவளுக்கு மட்டுமே ஏக போக உரிமை இருப்பதாகத் தான் அவளது அனைத்து நடவடிக்கைகளுமே அமைந்து இருக்கும்.

அதனால் நிதிஷை... ஜீவாவை தரக் குறைவாக நினைக்கும் நிதிஷை மதுமதிக்கு அறவே பிடிக்காமல் போனது.

அரை மணி நேரத்திற்கு மேலாக கடைகளை வலம் வந்தவர்கள் 'காபி டே' சென்று அமர்ந்தார்கள்.

மதுமதி இதுவரை இந்த கடைக்கு வந்ததில்லை.

என்ன தான் நகரத்தில் வாழ்ந்தாலும் கீதா அவளுக்கு கட்டுப்பாடுகளை அதிகம் விதிப்பார். அதே போல்



ஆடம்பரச் செலவு செய்யவும் ஒத்துக் கொள்ள மாட்டார்.

அங்கிருந்த விலைப்பட்டியலை எடுத்து பார்வையிட்டவளுக்கு காபியில் இத்தனை விதங்களா என்று இருந்தது. இதற்கு முன்பு தோழிகளின் வாயிலாக கேள்விப்பட்டு இருந்தாலும் நேரில் பார்க்கும் போது ஆச்சரியம் அதிகமானது.

'யாருக்கு என்ன வேண்டும்?' என்று ஒவ்வொருவராக கேட்டு நிதிஷ் ஆர்டர் செய்தான்.

மதுமதிக்கு காபியை குடித்துப் பார்க்க விருப்பம் இருந்தும், அதை வாங்கித் தரப் போவது ஜீவாவை இகழும் நிதிஷ் என்பதால் அதைக் குடிக்கக் கூடாது என்று மனதில் சபதம் எடுத்துக் கொண்டாள்.

அவன் மதுமதியிடம் கேட்ட போது, ''இல்லை எனக்கு வேண்டாம். எனக்கு காபியை சூடா குடிக்கத் தான் பிடிக்கும். குளிர்ச்சியா குடிக்கப் பிடிக்காது'' என்று மறுத்துவிட்டாள்.

''அப்படின்னா ஜூஸ் ஏதாச்சும் குடிக்கிறியா?'' என்று சுபத்ரா கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே மதுமதியின் கைப்பேசி சிணுங்கியது.

''ஒரு நிமிஷம்'' என்று அங்கிருப்போர்களிடம் பொதுவாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்று கைப்பேசியில் பேச ஆரம்பித்தாள்.

அவளது தாய் கீதா அழைத்திருந்தார்.

''மது, எங்கே இருக்கே? ஏன் இன்னும் வீட்டுக்கு வரலை?'' என்று கீதா கேட்டார்.

''அம்மா, பிரண்ட்ஸோட காபி ஷாப்புக்கு வந்தேன்.''

''நேரம் எவ்வளவு ஆச்சு பார்த்தியா? கிளம்பிட்டியா?''

''இல்லைம்மா. இன்னமும் காபியே வரலை.''

''அப்போ எப்ப தான் கிளம்புறதா உத்தேசம்?''

''கொஞ்ச நேரத்திலேயே கிளம்பிடுவேன் மா. உங்க விசாரணையை நான் வீட்டுக்கு வந்த உடனே வச்சுக் கோங்க ப்ளீஸ்...'' என்று சொல்லி அழைப்பைத் துண் டித்தாள்.

அவரிடம் பேசி முடித்துவிட்டு அங்கிருந்த ஜூஸ் பாட்டில் ஒன்றை தன் சொந்த காசை செலவு செய்து வாங்கிக் கொண்டு தோழிகளின் அருகே சென்று அமர்ந்தாள்.

எல்லோரும் காபி குடிக்கும் போது தான் மட்டும் ஒன்றும் குடிக்காமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந் தால் அது அவர்கள் அனைவருக்கும் சங்கடத்தைக் கொடுக்கும் என்று நினைத்தவள் பழச்சாறை வாங்கிக் கொண்டாள்.

அவர்களது காபி வந்ததும் அவளும் தனது ஜூஸ் பாட்டிலைத் திறந்து பருக ஆரம்பித்தாள்.

காபியின் மணம் அவளது நாசியை அடைந்து அவ ளுக்கு அதை குடிக்கும் ஆசையை வெகுவாக தூண் டியது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தோழிகள் அனைவரும் அரட்டையில் ஈடுபட மது மதியும் அதில் கலந்து கொண்டாள்.

நிதிஷின் பார்வை மதுமதியை விட்டு அகலவில்லை. மதுமதி அதை கவனிக்கலை.



அப்படியே கவனித்திருந்தாலும் அவள் அதை அசட்டை செய்திருப்பாள்.

ஏனென்றால் முதல் முறை அவளைப் பார்ப்பவர்கள் அவளைக் கண் எடுக்காது நோட்டம் விடுவதை அவள் எத்தனையோ முறை கண்டிருப்பதால் எப்பொழுதுமே அது அவளுக்கு பெரிய விஷயம் கிடையாது. அவளுக்கு தன் அழகு குறித்த பெருமையோ கர்வமோ என்றுமே இருந்ததில்லை.

வெளிநாட்டில் இருந்து சென்னை வந்திருக்கும் தனது நண்பனை சந்திப்பதற்காக ஜீவா அந்த 'காபி டே' கடைக்குள் நுழைந்தான்.

ஓரமாக ஒரு இருக்கையில் அமர்ந்தவன் சுற்றிலும் பார்வையை ஓட்ட அவனது கண்களில் மதுமதி சிக்கி னாள். அவனது அகமும், முகமும் ஒருங்கே மலர்ந்தன.

யாரோடு வந்திருக்காள்? என்று உடன் வந்திருப் பவர்களை அவன் பார்வையிட்டான்.

அவனது பார்வையில் நிதிஷ் தென்பட்டான்.

ஜீவா நிதிஷை மேலும் கீழுமாக ஆராய்ந்தான்.

முதல் பார்வையிலேயே அவனுக்கு நிதிஷை பிடிக்க வில்லை. யாரிவன்? என்று நினைத்துக் கொண்டே மேலும் ஆராய...

நிதிஷின் பார்வை மதுமதியின் மேல் மையம் கொண் டிருப்பதை கண்ணுற்ற ஜீவா திடுக்கிட்டான்.

இது சரியில்லையே!

இவன் மதுவையே கண் எடுக்காமல் பார்த்துக் கொண் டிருக்கிறான். அதைக் கூட கவனிக்காமல் இவள் என்ன

செய்து கொண்டு இருக்கிறாள் என்று மதுமதியின் மேல் கோபம் வந்தது.

ஜீவாவிற்கு எழுந்து சென்று அவன் சட்டை காலரை பிடித்து கேள்வி கேட்க வேண்டும் என்று ஆத்திரம் வந்தது.

ஆனால் என்னவென்று கேட்க முடியும்? கண்ணால் பார்ப்பதற்காக ஒருவனை கேள்வி கேட்க முடியுமா என்ற நியாயம் புத்திக்கு தெரிந்ததால் கோபத்தை அடக்கிக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான்.

மதுமதி ஜீவா வந்ததையும் கவனிக்கவில்லை. அதே சமயம் நிதிஷின் புறமும் பார்வையை திருப்பவில்லை.

ஜீவாவின் நண்பன் அவனை அழைத்து தன்னால் இன்று வர முடியாது என்று கூறி மன்னிப்பு கோரினான்.

ஏற்கனவே முள் மேல அமர்ந்திருப்பது போன்று அவஸ்தையாய் நெளிந்து கொண்டிருந்த ஜீவா நல்லதாகப் போயிற்று என்று அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

அவன் கிளம்பிச் சென்ற ஐந்தாவது நிமிடம் மதுமதி, "பை பிரண்ட்ஸ். இதுக்கு மேல லேட்டாச்சுன்னா எங்கம்மா திட்டுவாங்க. நீங்க மெதுவா கிளம்புங்க. இப்ப நான் கிளம்பறேன்" என்று விடைபெற்று கிளம்பிச் சென்றாள்.

நிதிஷ் செல்லும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

## 8



மஞ்சுளா சேகரின் பிறந்த நாளுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று யோசித்துப் பார்த்து



காய்ந்தாள். எதை வாங்கவும் பணம் வேண்டும். அது தன்னிடம் சுத்தமாக இல்லை என்பதை உணர்ந்தவள்,

தோழி ஒருத்திக்கு பிறந்த நாள் என்று சொல்லி பெற்றோரிடம் பணம் கேட்டுப் பார்த்தாள். அவர்கள் இல்லை என்று கூறி கைவிரித்து விட்டனர்.

தானே தன் கைப்பட வரைந்து ஒரு வாழ்த்து அட்டையை தயாரித்தாள். அதை எடுத்துக் கொண்டு மறுநாள் அவனைச் சந்தித்தாள்.

சேகர் தன் நண்பனின் வீட்டில் காரை நிறுத்த... தயங்கிக் கொண்டே இறங்கி அவனைப் பின் தொடர்ந்தாள்.

அங்கே ஒருவரையும் காணாது குழம்பியவள், "எங்கே யாரையும் காணோம்?" என்று கேட்டாள்.

"நீ யாரைத் தேடுறே மஞ்சு?" என்று அவன் புரியாமல் விழிக்க,

"உங்க பிரண்ட்ஸ் யாரும் வரலையா?"

"நான் உன் கூட பர்த் டேயை கொண்டாடத் தான் மதுரைக்கு வந்தேன். கண்ட தீவட்டித் தடியன்களோட கொண்டாட இல்லை" என்றதும்,

"நீங்க இப்படி சொன்னது மட்டும் உங்க பிரண்ட்ஸுக்கு தெரிஞ்சது... அவ்வளவு தான். உங்களை உதைக்கப் போறாங்க" என்றாள்.

வீட்டில் தங்கள் இருவரைத் தவிர வேறு யாருமில்லை என்றதும், தாங்கள் இடையூறு இல்லாமல் பேசலாம் என்று மஞ்சுளா சந்தோஷம் அடைந்தாள்.

அதே சமயம் தனி வீட்டில் ஒரு ஆண் மகனுடன் தனித்து இருப்பது இதுவே முதல் முறை என்பதால் அது அவளுக்கு கூச்சத்தையும் அளித்தது.

அப்பொழுது தான் ஞாபகம் வந்தவளாக தயங்கிக் கொண்டே தன் வாழ்த்து அட்டையை வெளியில் எடுத்தாள்.

''என்கிட்டே உங்களுக்கு கிஃப்ட் வாங்கப் பணமில்லை. அதான் நானே கார்டு பண்ணினேன். இதை ஏத்துக்குவீங்களா?'' என்று தயங்கியவாறே அந்த வாழ்த்து அட்டையை எடுத்து நீட்டினாள்.

''சில்லியா பேசாதே மஞ்சு. நான் உன் கூட இருக்கிறது தான் நீ எனக்கு கொடுக்கப் போகும் பர்த்டே கிஃப்ட்'' என்றதும் முகம் மலர்ந்தாள்.

அன்று மாலை வரை அவனுடன் இருந்தாள். அவன் வழக்கம் போல் அவளது வீடு இருக்கும் பகுதியில் அவளை இறக்கி விட்டுச் சென்றான்.

வீட்டிற்குள் நுழைந்தவளை, ''தோழிக்கு பிறந்த நாள் என்று சொல்லி காலையிலே போனவள் பொழுது போனதுக்கு அப்புறம் வந்தால் என்னடி அர்த்தம்?'' என்று அவள் தாய் கண்டிக்க,

''வந்துட்டேன் இல்ல... அப்படியே ஓடிப் போயிடலயே!'' என்று எகத்தாளமாகக் கேட்டுவிட்டு அகன்றாள்.

''திமிர். உடம்பு முழுக்க திமிர்!'' என்று அவளை திட்டியவர் அவள் தன் காதலனுடன் ஊர் சுற்றிச் சென்றிருப்பாளோ என்று துளி கூடச் சந்தேகப்படவில்லை.

'பாவம். சின்னப் பெண். ஒரு மாசமா வீட்டிலேயே



பார்க்கவும் நேரங் காலம் தெரியாமல் பேசிவிட்டு வருகிறாள்' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டார்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள் மஞ்சுளா பொன்னம்மாவை பார்த்த பொழுது அவர் தன் இருப்பிடத்தை சென்னைக்கு மாற்றப் போவதாக சொன்னார்.

அவர் கடந்த இரண்டு வருடமாக தான் மதுரையில் இருந்து வருகிறார். அவர் தன் மகனின் உதவிக்காக மதுரை வந்தார். அவரது தேவை முடிந்தவுடன் மகன் தனிக் குடித்தனம் சென்றுவிட்டான்.

இங்கே தனியாக இருப்பதைக் காட்டிலும் பழகின ஊர், பழகிய ஜனங்கள் என்பதால் மீண்டும் சென்னைக்கே செல்ல முடிவெடுத்து விட்டதாக தெரிவித்தார். முன்பு குடியிருந்த தெருவிலேயே வீடு பார்த்திருப்பதாகக் கூறினார்.

மஞ்சுளாவால் சேகரைப் பார்க்க முடியவில்லை. ஒரு நாள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வைத்துப் பார்த்தாள். இவள் நெருங்கிப் போகும் முன் அவன் மறைந்துவிட்டான்.

அடுத்த முறை அவனைக் கடை வீதியில் பார்த்தாள். அவன் அருகில் ஓடிச் சென்று, ''நான் உங்களை எங்கெல்லாம் தேடுறது. உங்களைப் பார்க்காமல் மனசு சங்கடமா இருந்துச்சு தெரியுமா?'' என்று சிணுங்கினாள்.

''நீங்க எதுக்கு என்னைப் பார்க்கணும்?'' என்று அவன் கேட்க,

அவனது பன்மை பேச்சில் முதலில் அதிர்ந்தவள், அதன் பின்பே அவனது கேள்வியில் அதிர்ந்தாள்.

''விளையாடாதீங்க சேகர்'' என்றதும்,

''நான் ஏன் உங்க கூட விளையாடப் போறேன்'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே ஒரு பெண் தன் கையில் குழந்தையோடு வந்தாள்.

அந்த குழந்தை சேகரை, ''அப்பா!'' என்று அழைத்துக் கொண்டே அவனிடம் தாவியது. மஞ்சுளாவிற்கு பூமி சுழன்றது.

''யாருங்க அந்தப் பொண்ணு? உங்களுக்கு தெரிஞ்சவளா?'' என்று அந்தப் பெண் சேகரைப் பார்த்துக் கேட்டாள்.

''இல்லைம்மா. எனக்கு தெரியாது. வேலை வேணுமாம். வீதியிலே வைச்சு கேட்குது. பாவம் வசதி இல்லாத பொண்ணு போல!'' என்று சொல்லிக் கொண்டே காரில் ஏறிச் சென்றான்.

ஒரு வேளை இவன் சேகரைப் போன்ற தோற்றத்தில் இருப்பவனாக இருக்குமோ என்று எண்ணுவதற்கு வழி இல்லாமல், அவள் இத்தனை நாட்களாக எந்தக் காரில் இறுமாப்புடன் சுற்றிக் கொண்டிருந்தாளோ அதே காரில் ஏறிச் சென்றான்.

மஞ்சுளா தட்டுத் தடுமாறி வீடு வந்து சேர்ந்தாள்.

'ஏன் இப்படி என்னைத் தெரியாதவன் போல் காட்டிக் கொண்டான்? அந்தப் பெண் உடன் இருந்ததாளா? அந்தப் பெண்... அவன் மனைவியாக இருக்க வேண்டும். ஆனால் என்னிடம் தான் திருமணம் ஆகாதவன் என்றும் என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் சொன்னானே! ஏன் பொய் சொன்னான்?



என்னுடன் எதற்காக பழகினான்? என்னுடைய அழகிற்காகவா?' என்று நினைத்துப் பார்த்தவளுக்கு முதல் முறையாக தன் அழகின் மீது வெறுப்பு வந்தது.

ஒருவன் அவளுடன் பழகி அவளை ஏமாற்றி விட்டான் என்று சொன்னால் உடன் பயின்ற தோழிகள் கூட நம்ப மாட்டார்கள். தன்னிடம் எந்த ஒரு ஆதாரமும் இல்லை என்றதும் செய்வதறியாது திகைத்தாள்.

ஏன் இப்படிச் செய்தான் என்று தனக்குள்ளேயே மறுகிக் கொண்டிருந்தாள்.

அதற்கான பதில் அடுத்த சில நாட்களில் கிடைத்தது. அது அவளது வயிற்றில் குழந்தையாய் உருவாகி நின்றது.

நான் அவன் பிறந்த நாளுக்கு வாழ்த்து அட்டை மட்டுமே கொடுத்தேன். ஆனால் அவன் என் வாழ்க்கைக்கு உயிருள்ள பரிசு கொடுத்து விட்டான் என்று கண்ணீர் சிந்தினாள்.

மனதால் இணைவது காதல்
உடலால் இணைவது காமம்
காமத்தை விட காதலே பெரிதென்றால்
கடவுள் ஏன் குழந்தைப் பிறப்பை
காதலுக்கு பரிசளிக்காமல் காமத்திற்கு பரிசளித்தார்?

விஷயமறிந்த அவளது பெற்றோர் ஆடிப் போயினர்.

''நான் அன்னைக்கே கேட்டேன் இல்லடி. பொய் சொன்னே இல்ல... உடம்பு தினவெடுத்த கழுதை. இப்படி வயித்திலே வாங்கிட்டு வந்து நிக்குறியே!

உனக்கு பின்னாடி இன்னும் ரெண்டு தங்கச்சி இருக்காங்களே. நீ இப்படி நின்னால் நான் அவங்களை

எப்படிக் கட்டிக் கொடுக்கறது? அது சரி நீ என்னைக்கு அவளுங்களை பத்தியெல்லாம் யோசிச்சு இருக்கே.

உன் தங்கச்சிங்களை விடு. உன் நிலைமையை யோசிச்சுப் பார்த்தியா? என்னடி செய்யப் போறே?'' என்று அவளது தாய் திட்டினார்.

அவளது தந்தையோ அதிர்ச்சியில் வாயடைத்து போனவராய் அப்படியே அமர்ந்து விட்டார்.

தங்கைகள் என்றுமே மஞ்சுளாவின் முன் பேசப் பயப்படுவார்கள். அதனால் அவர்கள் இருவரும் அவ ளிடம் எதுவும் கேட்கவில்லை.

வீட்டில் இருந்த ஒருவர் கூட 'அழகா இருக்கோம் என்று திமிரிலே ஆடினே இல்ல. உனக்கு இந்த அவமானம் தேவை தான்' என்று சொல்லவில்லை.

மஞ்சுளாவிற்கு அவர்கள் மேல் பாசம் இல்லாமல் போகலாம். ஆனால் அவர்கள் அப்படி இல்லையே! அவர்கள் மஞ்சுளாவின் துன்பத்தை தங்களது துன்பமாய் நினைத்து கவலையில் ஆழ்ந்துள்ளார்கள்.

தன் தாய் வாய் ஓயாது திட்டிக் கொண்டிருந்ததை அமை தியாக கேட்டுக் கொண்டிருந்த மஞ்சுளா கடைசியில்,

''இப்ப என்ன... நான் இங்க இருக்கக் கூடாது. அவ்வளவு தானே. நான் வீட்டை விட்டுப் போறேன். என் பெரிய மகள் அவ காதலிச்சவனோட ஓடிப் போயிட் டாள் என்று சொல்லிக்கோங்க'' என்றவள் விருட் டென்று உள்ளே சென்று விட்டாள்.

அனைவருக்கும் அன்றைய இரவு தூங்கா இரவானது. மஞ்சுளா தனது எதிர்காலத்தை பற்றி தீவிரமாக சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தாள்.

மறுநாள் அவளது தாய் அவன் யார் என்ன என்று விசாரிக்க... 'அவன் ஒரு குழந்தையின் தகப்பன்' என்று மட்டும் சொன்னவள் அதற்கு மேல் எந்த விவரமும் தரவில்லை. அவளுக்குமே தெரிந்தால் தானே சொல்ல முடியும்.

அவளது பதிலில் அனைவரும் முன்பை விட அதிக மாக கவலைப்பட்டனர்.

மஞ்சுளா பொன்னம்மாவிடம் சென்று தன் நிலையை விளக்கி, ''நானும் உங்க கூட சென்னைக்கு வரட்டுமா? கொஞ்ச நாளைக்கு எனக்கு பாதுகாப்பு தரீங்களா?'' என்று கேட்டாள்.

அவர் சம்மதித்ததும் வீட்டிற்கு வந்து தனது பெட்டியை தயார் செய்து வைத்தாள். தனது முடிவை வீட்டில் உள்ளவர்களுக்கு அறிவித்தாள். இருட்டுவதற்காக காத்திருக்கலானாள்.

அன்று இரவு பொன்னம்மாவுடன் சேர்ந்து சென் னைக்கு பயணமானாள். அனைவரும் அவள் செல்வதை கையாலாகாத தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலை இருவரும் சென்னை சென்று இறங்கினார்கள்.

பொன்னம்மாவே மஞ்சுவின் கழுத்தில் ஒரு மஞ்சள் கயிற்றை அணிவித்துவிட்டு, ''இது தான் உன் வய சுக்கும், அழகுக்கும் பாதுகாப்பு தரும்'' என்றார்.

மஞ்சுளா யாருமில்லாத அனாதை என்றும் அவளது கணவன் மிலிட்டரியில் இருப்பதாகவும் அங்குள்ளவர் களிடம் பொன்னம்மா கதை பரப்பினார்.

மஞ்சுளா மசக்கையால் பெரிதும் அல்லல்பட்டாள். பொன்னம்மாள் அவளை ஒரு தாயாய் தாங்கினார்.

மஞ்சுளா அவளது தாய் செய்தது போல் வீட்டில் இருந்தபடியே தன்னால் முடிந்த வேலைகளை செய்தாள். மாலையில் சிறு பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்தாள்.

ஆனால் மசக்கையால் அவதிப்பட்டவளுக்கு எந்த வேலையையும் முழுமையாக செய்ய முடியவில்லை. அதனால் அவளால் அதிக வருமானம் ஈட்ட முடியவில்லை.

அனைத்து செலவுகளையும் பொன்னம்மாவே செய்தார். இவருக்கு எந்த வகையில் என்னால் நன்றி செலுத்த முடியும் என்று மஞ்சுளா தவித்துப் போனாள்.

அவளது பிரசவ நாளும் வந்தது. அவளுக்கு சுகப் பிரசவத்தில் குழந்தை பிறந்தது.

பிரசவ வலியால் துடிக்கும் போது எந்த ஒரு பெண்ணிற்கும் தன் தாய் தன்னை இப்படித் தானே கஷ்டப் பட்டு ஈன்று எடுத்திருப்பாள் என்ற நினைவு எழும். மஞ்சுளாவிற்கும் தன் தாயை வெகுவாகத் தேடியது.

தன்னை வெளியே அனுப்பிவிட்டு எப்படி அவர்களால் அங்கே நிம்மதியாக இருக்க முடிந்தது என்று பரிதவித்தாள். அந்த அளவிற்கா தன்னை வெறுக்கிறார்கள் என்று நினைத்த போது கண்ணீர் சுரந்தது.

''பச்சை உடம்புக்காரி அழக்கூடாதும்மா'' என்று பொன்னம்மாள் அவளை தேற்றினார்.

தனது நினைப்பை அவரிடம் பகிர்ந்தவள், ''உலகத்திலே இப்படிக் கூட ஒரு அம்மா இருப்பாங்களா பொன்னம்மா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டதும்,



''உங்க அம்மாவை திட்டாதே மஞ்சு. அவ இதுவரைக்கும் எனக்கு எத்தனை கடிதம் போட்டு இருப்பாள் தெரியுமா? இத்தனை நாளா உனக்கு நானா செலவழிச்சேன் என்று நினைக்கிறே? இல்லைம்மா.

நாம ஊரில் இருந்து கிளம்பும் முன்னாடி உங்க அம்மா என்னிடம் அவளோட மொத்த சேமிப்பையும் கொண்டு வந்து கொடுத்து உன்னைப் பார்த்துக்கச் சொன்னாள்.

நான் கூட உங்கம்மாவிடம் உன் இளைய பொண்ணுங்களுக்கு ஒண்ணும் இல்லாமல் இப்படி எல்லாத்தையும் கொண்டு வந்து கொடுத்துட்டியேன்னு கேட்டேன். அவ அதுக்கு என்ன தெரியுமா சொன்னாள்.

இந்த முடிவை நான் மட்டும் தனியா எடுக்கலை. என் ரெண்டு பொண்ணுங்களும் சேர்ந்து தான் இதைக் கொடுக்கச் சொன்னாங்க.

மஞ்சுவுக்கு என்னால வேற எதுவும் செய்ய முடியாத பாவி ஆகிட்டேனே. அந்த சிசுவை அழிச்சிடுன்னு சொல்ல எனக்கு வாய் வரலையே.

குழந்தையோட மஞ்சு இங்கேயே இருந்தால்... அழகாய் இருக்கோம் என்று திமிர் எடுத்து கொஞ்ச ஆட்டமா ஆடினாள். அதான் ஆண்டவன் அவளுக்கு சரியான தண்டனை கொடுத்திட்டான் என்று ஊர் பூராவும் அவளை தினம் தினம் பழிக்குமே, பொன்னம்மா.

வேற ஏரியாக்கு வீட்டை மாத்திக்கிட்டுப் போனால் தெருவாசிகளின் பேச்சில் இருந்து தப்பிக்கலாம். ஆனால் சொந்தக்காரங்க முகத்தில் முழிச்சு தானே ஆகணும். இவ குணம் அவங்களுக்கும் தெரியுமே!

அறிஞ்சவங்க, சொந்தக்காரங்க இப்படி யாருமே இல்லாத வேற ஊருக்கும் எங்களால போக முடியாது. ஏன்னா எங்க வீட்டுக்காரருக்கு அரசாங்க வேலை. அதை விட்டுட்டு வேற வேலை செஞ்சு பிழைச்சுக்கலாம் என்றால் அவருக்கு அவ்வளவு திறமையும் கிடையாது.

இன்னும் ரெண்டு பொண்ணுங்க வேற இருக்காங்களேன்னு உங்க அம்மா அன்னைக்கு பரிதவிச்சது இன்னமும் என் கண்ணிலேயே நிக்குது.

நீயே உன் கையால இந்தப் பணத்தை உன் பொண்ணு கிட்டே கொடுன்னு சொன்னேன். அதுக்கு உன் அம்மா மஞ்சு ரோஷக்காரி. வாங்க மாட்டாள் என்று சொல்லி என்னிடம் கொடுத்தாள்'' என்று அன்று மதுரையில் நடந்ததை தெரிவித்ததோடு, அவள் தாய் கொடுத்திருந் பணத்தில் மீதமுள்ளதை மஞ்சுளாவிடம் ஒப்படைத்தார்.

மஞ்சுளாவிற்கு கண்ணீர் நிற்காமல் வழிந்தது. எனக்கு மனிதர்களை புரிந்து கொள்ளும் தன்மை சுத்தமாக இல்லையோ என்ற பரிதவித்தாள்.

அன்றிலிருந்து மஞ்சுளாவின் மனம் பக்குவப்பட ஆரம்பித்தது. ஏற்கனவே தான் அழகி என்ற கர்வம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டிருந்தது.

தன் குடும்பத்தார் தன்னை நிராகரித்து விடவில்லை என்ற உண்மை, குடும்பத்தினரின் மீது அவள் பாசம் வைக்கக் காரணமாய் அமைந்து போனது.

மூத்த மகளாய் தன் குடும்பத்தினருக்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது அவளுக்கு வெளிநாட்டு வேலை ஒன்று கிடைத்தது.

# 9



காபி டே கடையில் இருந்து ஜீவா தன் வீட்டிற்குச் செல்லாமல் நேராக மதுமதியின் வீட்டிற்குச் சென்றான்.

'எப்படியும் தாமதமாக வந்ததற்கு அத்தைத் திட்டப் போகிறார்கள். என்ன பதில் சொல்கிறாள் என்று பார்ப்போம்' என்ற முடிவெடுத்தவனாய் அவன் மதுவின் வீட்டில் அவளின் வரவிற்காக காத்திருந்தான்.

அவனும் அருணும் பேசிக் கொண்டு இருந்தார்கள். ராஜன் வெளியே சென்றிருந்தார்.

வீட்டிற்குள் நுழைந்த மதுமதியை கீதா கேள்வி மேல் கேள்வியாய் கேட்டு துளைத்தெடுத்தார்.

''ஊர் முழுசும் சுத்தியாச்சா?'' என்று கீதா நக்கலாகக் கேட்க,

''சென்னை என்ன அவ்வளவு சின்ன ஊரா? சில மணி நேரத்திலே சுத்தி வருவதற்கு?'' என்று மதுமதி பதிலுக்கு நக்கலாகக் கேட்க,

''கேட்ட கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்லு. இது என்ன இடக்கு பேச்சு?'' என்று கீதா மகளை மிரட்டினார்.

''பின்னே... நான் என்ன சின்ன பாப்பாவா? எனக்கு இருபத்தொரு வயசு ஆகுது. என் பிரண்ட்ஸ் யாருக்கும் அவங்க வீட்டில் இருந்து போன் வரலை. நீங்க மட்டும் தான் போன் பண்ணுனீங்க. அவங்க எல்லோரும்

இன்னமும் அங்க தான் இருக்காங்க. நான் மட்டும் தான் உங்களுக்கு பயந்து சீக்கிரமா கிளம்பிட்டேன். அப்படி இருந்தும் விடாம கேள்வி கேட்டு தொண தொணக்கிறீங்க."

"வயசுப் பொண்ணை வெளியே அனுப்பிட்டு அவ வீடு வந்து சேரும் வரைக்கும்..." என்றவரை அருண் இடைமறித்தான்.

"வயசுப் பொண்ணு வீடு வந்து சேரும் வரைக்கும் வயித்திலே நெருப்பைக் கட்டிக்கிட்டுன்னு தானே சொல்ல வந்தீங்க?" என்றவனை மதுமதி உஷ்ணத்தோடு முறைக்க,

அதைக் கண்டு கொள்ளாதவனாய், "எவ்வளவு நாளைக்கு சொன்ன டயலாக்கையே சொல்லுவீங்க? நெருப்புக்கு பதிலா ஐயன் பாக்ஸ் கட்டிக்கிட்டுன்னு வேணா சொல்லுங்களேன். புதுசா டிரை பண்ணுங்கம்மா" என்றவனை கீதா கோபமாய் முறைத்தார்.

"ஓ! நெருப்புன்னால் சுடும். ஆனால் ஐயன் பாக்ஸை பிளக்கிலே செருகி கரண்ட் பாஸானா தான் சுடுமோ?" என்று தனக்கு தானே சத்தமாக கேள்வி கேட்டுக் கொண்டவன்,

"அம்மா என்னை முறைக்காதீங்க. இப்போதைக்கு எனக்கு வேற உதாரணம் சட்டுன்னு மனசிலே வரலை. ஆனா இப்ப அதுவா முக்கியம்! மதுவை திட்டுறது தான் முக்கியம். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. நீங்க விட்ட டயலாக்கை நான் ஞாபகப்படுத்துறேன்" என்று சொன்னதும்,

மதுமதி முன்னிலும் அதிகமாக முறைத்தாள். அதை அலட்சியம் செய்தவனாய்,

"வயசுப் பொண்ணை வெளியே அனுப்பிட்டு அவ வீடு வந்து சேரும் வரைக்கும்... சரியா இந்த இடத்திலே நீங்க நிறுத்தினீங்க. இப்போ கண்டினியூ பண்ணுங்க" என்றான்.

மகனை அப்புறமாக கவனித்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்த கீதா விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தார்.

"வயசுப் பொண்ணை வெளியே அனுப்பிட்டு அவ வீடு வந்து சேரும் வரைக்கும் பக் பக் என்று இருக்கு. என் பயம் உனக்கு எங்கே புரியப் போகுது. நீயும் ஒரு அம்மாவா ஆன பின்னாடி என் பயம் புரியும்" என்று தன் பயத்தை எடுத்துரைத்தவர் தனது மகள் கேள்விக்கும் பதில் கூறினார்.

"உன்னோட பிரண்ட்ஸ் வீட்டிலே உள்ளவங்க பத்தி நான் எதுவும் சொல்ல விரும்பலை. ஆனால் போன் பண்ணி விசாரிக்காததாலே அவங்களுக்கு பயம் இல்லை என்று அர்த்தமாகிடாது. அதை விடு. யாரும் எப்படியும் இருக்கட்டும். என்னால இப்படித் தான் இருக்க முடியும்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

"ஒரு நாள் கொஞ்ச நேரம் லேட்டா வரக் கூடாதா? பிரண்ட்ஸ் கூட காபி ஷாப் போகக் கூடாதாம்மா?" என்ற மதுமதி மனத்தாங்கலுடன் கேட்க,

"ஒரு காபி குடிக்க எவ்வளவு நேரம்? நீ இன்னைக்கு ரெண்டு மணி நேரம் லேட். காபி குடிக்க அவ்வளவு நேரமா?" என்று கறாராய் பதில் கேள்வி வந்து விழுந்தது.

"பிரண்ட்ஸ் எல்லோரும் அந்த மாலில் ஷாப்பிங் பண்ணினாங்க" என்று சொன்னதும் கீதா அவளை கேள்வியாய் நோக்க,

"நான் ஒன்னும் வாங்கலை. உங்க பணம் பத்திரமா இருக்கு" என்று மதுமதி ரோஷத்துடன் பதிலுரைத்தாள்.

"என்னமோ நாங்க உனக்கு ஒன்னுமே வாங்கித் தராத மாதிரி பேசறே?"

"நான் எப்போ அப்படி சொன்னேன்? ஆனா நீங்க என்னைக்காவது என்னை காபி டே கூட்டிட்டுப் போயிருக்கீங்களா?"

அருண் குறுக்கே புகுந்து, "காபி டே போனியாக்கா? அங்க காபி குப்பரா இருக்குமே!" என்று சொன்னதும்,

மதுமதி அவன் புறம் திரும்பி, "உனக்கு எப்படிடா தெரியும்? நீ போய் இருக்கியா?" என்று இடுப்பில் கை வைத்து முறைத்துக் கொண்டே கேட்க,

"ஆமா" என்று அவன் சற்றும் அலட்டிக் கொள்ளாமல் தோளைக் குலுக்கிக் கொண்டு கூற, மதுமதி கடுப்பானாள்.

"பார்த்தீங்களாம்மா? என்னை விட மூணு வயசு சின்னப் பையன். அவன் போயிருக்கான். ஆனால் நான் போனதில்லை. இன்னைக்கு முதன் முதலா போயும், அங்கே ஒன்னுமே குடிக்கலை.

இந்த வீட்டிலே எப்பவுமே இப்படித் தான். ஆம்பிளை பிள்ளைக்கு ஒரு நியாயம். பொண்ணுக்கு ஒரு நியாயம்" என்று தாயிடம் பொரிந்தாள்.

"வெயிட்... வெயிட். என்னமோ அம்மா எனக்கு மட்டும் தனியா காபி டே போக பாக்கெட் மணி கொடுத்த மாதிரி இல்ல பேசுறே!" என்று அருண் இடைபுகுந்து வேறு ஒரு சண்டைக்கு பிள்ளையார் சுழி போட்டான்.

"பின்னே எப்படிடா போனே?"

"அம்மா எனக்கு தந்ததை நான் சேர்த்து வைச்சு போனேன். அம்மா உனக்கு தருவதை நீ பார்லர் போயே அழிச்சுடுறே. இல்லைன்னா உன் முகம் பார்க்க சகிக்காது இல்ல..." என்று அக்காவை கிண்டல் அடிக்க,

"என்னைப் பார்த்தாடா அழகா இல்லைன்னு சொல்லுறே?" என்று ஆங்காரமாகக் கேட்டவள்,

"ஜீவா, நீ சொல்லு. நான் அழகா இல்லையா?" என்று அமைதியாக அவர்கள் சண்டையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவனை கேட்டாள்.

"வேலிக்கு ஓணான் சாட்சிங்கிற மாதிரி அத்தானை போய் கேட்கிறியே!" என்று அவனையும் வாரிய அருண்,

"அத்தான், நான் அன்னைக்கே கேட்கனும் என்று நினைச்சேன். இவளைப் போய் எப்படி கட்டிக்கனும் என்று உங்களுக்கு தோணுச்சு? ஆளும் அழகு கிடையாது. அவ கண்ணும்... அவ மூக்கும்... ஒரு படத்தில் விஜய் சேதுபதி ப்பாஆஆஆ என்று சொல்லுற மாதிரி இருக்காள்" என்று மதுமதியை வெறுப்பேற்றியவன்,

"குணமாச்சும் இருக்கா? சரியான பஜாரி" என்று சொன்னதும்,

"வாயிலேயே போடுவேன். என்ன வார்த்தை டா சொல்லுறே" என்று கீதா அவனைத் திட்டினார்.

"சாரிம்மா" என்று உடனே மன்னிப்பு கேட்டான்.

தமக்கையின் கையை பிடித்து, "சாரிக்கா. தெரியாமல் சொல்லிட்டேன்" என்று மன்னிப்பை வேண்டினான்.

அவள் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருக்கவும், அவளது கையை அழுத்திக் கொடுத்தவன்,

"அக்கா ப்ளீஸ். நிஜமாவே தெரியாமல் சொல்லிட்டேன். சாரி... சாரி" என்று கெஞ்சினான்.

அவள் மன்னிச்சிட்டேன் போ என்பது போல் தலை ஆட்டியதும் அவளிடமிருந்து விலகி, நாலு எட்டு பின்னே சென்று நின்று கொண்டு, விட்ட இடத்தில் இருந்து தனது பேச்சினை தொடர்ந்தாள். மதுமதியை மேலும் வெறுப்பேற்றினான்.

"குணம் என்று பார்த்தால்... சரியான சண்டைக் கோழி. இவளைக் கட்டிக்கிட்டு எப்படி அத்தான் காலம் தள்ள முடியும்?! நல்ல வேளை. அவளே உங்களை வேண்டாம் என்று சொல்லிட்டதால, நீங்க கிரேட் எஸ்கேப் அத்தான். ஆல் தி பெஸ்ட்! வேற நல்ல பொண்ணா தேடுங்க" என்று ஜீவாவின் கையை பிடித்துக் குலுக்கினான்.

மன்னிப்பெல்லாம் கேட்டதால் கிண்டலடிப்பதை அவன் நிறுத்திவிடுவான் என்று மதுமதி எதிர்பார்த்ததிற்கு நேர்மாறாக அவன் மீண்டும் கிண்டல் பண்ணவும் மதுமதி கடுப்பானாள்.

அருணை அடிக்க அவனைத் துரத்திக் கொண்டு மது ஓடினாள். அவனும் அவளிடம் அகப்படாமல் இருக்க ஓடினான்.

ஜீவா எந்த ஒரு உணர்ச்சியும் காட்டாது அமர்ந்திருந்தான்.

மதுமதி அவர்களுடன் அமர்ந்திருந்த அந்த இளைஞனை பற்றி என்ன சொல்லப் போகிறாள் என்பதிலேயே அவன் கவனம் இருந்தது. ஆனால் அவனைப் பற்றிச் சொல்லும் எண்ணம் மதுமதிக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஜீவாவின் அமைதி, மதுமதி மற்றும் அருணின் கூச்சலில் கவனிக்கப்படாமல் போனது.

"டேய்! என்னை பத்தி இவ்வளவு மட்டமா பேசினதானே! அதனால உன் காசிலே எனக்கு காபி வாங்கித் தா" என்று மதுமதி தம்பியை மிரட்ட,

"முடியாது போ. என் காசை உனக்காகவெல்லாம் செலவழிக்க முடியாது" என்று அவன் மறுக்கவும்,

இவனிடம் கெஞ்சி உபயோகம் இல்லை என்று உணர்ந்தவளாய் கீதாவிடம் சென்று, "அம்மா, நீங்க வாங்கித் தாங்கம்மா" என்று தாயிடம் சென்று சிணுங்கினாள்.

"அடுத்த வாரம் வாங்குவோம்" என்று கீதா சொன்னதும்,

"அடுத்த வாரமா..." என்று இழுத்தவள், "அம்மா, ப்ளீஸ்! நாளைக்கு வாங்கித் தாங்க" என்று கெஞ்ச,

"இன்னைக்கு தானே கேட்டு இருக்கே. நினைச்சா நினைச்ச உடனே கிடைக்கணும் என்று ஆசைப்படக் கூடாது மது. பொறுமையா காத்திரு" என்று சொல்லிவிட்டு தன் வேலையைப் பார்க்கச் சென்றார்.

அருணும் வெளியேறிவிட்டான். ஜீவா ஒன்றும் சொல்லாமல் புறப்படத் தயாராக,

"ஹேய் பொத்தான்! என்ன நீ பாட்டுக்கு வந்தே! நீ பாட்டுக்கு போறே!" என்றாள்.

ஜீவாவிற்கு வந்ததே கோபம்.

"இங்கே பாரு. என்னை முடிஞ்சா மரியாதையா அத்தான் என்று கூப்பிடு. இல்லையா பேரைச் சொல்லிக் கூப்பிடு. சும்மா பொத்தான், சொத்தான் என்று சொன்னே..." என்று ஒரு விரல் நீட்டி கடுமையாக மிரட்டினான்.

சமையலறையில் வேலையாக இருந்த கீதாவிற்கு கூட அவனது மிரட்டல் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. கீதா அவர்களே பேசிக் கொள்ளட்டும் என்று முடிவு செய்தபடியால் வெளியே எட்டிப் பார்க்கவில்லை.

மதுமதி அவனது மிரட்டலில் ஆடிப் போனவளாய், "நீயாடா என்னை லவ் பண்ணுறதா சொன்னே?" என்று கேட்க,

"அதுக்காக... நீ என்ன செஞ்சாலும் பொறுத்திட்டுப் போகணுமா என்ன?" என்றவன் விருட்டென்று கிளம்பிச் சென்றான்.

சற்று முன் அருண் தன் குணத்தை, அழகை கிண்டல் செய்தது கூட மதுமதிக்கு பெரிதாக தெரியவில்லை.

ஆனால் ஜீவா முறைத்துக் கொண்டு சென்றதே மனதை அரித்தது. இதுக்கு முன்னாடி நான் அவனைக் கிண்டல் பண்ணியதே இல்லையா? இன்னைக்கு மட்டும் என்ன வந்துச்சு? ஏன் இப்படிக் கோபிச்சிக்கிட்டு போறான்?

'சே! இன்னைக்கு நேரமே சரியில்லை. எல்லாமே தப்புத் தப்பா நடக்குது' என்று வருந்தினாள்.

முகம் கை, கால் கழுவி விட்டு வந்து தொலைக்காட்சியின் முன் அமர்ந்தாள். அவளுக்கு எந்த ஒரு நிகழ்ச்சியையும் பார்க்கப் பிடிக்கவில்லை. புத்தி அதில் பதிய மறுத்தது.

கோபத்துடன் முறைத்துக் கொண்டு சென்ற ஜீவாவின் முகமே அவள் கண் முன் வந்து போனது.

"அம்மா, கொஞ்ச நேரம் மொட்டை மாடியில் இருந்திட்டு வரேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

## 10



மஞ்சுளா தனக்கு கிடைத்த வெளிநாட்டு வேலைக்கு தன்னால் செல்ல முடியுமா என்று யோசித்துப் பார்த்தாள்.

உள்ளூரிலேயே வேற வேலை தேடுவோமா? வேலைக்கு போக முதலில் கம்ப்யூட்டர் கல்வி அவசியம், அதுக்கு பணம் வேண்டுமே!

இந்த ஒண்ணே கால் வருஷமா சாப்பாட்டுக்கும், மருந்திற்கும் செலவழித்ததில் அம்மாவின் பணம் பாதி கழிந்துவிட்டது.

இன்னமும் பிள்ளை வளர்ப்பு இருக்கிறது. குழந்தைக்கு ஐந்து மாதம் ஆகிறது. இனிமேல குழந்தைக்கான செலவும் அதிகமாகிக் கொண்டே போகும்.

இரு தங்கைகளின் திருமணம் இருக்கிறது. இதற்கெல்லாம் என்ன செய்வது?

வெளிநாட்டில் கிடைத்திருக்கும் வேலைக்கு கம்ப்யூட்டர் கல்வி தேவை இல்லை. சாப்பாடு, தங்குற வசதி எல்லாம் அவர்களே தருகிறார்கள். ஆனால் அந்த வேலைக்கு தடையாக இருப்பது என் பெண், என்ன செய்வது? என்று தீவிரமாகச் சிந்தித்தாள்.

பொன்னம்மா மஞ்சுவிடம், "இதே தெருவிலே இருக்கிற சங்கரி அம்மாவை உனக்கு தெரியும் தானே. அவங்க பொண்ணு பேரு ராணி. வெளியூரிலே கட்டிக் கொடுத்தாங்க. ரொம்ப நல்ல பொண்ணு. நான் பார்த்த வளர்ந்த பொண்ணு. இன்னைக்கு அம்மா வீட்டுக்கு வந்திருக்கு. ம்ம்ம்... கல்யாணம் ஆகி எட்டு வருஷம் ஆகுது. இன்னும் ஒரு குழந்தை தங்கலை. அவ முகத்திலே சிரிப்பே இல்லை. இந்த ஆண்டவனுக்கு கண்ணே இல்லை" என்று புலம்பினார்.

அன்று முழுவதும் அவர் ராணியின் புகழைப் பாடிக் கொண்டிருந்தார்.

பொன்னம்மாள் கூறிய அவரின் பக்கத்து வீட்டு ராணி அடுத்த நாள் அவர்களது வீட்டிற்கு வந்தாள். மஞ்சுளாவின் குழந்தையை ஆசையோடு பார்த்தாள்.

"நான் கொஞ்ச நேரம் தூக்கிக்கலாமா?" என்று தயக்கத்துடன் கேட்டாள்.

மஞ்சுளா தன் குழந்தையை தூக்கி அவளிடம் கொடுத்தாள். ராணியின் கண்களில் ஏக்கம் அப்பட்டமாகத் தெரிந்தது.

'இறைவனின் கணக்கை மனிதர்களால் புரிந்து கொள்ளவே முடியாது' என்று மஞ்சு நினைத்துக் கொண்டாள். கிட்டத்தட்ட அதே சிந்தனை தான் ராணிக்கும். பொன்னம்மாள் அவளிடம் மட்டும் மஞ்சுளாவை பற்றிய ரகசியத்தை பகிர்ந்து இருந்தார்.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லைன்னால் என்னோட குழந்தையை தத்து எடுத்துக்கிறீங்களா?" என்று மஞ்சுளா கேட்டதும் ராணி திகைத்துப் போனாள்.

"உங்க குழந்தையவா? ஆனா... நீங்க..."

"நானே தான் சொல்லுறேன். என் குழந்தையை தத்து எடுத்துக்கோங்க."

"உங்க குழந்தையை நாளைக்கு சொந்தம்..." என்று தொடங்கிய ராணி அதற்கு மேல் எப்படிக் கேட்பது என்று தயங்கி இழுக்க,

"கண்டிப்பா சொந்தம் கொண்டாடிட்டு வர மாட்டேன். எனக்கு பாரினில், வீட்டோட தங்கி இருந்து குழந்தையை பார்த்துக்கிற வேலை கிடைச்சிருக்கு. அங்க என் பொண்ணை தூக்கிட்டுப் போக முடியாது.

பொண்ணை இன்னொருத்தரிடம் விட்டுட்டு போகிற அளவுக்கு அந்த வேலை எனக்கு முக்கியமான்னு கேட்டால்... ஆமாம். கண்டிப்பா முக்கியம் தான். என் குடும்பத்தோட வளமான வாழ்க்கைக்காக நான் வெளிநாடு போயே ஆகணும்.

எங்க அம்மா என்னை நல்லபடியா தான் வளர்த்தாங்க. ஆனால் நான் திமிரெடுத்துப் போய் யாரையும் மதிக்காமல் அடுத்தவங்களை எடுத்தெறிஞ்சு பேசி ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடினேன்.

என்னை சீரழிக்க வந்தவனை, என் அழகைப் பார்த்து என்னை கல்யாணம் பண்ண வந்த ராஜ குமாரனா நினைச்சேன். அவன் என் வாழ்க்கையை பறிக்க வந்த எமன் என்று அப்போ எனக்கு தெரியலை.

அவன் பொண்டாட்டி அவனை பேர் சொல்லிக் கூப்பிட்ட போது தான் அவன் என்னிடம் சொன்ன அவனோட பேர் கூட தப்பு என்று தெரிஞ்சுக்கிட்டேன்.

முதல் நாளில் இருந்தே திட்டம் போட்டு இருந்திருக்கான். அது தெரியாத முட்டாளா அவன் பின்னாடி சுத்தி இருந்திருக்கேன்.

இந்தக் குழந்தை உருவான போது நான் கலங்கினேன். என் வாழ்க்கையே அஸ்தமிச்சிடுச்சுன்னு நினைச்சேன்.

அதுக்கு அப்புறம் யோசிச்சுப் பார்த்த போது... இந்தக் குழந்தை என் திமிர்தனத்துக்கு கடவுள் எனக்கு கொடுத்த தண்டனை என்று ஒரு மனசு சொன்னது. இன்னொரு மனசோ மனசு திருந்திய உனக்காக... உன் வாழ்க்கையை நீ வாழ்வதற்காக இறைவன் உனக்கு அளித்த பற்றுக் கோல் என்று சொன்னது.

எது எப்படியோ என்னோட வாழ்க்கைக்கு ஆதாரமா என் குழந்தை இருக்கட்டும் என்று முடிவு பண்ணினேன். என் மனசை நான் தேத்திக்கிட்டேன்.

எங்க அம்மா வீட்டை விட்டு நான் வெளியே வந்த போது வருத்தமா இருந்தாலும் நான் மனசு உடைஞ்சு போகலை.

ஆனா என் பிள்ளை பிறந்தப்போ தான் எனக்கு ஒரு உண்மை தெரிய வந்துச்சு. எங்க அம்மா தன்னோட சேமிப்பு மொத்தத்தையும் எடுத்துக் கொடுப்பது தான் என்னை வழி அனுப்பி வைச்சு இருக்காங்கன்னு தெரிஞ்சுப்போ நான் உண்மையிலே செத்துட்டேன் அக்கா.

மன்னிப்பை விட பெரிய தண்டனை உலகத்திலே இல்லைன்னு சொல்லுவாங்க. அன்னைக்கு நான் அதை முழுசாப் புரிஞ்சுக்கிட்டேன்.

ஒரு தாயால தான் தன் குழந்தைங்க மேல இந்த மாதிரி பாசம் வைக்க முடியும். எங்க அம்மா



நினைச்சிருந்தா அந்தப் பணத்தை என் மூஞ்சிலே தூக்கி விட்டெறிஞ்சு இருக்கலாம். பொறுக்கிக்கிட்டு போடி நாயேன்னு திட்டி இருக்கலாம்.

ஆனா அவங்க அப்படி செஞ்சிருந்தா நான் ரோஷப் பட்டு அந்த பணத்தைத் தொடாமல் வந்திருப்பேன்.

அவங்க என் அம்மா இல்லையா? என்னைப் பத்தி அவங்களை விட வேற யாரால புரிஞ்சுக்க முடியும். அதான் சத்தமில்லாமல் காரியத்தை சாதிச்சுட்டாங்க.

அப்பேற்பட்ட எங்க அம்மா வளர்த்த நான் இப்படி இருக்கேன். முறை தவறி பிள்ளையைப் பெத்து..." என்று விரக்தியாக சிரித்தவள்,

"இப்ப சொல்லுங்க. இந்த குழந்தையை என்னால நல்லா வளர்க்க முடியுமா? அது என்னை விட தறுதலையா தானே வளரும்?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

ராணி அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவள் மனதை தேற்ற எண்ணினாள்.

"நிச்சயமா நீ இந்த குழந்தையை நல்லா தான் வளர்ப்பே. உங்க அம்மா வளர்ப்பு தப்பாகிடுச்சுன்னு எப்படி சொல்லுறே? உன்னோட அகங்காரம், கர்வம்... இப்படி ஏதோ ஒரு குணத்தால நீ தப்பு செஞ்ச போதும்... அந்த தப்பை மறைச்சு நீ புதுசா இன்னொரு தப்பு செய்யலையே?"

'என்ன சொல்ல வருகிறீர்கள்?' என்பது போல் மஞ்சுளா ராணியை பார்க்க,

"இந்தக் கருவைக் கலைச்சிட்டு... இந்த விஷயத்தை அடியோடு மறைச்சிட்டு வேறு ஒருத்தரைக் கல்யாணம்

பண்ணனும் என்று நீ முடிவு எடுக்கலையே. உங்க குடும்பத்துக்காக பெத்த பொண்ணை பிரியத் தானே நினைச்சிருக்க. இந்தப் பக்குவம் உங்க அம்மாவோட வளர்ப்பால தானே சாத்தியமாயிருக்கு'' என்றதும்,

கண்கள் பிரகாசம் தோன்ற மஞ்சு ராணியையே இமைக்காமல் பார்க்க,

''நீ உன் வாழ்க்கையில் தப்பு பண்ணினே... ஆனால் தப்பே உன் வாழ்க்கையாகிடாமல் கடைசியிலே முழிச்சுக்கிட்டே தானே? பணக்காரியா வாழணும் என்று ஆசைப்பட்டே. அதுக்கு உன் அழகை மூலதனமா பயன் படுத்த நினைத்தாய்... அதுக்கான பலன் கிடைச்சிடுச்சு. அவ்வளவு தான்.

அதுக்காக நீ தப்பானவள் என்று உன்னை நீயே தண்டிச்சிக்க நினைக்காதே. உலகத்திலே தப்பு செய்யாத மனுஷங்க யார் இருக்கா? உன்னோடது காலங் கடந்த ஞானோதயமா இருந்தாலும் இனியாவது உன் குடும்ப சந்தோஷத்துக்காக வாழணும் என்று முடிவு எடுத்து அதை செயல் படுத்தணும் என்று விரும்புற பாரு... அப்பவே உன்னோட பாவங்கள் கரைய ஆரம்பிச்சிடுச்சு.

நீயும் நல்ல குடும்பத்தில பிறந்த நல்ல பொண்ணு தான். அதை மனசிலே ஏத்திக்கோ.''

''நீங்க என்னை நம்புறீங்களா? நான் நல்லவள் என்று நீங்க நம்புறீங்க தானே?'' என்று ஏக்கத்துடன் அவள் கேட்க,

''கண்டிப்பா...'' என்று ராணி அழுத்திக் கூறியவுடன் அவளது கைகளை பிடித்துக் கொண்டு மஞ்சுளா கண்ணீர் சிந்தினாள்.

''எங்க அம்மாகிட்டே கூட சொல்லாத ஒரு உண்மையை நான் உங்ககிட்டே சொல்லுறேனே. நான் கெட்டுப் போன விஷயம்... என் சுயநினைவில் நடக்கலை...'' என்றாள்.

'நீ என்ன சொல்ல வருகிறாய்?' என்பது போல் ராணி அவளைப் பார்க்க,

''நான் திமிர் எடுத்துப் போய் எந்தப் தப்பும் பண்ணலைக்கா. எதிலே... எதைக் கலந்து கொடுத்தானோ... எனக்கு தெரியாது. என் சுய உணர்வு இல்லாதப்போ அது நடந்து முடிஞ்சிடுச்சு.

எனக்கு உணர்வு வந்து நான் கேட்ட போது அவன் சொன்ன ஆறுதல் வார்த்தைகளை விட நான் உன்னை கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்குவேன் என்று சொன்ன வாக்கியத்தை நம்பி நான் என் மனசை தேத்திக்கிட்டேன்.''

''ஐயோ! அப்ப உனக்கு நடந்தது ரேப் தானே!'' என்று ராணி அதிர,

''ஆமா அக்கா. அவன் என்னை கல்யாணம் பண்ணிக்கிட்டு என் வாழ்க்கை முழுசும் வருவான்னு நினைச்சேன். இப்படி என் வாழ்க்கையை சீரழிப்பான் என்று எதிர்பார்க்கலை.''

''இதை நீ உன் வீட்டிலே... உன் அம்மாகிட்டே சொன்னியா?'' என்று ராணி அதிர்ச்சியுடன் கேட்க,

''இல்லைக்கா. நான் சொல்லலை. இந்த உண்மையை நான் ஏன் வெளியே சொல்லலைன்னால்... நான் சொன்னால் யாரும் நம்பக் கூட மாட்டாங்க. ஏன்னா

நான் ஆடின ஆட்டம் அப்படி. இந்த நிலை எனக்கு தேவை தான்...

உங்ககிட்டே பேசின பிறகு எனக்கு மனசுக்கு ரொம்ப ஆறுதலா இருக்கு. என் குடும்பத்துக்கு பிரயோஜனப் படுற மாதிரி என்னால வாழ முடியும் என்ற நம்பிக்கை வந்திருக்கு.

என் குழந்தை பிறக்கிற வரைக்கும் அதை என் வாழ்க்கைக்கான ஆதாரமா நினைச்சேன். ஆனா எங்க அம்மா திரைமறைவில் நின்னுக்கிட்டு எனக்கு பக்க பலமா இருந்து இருக்காங்கன்னு தெரிஞ்ச போது... அவங்க அளவுக்கு நானும் என் குழந்தையோட நலனை மட்டுமே முதன்மையா நினைக்கணும் என்று முடிவு பண்ணினேன்.

அதுக்காக தான் என் குழந்தையை தத்து கொடுக்கிற முடிவுக்கு வந்து இருக்கேன்.

இப்ப சொல்லுங்க என் குழந்தையை நீங்க வளர்க் கிறீங்களா?"

"நீ எந்தத் தப்பும் செய்யாத போது உன் குடும்பத்தை பிரிஞ்சு இருக்கும் இந்த தண்டனை போதாதா? பிள்ளையையும் பிரியணுமா?"

"என் குழந்தைக்கு இந்த அம்மாவோட பாசத்தை விட அம்மா, அப்பாங்கிற முறையான குடும்பச் சூழல் தான் தேவை. என்கிட்ட இருந்தால் இவ அப்பா பேர் தெரி யாத... முறை தவறிப் பிறந்த குழந்தையா பார்க்கப் படுவாள். ஆனா உங்ககிட்டே இருந்தா அவளை மதிப்பா பார்ப்பாங்க. எனக்கு அது தான் வேணும். என்னோட முடிவுக்கு இது மட்டும் காரணம் இல்லை.



நான் தப்பாகிப் போனதால நாளைக்கு என் பொண் ணுக்கு எதுக்கு சுதந்திரம் கொடுக்கணும்... எதுக்கு கொடுக்கக் கூடாதுன்னு கூடத் தெரியாமல் குழம்பிப் போய் நிற்பேன். 'தான் திருடி பிறரை நம்பாள்' அப் படின்னு பழமொழியே இருக்கே.

என்னோட இந்த அணுகுமுறை என் பொண்ணுக்கு எந்த விதத்திலும் நல்லது செய்யாது. சரியா வளர்க் கணுமேங்கிற பயத்திலே நான் விதிக்கப் போற கட்டுப் பாடே அவளுக்கும், அவளோட வளர்ச்சிக்கும் முட்டுக் கட்டையா அமைஞ்சிடும். அதான் பயப்படுறேன்.

அதனால தான் கேட்கிறேன். என் குழந்தையை தத்து எடுத்துக்கிறீங்களா?" என்று ஆவலே உருவாக மஞ்சுளா கேட்டாள்.

இது சரியா வருமா என்று ராணி யோசித்துக் கொண்டு இருக்கும் போதே.

"கெட்டழிஞ்சவ பெத்த பிள்ளைன்னு யோசிக்கிறீங் களா?" என்று மஞ்சுளா பரிதாபமாகக் கேட்கவும்,

"ஐயோ என்ன வார்த்தை சொல்லிட்டே மஞ்சு. குழந்தைங்க தெய்வத்துக்கு சமானம். அதுவும் என்னைப் போல பிள்ளை இல்லாதவங்களுக்கு குழந்தைங்க தான் எல்லாமே. அப்படி இருக்க நான் போய் அப்படி நினைப் பேனா? எனக்கு உன் குழந்தையை வளர்க்கிறதிலே பரி பூரண சம்மதம். முறைப்படி தத்து எடுக்க என்ன செய் யணும் என்று தான் யோசிக்கிறேன்" என்றாள்.

"எனக்கும் அது பத்தி எதுவும் தெரியாது. நீங்க விசா ரிச்சிட்டு வந்து சொல்லுங்க. நீங்க சீக்கிரமா... எனக்காக இந்த வேலையை முடிக்கிறீங்களா?" என்று வேகமாக கேட்டுக் கொண்டு வந்தவள்,

"நீங்க என் குழந்தையை..." என்று தொடங்கிவிட்டு சில நொடிகள் மௌனம் காத்தாள்.

"நீங்க என் குழந்தையை தத்து எடுத்திட்டுப் போனதுக்கு அப்புறமாத் தான்... நான் அந்த வெளிநாட்டு வேலையை பார்க்க வரேன் என்று ஒத்துக்க முடியும். எனக்காக... ப்ளீஸ்..." என்று அவள் தயக்கத்துடன் கேட்கவும்,

"கண்டிப்பா செய்து முடிக்கிறேன். ஆனால் நீ போகப் போற வேலை அவ்வளவு சுலபமானது இல்லை. வீட்டு வேலைக்குன்னு கூட்டிட்டுப் போனால் நீ அவங்க வீட்டிலேயே இருபத்தி நாலு மணி நேரமும் இருக்கணும். நீ நினைச்ச நேரம் வெளியே போக முடியாது. உனக்குன்னு நேரம் ஒதுக்க முடியாது. உன் சொந்தங்களைப் பார்க்கணும் என்று நினைச்சா இந்தியா வர முடியாது..." என்று ராணி அடுக்கிக் கொண்டே போக,

"என் மனசு செத்துப் போய் ஒரு வருஷத்துக்கு மேல ஆச்சுக்கா. எனக்கு பெருசா எந்த ஆசையும் இல்லை. பற்றற்ற நிலை வந்திடுச்சு. புத்தர் ஆசா பாசங்களையெல்லாம் துறந்திட்டு துறவியா போனார். ஆனால் நான் அப்படி ஆசா பாசத்தை இழக்கலை,

சொல்லப் போனால் இப்ப தான் என் குடும்பத்தார் மீது எனக்கு பாசமே பிறந்திருக்கு. அந்த பாசத்துக்காக தான் நான் இந்த வேலையை ஏத்துக்கிட்டு வெளிநாடு போகப் போறேன். ஒரு தவம் போல நினைச்சிக்கிட்டு என்னால இதைச் செய்ய முடியும் என்று நம்புறேன்.

அப்புறம் இந்தியா வருவது..." என்று சொல்லிக் கொண்டே விரக்தியாய் முறுவலித்தவள்,

"இனிமேல் எனக்கு சொந்தம் என்று சொல்லிக்க யார் இருக்கா?" என்று கேட்டாள்.

"உன் பொண்ணு இல்லையா மஞ்சு?"

"எப்போ நீங்க அவளைத் தத்து எடுத்துக்க சம்மதிச்சீங்களோ அந்த நொடியிலே இருந்து அவ உங்க பொண்ணு. அவளைப் பத்தின கவலை இனிமேல் எனக்கு இல்லை" என்று திடத்துடன் சொன்னாள்.

ஆனால் அவளது மனதின் வலி அவளது கண்களில் பிரதிபலிப்பதை கண்ட ராணி அவளது கைகளை அழுத்திக் கொடுத்தாள்.

அவளிடம் விடைபெற்றுக் கொண்டு ராணி அகன்றாள்.

# 11



'பொத்தான்' என்று கூப்பிட்டதற்காக முறைத்துக் கொண்டு சென்ற ஜீவாவின் கோப முகமே மனதில் தோன்றி அலைக்கழித்ததால் வீட்டில் அடைந்து கிடக்க முடியாமல் மதுமதி மொட்டை மாடிக்கு வந்தாள்.

மொட்டை மாடியில் இளைப்பாறுவதற்கு என்று கட்டியிருந்த சிமெண்ட் நாற்காலியில் அமர்ந்தாள்.

குளிர்ச்சியான காற்று வீசியது. ஆனாலும் அவள் மனம் குளிர மறுத்தது.

'இவனுக்கு என்ன ஆச்சு? நியாயமாப் பார்த்தால் அன்னைக்கு கடற்கரைக்கு போயிட்டு திரும்பி வந்த

போது என்கிட்டே சொல்லாமல் கூட போனான் என்று நான் தான் முறைச்சிக்கிட்டு நிக்கணும்.

ஆனா நான் ரோஷம் கெட்டுப் போய் பத்திரமா போய் சேர்ந்துட்டியா ஜீவான்னு போன் போட்டு கேட்டேன். அதுக்காவது ஒழுங்கா பதில் சொன்னானா? உன்கிட்டே நான் ஏன் சொல்லிட்டு போகணும் என்று எகத்தாளமா இல்ல கேள்வி கேட்டான்.

சரி அதுக்கு அப்புறமாச்சும் என்னை நேரில் வந்து சமாதானம் பண்ணினானா? அதுவும் பண்ணலை.

துரை இன்னைக்கு தான் கண்ணிலே படுறார். அதுக்குள்ளே அடுத்த சண்டை. வர வர என்கிட்டே சண்டை போடணும் என்ற முடிவோட தான் கிளம்பி வரான் போல!

ஷப்பா! இவனோட பெரிய தொல்லையா போச்சு' என்று திட்டிக் கொண்டிருந்தாள்.

முதல் நாள் போட்ட சண்டைக்கும், அடுத்த இன்று போடும் சண்டைக்கும் இடையில் ஒரு நாள் மட்டுமே கடந்திருந்தது. எத்தனையோ நாட்கள் ஆனது போல் அவள் ஜீவாவைத் திட்டிக் கொண்டிருந்தாள்.

பதினைந்து நிமிடங்கள் கடந்த பின் ஜீவா மதுவின் வீட்டிற்குள் நுழைந்தான்.

''என்னடா இது... இன்னைக்கு அதிசயமா ஜீவா மதுவைத் திட்டிட்டு சமாதானம் பண்ணாமல் போயிட்டானோன்னு பார்த்தேன். வந்துட்டியா?'' என்று மருமகனை கீதா கேலி பண்ண,

''அவ தப்பு செஞ்சாள். நான் திட்டினேன். நான் ஒண்ணும் அவளைச் சமாதானம் பண்ண வரலை'' என்று

''மது எங்கே அத்தை?'' என்று விசாரித்தான்.

''இப்ப எதுக்குடா அவளைத் தேடுறே?''

''இதைக் கொடுக்கணும்'' என்று அவன் தன் கையில் பிடித்திருந்த கவரைத் தூக்கிக் காட்டவும்,

''நல்லா இருக்குடா. ரொம்ப நல்லா இருக்கு. இப் படியே அவளுக்கு செல்லம் கொடு'' என்று முறைத்துக் கொண்டே கூறினார்.

''அத்தை, ப்ளீஸ் என்னைக் கிண்டல் பண்ணியது போதும். சொல்லுங்க அத்தை'' என்று அவன் வற்புறுத் தவும்,

''மகாராணி மொட்டை மாடியிலே இருக்காள். போய் பாரு'' என்று அனுப்பி வைத்தார்.

'இந்தப் பிள்ளை இவ மேலே இப்படி உயிரா இருக் கானே! அவ இவனைப் புரிஞ்சுக்குவாளா? ஒரு வேளை புரிஞ்சுக்காமலே போயிடுவாளா?!' என்று கீதா கவலைப் பட்டார்.

படிகளில் யாரோ வரும் அரவம் கேட்டு அப்பா அல்லது அருண் வருகிறார்கள் போல என்று அந்த திசையையே பார்த்துக் கொண்டிருந்த மதுமதி ஜீவாவைக் கண்டதும் வெடுக்கென்று திரும்பிக் கொண்டாள்.

அவளது செய்கை ஜீவாவிற்கு முறுவலைத் தோற்று வித்தது.

''மதி என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?'' என்று ஜீவா அருகே சென்று விசாரிக்க,

அவன் இருந்த திசைக்கு எதிர் திசையில் பார்த்துக் கொண்டிருந்த மதுமதி அவனுக்கு பதிலும் சொல்ல முற்படவில்லை.

"கோபமா இருக்கியா?"

"....."

"பதில் சொல்ல மாட்டியா? இந்தா இதைப் பிடி" என்று தான் கொண்டு வந்திருந்த கவரில் இருந்ததை வெளியே எடுத்து, அவள் கண் முன் காட்ட,

"ஹேய் ஜீவா! எனக்கு கோல்ட் காபி வாங்கத் தான் போனியா? என்கிட்ட கோபிச்சிக்கிட்டு போகலையா?" என்று உற்சாகமாகக் கேட்டுக் கொண்டே அதை வாங்கிக் கொண்டு அவன் புறம் திரும்பி அமர்ந்தாள்.

புன்னகைத்துக் கொண்டே அவனும் அவள் அருகில் அமரவும்,

"அத்தான், நான் கேட்டேன் என்று வாங்கிட்டு வந்தீங்களா? இல்லை என்னை சமாதானம் பண்ண வாங்கிட்டு வந்தீங்களா?" என்று கேட்டவள் அவன் பதில் சொல்லும் முன்,

"சமாதானம் பண்ண என்றால் எனக்கு வேண்டாம்" என்று அவனிடமே நீட்ட,

அவன் வாய்விட்டு சிரித்தான். அவளைச் சீண்ட விரும்பாமல்,

"நீ ஆசைப்பட்டேங்கிறதுக்காக தான் வாங்கிட்டு வந்தேன். குடி" என்றான்.

"அப்ப சரி" என்று வேகமாகத் திறந்து அதன் வாசனையை முகர்ந்து பார்த்தாள்.

அதனை ஒரு மிடறு பருகியவள், "வாங்கப் போறதா சொல்லிட்டு போயிருக்கலாம் இல்ல. எனக்கு என்ன வேண்டும் என்று நான் சொல்லியிருப்பேன் தானே!" என்று கூறவும்,



"உன் டேஸ்ட் எனக்கு தெரியாதா மதி. உனக்கு இது கண்டிப்பாப் பிடிக்கும்" என்றான்.

அதைக் கொஞ்சம் குடித்தவள், "சூப்பர் டேஸ்ட் டா ஜீவா. உனக்கு வேணுமா?" என்று அவன் புறம் அந்த டம்ளரை நீட்டிக் கொண்டே கேட்டாள்.

"அதுக்குள்ளே அத்தான் காணாமல் போயிட்டானா? இவ்வளவு தானா உன் மரியாதை?" என்று போலியாக அலுத்துக் கொண்டவன்,

"நீயே குடி. இந்த டேஸ்ட் எனக்கு பிடிக்காது. என்னோட பேவரைட் வேற ஒரு காபி" என்றான்.

"அப்படின்னா நீயும் இதுக்கு முன்னாடி காபி டே போயிருக்கியா?" என்று சந்தேகமாய் அவள் கேட்டதும்,

"ம்ம்ம் போயிருக்கேன்" என்று அலட்டிக்காமல் சொன்னான்.

"ரெண்டு ஆம்பிளை பசங்களும் வேஸ்ட். என்னைக் கூட்டிட்டு போகணும் என்று உங்க ரெண்டு பேருக்குமே தோணலை இல்ல?" என்று கேட்டு முறைத்தாள்.

அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் முறுவலித்தான்.

"இப்படி சிரிச்சே மழுப்பு. நாளைக்கு உன் வைஃப்பை எப்படி ஜீவா சமாளிப்பே?" என்று அவள் தனது அதி முக்கிய சந்தேகத்தை முன்வைத்ததும்,

"ம்ம். கிஸ் அடிச்சுத் தான் சமாளிப்பேன்" என்று அவன் விஷமத்தனமாக பதில் சொல்லவும், அவள் முறைத்தாள்.

"நான் ஏன்ம்மா என் வைஃப்பை வீட்டிலேயே விட்டுட்டு வெளியே போகப் போறேன்? காலேஜ் தவிர

எங்கே போறதா இருந்தாலும் அவளைக் கூட்டிட்டு தான் போவேன். அவளை என் கூடவே... என் பக்கத்திலேயே வைச்சுக்குவேன்'' என்று அவன் உணர்ந்து சொல்ல,

மதுவின் மனதிற்குள் பொறாமைத் தீ கொளுந்து விட்டு எரிந்தது.

''எங்கே போனாலுமா? எங்க வீட்டுக்கு, என்னைப் பார்க்க வந்தாலுமா?'' என்று அவள் சந்தேகம் கேட்க,

''உங்க வீடு என்ன வேற்று கிரகத்திலா இருக்கு? அதுவும் போக இது என் அத்தை வீடு தானே?! என் அத்தை வீட்டுக்கு என் வைஃப்பை கூட்டிட்டு வரதிலே எனக்கு என்ன கஷ்டம்.வரப் போகுது சொல்லு'' என்று அவளையே திருப்பிக் கேட்க,

''எனக்கு கல்யாணம் ஆகி நான் வேற வீட்டுக்கு போனால்... அங்கேயும் நீ எப்போ வந்தாலும் அவளைக் கூட்டிட்டு வருவியா?'' என்று கேட்டாள்.

''உன்னை எதுக்கு நாங்க பார்க்க வரணும்? எங்களுக்கு வேற வேலை வெட்டி இல்லையா என்ன?'' என்று அவன் படு நக்கலாகக் கேட்டதும்,

அவள் முகம் சுருங்கிப் போயிற்று. அவள் அமைதி யானாள்.

அதை ஓரக் கண்ணால் பார்த்தவன் மனதுக்குள் புன்னகைத்துக் கொண்டான். முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியும் காட்டாது மறைத்தான்.

அவள் அந்தக் காபியைக் குடிக்கக் கூட பிடிக்காமல் வெட்ட வெளியை வெறித்துக் கொண்டு அமர்ந்திருந் தாள்.

இரண்டு நிமிடங்கள் இப்படியே கழிந்தது. அவளைப் பார்க்க அவனுக்கே பாவமாக இருந்தது.

''மதி, என்ன யோசனை? பின்னாடி நடக்கப் போறதை பின்னாடி பார்க்கலாம். இப்போ முதல்ல இதைக் குடி'' என்று அந்த டம்ளரை அவள் வாய் அருகே கொண்டு போனதும்,

அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனும் அவளது பார்வையைத் தாங்கி நின்றான். அவனது பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டவள் அந்த காபியை பருக ஆரம்பித்தாள்.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

''காபி டேஸ்ட் பிடிக்கலையா? இவ்வளவு பொறு மையா குடிக்கிறே?''

''இல்லை ரொம்ப பிடிச்சிருக்கு ஜீவா. அதான் கொஞ்சம் கொஞ்சமா ரசிச்சுக் குடிக்கிறேன்.''

''ஏன் மதி காபி ஷாப்பிலே காபியை குடிக்காமல் வந்திட்டே? உன்கிட்டே காசு இருந்துச்சு தானே?'' என்று ஜீவா கேட்டதும்,

''பார்த்தியா ஜீவா... உன்கிட்டே ஒரு விஷயம் சொல்ல மறந்துட்டேன். இன்னைக்கு நான் ஒரு நெடு மரத்தைப் பார்த்தேன் ஜீவா'' என்றவள் காபியை ஒரு மிடறு அருந்தினாள்.

'ஒருவேளை இவளுடன் அமர்ந்திருந்த அந்த இளைஞனைப் பற்றிச் சொல்லப் போகிறாளோ?' என்று ஜீவா நினைத்தான்.

''என் கிளாஸ்மேட்டுக்கு ஒண்ணுவிட்ட அண்ணனாம். அவன் தான்டா எல்லோரையும் காபி ஷாப் கூட்டிட்டுப் போனான். எனக்கு போகவே இஷ்டமில்லை.''

''அப்புறம் ஏன் போனே?''

''பிரண்ட்ஸ் எல்லோரும் வற்புறுத்திக் கூப்பிட்டதால தட்டிக் கழிக்க முடியலை. அவன் தான் எல்லோருக்கும் காபி வாங்கித் தந்தான். அதனால தான் நான் குடிக்காமல் வந்துட்டேன்.''

''உனக்கு மட்டுமா வாங்கிக் கொடுத்தான். எல்லோருக்கும் தான் வாங்கிக் கொடுத்தான். அப்புறம் ஏன் நீ குடிக்கலை?''

''எனக்கு அவனைப் பிடிக்கலை, ஜீவா.''

இதைக் கேட்டதும் ஜீவாவிற்கு சந்தோஷம் உண்டானது. ஒருவேளை இவளிடம் ஏதாவது தப்பா நடந்துக்கிட்டானோ என்ற சந்தேகத்தோடும், பயத்தோடும்,

''ஏன் பிடிக்கலை?'' என்று வினவினான்.

''ஏன்னா அவனுக்கு உன்னைப் பிடிக்கலை'' என்றாள்.

'என்னடா இவள் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறாள். என்ன சொல்ல வருகிறாள்' என்று ஜீவா புரியாமல் விழிக்க,

''நீ பாடம் எடுக்கும் போது உன் ஸ்டூடண்ட்ஸ் எப்படி முழிப்பாங்களோ அப்படியே முழிக்கிறேடா ஜீவா'' என்று மதுமதி நக்கல் பண்ண,

''நான் கேவலமாகவே பாடம் எடுத்துட்டுப் போறேன். அது என் ஸ்டூடண்ட்ஸோட தலை எழுத்து. ஆனால் உங்க சார் சொல்லித் தரது புரியலைன்னு என்கிட்டே ஏன் வந்து நீ அப்பப்போ நிக்குறே?'' என்று கேட்டதும்.

''சாரி சாரி மறந்து போய் சொல்லிட்டேன்'' என்று அவள் வேகமாக ஜகா வாங்க,

''எதை மறந்து போய் சொல்லிட்டே?'' என்று விசாரித்தான்.

''எனக்கு பிராஜெக்ட் வேலை கொஞ்சம் பாக்கி இருக்கு. அதை உன்னை வைச்சு தான் முடிக்கணும். அதைத் தான் நான் மறந்து போயிட்டதா சொன்னேன்.''

''உனக்கு காரியம் ஆகணும் என்றால் அந்தர் பல்டி, ஆகாச பல்டி எல்லாம் அடிப்பியே!'' என்று அவன் அவளை வாரினான்.

''உனக்கு நான் காபி ஷாப்பில் நடந்த கதையைச் சொல்லவா வேண்டாமா?'' என்று முறுக்கிக் கொண்டாள்.

ஜீவா முக்கியமாகத் தெரிந்து கொள்ள விரும்புவது அதைத் தானே! அதனால் மற்றப் பேச்சுக்களை ஓரங் கட்டிவிட்டு,

''சரி நீ உன் கதையைச் சொல்லு'' என்றான்.

''என் பிரண்ட்ஸ் எல்லோரும் ஷாப்பிங் பண்ணப் போனாங்களா... அப்ப அந்த நிதிஷ்... அதான் அந்த ஜீவா அந்த நெடுமரத்தோட பேரு.

அவன் என்கிட்டே வந்து, மதுமதி நான் உங்களுக்கு வாட்ச் வாங்கித் தரேன் என்று சொன்னான். நான் எனக்கு வேண்டாம் என்று சொல்லிட்டேன்.

உங்க வாட்ச் பழசா போயிடுச்சு தானே! அதனால மாத்தலாம் என்று திரும்பவும் கூப்பிட்டான். இது ஜீவா அவனோட முதல் மாச சம்பளத்திலே வாங்கித் தந்தது நான் மாத்த மாட்டேன் என்று சொன்னேன்.

அவன் ஜீவா யார்ன்னு விசாரிக்க... என் பிரண்ட்ஸ் உன்னைப் பத்தி சொல்ல... ஓ! லெக்சரரா என்று அவன் இளக்காரமாகக் கேட்டான்டா.,

நீ லெக்சரரா இருந்தால் இவனுக்கு என்னடா வந்துச்சு. அவன் பெரிய பணக்காரனா இருந்தா... இருந்துட்டுப் போறான். நமக்கென்ன வந்துச்சு.

அவன் உன்னை அப்படிச் சொன்னதுக்கு அப்புறம் நான் எப்படி அவன் வாங்கித் தந்ததைக் குடிப்பேன்?" என்று அவனைப் பார்த்து கேட்டவள்,

அவனது பதிலை எதிர்பாராமல் கையிலிருந்த காபியை பருக ஆரம்பித்தாள்.

ஜீவாவிற்கு அவளை இழுத்து அணைத்து முத்தமிட்டு. 'இது போதும்டா மது!' என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது.

அவன் தனது கண்களையும், கைகளையும் மூடிக் கொண்டு தன்னைத் தானே கட்டுப்படுத்த அதிக சிரமப்பட்டான்.

தன் மனம் கவர்ந்தவளின் கூற்றால் அவனது உள்ளமெல்லாம் குளிர்ந்தது. மனதிற்குள் சந்தோஷ ஊற்று பொங்கியது. நாடி நரம்பெல்லாம் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

ஜீவாவிற்கு நிதிஷ் பற்றிய தகவல்களை மதுமதி தன்னிடம் மறைக்க நினைக்கவில்லை என்பது ஒரு புறம் ஆனந்தம் அளித்தது என்றால் மதுவிற்கு அவனை பிடிக்கவில்லை என்ற விஷயம் பேரானந்தத்தை தந்தது.

ஜீவா முகம் கொள்ளா சந்தோஷத்துடன் அவள் முகம் பார்க்க... அவள் அந்த காபியை ரசித்துக் குடிப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

காற்றில் அவளது கேசம் பறந்து அவளது கன்னத்தில் படிந்தது. ஜீவா தனது விரல்களால் அதை மென்மையாக [illegible]

"ஜீவா தாங்க்ஸ். சூப்பரா இருந்தது" என்று சொல்லி குடித்து முடித்த கப்பைக் கீழே வைத்தாள்.

"மதி. அந்த நிதிஷ் அவ்வளவு நல்லவனாத் தெரிய லைடா. ஜாக்கிரதையா இரு" என்று ஜீவா எச்சரித்தான்.

"நீ எப்போ அவனைப் பார்த்தே? அப்படின்னா நீயும் காபி ஷாப் வந்து இருந்தியா?"

"ஆமா மதி. என் பிரண்டை மீட் பண்ண வந்தேன். அப்போ அவனைப் பார்த்தேன். நீ நான் வந்ததையும் கண்டுக்கலை. போனதையும் கவனிக்கலை. எப்பவுமே பொது இடத்தில் கவனமா இருக்கணும்மா. உன்னை சுத்தி என்ன நடக்குதுன்னு பார்க்கணும். சரியா?" என்று மெல்லிய குரலில் அவளுக்கு அறிவுரை வழங்கினான்.

"சரி ஜீவா. இனிமே கவனமா இருக்கேன்" என்று உடனே ஒத்துக் கொண்டாள்.

"அக்கா... மது... மதுக்கா!" என்று கூவிக் கொண்டே அருண் மொட்டை மாடிக்கு வந்தான்.

"ஏன்டா அக்காவும், தம்பியும் ஒரு நிலையை ஒருத் தரைக் கூப்பிட மாட்டீங்களா? ஒண்ணு அக்கான்னு மரி யாதையாக் கூப்பிடு. இல்லை மரியாதையை காத்திலே பறக்கவிட்டு மதுன்னு கூப்பிடு. என்டா ரெண்டையும் கலந்து கட்டி அடிக்கிறே?" என்று ஜீவா கேட்டதும்,

"விடுங்க அத்தான். அவளைத் தான் கூப்பிடுறேன் என்று அவளுக்கு தெரிஞ்சால் போதாதா?" என்று அருண் சொன்னதும்,

"கரெக்ட் அருண்" என்று தம்பியின் கருத்துக்கு மதுமதி ஆதரவு தெரிவித்தாள்.

"இந்தாக்கா நீ கேட்ட கோல்ட் காபி" என்று அருண் நீட்ட,

"நீயும் வாங்கிட்டு வந்து இருக்கியா?" என்று மது ஆச்சரியமாகக் கேட்டதும்,

"நீயுமான்னா... அத்தான், ஏற்கனவே வாங்கிக் கொடுத்துட்டீங்களா?" என்று ஜீவாவிடம் கேட்க, அவன் ஆமோதிப்பதாக தலையை ஆட்டினான்.

"நான் இன்னைக்கு டி.வி யிலே வானிலை அறிக்கை கேட்டேனே! அவங்க மழை பெய்யும் என்று சொல்லவே இல்லையே. ஆனா இங்க என்னடான்னா பாச மழையா பொழியுது. என்னங்கடா நடக்குது இங்கே?" என்று சிரித்துக் கொண்டே மது கேட்க,

"இவ கூடவே ஒரே வீட்டிலே இருக்கணுமே... இவ தொல்லை தாங்க முடியாதேன்னு நான் தான் வாங்கிட்டு வந்தேன் என்றால் நீங்க ஏன் அத்தான் வாங்கிட்டு வந்தீங்க? நீங்க தப்பிச்சு உங்க வீட்டுக்கு போறதை விட்டுட்டு..." என்று அவன் ஜீவாவைக் கேட்க,

ஜீவா பெரிதாக புன்னகைத்தான்.

'உங்க அக்கா கொஞ்ச நேரம் முன்னால சொன்னதைக் கேட்ட பிறகு அவ என்ன கேட்டாலும் நான் வாங்கித் தருவேன். ஆஃப்டர் ஆல் கோல்ட் காபி வாங்கித் தர மாட்டேனா?' என்று மனதுக்குள் நினைத்த ஜீவா மீண்டும் பெரிதாக புன்னகைக்க,

'ஆனாலும் இந்த அத்தான் என் அக்காகிட்டே இப்படி தலை குப்புற விழுந்து கிடக்கக் கூடாது. ரெண்டு பேரும் நல்ல ஜோடி. ஆனா சேருவாங்களா?' என்று நினைத்து அருண் பெருமூச்சுவிட்டான்.



"சரி இந்தக் காபியை அம்மாக்கும் அப்பாக்கும் கொடுத்திடலாம்" என்று சொல்லி அவள் கீழே செல்ல அவர்கள் இருவரும் அவளைப் பின் தொடர்ந்தனர்.

# 12



மஞ்சுளா தன்னுடைய முடிவைப் பற்றி தன் தாய்க்கு கடிதம் எழுதுவது என்று தீர்மானித்தாள்.

பேப்பரை எடுத்துக் கொண்டு எழுத உட்கார்ந்தாள்.

எப்படித் தொடங்குவது என்று முதலில் விழித்துக் கொண்டு அமர்ந்திருந்தவள் எழுத ஆரம்பித்ததும் வார்த்தைகள் மடமடவென்று வந்து விழுந்தன. தன் உள்ளத்து உணர்ச்சிகளை வாக்கியமாக மாற்ற ஆரம்பித்தாள்.

*அன்புள்ள அம்மா,*

*மஞ்சு எழுதுவது. நீங்க தான் எனக்கு பண உதவி செஞ்சதா பொன்னம்மா சொன்னாங்க.*

*இன்னும் கூட இந்தப் பொண்ணு மேல உங்களுக்கு பாசம் இருக்காம்மா? தொப்புள் கொடி உறவை இன்னமும் நீ புரிஞ்சுக்கலையான்னு கேட்கிறீங்களா?*

*இது வரைக்கும் உங்களுக்கு நான் எந்த விதத்திலாவது சந்தோஷம் கொடுத்து இருக்கேனா? கிடையவே கிடையாது.*

ஆனால் இனி சந்தோஷத்தை மட்டும் தான் தாறும் என்று முடிவு எடுத்திருக்கேன்.

முதல்ல நான் ஒரு உண்மையைச் சொல்லு றேன். நானா கெட்டழியலைம்மா. நான் கெடுக்கப் பட்டேன். அதான் உண்மை. உங்க வளர்ப்பு தப்பாகலைம்மா. உங்க பொண்ணு அப்படி ஒரு தப்பைச் செய்யலை.

அதை அன்னைக்கே சொல்லி இருக்கலா மேன்னு கேட்கிறீங்களா?

நான் அந்தத் தப்பு மட்டும் தான் செய்யலை. ஆனா மீதி எல்லாத் தப்பையும் செஞ்சேன் தானே.

நான் உங்க மேலயும் தங்கச்சிங்க எதிர்காலத்து மேலயும் உள்ள அக்கறையிலே வீட்டை விட்டு வெளியேற முடிவு பண்ணலை.

ரோஷம்... உங்க முன்னாடி தலை குனிஞ்சு நிக்கணுமான்னு ரோஷப்பட்டு தான் வெளியேறி னேன். எல்லோரையும் அதிகாரம் பண்ணி வாழ்ந்த இடத்திலே தலை குனியணுமான்னு திமிரெடுத்து போய் தான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

ஆனால் அப்படிப்பட்ட என்மேலே நீங்க காண் பிச்ச அக்கறை... என்னை சில்லு சில்லா சிதைச்சிடுச் சும்மா. தாய்ப் பாசம் என்றால் என்னன்னு எனக்கு அன்னைக்கு புரிஞ்சது. என் பொண்ணுகிட்டே எந்தளவு பாசம் காட்டணும் என்று புரிஞ்சது.

'அம்மா'... இந்த வார்த்தைக்கான அர்த்தம் எனக்கு இப்போ தான் முழுசா புரியுது.

எனக்கு குழந்தை பிறந்த உடனே புரிஞ்

குழந்தையை பிரிய நான் முடிவு எடுத்த போது தான் எனக்கு உறவுகளின் பாசமும் பிணைப்பும் ரொம்பத் தெளிவாப் புரிஞ்சது.

என் குழந்தையை பிரியப் போறேனான்னு கேட்கிறீங்களா? ஆமாம்மா. நான் அவளுக்கு ஒரு நல்ல அம்மாவா நடந்துக்கணும் என்றால் பிரிஞ்சு தான் ஆகணும்.

அவளுக்கு ஒரு நல்ல குடும்பச் சூழல் ஏற்படுத் திக் கொடுக்கணும். அதுக்கான ஏற்பாட்டை பொன்னம்மா மூலமா செஞ்சுட்டேன். நான் வெளிநாட்டிற்கு வேலைக்கு போகப் போறேன்.

உண்மையிலே உங்களுக்கு என் மேல பாசம் இருந்தால் (நான் இப்படிக் கேட்கிறதுக்காக என்னை மன்னிச்சிடுங்க) நான் மாசா மாசம் அனுப்பும் பணத்தை ஏத்துக்கோங்க. அது மூலமா என் தங்கச்சிங்க எதிர்காலத்தை வளமானதா மாத்துங்க.

நீங்க என் பணத்தை ஏத்துக்கிட்டால் என்னை ஏத்துக்கிட்டதா அர்த்தம். என்னை ஏத்துக்கிட்டால் என் வாழ்க்கை அர்த்தமுள்ளதா மாறும்.

இந்த உலகத்திலே நானும் பயன் தரும் விதமா வாழ்கிறேன் என்ற உணர்வை எனக்குத் தருவீங்களா?

இப்படிக்கு,

மஞ்சு.

என்று முடித்தாள்.

அன்று இரவு தன் குழந்தையை மடி மீது வைத்துக் கொண்டு அதன் மேனியை தடவிக் கொடுத்தவாறு வைத்த கண் வா்ங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பக்கத்து வீட்டுத் தொலைக்காட்சியில் நாடகம் ஓடிக் கொண்டிருந்தது. அதில் ஒரு பாடல் கசிந்து வந்து அவள் காதுகளில் விழுந்தது. அவளது கண்களில் கண்ணீர் கசிய ஆரம்பித்தது.

இந்த வீணைக்குத் தெரியாது
இதைச் செய்தவன் யாரென்று
என் சொந்த பிள்ளையும் அறியாது
அதைத் தந்தவன் யாரென்று
எனக்குள் அழுது ரசிக்கின்றேன்
இரண்டையும் மடியில் சுமக்கின்றேன்.

சொந்தம் பந்தம் என்பது எல்லாம்
சொல்லித் தெரிந்த முறை தானே
சொர்க்கம் நரகம் என்பது எல்லாம்
சூழ்நிலை கொடுத்த நிறம் தானே
உள்ளம் என்பது சரியாய் இருந்தால்
உலகம் முழுதும் இனிக்கிறது
உதிரப் போகும் பூ கூட உயிர் வாழத் தான் துடிக்கிறது.

அந்தப் பாடல் அவளுக்கென்றே எழுதியது போல் இருந்தது. ஆனால் தன் பெண்ணுக்கு தாயும் யாரென்று தெரியாமல் போகப் போகிறது என நினைத்து மனம் நொந்தாள்.

சொந்தமும் பந்தமும் சொல்லித் தெரியும் முறை தானே?! ஆம். அதை ஒரு தாய் தான் சொல்லித் தர வேண்டும். இவர் தான் உன் அப்பா. இவங்க தான் உன் மாமா, அத்தை... இப்படி உறவுகளை தாய் அறிமுகப் படுத்த வேண்டும்.

ஆனால் நானோ தாயாய் இருந்து 'இவள் தான் உன் அம்மா!' என்று இன்னொருவரைக் கைக்காட்டிவிட்டு ஒதுங்க வேண்டும் என்று நினைக்கும் பொழுதே துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் கண்ணீர் நிற்காமல் ஓடியது.

குழந்தையை மார்போடு இறுக்கி அணைத்துக் கொண்டாள். இனி வரும் நாட்களில் தன்னால் தன் குழந்தையைத் தூக்கிக் கொஞ்ச முடியாது என்பதால் அதன் ஸ்பரிசத்தை தன் மனப் பெட்டகத்துள் புதைத்து வைக்கப் பார்த்தாள்.

அதன் பின் காரியங்கள் மளமளவென்று நடந்தேறின.

ராணியும், அவளது கணவனும் வக்கீலிடம் கலந்து பேசி குழந்தையை முறைப்படி தத்து எடுத்துக் கொண்டனர்.

குழந்தையை அழைத்துச் செல்ல வந்த ராணி குழந்தையின் கழுத்தில் இரண்டு பவுன் சங்கிலி ஒன்றை அணிவித்தாள்.

'இரண்டு பவுன் என்றால் ஐம்பது அல்லது அறுபதாயிரம் செலவு செய்திருப்பார்கள். வீட்டிற்கு அழைத்துச் செல்லும் முன்பே குழந்தைக்கு இவ்வளவு செலவு செய்கிறார்கள் என்றால்... இவர்கள் என் குழந்தையை நல்லபடியாக பார்த்துக் கொள்வார்கள்' என்று நினைத்து மஞ்சுளா பூரித்துப் போனாள்.

மஞ்சுளா குழந்தையின் நெற்றியில் மென்மையாக இதழ் பதித்து, இதழில் புன்னகையுடன் அவர்களிடம் நீட்டினாள்.

ராணி முகம் கொள்ளாப் பூரிப்புடன் இரு கரம் நீட்டி குழந்தையை வாங்கி தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

ராணி மஞ்சுளாவைப் பார்த்து, ''குழந்தையையும் கொடுத்திட்டோமே... அதனால உனக்கு சொந்தம் என்று சொல்லிக்க யாருமில்லைன்னு நினைச்சுக்காதே. உன் அக்கா நான் ஒருத்தி இருக்கேன். நீ தாராளமா என்னை வந்து பார்க்கலாம். என்னோட தங்கச்சியா...'' என்று அழுத்திச் சொன்னாள்.

அதாவது நீ என் தங்கை என்ற உறவு முறையில் என்னை வந்து சந்திக்கலாம். ஆனால் உன் பெண்ணின் தாயாக இல்லை என்று அவள் கூற வருவது மஞ்சுளாவிற்கு புரிந்தது.

இது அவளை விலகி நிற்கச் சொல்லும் செயல் அல்ல. ஒரு தாயின் தவிப்பு.

தன் குழந்தை தனக்கு மட்டுமே சொந்தமாக வேண்டும் என எதிர்பார்க்கும் ஒரு தாயின் நியாயமான எதிர்பார்ப்பு.

அது மஞ்சுவிற்கு நன்கு புரிந்தது. ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த மஞ்சுளாவிற்கு தன் குடும்பத்தினரின் நினைப்பிற்கும், வார்த்தைக்கும் கூட அர்த்தம் தெரியாது.

ஆனால் இன்றைய மஞ்சுளாவிற்கு அடுத்தவரின் மனநிலை கூட அவர்கள் சொல்லாமலே புரிந்தது.

கடந்து சென்ற ஒரு வருடம் அவளது வாழ்க்கையை மட்டும் தலை கீழாக மாற்றவில்லை. அவளையும்... அவளது குணத்தையும் அடியோடு மாற்றி இருக்கிறது.

ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு.



உன்னுடைய சொத்து அழிந்து போனால், வாழ்க்கையில் நீ எதையும் இழக்கவில்லை. உன்னுடைய உடல் நலம் சீரழிந்தால், நீ சிலவற்றை இழந்துவிட்டாய். உன்னுடைய குணம் அழிந்தால், நீ எல்லாவற்றையும் இழந்து விட்டாய்.

அது தான் மஞ்சுவின் வாழ்விலும் நடந்திருக்கிறது. அவளது ஆணவ குணத்தால் அவளைப் பெற்றவர்கள், கூடப் பிறந்தவர்கள், தோழிகளை இழந்ததோடு மட்டுமல்லாமல் மடி தாங்கிய குழந்தையையும் இழக்கும்படி ஆகிவிட்டது.

தன் மனதைத் தேற்றிக் கொண்டு ஒரு தாயின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய விரும்பிய மஞ்சுளா ராணியின் கண்களை உற்று நோக்கியவாறு,

''இவள் என் பெண் என்று எந்த சூழ்நிலையிலும் என் வாயால் சொல்ல மாட்டேன். இது என் குழந்தை மேல் சத்தியம்'' என்று தன் பெண்ணின் தலை மீது கை வைத்துச் சொன்னாள்.

''உங்களுக்கு என்னை பத்தி எந்த பயமும் தேவை இல்லை'' என்று மஞ்சுளா உறுதிபடக் கூறவும் ராணியின் முகம் தெளிவு பெற்றது.

''மஞ்சு, கேட்க மறந்துட்டேன். பாப்பாக்கு என்ன பேர் வைச்சிருக்கே?'' என்று ராணி கேட்கவும்,

''இது வரைக்கும் நான் எந்த பேரும் வைக்கலைக்கா. நீங்களே ஒரு நல்ல பேரா சொல்லுங்க'' என்று சொல்லி பேரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை ராணிக்கே விட்டுக் கொடுத்தாள்.

ராணி தன் கணவனின் புறம் திரும்பிப் பார்த்து, ''என்ன பேருங்க வைக்கலாம்'' என்று கண்களில் ஆர்வம் மின்ன கேட்கவும்,

''கீதா, இத்தனை நாளா உனக்கு குழந்தை பிறந்தா என்ன பேர் வைக்கலாம் என்று மனசுக்குள்ளே ஏதாச்சும் யோசிச்சு வைச்சிருப்பே இல்ல...'' என்று அவளது கணவர் கூறியதும்,

கீதா ராணி குனிந்து தன் மகளின் காதில், ''மதுமதி! மதுமதி! மதுமதி!'' என்று மூன்று முறை கூறினாள்.

## 13



மதுமதி அன்று கல்லூரிக்குள் நுழையும் பொழுது இரு தோழிகள் கல்லூரியை விட்டு வெளியேறி கொண்டிருந்தனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்திய மதுமதி, ''ஹேய்! எங்கே கிளம்பிட்டீங்க?'' என்று கேட்டாள்.

''நாங்க இன்னைக்கு பேப்பர் பிரசன்ட் பண்ணப் போறோம் என்று நேத்தே சொன்னோம் தானே? மறந்துட்டியா மது?''

''அட ஆமா இல்ல... நீங்க ரெண்டு பேர் மட்டுமா போறீங்க?''

''இல்ல மூணு டீம் பேப்பர் பிரசன்ட் பண்ணப் போறோம். அவங்க எல்லாம் நேரா அந்தக் காலேஜுக்கே



வந்திடுவாங்க. நான் இவ கூட சேர்ந்து போகணும் என்று தான் இங்கே வந்தேன்'' என்று கூட இருந்த இன்னொரு தோழியை காட்டிச் சொல்ல,

''எந்த காலேஜ்?'' என்று மதுமதி விசாரித்தாள்.

அவள் ஜீவா வேலை செய்யும் காலேஜ் பேரைச் சொன்னதும் மதுமதிக்கும் அவர்களுடன் போக ஆசை வந்தது.

''ஹேய்! நானும் உங்க கூட வரேன்'' என்று மதுமதி சொன்னதும்,

''எங்களுக்கு அட்டெண்டன்ஸ் உண்டு. நீ வந்தால்... காலேஜை கட் பண்ணிட்டு தான் வரணும்'' என்று ஒரு தோழி நினைவூட்ட,

''அது எனக்கு தெரியாதா? என்னமோ இதுக்கு முன்னால நாம காலேஜை கட் அடிச்சதே இல்லைங்கிற மாதிரி பேசக் கூடாது'' என்று கிண்டல் பண்ணிய மதுமதியும் அவர்களுடன் பயணப்பட்டாள்.

'இந்த ஜீவா அவனோட காலேஜில என்ன செஞ்சு கிழிக்கிறான் என்று இன்னைக்கு நான் பார்த்தே ஆகணும்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் ஜீவாவின் கல்லூரிக்குள் நுழைந்தனர். விழாவிற்கே உரிய தோரணையுடன் அக்கல்லூரி காட்சி அளித்தது.

எங்கு பார்த்தாலும் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக போய் வந்து கொண்டிருந்தனர். பேனர்களும் போஸ்டர்களும் தோரணங்களும் அவர்களை வரவேற்றன.

மாணவிகள் தங்களை வெகுவாக அலங்கரித்துக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தனர்.

'அடடா நாம பக்கி மாதிரி வந்து இருக்கோமோ?' என்று ஒரு நொடி சிந்தித்த மதுமதி, அடுத்த நொடியே 'இது என்ன நம்ம காலேஜ் கல்சுரல்ஸா?! நாம சூப்பரா டிரஸ் பண்ண... வந்து இருப்பது பேப்பர் பிரசன்ட்டேஷனுக்கு. அதுக்கு சுடிதார் தான் போடணும்' என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

அந்த அரங்கிற்குள் நுழைந்து தங்களுக்கான இருக்கையில் அமர்ந்ததும் மதுமதியின் கண்கள் ஜீவாவிற்காக அலைபாய்ந்தது. அவள் அவனைத் தேடிக் கொண்டு இருந்தாள்.

ஆனால் அவள் அரங்கத்திற்குள் நுழையும் முன்பே ஜீவா மதுவை பார்த்துவிட்டான்.

'இவ எங்க இங்கே வந்தாள்? ஒரு வேளை பேப்பர் பிரசன்ட் பண்ணப் போறாளோ? சஸ்பென்ஸா இருக்கட்டும் என்று நினைச்சு நம்ம கிட்டே சொல்லாமல் இருக்காளோ?

சஸ்பென்ஸா எதையாச்சும் செய்யக் கூடியவள் தான்... ஆனால் பேப்பர் பிரசன்ட் பண்ணுவதா இருந்தால் இந்நேரத்துக்கு ஆயிரம் சந்தேகம் அவளுக்கு வந்து இருக்கும். அதை தீர்க்கச் சொல்லி நம்ம உயிரை வாங்கி இருப்பாளே!

கண்டிப்பா இவ வேடிக்கை பார்க்க வந்த கேஸ் தான். யாரு கண்டா ஒரு வேளை உன்னை வேவு பார்க்கக் கூட வந்து இருக்கலாம். ஜீவா, அலர்ட்டா இருடா!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அரங்கத்தில் உள்ள விளக்குகள் அணைக்கப்பட்டு அவரவர் தங்களுடைய கட்டுரையை விளக்கத் தயாரானார்கள்.



மதுமதிக்கு ஜீவாவை பார்க்காமல் சொத் என்று ஆனது.

'இதுக்கு நாம வந்திருக்கவே வேண்டாம். இந்த இருட்டு ஆடிட்டோரியமில் இவங்க எல்லாம் கிளாஸ் எடுப்பதைப் பார்க்கவா நான் வந்தேன்' என்று மனதிற்குள் புலம்பிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

இரண்டிரண்டு பேராக எழுந்து விளக்க ஆரம்பித்தனர். அவர்கள் விளக்கி முடித்ததும் சக மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் தங்களது சந்தேகங்களைக் கேட்பார்கள். அதற்கு அவர்கள் கூறும் சரியான பதிலில் தான் அவர்களது திறமையும் புத்திசாலித்தனமும் பளிச்சிடும்.

முதல் அணி விளக்கி முடித்ததும் இப்பொழுது கேள்விகள் கேட்கலாம் என்று அறிவித்தார்கள். இரண்டு மாணவர்கள் எழுந்து கேள்வி கேட்டனர். அ;வர்கள் அதற்கு சரியான பதிலும் அளித்தனர்.

அடுத்து மைக் பிடித்து கேள்வி கேட்டது ஜீவா.

அவனின் குரலை அடையாளம் கண்டு கொண்ட மதுமதி, 'ஹேய் ஜீவா! நீ இங்க தான் உட்கார்ந்து இருக்கியா?' என்று கூறிக் கொண்டாள்.

அந்த அணியிடம் மட்டுமல்லாமல் அடுத்தடுத்த வந்த அணிகளிடமும் ஜீவா கேள்விகள் கேட்டு திணறடித்தான்.

'ஜீவா நீ அறிவாளின்னு தெரியும். ஆனால் இம்புட்டு அறிவாளின்னு தெரியாதுடா' என்று மனதிற்குள் பாராட்டிக் கொண்டாள்.

அருகில் அமர்ந்திருந்த இரு பெண்கள், "நம்ம ஜீவா சார்கிட்ட முடியுமா? ஹி இஸ் அ ஜீனியஸ்!" என்று

புகழ்வதைக் கேட்ட மதுமதிக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது.

மதிய இடைவேளையின் போதாவது அவனைப் பார்க்கலாம் என்று நினைத்ததிற்கு நேர்மாறாக அவன் கண்ணில் சிக்கவே இல்லை.

மாலையில் அன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின்பே அவனைப் பார்க்க முடிந்தது.

அப்பொழுதும் அவனைச் சுற்றி ஒரே பெண்கள் கூட்டம். அவன் அந்த பெண்களிடம் சிரித்து சிரித்து பேசிக் கொண்டிருந்தான்.

'நான் ஒருத்தி இங்க காலையிலே இருந்து உனக்காக காத்து இருக்கேன். நீ என்னடான்னா உன் ஸ்டூடண்ட்ஸ் கிட்டே சிரிச்சு சிரிச்சு பேசவா செய்யுற' என்று திட்டிக் கொண்டே அவனை நெருங்கினாள்.

அருகே வந்தவள், ''ஜீவா, நீ கேள்வி...'' என்று ஆரம்பிக்க,

ஜீவா மிகக் கடுமையான குரலில், ''நீங்க எந்த காலேஜ் ஸ்டூடண்ட்? உங்க லெக்சரரை இப்படித் தான் மரியாதை இல்லாமல் பேர் சொல்லிக் கூப்பிடுவீங் களா?'' என்று கேட்டான்.

அத்தனை பேர் மத்தியில் அவன் மிரட்டியதும் அதை அவள் அவமானமாக உணர்ந்தாள். அவள் செய்த தப்பு புத்திக்கு உறைக்கவில்லை.

சுற்றி உள்ள யாரையும் ஏறெடுத்தும் பார்க்காமல் தன்னுடைய தோழிகள் நின்று கொண்டு இருந்த இடத் திற்கு விரைந்தவள்,



''வாங்க போகலாம்'' எனச் சொல்லி அவர்களுடன் வெளியேறினாள்.

ஜீவாவை சுற்றி இருந்த பெண்கள், ''சார்...'' என்று தயங்கி இழுக்கவும்,

''ஜஸ்ட் லீவ் இட'' என்று சொல்லிவிட்டான்.

அவர்களுக்கெல்லாம் ஜீவா ஒரு ஆஸ்தான ஆசிரியன் மட்டும் அல்ல. அவர்களின் மரியாதைக்குரியவன். வயதில் சிறுவன் என்பதால் அவர்களிடம் தோழனைப் போல் பழகுபவன். அதனால் மதுமதியின் உதாசீனம் அவர்களை பாதித்தது.

ஜீவா வேறு பேசச் சொல்லியதால் அந்தப் பெண்கள் முயன்று வேறு பேச்சைப் பேசினார்கள்.

ஐந்து நிமிடங்கள் கடந்த நிலையில் ஒரு மாணவன் ஜீவாவை நெருங்கி வந்தான்.

அவன் பெயர் வினோத். அவன் ஜீவாவின் கல்லூரி யில் கடைசி வருடம் பயிலும் மாணவன். அரசியல் செல்வாக்கு உள்ளவன். பார்ப்பதற்கு ஆஜானுபாகுவாய் இருப்பான். அவனைக் கண்டாலே ஜூனியர்கள் பயப் படுவார்கள். அவனுக்கு ஜீவாவை மிகவும் பிடிக்கும்.

வந்தவன் நேராக ஜீவாவை பார்த்து, ''சார் உங்களை வேற காலேஜ் பொண்ணு ஒருத்தி மரியாதைக் குறைவா பேசினாளாமே?'' என்று கேட்டான்.

''அதுக்குள்ள நியூஸ் பரவிடுச்சா?'' என்று ஆச்சரியப் பட்ட ஜீவா,

''அது சரி பேசினாளாமேன்னு நீங்க ஏன் வினோத் மரியாதைக் குறைவா பேசறீங்க?'' என்று அந்த மாண வனைத் திருப்பிக் கேட்க,

''உங்களைத் தரக் குறைவா பேசினவங்களுக்கு அந்த மரியாதை போதும் சார். நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்க'' என்று வினோத் வலியுறுத்தவும்,

''அதான் நானே திட்டி அனுப்பிட்டேனே வினோத்'' என்று ஜீவா அவனை சமாதானப்படுத்த முயன்றான்.

''அப்படின்னா விஷயம் உண்மை. இல்லையா சார்?'' என்று ஜீவாவை பார்த்துக் கேட்டவன்,

அங்கே நின்று கொண்டு இருந்தவர்களிடம் திரும்பி, ''உங்களில் யாருக்காவது அந்தப் பொண்ணு எந்த காலேஜ் என்று தெரியுமா?'' என்று கேள்வி கேட்டான்.

சுற்றி நின்றிருந்த ஆண்களும் பெண்களும் தெரியாது என்று தலையாட்டி அல்லது உதடு பிதுக்கி மறுத்தனர்.

''ஹேய் வினோத்! அது தெரிஞ்சு நீங்க என்ன பண்ணப் போறீங்க?'' என்று ஜீவா கேட்கவும்,

''நம்ம காலேஜூக்குள்ளே வந்து எங்க ஜீவா சாரை ஒரு பொண்ணு மரியாதைக் குறைவா பேசிட்டு திரும்பிப் போயிருக்காள். அவளைச் சும்மா விட முடியுமா சார்?'' என்று வினோத் கேட்டதும்,

''அதுக்காக என்ன பண்ணப் போறீங்க? பதிலுக்கு நீங்க அவங்க காலேஜுக்கு போய் அந்தப் பொண்ணை அவமானப்படுத்தப் போறீங்களா? உடனே என்ன நடக்கும் தெரியுமா? அவங்க காலேஜ் பசங்க இங்க வந்து நம்ம காலேஜ் பொண்ணுங்களை கிண்டல் பண்ணு வாங்க. அப்புறம் ஒருத்தரை ஒருத்தர் தாக்குவீங்க. இது தேவையா? சொல்லுங்க'' என்றான்.



''நீங்க சொல்லுறது கரெக்ட் சார். ஆனா அதுக்காக அப்படியே விடமுடியுமா?'' என்ற வினோத் மாணவர்களைப் பார்த்து,

''உங்க யாருக்குமே அந்த பொண்ணைப் பத்தின சின்ன விவரம் கூட தெரியாதா?'' என்று மீண்டும் கேள்வி எழுப்பினான்.

''எனக்கு தெரியும் வினோத்'' என்று ஜீவா பதில் சொல்லவும் சரேலெனத் திரும்பியவன்,

''சொல்லுங்க சார். எந்த காலேஜ்?'' என்று கேட்டான்.

''வினோத் வெறும் காலேஜ் பேர் மட்டும் சொன்னால் போதுமா? இல்லை வீட்டு அட்ரஸும் வேணுமா?''

''வீட்டு அட்ரஸே தாங்க. நீங்க தான் காலேஜுக்கு போனா அது ரெண்டு காலேஜுக்கு இடையிலே தகராறு வந்திடும் என்று ஃபீல் பண்ணுறீங்களே!''

''அப்போ வீட்டுக்கு போனால்... அவங்க வீட்டை சேர்ந்தவங்க உங்களை உதைக்க மாட்டாங்களா வினோத்?''

''அதைப் பின்னாடி பார்த்துக்கலாம் சார். நீங்க வீட்டு அட்ரஸ் கொடுங்க'' என்று அவன் தன் முடிவில் பிடிவாதமாக இருக்கவும்,

''வினோத், நீங்க என் மேல வைச்சிருக்கிற பாசத்தைப் பார்க்கிற போது எனக்கு சந்தோஷமா இருக்கு. ஆனா இப்படி சின்ன விஷயத்துக்கெல்லாம் அவங்க வீடு வரைக்கும் போய் கலாட்டா பண்ணணும் என்று நீங்க நினைக்கிறதைப் பார்க்கிறப்போ... உங்களோட லெக்சரரா மனசு ரொம்ப வலிக்குது வினோத். இதையா நான் என் ஸ்டூடண்ட்ஸ்க்கு இத்தனை நாளா சொல்லித்

தந்தேன்?'' என்று ஜீவா வருத்தம் தோய்ந்த ஆழ்ந்த குரலில் கேட்கவும்,

சுற்றி இருந்த அனைவருமே அமைதியாகினர்.

''சாரி சார்'' என்று சொல்லி வினோத் தலை குனிந்தான்.

வினோத் தன் தவறை உணர்ந்துவிட்டான் என்பது ஜீவாவிற்கு புரிந்தது. ஆனால் அவன் வருத்தப்பட்டு தலை குனிந்து நிற்பது ஜீவாவிற்கு பிடிக்கவில்லை.

''ஹேய்! சியர் அப் மேன்!'' என்று ஜீவா வினோத்தை உற்சாகப்படுத்தினான்.

அங்கிருந்து நகரப் போன வினோத்தை நிறுத்திய ஜீவா, ''உங்களுக்கு அந்தப் பொண்ணோட வீட்டு அட்ரஸ் வேண்டாமா?'' என்றதும் சுற்றி இருந்த அனைவருமே குழம்பிப் போயினர்.

அனைவரும் பேந்த பேந்த விழித்துக் கொண்டு ஜீவாவையே பார்க்க...

''அவளோட பேர், அட்ரஸ் எல்லாமே என்னோட கல்யாணப் பத்திரிகையில் வரும். பார்த்து தெரிஞ்சுக் கோங்க'' என்றதும் அனைவரும் முன்னிலும் அதிகமாக விழித்தனர்.

''சார், என்ன சொல்ல வரீங்க...'' என்று வினோத் இழுக்கவும்,

''அவ பேரு மதுமதி. என்னோட அத்தை பொண்ணு. நான் கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணு. அப்படின்னா என் கல்யாணப் பத்திரிகையில் அவ பேரு, அட்ரஸ் எல்லாம் இருக்கும் தானே?!'' என்று புருவம் உயர்த்தி கேட்டதும்,



அனைவரும் 'ஹோ' என்று கூவி ஆர்ப்பரித்தனர்.

''ஹேய்! கம்மியா சத்தம் போடுங்க. ப்ரொஃபஸர் யாராவது வந்திடப் போறாங்க'' என்று ஜீவா அவர்களை அடக்கினான்.

''சார் நீங்க சொல்லவே இல்லையே!''

''அச்சோ! நான் சரியா பார்க்கலையே!''

''சார் அப்படின்னா பாசமா பேச வந்தவங்களை இப்படி எங்க முன்னாடி திட்டி அனுப்பிட்டீங்களே. டூ பேட்! டூ பேட்!'' என்று ஆளாளுக்கு ஒன்றைச் சொல்ல,

ஜீவா சிரித்துக் கொண்டே, ''ஒண்ணாவே வளர்ந்துட்டதால மேடம் பாதி நேரம் மரியாதையை காத்திலே பறக்கவிட்டு விடுவாங்க. அதுக்காக பொது இடத்திலே சொல்லலாமா?'' என்று கேட்டான்.

''சார் அப்போ வீட்டுக்கு போனதும் உங்களுக்கு இன்னைக்கு...'' என்று முடிக்காமல் ஒரு மாணவி இழுக்க,

''கண்டிப்பா அடி இருக்கு. எவ்வளவோ வாங்கிட்டேன். இதை வாங்க மாட்டேனா?'' என்று அவன் சிரித்துக் கொண்டே சொல்ல, அனைவரும் அவனுடன் சேர்ந்து நகைத்தனர்.

அவர்கள் அனைவரும் கலைந்து செல்லவும் வினோத் ஜீவாவின் அருகில் வந்து, ''சாரி சார்'' என்றான்.

''திரும்ப எதுக்கு வினோத் சாரி சொல்லுறீங்க?''

''அப்போ சொன்ன சாரி வேற... இப்போ அவங்க உங்க வீட்டுப் பொண்ணு. அதுவும் நீங்க கல்யாணப் பண்ணப் போறவங்க. உங்க முன்னாடியே அவ இவன்னு பேசினதுக்காக இப்போ சாரி சொல்லுறேன்'' என்று

உணர்ந்து மன்னிப்பு கேட்டவனைத் தோளோடு அணைத்து.

"வினோத், வாழ்க்கையில் எப்பவுமே நிதானமா முடிவு எடுங்க. அவசரத்தில் எடுக்கிற எந்த முடிவும் தப்பா தான் போகும். அதே மாதிரி பிரச்சனையோட இன்னொரு பக்கத்தையும் யோசிச்சுப் பாருங்க" என்று அறிவுரை வழங்கினான்.

"இனிமேல் கவனமா நடந்துக்கிறேன் சார்" என்று வினோத் வாக்களித்தான்.

## 14



ஜீவா கல்லூரியில் இருந்து தன் வீட்டிற்கு கூடச் செல்லாமல் நேராக தன் அத்தையின் வீட்டிற்கு சென்று இறங்கினான்.

சற்று முன் தன் கல்லூரியில் மையம் கொண்டிருந்த புயல் தற்சமயம் தன் அத்தை வீட்டில் மையம் கொண்டிருக்கும் என்பது அவனுக்கு தெரியாதா என்ன?

அதைத் தன் அத்தையின் வீட்டை விட்டு ஜீவா கடக்க வைக்கவில்லை என்றால் அவன் வீட்டை வந்து தாக்கும் அபாயம் உள்ளதால் அவன் நேராக மதுமதியை பார்க்க வந்தான்.

ஜீவா வாசலில் உள்ள அழைப்பு மணியை அடிக்க கீதா கதவை திறந்துவிட்டார்.

ஜீவா உள்ளே மெதுவாக எட்டிப் பார்த்தான். வீட்டின் வரவேற்பறையில் மதுமதியை காணவில்லை. அவளது அறை சாத்தப்பட்டு இருந்தது.

"என்னடா ஜீவா பதுங்கிக்கிட்டு நுழையுறே?" என்று கீதா கேட்கவும்,

"உங்க பொண்ணு மலை இறங்கிட்டாளான்னு பார்க்கிறேன் அத்தை" என்றான்.

"அப்ப அந்த பாப் கார்ன் மெஷினை நீ தான் ஆன் பண்ணினாயா? வந்ததில் இருந்து பொரிஞ்சுக்கிட்டே இருந்தாள். நான் கூட பிரண்ட்ஸ் கூட தகராறு என்று நினைத்தேன்" என்று சொல்லி சிரித்தவர்,

"சாப்பிடுறியா? தோசை சுடட்டுமா? இல்லை காபி போடட்டுமா?" என்று மருமகனை உபசரிப்பதில் இறங்கினார்.

"இல்லை அத்தை வேணாம். அங்க அம்மா எனக்காக காத்து இருப்பாங்க. வரும் போதே காபி குடிச்சிட்டேன். அதனால காபியும் வேண்டாம்."

"அப்போ உளுந்து வடை சாப்பிடுறியா? சட்னி சாம்பார் கூட இருக்கு."

"உங்க வடையை வேண்டாம் என்று சொல்ல முடியுமா? தாங்க!" என்றவன்,

"உங்க அண்ணிக்கும் வடை போட சொல்லிக் கொடுக்கலாம் இல்ல அத்தை. எப்பப் பாரு வடைங்கிற பேரிலே ஒண்ணு போடுறாங்க. ஒரு வடையைச் சாப்பிடறதுக்குள்ளே நான் ஒரு லிட்டர் தண்ணி குடிக்க வேண்டி இருக்கு. அப்படி விக்கும்" என்று தன் தாயின் வடையை விமர்சித்தான்.

அவனது காதை வலிக்காமல் திருகிய கீதா, "டேய்! நீ ஆளுக்கு தகுந்த மாதிரி மாத்தி மாத்தி ஜால்ரா அடிப்பேன்னு எனக்கு நல்லா தெரியும்" என்றதும்,

"உண்மையாச் சொல்லுங்க. எங்க அம்மா வடை நல்லாவா இருக்கும்?" என்று அவரையே திருப்பி கேட்க,

"டேய்! எங்க அண்ணி எண்ணெய் குடிக்காமல் இருக்கணும் என்று கொஞ்சம் கெட்டியா வடை போடு வாங்க. நான் ஒத்துக்கிறேன். அதுக்காக நீ சொல்லுற அளவுக்கு ஒண்ணும் மோசம் கிடையாது" என்று சொல்லிக் கொண்டே,

ஒரு தட்டில் வடைகளையும் சட்னியையும் வைத்துக் கொண்டு வந்து நீட்டினார். ஒரு சிறு கிண்ணத்தில் சாம்பாரை ஊற்றி அவன் தட்டில் வைத்தவர்,

"ஜீவா! நீ சாப்பிட்டுக்கிட்டு இரு. நான் பக்கத்திலே கடை வரைக்கும் போயிட்டு வரேன். அருண் இப்ப வந்திடுவான்" என்றார்.

"நான் வேணுமின்னா கடைக்கு பைக்கிலே கூட்டிட்டு போகவா அத்தை?"

"இல்லைடா. நீ சாப்பிடு. ஒரு தெரு தானே. நான் நடந்து போயிட்டு வரேன். ஒரு சின்ன வாக்கிங் மாதிரி இருக்கும்" என்று சொல்லி வெளியேறினார்.

அவர் சென்றதும் ஜீவா பூட்டி இருந்த மதுவின் அறையை பார்த்தான்.

'நான் வந்தது தெரிஞ்சும் வெளியே வராமல் இருக்காளா? அப்படின்னா உன் பாடு கொஞ்சம் கஷ்டம் தான் ஜீவா' என்று சொல்லிக் கொண்டான்.

'மேடமை அறைக்குள்ளே இருந்து வெளியே வர வைக்கணுமே? என்ன செய்யலாம்?' என யோசித்தவன் தொலைக்காட்சியை இயக்கி அதன் சத்தத்தை அதிகப்படுத்தினான்.

அது உச்சபட்ச சத்தத்தில் அலற...

மதுமதி ஜீவா வந்தது தெரிந்தும் வெளியே செல்லக் கூடாது என்று முடிவு செய்து அறைக்குள் அமர்ந்திருந்தாள்.

தொலைக்காட்சியின் சத்தம் தொல்லை செய்த போதும் காதுகளை தன் கைகளால் மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள். ஆனால் சத்தம் குறையாமல் கூடிக் கொண்டே போகவும் வேறு வழியில்லாமல் மதுமதி தனது அறையில் இருந்து வெளியே வந்தாள்.

ஜீவாவின் புறம் தன் பார்வையைத் திருப்பாது நேராகச் சென்று தொலைக்காட்சியை அணைத்தாள்.

அவள் விறைத்துக் கொண்டு போவதைப் பார்த்த ஜீவாவிற்கு இதழோரம் புன்னகை ஒன்று மலர்ந்தது.

'ஜீவா இப்ப மட்டும் சிரிச்ச நீ செத்த!' என்று உள்ளிருந்து கேட்ட குரலுக்கு அடிபணிந்து தன் புன்னகையை மறைத்தான்.

கடமையாய் குனிந்த தலை நிமிராது வடையை சாப்பிட ஆரம்பித்தான்.

'செய்யுறதை எல்லாம் செஞ்சிட்டு ஒண்ணுமே செய்யாதவன் மாதிரி வடையா சாப்பிடுறே' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே அந்த வரவேற்பறையில் இருந்த இன்னொரு சோபாவில் சென்று அமர்ந்தாள்.

அவள் அவனையே பார்த்துக் கொண்டு இருக்க... ஜீவா அவளைத் தவிர அந்த அறையில் உள்ள அனைத்துப் பொருட்களையும் பார்வையிட்டான்.

'என்ன ஒரு கொழுப்பு!' என நினைத்தவள், "ஏன்டா! ஒருத்தியை திட்டி அனுப்பினோமே! அவ என்ன வானாள்? அவளைச் சமாதானம் பண்ணுவோம் அப்படின்னு கொஞ்சமாச்சும் யோசிக்கிறியா? நீ பாட்டுக்கு உட்கார்ந்து சாப்பிட்டுக்கிட்டு இருக்கே!" என்று திட்டினாள்.

'நீ திட்டினா நான் பதில் சொல்லணுமா என்ன?' என்பது போல் அவன் தெனாவட்டாய் அமர்ந்து அந்த வடையை ருசிக்க அவளது ஆத்திரம் கூடியது.

"இப்ப உனக்கு வடை சாப்பிடுறது தான் முக்கியமாப் போச்சா?" என்று கேட்டுக் கொண்டே அவனது கையில் இருந்த அந்தத் தட்டை இழுத்தாள்.

அவள் தட்டை இழுப்பாள் என்று எதிர்பார்த்ததால் அவன் அதைத் தடுப்பதற்காக எதிர்திசையில் இழுத்தான்.

இழுபட்ட வேகத்தில் அந்தத் தட்டில் உள்ள சாம்பார் கிண்ணம் அவனது சட்டையில் கவிழ்ந்தது.

சில துளிகள் அவனது முகத்திலும் தெறித்தன.

ஜீவா உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு அசையாது அவளைப் பார்த்து முறைக்க,

"ஐயோ அத்தான்! நான் கொட்டணும் என்று நினைக்கலை. நிஜமா அத்தான். நான் போய் துணி எடுத்திட்டு வந்து துடைச்சுவிடுறேன்" என்று சொன்னவள் சமையலறைக்குள் நுழைந்தாள்.



சரியாக அந்த நேரம் அருண் வீட்டினுள் நுழைந்தான்.

'காரியம் ஆகணும் என்றால் வாயிலே இருந்து அத்தான் அல்வா மாதிரி வழுக்கிக்கிட்டு வந்து விழுமே! இல்லைன்னா ஜீவா தவிர வேற எதுவும் வராது. என்னமோ இவ தான் எனக்கு பேர் வைச்ச மாதிரி நிமிஷத்துக்கு ஒரு தரம் கூப்பிட வேண்டியது' என ஜீவா நினைத்துக் கொண்டான்.

ஜீவா அப்பொழுது தான் அருண் வந்ததை கவனிக்க,

அருண் ஜீவாவிடம் சைகையில், 'உங்க தலை எழுத்தை மாத்த முடியாது அத்தான். நான் உங்களுக்காக கடவுளைப் பிரார்த்திக்கிறேன்' என்று சொல்லிவிட்டு தனது அறைக்குள் நுழைந்து கொண்டான்.

'அடப்போடா!' என்பது போல் ஜீவா அவனைப் பார்த்து பெரிதாய் புன்னகைத்தான்.

தனது அக்காவின் கண்களில் பட்டுவிட்டால் துடைக்கும் பணி தனக்கு இடப்படும் என்று பயந்தே அருண் வந்த சுவடு தெரியாது அறைக்குள் சென்று மறைந்தான்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரும், ஒரு துணியையும் எடுத்துக் கொண்டு வந்தவள் அந்தக் துணியை தண்ணீரில் முக்கிப் பிழிந்து அவனது சட்டையை துடைக்கலானாள்.

"சாரி அத்தான்" என்று சொல்லிக் கொண்டே இருந்தாள்.

ஜீவாவிற்கும் அவள் வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை என்று தெரியும். அத்தோடு அவள் தொடர்ந்து மன்னிப்பு கேட்பது வருத்தமாக இருந்தது. ஆனாலும் அவன் இணக்கம் காட்டாமல் அமர்ந்திருந்தான்.

கொஞ்சம் இளகினாலும் கல்லூரியில் நடந்த சண்டைக்கு அவளை சமாதானம் செய்ய முடியாது என்பதால் விறைப்பாகவே அமர்ந்திருந்தான்.

'ரொம்ப தான் ஸ்டிரிக்ட் ஆபீசர் ஆகிட்டான். பரவாயில்லை மது. நானே துடைச்சிக்கிறேன் என்று சொல்லுறானா பாரு!' என்று அவள் மனதுக்குள் ஜீவாவை திட்டிக் கொண்டிருந்தாள்.

அவள் அருகே... அதுவும் மிக நெருக்கத்தில் நின்று கொண்டு துடைதது க் கொண்டிருப்பதை அவன் ரசித்துக் கொண்டிருக்கும் போது, அவன் ஏன் அப்படிச் சொல்லப் போகிறான்.

அவளது கன்னத்தில் புரளும் கூந்தலை ஒதுக்கிவிட வேண்டும் போல் ஜீவாவிற்கு கைகள் பரபரத்தன.

'டேய் வேண்டாம். நீ இன்னும் கை கழுவலை. சாம்பார் கையா இருக்கு' என்று மனசாட்சி நேரங்காலம் தெரியாமல் அவனுக்கு நினைவூட்ட,

'கொஞ்சமாச்சம் ரொமான்ட்டிக்கா யோசிக்க விடுதா பாரு' என்று திட்டிக் கொண்டான்.

அவளை ரசித்துப் பார்த்தான்.

'அப்படியே இழுத்து அணைச்சு ஒரு உம்மா கொடுத்திடுவோமா' என யோசித்தான்.

'டேய் வேண்டாம். ஏற்கனவே உன் மேலே கோபமா இருக்காள். இந்த நேரம் நீ பாட்டுக்கு உம்மா கொடுத்தால் உன்னைச் சும்மா விடமாட்டாள்' என மனசாட்சி எச்சரிக்கை விட கைகளை கட்டுப்படுத்திக் கொண்டு வேடிக்கை பார்த்தான்.

அவள் அந்த பாத்திரத்தை சமையலறையில் வைக்கச் சென்றாள். அவன் எழுந்து சென்று கை கழுவி விட்டு வந்து மீண்டும் சோபாவில் அமர்ந்தான்.

செய்த தப்பை சீர்செய்து விட்டதால் மதுமதிக்கு ஜீவாவின் மீதிருந்த பழைய கோபம் மீண்டும் தலை தூக்கியது.

அதனால் அவனை முறைத்துக் கொண்டே எதிர் இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

'ஆகா! வேதாளம் திரும்பவும் முருங்கை மரம் ஏறிடுச்சுடா ஜீவா. அது எப்போ வேண்டுமானாலும் உன் தோளில் வந்து தொங்கும்' என்று நினைத்துக் கொண்டு அவளையே அமைதியாகப் பார்த்திருந்தான்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் செய்யாத தப்புக்கு கூட எத்தனை சாரி கேட்டேன்... நீ செஞ்ச தப்புக்கு ஒரு சாரியாவது கேட்கணும் என்று தோணலையா ஜீவா?" என்று கடுப்புடன் கேட்டாள்.

'அதானே அத்தான் மறைஞ்சிடுவானே!' என்று மனதிற்குள் நக்கலடித்துக் கொண்டவன்,

"நான் தப்பு செஞ்சா யார்கிட்டே என்றாலும் கண்டிப்பா மன்னிப்பு கேட்பேன். நான் தப்பு செய்யாத போது அது யாராக இருந்தாலும் மன்னிப்பு கேட்க மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே கால் மேல் கால் போட்டுக்கொண்டு அதை ஆட்ட வேறு செய்தான்.

"அப்ப உன் ஸ்டூடண்ட்ஸ் முன்னாடி நீ என்னை அவமானப்படுத்தியது தப்பில்லைன்னு சொல்லுறியா?"

"அப்படி என்னைப் பேச வைச்சது யாரு? நீ தானே? அந்த இடத்திலே நீ யாரு? நீயும் ஒரு ஸ்டுடண்ட் தானே! ஆனா அதே சமயம் நான் யாரு? அவங்களுக்கெல்லாம் லெக்சரர். என் ஸ்டுடண்ட்ஸ் முன்னாடி நீ என்னை ஒருமையில... என் பேர் சொல்லிக் கூப்பிட்டால் அது எனக்கு அவமானம் இல்லையா? அவ்வளவு மரியாதை தெரியாத பொண்ணா நீ!?" என்று கேட்டவன் எழுந்து நின்று,

"இதைச் சொல்லத் தான் வந்தேன். நீயே தனியா உட்கார்ந்து யோசி" என்று சொல்லி நகரப் போனவன்,

"மூளை இருந்தால்..." என்று சேர்த்து சொல்லிவிட்டு அவள் முறைப்பதை லட்சியம் செய்யாது வெளியேறினான்.

'அடச் சே! மட்டி! நாம அவமானப்பட்டோம் என்று நம்ம பக்கம் மட்டுமே யோசிச்சுக்கிட்டு இருந்தோமே தவிர நம்மால அவனுக்கு அவமானம் என்று எப்படி யோசிக்காமல் போனோம்.

ஜீவாவை யாரும் குறை சொன்னாலே எனக்கு பிடிக்காது. அப்படிப்பட்ட நானே அவன் ஸ்டுடண்ட்ஸ் முன்னாடி அப்படிக் கூப்பிட்டு இருக்கக் கூடாது. தப்பு பண்ணிட்டியே மது என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்,

உடனே தனது கைப்பேசியை எடுத்து,

"சாரி ஜீவா. தப்பு என் பேரில் தான். அது இப்ப தான் எனக்கே புரிஞ்சுது. இனிமேல் இப்படி நடந்துக்க மாட்டேன்" என்று குறுஞ்செய்தி அனுப்பினாள்.



தனது வீட்டிற்கு வந்த ஜீவா தனது நண்பன் ஒருவனை அழைப்பதற்காக தனது கைப்பேசியை எடுத்து இயக்கினான்.

அதில் மதுமதியின் குறுஞ்செய்தி வந்திருப்பதைப் பார்த்து அதைத் திறந்து படித்தான். படித்தவனின் முகம் மலர்ந்தது.

'ஐ லவ் யூடி கண்ணம்மா!' என்று கொஞ்சிக் கொண்டே தன் கைப்பேசிக்கு முத்தம் பதித்தான்.

தனது நண்பனை அழைப்பதற்கு பதிலாக மனம் கவர்ந்தவளை அழைத்தான்.

அந்தப் பக்கம் மதுமதி கைப்பேசியை இயக்கி, "ஹலோ!" எனவும்,

"என்னங்க மேடம். ஜீவா மேலே இருந்த கோபம் போயிடுச்சா?" என்று கேட்டான்.

"சாரி ஜீவா நீ திட்டினே என்பது மட்டும் தான் இவ்வளவு நேரம் மனசிலே நின்னுச்சு. உன் பக்க நியாயத்தை நான் யோசிச்சே பார்க்கலை" என்று கூறினாள்.

"நீ பொது இடத்திலே அப்படிக் கூப்பிட்டதாலே படக்குன்னு எனக்கும் கோபம் வந்திடுச்சு. நீ செஞ்சது தப்பா இருந்தாலும்... உன்னைத் திட்டினதுக்கு நானும் சாரி சொல்லிக்கிறேன்" என்று ஜீவா இறங்கி வர,

"அதை விடு ஜீவா" என்றாள்.

"சரி எங்க காலேஜிலே என்கிட்டே என்ன சொல்ல வந்தாய்? ஜீவா நீ கேள்வின்னு ஆரம்பிச்சே..." என்று அவன் எடுத்துக் கொடுத்தான்.

"பார்த்தியா அதைச் சொல்ல மறந்துட்டேன். என்ன சூப்பரா கொஸ்டின் கேட்டேடா. நீ இவ்வளவு புத்திசாலியாடா?"

"அது தெரியாமலா நீ என்கிட்டே இத்தனை நாளா உன் பாடத்திலே உனக்கு வரும் சந்தேகத்தை என்னை விளக்கச் சொன்னே?"

"நீ லெக்சரரா இருக்கியே. அதனால உனக்கு பாடம் தெரிஞ்சிருக்குமேன்னு நினைச்சு கேட்டேன். ஆனா நீ இவ்வளவு அறிவாளின்னு நான் எதிர்பார்க்கலை தெரியுமா."

"ஹூகும்" என்று இழுத்தான்.

"என் பக்கத்திலே இருந்த பொண்ணுங்க எல்லாம் உன்னை ஜீனியஸ் என்று பாராட்டினாங்க. எனக்கு அப்படி ஒரு சந்தோஷம்."

"ஓகோ!" என்று முறுவலித்துக் கொண்டே கேட்டான்.

"எங்க காலேஜ் பிரண்ட்ஸ் எல்லோரும் உன் கொஸ்டினுக்கு எப்படி ஆன்ஸர் பண்ணப் போறோமோன்னு பயந்தாங்க தெரியுமா? எனக்கு அப்படியே சந்தோஷத்திலே பறக்கலாம் போல இருந்துச்சு" என்று அவள் அவனை ஏகத்துக்கும் பாராட்டிக் கொண்டே போக,

ஜீவாவின் அகமும் முகமும் மலர்ந்தது.

அவனிடம் இருந்து பதில் வரவில்லை என்றதும், "ஜீவா லைனிலே இருக்கியா? நான் சொன்னது கேட்டதா?" என்று அவள் அந்தப் பக்கம் கத்த,

'நீ என்னை புகழுறதை ரசிச்சுக்கிட்டு இருக்கேன் மது!' என்று மனதுக்குள் கூறிக் கொண்டவன்,

"கேட்டுக்கிட்டு இருக்கேன் மதி" என்று மட்டும் அவளிடம் சொன்னான்.

"ஆனாலும் எனக்கு ஒரு விஷயம் பிடிக்கலைடா."

"எந்த விஷயம்?"



"உன் ஸ்டுடண்ட்ஸ் எல்லோரும் உன்னை 'எங்க ஜீவா சார்'ன்னு சொன்னது எனக்கு சுத்தமாப் பிடிக்கலை" என்று அவள் மனத்தாங்கலுடன் கூற,

ஜீவா சத்தமில்லாமல் சிரித்தான்.

'அடடா என் மதுவுக்கு பொறாமை பொங்கி வழியுதா? நீ தான் 'என் ஜீவா'ன்னு சொல்ல மாட்டேங்கிறியே மது? உன் மரமண்டைக்குள் அது எப்போ உதிர்க்குமோ? சீக்கிரமா சரியான பாதையிலே யோசிடி செல்லம். என்னால ரொம்ப நாள் காத்துக்கிட்டு இருக்க முடியாது' என்று மனதுக்குள் கொஞ்சிக் கொண்டான்.

அவள் தன் பதிலுக்காக காத்திருப்பதை உணர்ந்தவனாய், "நீயும் சொல்ல வேண்டியது தானே? அது எங்க ஜீவான்னு" என்றான்.

"ம்ம்ம்... எத்தனை பேர்கிட்டே போய் சொல்லுறது. யாருன்னு தெரியாதவங்க கிட்டே போய் நான் இப்படிச் சொன்னால் என்னை லூசுன்னு நினைக்க மாட்டாங்க?"

"அப்ப நீ லூசு இல்லையா மதி?"

"ஜீவாஆஆ..." என்று அவள் பல்லைக் கடிக்கவும்,

"இந்த ஜீவா பேரைச் சொல்லி இருந்தால் உனக்கு கிடைச்ச மரியாதையே தனியா இருந்திருக்கும். ப்ச்ச... நீ மிஸ் பண்ணிட்டே" என்றான்.

"அடடா! நான் அப்படிச் சொல்லி இருந்தால் அங்கு சாப்பிடக் கொடுத்த பப்ஸ், கேக் எல்லாம் எக்ஸ்ட்ராவா கிடைச்சிருக்குமா?" என்று ஆவலுடன் கேட்டதும்,

"சாப்பாட்டு ராமி. நான் என்ன சொல்லுறேன். நீ என்ன சொல்லுறே. உன்னைத் திருத்தவே முடியாது மதி" என்று அவன் அலுத்துக் கொள்ளவும்,

''திருத்துறதுக்கு நான் என்ன எக்ஸாம் பேப்பரா?'' என்று அவள் கடிக்க,

''அம்மா தாயே! நான் போனை வைக்கிறேன். இதுக்கு மேல பேசினால் நமக்குள்ளே சண்டை வரும். குட் நைட்'' என்று சொல்லி தனது கைப்பேசியை அணைத்தான்.

பேசி முடித்த இருவரின் முகமும் மலர்ந்து இருந்தது.

தங்களிடையே இருந்த மனஸ்தாபம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டதென மதுமதி மலர்ந்தாள்.

தன் மனம் கவர்ந்தவள் தன்னை ரசிக்கிறாள் என்பது ஒரு ஆணையும் கர்வம் அடையச் செய்யும் என்பதால் ஜீவாவின் முகமும் மலர்ந்து காணப்பட்டது.

## 15



''ஹேய் மது! நில்லு!'' என்று தன் தோழி கத்திக் கூப்பிட்டதை காதில் வாங்காதவளாய் மதுமதி அந்தப் பிரபல ஷாப்பிங் மாலில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தாள்.

''கூப்பிடக் கூப்பிட காது கேட்காதவள் மாதிரி போறதைப் பாரு! நாளைக்கு காலேஜ் வரட்டும். அப்போ பார்த்துக்கிறேன்'' என்று அவள் தோழி கறுவிக் கொண்டாள்.

ஷாப்பிங் மாலில் இருந்து வெளியேறிய மதுமதி சாலையில் நடக்க ஆரம்பித்தாள்.

அப்பொழுது அவளருகே ஒரு பைக் வந்து நிற்கவும் அதிர்ந்து போய் நிமிர்ந்து பார்த்தாள்.

அங்கே ஜீவாவைக் கண்டவள், ''வந்துட்டியா ஜீவா. வா போகலாம்'' என்று சொல்லி அவனது வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

'இவ எப்போ நம்மை வரச் சொன்னாள்?' என்று அவன் சிந்தித்துக் கொண்டிருக்க,

''போகலாம் ஜீவா. நேரா வீட்டுக்கு போ!'' என்று உத்தரவு வேறு போட்டாள்.

''மதி எனக்கு வேலை இருக்கு'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் தனது கைகளால் அவனது வயிற்றுப் பகுதியை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

ஜீவாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. பொதுவாக மதுமதி அவனை அதிகமாக தொட்டுப் பேச மாட்டாள். இயல்பாக அருகில் அமர்வாள். சிறு சிறு தொடுகைகள்... கையை பிடிச்சு இழுப்பது, அடிப்பது என்று இருப்பாள்.

ஆனால் வயிற்றை பிடிப்பது... அதுவும் பொது இடத்தில் அவனால் நம்ப முடியவில்லை.

அவன் அதிர்ந்து போய் குனிந்து பார்க்க அவள் கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

''மதி, உடம்பு சரி இல்லையா? டாக்டர்கிட்டே போவோமா? பைக்கிலே வந்துடுவியா? ஆட்டோ பிடிக்கட்டுமா?'' என்று தவிப்புடன் அவன் கேள்விகளை அடுக்க,

''ஜீவா வீட்டுக்கு போ!'' என்று அவள் திரும்பவும் அதையே சொல்ல, அவன் ஒன்றும் சொல்லாது வண்டியை செலுத்தினான்.

அவன் ஓரிரு கேள்விகள் கேட்க, அவள் அமைதியாய் வரவும் அவனும் கேள்வி கேட்பதை விடுத்து பாதையில் கவனம் செலுத்தினான்.

வீட்டில் இறக்கிவிட்டவன் அவள் பின்னோடு வந்து, ''மதி, காய்ச்சல் அடிக்குதா?'' என்று அக்கறையுடன் மீண்டுமொரு முறை கேட்டான்.

''இல்லையே ஜீவா. ஏன் கேட்கிறே?'' என்று அவனையே அவள் திருப்பிக் கேட்க அவன் அமைதியானான்.

பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்த அருண், ''வாங்க அத்தான்'' என்று ஜீவாவை வரவேற்றான்.

''என்ன அத்தான், அவ வண்டி ரிப்பேர் என்றதும் உங்களுக்கு இன்னைக்கு டிரைவர் வேலை குடுத்துட்டாளா?'' என்று கேட்டவன் மதுமதியின் புறம் திரும்பி,

''அக்கா, உனக்காகத் தான் காத்து இருந்தேன். நான் வெளியே போகணும். அம்மாவும் அப்பாவும் கோவிலுக்கு போயிருக்காங்க'' என்று சொல்லியவன் அவளது பதிலுக்காக கூட காத்திருக்காமல் வெளியேறினான்.

அருண் வெளியேறியதும் ஜீவா தொலைக்காட்சியை இயக்கினான். சோபாவில் சாய்ந்து கொண்டு கால்களை நீட்டியவாறு தரையில் அமர்ந்தான்.

தனது அறைக்குள் சென்று தனது கைப்பையை வைத்து விட்டு திரும்பிய மதுமதி ஜீவாவின் அருகே அமர்ந்தாள்.

ஜீவா அவளைத் திரும்பிப் பார்க்க,

''அத்தான், நான் உங்க மடியிலே தலை வைச்சு படுத்துக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

அவளின் செய்கைகள் அனைத்தும் அவனுக்கு புதிதாய் இருக்க அவன் வியப்போடு பதில் சொல்ல வேண்டும் என்ற நினைப்பு கூட இல்லாமல் அவளையே இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

''அத்தான் ப்ளீஸ்!'' என்று அவள் மீண்டும் கேட்கவும்,

''படுத்துக்கோ மதி'' என்றதும் அவனது மடியில் தலை வைத்துப் படுத்தவள் கண் மூடிக் கொண்டாள்.

'என்ன ஆச்சு இவளுக்கு? உடம்பு சரி இல்லையான்னு கேட்டால் இல்லைன்னு சொல்லுறாள். ஆனா ஒரு தினுசா நடந்துக்கிறாள். என்னவா இருக்கும்?' என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தான்.

கண்களை மூடிக் கொண்டவள் அமைதியாக இருக்க...

''என்ன விஷயம் மதி?'' என்று ஜீவா மீண்டும் வற்புறுத்த,

''பிரண்டோட சண்டை'' என்று மட்டும் சொன்னாள்.

'பிரண்டோட சண்டை போட்டால் அந்தக் கோபத்தை வீட்டிலே உள்ளவங்க மேலே இறக்கி வைச்சு தானே மேடத்துக்கு பழக்கம். இன்னைக்கு என்ன அமைதியா இருக்காள்.

ஒரு வேளை இன்னைக்கு பிரண்டுகிட்ட கத்திட்டு வந்திட்டாளோ! அதனால இங்கே அமைதியா இருக்காளோ?! இது தான் புயலுக்கு பின் வரும் அமைதியா?

கதவு திறந்திருக்கிறது. கோவிலுக்கு போன அத்தையும் மாமாவும் எப்பொழுது வேண்டுமானாலும் திரும்பி வரலாம். அவங்க எங்களை இப்படிப் பார்த்தால் என்ன நினைப்பாங்க? முக்கியமா என்னைப் பத்தி என்ன நினைச்சுக்குவாங்க? உன்னை நம்பி என் பொண்ணை

வீட்டிலே விட்டுட்டு போக முடியாதா ஜீவான்னு கேட் பாங்களோ? சே! சே! அப்படிக் கேட்க மாட்டாங்க.

நான் என்ன அவளைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டா நிக்கு றேன். என் மடியிலே படுத்திருக்காள். அவ்வளவுதானே!' என்று தனக்குள் சமாதானம் செய்து கொண்டான்.

அப்பொழுது அவனது பேண்டில் வைத்திருந்த கைப்பேசி சிணுங்க மதுமதி எழுந்து அமர்ந்தாள். ஜீவா கைப்பேசியை இயக்கிக் கொண்டே வெளியே சென்று நின்று பேச ஆரம்பித்தான்.

மதுமதி தொலைக்காட்சியை இயக்கி பார்க்க ஆரம் பித்தாள். கீதாவும் ராஜனும் கோவிலில் இருந்து திரும்பி வந்தனர்.

''மது, வந்துட்டியா? காபி போட்டுக் குடிச்சியா? அருண் எங்கே?'' என்று கேள்விகளை அடுக்கிய கீதா,

அவள் பதில் கூறும் முன், ''அந்த ரிமோட்டை தா. நான் சீரியல் பார்க்கணும். டைம் ஆச்சு'' என்று சொன் னவர் மகளிடம் இருந்து ரிமோட்டை பறித்து சேனலை மாற்றினார்.

''அப்பாடா! இன்னும் சீரியல் ஆரம்பிக்கலை'' என்று ஆசுவாசப்பட்டார்.

''எம்மா கோவிலுக்கு போய் சாமி கும்பிட்டீங்களா? இல்லை சீரியல் பத்தியே நினைச்சுக்கிட்டு இருந்தீங் களா?'' என்று மதுமதி நக்கலாகக் கேட்க,

''அதெல்லாம் சிரத்தையா சாமி கும்பிட்டேன்'' என்று பதில் அளித்தார்.

''எதுக்கும்மா இப்படி சீரியல் பைத்தியம் பிடிச்சு போய் இருக்கீங்க?''



''எல்லாம் ஒரு மனிதாபிமானம் தான்'' என்று அலட்டிக் காமல் கீதா கூற,

''வாட்??!! மனிதாபிமானமா?'' என்று மதுமதி விழிக்க,

''இப்போ ஒரு சீரியல் எடுக்க ஏகப்பட்ட பேர் வேலை செய்வாங்க இல்ல. என்னை மாதிரி ஆளுங்க அந்த சீரியலை பார்க்கிறதாலே தானே டி.வி நடத்துறவங் களுக்கும் லாபம். சீரியல் எடுக்கிறவங்களுக்கும் வருமானம்.

அப்படின்னா என்னைப் போல உள்ள பொம்பளைங் களால பல பேர் வீட்டிலே அடுப்பு எரியுதுன்னு தானே அர்த்தம். அதான் சொன்னேன் எல்லாம் ஒரு மனிதாபி மானம் தான் என்று.

சரி இதுக்கு மேல் என்னை எந்தக் கேள்வியும் கேட் காதே. சீரியல் ஆரம்பிக்கப் போகுது'' என்றவர் அந்தத் தொடரில் ஆழ்ந்தார்.

தாயின் விளக்கத்தை கேட்ட மதுமதி ஊஃப் என்று காற்றை ஊதி பெருமூச்சு விட, ராஜன் சிரித்துக் கொண்டே படுக்கை அறைக்குள் நுழைந்தார்.

அந்தத் தொடரில் ஒரு பெண்மணி தன் மகளிடம், ''நீ ஒரு பொண்ணு. அதனால அடங்கி நடந்துக்கணும். பசங்களை மாதிரி நடந்துக்க முயற்சிக்கக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அதைப் பார்த்த மதுமதிக்கு கோபம் பற்றிக் கொண்டு வந்தது. எழுந்து சென்று தொலைக்காட்சியை அணைத் தாள்.

''இப்போ எதுக்குடி டி.வியை ஆஃப் பண்ணினே?'' என்று கீதா கத்த,

''ஆமா... இது ஒரு சீரியல். நல்லாவே இல்லை'' என்று முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு மதுமதி கூறினாள்.

''உனக்கு பிடிக்கலைன்னால் நீ உள்ளே போ. இப்போ நீ டி.வியை ஆன் பண்ணப் போறியா இல்லையா?''

''முடியாது. நான் ஆன் பண்ண மாட்டேன். நீங்க ஒண்ணும் இதைப் பார்க்க வேண்டாம்.''

''நான் பார்த்தா உனக்கு எங்கே வலிக்குது?''

''சும்மாவே நீ அப்படி இருக்கக் கூடாது. இப்படி இருக்கக் கூடாதுன்னு சொல்லுவீங்க. இது மாதிரி சீரியலை பார்த்தா இன்னும் மோசமா ரூல்ஸ் போடு வீங்க. அதனால நீங்க ஒண்ணும் இதைப் பார்க்க வேண்டாம்.''

''நான் என்னடி ரூல்ஸ் போட்டேன்?''

''ஒண்ணா ரெண்டா? ஈவினிங் ஷோ சினிமாக்கு போகக் கூடாது. காலேஜ் டூருக்கு போகக் கூடாது. பிரண்ட்ஸ் வீட்டுக்கு அடிக்கடி போகக் கூடாது'' என்று மதுமதி அடுக்கிக் கொண்டே போக,

''இதை எல்லாம் நான் சீரியல் பார்த்துக் கத்துக்கிட் டேன் என்று சொல்லுறியா?'' என்று கீதா கோபமாகக் கேட்டார்.

அவர்கள் இருவரது சண்டைச் சத்தத்தினால் வெளியே இருந்து ஜீவாவும், படுக்கை அறையில் இருந்து ராஜனும் குழப்பத்துடன் வரவேற்பறைக்கு வந்து

''உன் நல்லதுக்குன்னு நான் பார்த்து பார்த்து ஒவ்வொரு காரியமும் செய்யுறேன். அது உனக்கு ரூல்ஸ் மாதிரி தெரியுதா?'' என்று கேட்டுக் கொண்டே கீதா தொலைக்காட்சியை இயக்கினார்.

அப்பொழுது தொலைக்காட்சியில் மகளாக நடித்துக் கொண்டிருந்த அந்தப் பெண், ''பேசாமல் என்னை யாருக் காச்சும் தத்துக் கொடுத்திடும்மா'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

மதுமதி தன் அருகில் இருந்த ரிமோட் மூலம் தொலைக் காட்சியை அணைத்தாள்.

கோபமாக திரும்பிய கீதாவிடம் என்ன சொல்கிறோம் என்பதை உணராமல், ''நானும் இதையே தான் சொல்லு றேன். எனக்கு ஒரு ரூல்ஸ். அருணுக்கு ஒரு ரூல்ஸ் என்று போடுறதுக்கு பதிலா என்னை யாருக்காவது தத்துக் கொடுத்திடுங்க'' என்றாள்.

கீதா ஸ்தம்பித்துப் போனார்! ராஜன் செய்வதறியாது நின்றுவிட்டார்!! ஜீவா ஐயோ என வாய் பொத்தி நின்றான்.

''என்னடி சொன்னே... தத்து கொடுக்கணுமா? எதுக் குடி நான் உன்னை தத்து கொடுக்கணும்? யாருக்கோ தத்து கொடுக்கவா உன்னை தத்து எடுத்து வளர்க் கிறேன்.

உன்னைப் பெத்தவ வந்து கேட்டப்பவே உன்னைத் தர முடியாதுன்னு சொன்னவடி நான். என்னைப் பார்த்தா இந்த வார்த்தை சொன்னே!'' என்று கீதா ஆக்ரோஷத் துடன் இரைய,

மதுமதியின் தலையில் இடி விழுந்தது. நிலை தடுமாறி அருகில் இருந்த சோபாவைப் பற்றிக் கொண்டாள்.

'என்ன சொல்லுறாங்க?!' என்று அவள் பேந்த பேந்த விழிக்க...

ஜீவாவும், ராஜனும் கீதாவை பேச விடாமல் அடக்க முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

''என்ன அத்தை இது?'' என்று ஜீவா கீதாவை கடிந்து கொள்ள,

''என்ன வார்த்தை சொல்லிட்டா ஜீவா? என்னைக்காச்சும் நான் பெத்த பிள்ளைக்கும், இவளுக்கும் வித்தியாசம் பார்த்து இருப்பேனா?

அருண் ஆம்பிளை பிள்ளைன்னு சில கட்டுப்பாடு அவனுக்கு விதிக்கலை. நான் ஒத்துக்கிறேன். இவ பொம்பளை பிள்ளைன்னு கொஞ்சம் அதிக கட்டுப்பாடு விதிச்சேன்.

அதுக்காக அவ சாப்பிடுற சாப்பாட்டிலே, உடுத்துற துணிமணியிலே, படிக்க வைச்ச படிப்பிலே ஏதாவது வித்தியாசம் காண்பிச்சு இருக்கேனா? எதையாவது ஒரு விஷயம் சொல்லச் சொல்லு பார்ப்போம்.

அருண் பிறந்ததுமே இவளைப் பெத்த அவ அம்மா என்கிட்ட வந்து உங்களுக்கே குழந்தை பிறந்திடுச்சே.. நான் வேணா என் பொண்ணைக் கூட்டிட்டு போயிடுறேன் என்று கேட்டப்போ நான் என்ன சொன்னேன் தெரியுமா?

என்னைக்கு இருந்தாலும் இவ தான் என்னோட மூத்த பொண்ணு. அவளை உன்கிட்டே திருப்பித் தர மாட்டேன் என்று சொன்னேன்.

அப்படி அருமை பெருமையா வளர்த்தேன். இவ என்னைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிறாள் பார்த்தியா?

உன்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதிக்கலைன்னு சொன்ன போது நான் ஏதாச்சும் இவளை வற்புறுத்தி இருப்பேனா? எங்க அண்ணன், அண்ணிக்கு இவ விஷயம் முழுசா தெரிஞ்சதால இந்த சம்பந்தம் கிடைச்சா நல்லதுன்னு என் மனசுக்கு பட்டுச்சு. ஆனாலும் கல்யாணம் இவ விருப்பப்படி தான் அமையணும் என்று இது வரை இவளை ஒரு கேள்வி கேட்கலை தெரியுமா?

அவ இஷ்டப்படியே இருக்கட்டும் என்று நினைச்சு விட்டு வைச்சேன். என்னைப் பார்த்து என்ன சொல்லுறாள் பாரு...'' என்று கண்ணீர் விட்டுக் கொண்டே ஆற்றாமையுடன் புலம்பினார்.

உண்மை தெரிய வந்த மதுமதியின் நிலைமையோ அதை விட மோசமாய் இருந்தது.

'அப்படின்னா இது என் வீடு இல்லையா? இவங்க என் அம்மா, அப்பா இல்லையா? அருண் என் தம்பி இல்லையா? ஜீவா என் அத்தான் இல்லையா? அப்படின்னா இவங்க எல்லோருக்கும் ரத்த சம்பந்தம் இருக்கு. நான் மட்டுமே வெளி ஆள்.

ஜீவா அமைதியாய் இருப்பதைப் பார்த்தால் அவனுக்கும் ஏற்கனவே விஷயம் தெரியுமா? தெரிஞ்சுமா என்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதித்தான்.

கடவுளே! ஏன் எனக்கு இந்த நிலைமை?' என்று தவித்தாள்.

'கீதாவுக்கு பக்கத்திலே ஜீவா உட்கார்ந்து இருக்கான். அவன் அவளைப் பார்த்துக் கொள்வான். நாம மதுவைப்

பார்ப்போம்' என முடிவு செய்த ராஜன் மதுவின் அருகே நெருங்கி,

''மதும்மா!'' என்று அழைத்துக் கொண்டே அவளைத் தொட முயல,

மதுமதி பின்னடைந்தாள். அவரை வெறித்துப் பார்த்துக் கொண்டே பின்னால் நகர்ந்தவள் சரேலெனத் திரும்பித் தனது அறைக்குள் சென்று மறைந்தாள்.

ராஜன் முகத்தில் அறை வாங்கியது போல் உணர்ந்தார்.

'என்னைத் தொடவிடாமல் விலகிப் போகிறாள் என்றால்... நான் அவளைப் பெற்றத் தகப்பன் இல்லை என்று என்னை அந்நியனாய் நினைக்கிறாளா?! அப்படின்னா நான் அவ அப்பா இல்லையா?! அவ என் பொண்ணு இல்லையா?! அவளைப் பொறுத்த வரைக்கும் நான் யாரோவா?! அப்படின்னா இனிமே என் பொண்ணு என்னை வெறுத்திடுவாளா?!' என்று தனக்குள்ளேயே மறுகினார்.

ஜீவாவின் நிலையே தர்ம சங்கடமாய் மாறியது. யாரைச் சமாளிக்க என்று தெரியாமல் அவன் திணறினான்.

ஒரு பக்கம் வாய் ஓயாமல் புலம்பும் அத்தை, மறு புறம் ஒரே இடத்தை வெறித்துக் கொண்டு அமர்ந்திருக்கும் மாமா. இன்னொரு பக்கம் வாழ்க்கையே அஸ்தமித்ததாய் தவிக்கும் மதுமதி.

மதுமதியிடம் ஆறுதலாய் பேசுவது தான் இப்போதைக்கு முதலில் செய்ய வேண்டியது என்பதை உணர்ந்தவன்,

''அத்தை, நீங்க முதல்ல புலம்புறதை நிறுத்துங்க. அவ ஒரு வார்த்தை ஏதோ கோபத்திலே சொல்லிட்டான்னு நீங்க பாட்டுக்கு பட படன்னு பொரிஞ்சு தள்ளிட்டீங்களே! அவ நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தீங்களா?

அவ மனசு என்ன பாடுபடும். போங்க அத்தை... போய் அவளைச் சமாளிங்க.

ஏற்கனவே பிரண்டோட சண்டையாம். உம்முன்னு வந்தாள். அங்கே சண்டை போட்டுக்கிட்டு வந்து நம்மகிட்டே கோபத்தைக் காட்டுவாள் என்று நமக்கு தெரியாதா என்ன!

போங்க. நீங்க தானே அவ அம்மா. போய் ஆறுதல் சொல்லுங்க'' என்றதும் தன் கண்களைத் துடைத்துக் கொண்ட கீதா மகளது அறைக்குள் நுழைந்தார்.

ஜீவா அறை வாயிலில் நின்று கொண்டான்.

அவளது படுக்கையில் அமர்ந்த கீதா அவளது தலையைக் கோதிக் கொடுத்துக் கொண்டே,

''அம்மாவை மன்னிச்சிடுடா. ஏதோ கோபத்திலே பொரிஞ்சுட்டேன். என்னைக்கு இருந்தாலும் உனக்கு உண்மை தெரிஞ்சு தான் ஆகணும். உன்கிட்டே பக்குவமா உண்மையை சொல்லணும் என்று இருந்தோம். இப்படிப் போட்டு உடைப்பேன் என்று நானே எதிர் பார்க்கலை. சாரி டா'' என்று மகளிடம் மன்னிப்புக் கேட்டார்.

தன் தாய் தன்னிடம் மன்னிப்பு கேட்கவும் மதுமதிக்கு குற்ற உணர்வு பெருகியது.

சற்று முன் அவர் கேட்ட கேள்விகளில் உள்ள நியாயம் புரிந்தபடியால் ஏற்கனவே அவளது மனம் சங்கடத்தில் தவித்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது கீதா மன்னிப்பு கேட்கவும் அவளது சங்கடம் அதிகரித்தது.

ஆனால் அவள் இருந்த நிலையில் அவளால் வாய் திறந்து பேச முடியவில்லை. தனது பதிலுக்காக தாய் காத்திருப்பது அவளுக்கு புரிந்தது.

அதனால் தன் தலையை தலையணையில் இருந்து நகர்த்தி தாயின் மடி மீது வைத்துக் கொண்டாள்.

அந்த ஒரு செயல் ஆயிரம் வார்த்தைகளுக்கும் மேலான ஆறுதலை அந்தத் தாய்க்கு வழங்கியது.

நான் உன்னை விட்டு விலகவில்லை என்று உணர்த்தியது!

எது நடந்தாலும் நான் உன் மகளே என்ற உறுதியை அளித்தது!!

என்னைப் பெறாவிட்டாலும் நீயே என் தாய் என்பதை விளக்கியது!!!

வாய் வார்த்தையாய் அதற்கு மேல் ஆறுதல் சொல்ல அங்கே தேவை இருக்கவில்லை.

கீதா மகளது கேசத்தையும் உடலையும் மெல்ல வருடிக் கொடுத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

'இனி மதுவை அத்தை கவனித்துக் கொள்வார்கள்' என்று நினைத்த ஜீவா தன் மாமாவின் அருகில் சென்று அவரது கவனத்தை தன் பக்கம் திருப்ப முயற்சி செய்தான்.

''மாமா வயசிலே பெரியவரான நீங்களே உடைஞ்சு போனா எப்படி மாமா? அவகிட்டே உண்மையை சொல்



லணும் என்று தானே இருந்தீங்க. இன்னைக்கு அதானே நடந்திருக்கு. அவளுக்கு ஆறுதல் சொல்லி தேத்துறதை விட்டுட்டு நீங்க இப்படி வாழ்க்கையே வெறுத்துப் போன மாதிரி விட்டத்தை பார்த்துக்கிட்டு இருந்தால்... நான் என்ன செய்ய முடியும்? தைரியமா இருங்க மாமா'' என்று தேற்றினான்.

'என் மார் மேலேயும் தோள் மேலேயும் போட்டு வளர்த்த என் பொண்ணு என்னை வேத்து மனுஷனா பார்க்கிறாள். அது என்னை எவ்வளவு காயப்படுத்தும் என்று உன்னால் புரிஞ்சுக்க முடியாது ஜீவா' என்று மனசிலே நினைத்துக் கொண்டவர் அமைதியை கடைப்பிடித்தார்.

அறைக்குள்ளே... ஐந்து நிமிடங்கள் கடந்த பின்,

''உனக்கு காலேஜிலே ஏதாச்சும் பிரச்சனையாம்மா? நீ உம்முன்னு இருந்ததா ஜீவா சொன்னான். சொல்லும்மா'' என்று மகளிடம் கீதா விசாரிக்க,

''அதெல்லாம் ஒண்ணும் இல்லைம்மா. பிரண்டோட சண்டை'' என்று மெல்லிய குரலில் பதில் அளித்தாள்.

'இன்று இந்த உண்மை வெளிப்படணும் என்று தான் தோழிகளுக்கு இடையே மனஸ்தாபம் வந்தது போல!' என நினைத்து கீதா பெருமூச்சுவிட்டார்.

## 16



தனது வீட்டில் புயல் அடித்து ஓய்ந்து இருப்பது தெரியாமல் வெளியே சென்றிருந்த அருண் உற்சாகமாக வீடு திரும்பினான்.

ஜீவாவை பார்த்து, "என்ன அத்தான், மது உங்களுக்கு காபியாச்சும் போட்டுக் கொடுத்தாளா? இல்லை அதையும் நீங்களே அவளுக்கு போட்டு கொடுத்தீங் களா?" என்று கேலி பண்ணினான்.

'நேரம் காலம் புரியாமல் இவன் வேற கேலி பேசிக் கிட்டு' என நினைத்த ஜீவா அவனைக் கண் ஜாடை காட்டி அழைத்தான்.

அதைக் கவனிக்கும் நிலையில் அருண் இல்லை. அவன் தன் தந்தையை... அவரது கவலை படிந்த முகத் தையே ஆராய்ச்சிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

'அப்பா ஏன் இப்படி இருக்கார்? அம்மா கூட ஏதாவது லடாயா?' என்று தன் தாயை தேடிப் பார்க்க... மதுமதியை யும் தாயையும் கண்டவன், 'இவங்களும் ஓவர் சைலண்ட்டா இருக்காங்களே. அப்படின்னா லடாயே தான்' என்று முடிவு கட்டியவன் சத்தமாக,

"வாதி, பிரதிவாதிகளே வாங்க. நாட்டாமை வந்திட் டேன். உங்க பிரச்சனை என்னன்னு சொல்லுங்க. சட்டு புட்டுன்னு விசாரிச்சு தீர்ப்பைச் சொல்லிடுறேன். ஏன்னா எனக்கு பசிக்குது. தாய்க்குலம் அதிக நேரம் ஸ்டிரைக் பண்ணினால் என்னால தாக்கு பிடிக்க முடியாது. கமான் கமான்" என்று அவர்களை அழைத்தான்.

ஜீவா அவனை இழுத்துக் கொண்டு போய் அவனது காதில் நடந்ததை மெல்ல முணுமுணுத்தான்.

"ஓ! இவ்வளவு தானா விஷயம். லடாய் இல்லையா. அப்படின்னா பஞ்சாயத்து பண்ணத் தேவை இல்லை" என்று சொல்லிக் கொண்டே அக்காவின் அறைக்குள் நுழைந்தவன்.



"மதுக்கா எழுந்திரு. இப்ப எதுக்கு கண்ணைக் கசக் கிக்கிட்டு படுத்துக்கிடக்கே. உட்காருன்னு சொல்லுறேன் இல்ல" என்று அதட்டிக் கொண்டே அவளை எழுப்பி அமர வைத்தான்.

"ஏம்மா சமைக்காமல் இருக்க எதுடா சாக்கு கிடைக் கும் என்று காத்துக்கிட்டு இருந்தீங்களா? போங்கம்மா. போய் வேலையை பாருங்க" என்று தாயை விரட்டினான்.

"இல்லைடா அருண், மது..." என்று கீதா தயங்கி இழுக்க,

"அவளை நான் பார்த்துக்கிறேன். நீங்க போய் சாப்பிட ஏதாச்சும் செய்யுங்க!" என்று அவரை அந்த இடத்தில் இருந்து நகர்த்தினான்.

அவர் அகன்றதும், "இப்ப எதுக்கு மது அழுகிறே? இது இன்னைக்கு நடந்த விஷயமா என்ன? எப்பவோ நடந்தது. இத்தனை வருஷம் உனக்கு ஏதாவது வித்தி யாசம் தெரிஞ்சதா? நாங்க மூணு பேரும் உன்கிட்டே பாசமா தானே பழகினோம்" என்றதும்,

"இப்ப சொன்ன பாரு... நாங்க மூணு பேர். அதிலே உன்னால என்னை சேர்க்க முடியலை இல்ல..." என்று கேட்கும் போதே அழுகையில் பிதுங்கின உதடுகளை கடித்து அதன் நடுக்கத்தை தடுக்கப் பார்த்தாள்.

"லூசாக்கா நீ?! உன் மேலே வீட்டிலே உள்ள மூணு பேரும் பாசமா இருக்கோம் தானே அப்படின்னு சொல்ல வந்தேனே ஒழிய உன்னைப் பிரிச்சு பேச நினைக்கலை.

நீ கருப்பு கண்ணாடி போட்டுப் பார்த்தால் எல்லாமே கருப்பா தான் தெரியும். உண்மையை ஜீரணிக்கிறது கொஞ்சம் கஷ்டமான விஷயம் என்று தான்

ஒத்துக்கிறேன். அதுக்காக இடிஞ்சு போய் உட்கார்ந்தா எப்படி? அப்பாவையும் அம்மாவையும் பாரு. அவங்களுக்காகவாவது மனசை தேத்திக்கோ'' என்றான்.

''உனக்கு இந்த விஷயம் முன்னாடியே தெரியுமாடா?''

''தெரியும் மது.''

''எப்போ தெரிஞ்சது? யார் சொன்னது?''

''அம்மா சில வருஷங்களுக்கு முன்னாலே என்னைக் கூப்பிட்டுச் சொன்னாங்க.''

''பார்த்தியா... சின்ன பையன் உன்கிட்டே முன்னாடியே சொல்லி இருக்காங்க. ஆனா என்கிட்டே மெதுவா சொல்லுறாங்க.''

''அக்கா, இந்த விஷயத்தை உன்கிட்டே சொன்னால் ரொம்ப சந்தோஷப் படுவியா என்ன? இல்ல தானே... அப்புறம் மெதுவாச் சொன்னதால என்ன கெட்டுப் போச்சு?''

''இதை உன்கிட்டே சொன்ன போது நீ சந்தோஷப் பட்டியா அருண்? அப்ப உன்கிட்டே மட்டும் ஏன் முன்னாடியே சொன்னாங்க?'' என்று தம்பியை தன் கேள்வியால் மடக்கினாள்.

''ம்ம்ம் அவங்க பெத்த பிள்ளை மேல அவ்வளவு நம்பிக்கை'' என்று கசந்த முறுவலுடன் சொன்னவன்,

''எனக்கு விவரம் தெரிஞ்ச பிறகு சொன்னால் இதை ஒரு காரணம் காட்டி உன்னை விலக்கி வைச்சு என் கல்யாணத்துக்கு பிறகு நான் என் குடும்பம் குழந்தைன்னு போயிடுவேனாம்.

இதைச் சொன்னது வேற யாருமில்லை. நம்ம அம்மாவே தான். இப்படி ஒண்ணும் ஒண்ணும் உனக்கு பார்த்துப் பார்த்து செய்யுற அம்மா, அப்பா கிடைச்சிருக்காங்கன்னு சந்தோஷப்படுவியா... அதை விட்டுட்டு...'' என்று அலுத்துக் கொண்டவன்,

''மதுக்கா நான் உனக்கு ஒண்ணு காட்டுறேன். என்னோட வா'' என்று அவள் கையை பிடித்து இழுத்துக் கொண்டு தனது அறைக்குள் சென்றான்.

அறையில் இருந்து வெளியேறிய மகளை ராஜன் கவலை தோய்ந்த முகத்துடன் ஏறிட, அவளோ அவர் புறம் திரும்பவே இல்லை.

''இப்படி உட்கார்'' என்று அருண் அவளைக் கட்டிலில் அமர வைத்துவிட்டு தனது அலமாரியில் இருந்து ஒரு புகைப்படத்தை எடுத்து வந்து,

''டொட்ட டொய்ங்'' என்று வாயால் இசைத்துக் கொண்டே அவள் முன் நீட்டினான்.

அதில் இருந்த பெண்ணை யார் என்று தெரியாமல் மதுமதி விழித்தாள்.

''யாருடா இது?''

''இவங்க தான் மஞ்சும்மா.''

''அது யாருடா மஞ்சும்மா?''

''ஹேய்! அதை உன்கிட்டே சொல்லலையா? உன்னைப் பெத்த அம்மா இவங்க தான் மதுக்கா.''

''வாட்ட்ட்ட்? என்னை பெத்த அம்மாவா? நீ பார்த்து இருக்கியா?''

''பார்த்து இருக்கேனாவா? பேசிப் பழகி இருக்கேன்.''

ஓகே!" என்றவள் தன்னை பெற்றவளுக்கு தன்னை நெருங்க மனம் இல்லை என்பதை புரிந்து கொண்டாள். அது மனதின் ஒரு ஓரத்தில் வலியை ஏற்படுத்தியது.

மதுமதி தன் கையில் இருந்த புகைப்படத்தை ஆராய்ந்தாள்.

''பார்ப்பதற்கு சின்னப் பெண் போல இருக்கும் இவரா என் தாய்? ஏன் என்னைத் தத்துக் கொடுத்தார்? வறுமையா? என் தந்தைக்கு நல்ல வேலை இல்லையோ? ஒரு வேளை எனக்கு உடன் பிறந்தவர்கள் ஏகப்பட்ட பேர் இருக்கின்றனரோ? அதனால் வளர்க்க சக்தி இல்லாமல் என்னைத் தத்து கொடுத்து விட்டனரோ?' என எண்ணிப் பார்த்தாள்.

நிமிர்ந்து அருணிடம், ''இப்ப எங்கே இருக்காங்க?'' என்று கேட்டள்.

''யாரைக் கேட்கிறே மது?''

''உன் மஞ்சும்மாவைக் கேட்கிறேன்'' என்று அந்த உன்னை அவள் அழுத்திக் கேட்க,

அவன், ''சிங்கப்பூரில் இருக்காங்க'' என்றதும் மதுமதி திகைத்தாள்.

'வெளிநாட்டிலா? அப்படின்னா இங்க எப்படி நான் வந்தேன்?' எனக் குழம்பியவள்,

''ஒரு போட்டோ மட்டும் காட்டி இருக்கே. மீதிப் பேர் போட்டோ எங்கே?'' என்று கேட்டதும்,

''உனக்கு வேற யார் போட்டோ வேணும்?'' என்று அருண் குழம்பினான்.

'என்னைப் பெத்தவர் போட்டோ எங்கே?' என்று அவள் வாய் திறந்து கேட்க இருந்த நொடி கீதா சாப்பாட்டுத் தட்டோடு உள்ளை நுழைந்தார்.

''இந்தாங்க சாப்பிடுங்க'' என்று இருவருக்கும் ஆளுக்கு ஒரு தட்டை நீட்ட,

அருண் கீதாவிடம், ''அம்மா, அக்கா மஞ்சும்மா பத்தி கேட்கிறாள். நீங்களே சொல்லுங்க'' என்றான்.

''முதல்ல சாப்பிட்டு முடிங்க. அப்புறமா சொல்லுறேன்'' என்றதும் இருவருமே சாப்பிட ஆரம்பித்தனர்.

மதுமதி தன்னைத் தேற்றிக் கொண்டு இரவு உணவையும் உட்கொண்டு விட்டாள் என்று தெரிந்த ஜீவா தன் வீடு நோக்கிப் பயணப்பட்டான்.

ராஜன் மட்டுமே தனித்து அமர்ந்திருந்தார். அவரால் தன் மகளின் விலகலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளது மனநிலை தெரிந்ததால் இன்று அவளை அணுகிப் பேசவும் யோசனையாக இருந்தது.

மதுமதி சாப்பிட்டு முடித்து கை கழுவிவிட்டு வந்து தன் தாயை ஒரு எதிர்ப்புடன் பார்க்க... கீதா மஞ்சுளாவின் கதையை சொல்ல ஆரம்பித்தார்.

மதுமதியின் கண்களில் கண்ணீர் நிற்காமல் ஒடிக் கொண்டிருந்தது. கீதா அவ்வப்போது தன் சேலை முந்தானையால் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டே அவளைப் பெற்ற அன்னையின் சோகக் கதையை சொல்லி முடித்தார்.

''வீட்டோடு இருந்து குழந்தையை பார்த்துக்கிற வேலை செய்யப் போன உன் அம்மா அதுக்கு பின்னாலே தன்னுடைய கம்ப்யூட்டர் அறிவை வளர்த்துக்கிட்டு ஒரு அலுவலகத்திலே வேலை பார்க்க ஆரம்பிச்சுட்டாள்.

அவ தன் ஆசைப்படி தன்னோட குடும்பத்துக்கு பணம் அனுப்பி வைச்சாள். பொன்னம்மாக்கும் பண உதவி தேவைப்பட்ட போதெல்லாம் செஞ்சாள்.

இப்போ அவ அங்கே தனியா இல்லை. அவ தன்னோட அம்மாவையும் அப்பாவையும் தன் கூடவே கூட்டிட்டு போயிட்டாள்.

உங்க அம்மாவோட நிலைமையை பார்த்த பின்னாலே என்னால உன்னை ஈவினிங் ஷோ படத்துக்கோ, காலேஜ் டூருக்கோ அனுப்ப முடியலை.

உங்க அம்மா மாதிரியே நீயும் அழகா இருக்கிறதாலே உனக்கு ஆபத்து வந்திடுமோன்னு பயந்து போய் உனக்கு சில கட்டுப்பாடுகளை விதிச்சேன்.

நான் உன்னை ஓவரா கட்டுப்படுத்துறேன் என்று எனக்கும் புரிஞ்சது. ஆனா என்னால என்னை மாத்திக்க முடியலை.

நான் மஞ்சுகிட்டே கூடச் சொன்னேன். மதுமதி உன்கிட்டே வளர்ந்தால் நீ உன் பொண்ணுக்கு கட்டுப்பாடு விதிச்சிடுவாய் என்று பயந்தியே... ஆனா அதையே தான் நான் இன்னைக்கு செய்யுறேன் என்று.

அதுக்கு அவ சொன்னாள்... என்கிட்டே மது வளர்ந்திருந்தால் அவளை நான் காலேஜூக்கு கூட அனுப்பி வைக்க பயப்பட்டு இருப்பேன். அப்படியே அனுப்பி வைச்சிருந்தாலும் அவ பின்னாடியே அவளுக்கு துணைக்கு போயிருப்பேன்.

ஆனா நீங்க என்ன செய்யுறீங்க. இருட்டினதுக்கு அப்புறம் அவ ஆண் துணையில்லாமல் வெளியே போகக் கூடாதுன்னு நினைக்கிறீங்க. அவ்வளவு தானே. அது எல்லா அம்மாக்களுக்கும் உள்ள பயம் தானே என்று என்னை சமாதானப்படுத்தினாள்'' என்று தன்னுடைய கட்டுப்பாடுகளுக்கு கீதா விளக்கம் அளித்ததும்,

''மதுக்கா, இதனால தான் என்னாலும், அப்பாவாலும் உனக்கு சப்போர்ட் பண்ண முடியாமல் போச்சு. எங்களால அம்மாவோட பயத்தை தப்புன்னு சொல்ல முடியலை. ஏன்னா நீ ரொம்ப அழகான பொண்ணுக்கா. சாரிக்கா'' என்று அருண் மன்னிப்பு கேட்க,

மதுமதி, ''எனக்கு புரியுதுடா!'' என்று சொல்லி அவனது கையை தட்டிக் கொடுத்தாள்.

''உன்னைப் பக்கத்திலே இருந்து பார்க்க முடியலைங்கிற ஒரு குறையை தவிர மஞ்சுவுக்கு வேற எந்தக் குறையும் இல்லை. அந்தக் குறையை போக்கணும் என்று நினைச்சு நானும் எத்தனையோ தடவை உன்கிட்டே உண்மையைச் சொல்லுறேன் எனறு சொன்னேன். ஆனா அதுக்கு அவ என்னை அனுமதிக்கவே இல்லை.

உண்மை தெரிஞ்சு நீ இன்னைக்கு வருத்தப்படுறே இல்ல... அந்த வருத்தத்தை அவள் உனக்கு கொடுக்க விரும்பலை.

அடுத்த வாரம் அவ இந்தியா வருவாள். இந்த முறையாச்சும் அவளோட குறை நீங்கணும். பெத்தவளையும் பிள்ளையையும் பிரிச்ச பாவம் என்னை விட்டுப் போகணும்'' என்ற கீதா பெருமூச்சு விட்டார்.

அன்று மதுமதி தூங்கும் வரைக்கும் அவளது அறையிலேயே, அவள் அருகிலேயே கீதா அமர்ந்திருந்தார்.

## 17



தன் பிறப்பின் ரகசியம் தெரிந்ததினால் இரவெல்லாம் நிம்மதியாகத் தூங்க முடியாமல் தவித்த மதுமதி மறுநாள் காலை சற்றுத் தாமதமாக எழுந்தாள்.

'ஏன் இன்னைக்கு யாருமே என்னை எழுப்பலை?!' என்று நினைத்துக் கொண்டே முகம் கழுவி பல் துலக்கிவிட்டு சமையலறைக்குள் வந்தாள்.

அங்கே கீதாவை காணவில்லை. வீடு முழுவதும் தேடினாள். வராண்டாவில் உட்கார்ந்து ராஜன் செய்தித் தாளை படித்துக் கொண்டிருந்தார்.

''அம்மா எங்கே?'' என்று அவரைப் பார்த்து கேட்டாள்.

அவர் செய்தித் தாளை வாசித்துக் கொண்டே அவளை நிமிர்ந்து பார்க்காமல், ''கோவிலுக்கு போயிருக்காள்'' என்றார்.

அவள் சரி என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்று மறைந்தாள்.

ராஜன் நிமிர்ந்து பார்க்காமல் பதில் சொல்லியது அவளுக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை. செய்தித் தாள் வாசித்துக் கொண்டே பதில் சொல்லியதாக எண்ணினாள். அதனால் அவரது விலகலை அவள் கவனிக்கவில்லை.

ஆனால் மகள் தன்னை அப்பா என்று விளிக்கவில்லை என்று ராஜன் கவனமாகக் கணக்கெடுத்து மனம் வருந்தினார்.

செய்தித் தாளை மடித்து வைத்தவர் உள்ளே வந்து, ''காபி வேணுமா? போடட்டுமா?'' என்று கேட்டார்.

''வேண்டாம்'' என்று மறுத்தவள், ''இந்த அருண் சீக்கிரமா காலேஜ் போயிட்டானா? இவனையும் காணலை'' என்று சொல்லிக் கொண்டே தனது அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

ராஜன் மனதிற்குள், 'என் பொண்டாட்டியை இவளுக்கு அம்மாவா ஏத்துக்க முடியுது. என் புள்ளையை தன் தம்பியா நினைச்சு உரிமை கொண்டாட முடியுது. ஆனால் என்னை மட்டும் ஏத்துக்க முடியலை இல்ல?' என்று நினைத்த போது அவரது மனம் வலித்தது.

மதுமதியின் மனதில் தான் மட்டும் அந்நியப்பட்டு நிற்பது போல் உணர்ந்தார்.

குளித்து முடித்து வெளியே வந்தவள், ''இன்னைக்கு ஏன் என்னை யாருமே எழுப்பி விடலை. காலேஜுக்கு டைம் ஆச்சு'' என்று புலம்பிக் கொண்டே டைனிங் டேபிளில் உள்ள உணவுப் பாத்திரத்தை திறந்து பார்த்தாள்.

''நான் உன்னை எழுப்பினேன்'' என்று மெதுவான குரலில் ராஜன் முணுமுணுக்க,

''எழுப்பினீங்களா? எனக்கு கேட்கவே இல்லையே? கொஞ்சம் தண்ணியைத் தெளிச்சிருக்க வேண்டியது தானே?'' என்று கேட்டாள்.

''உன் ரூம் வாசலில் நின்னுக்கிட்டு எழுப்பிவிட்டேன்'' என்று அவர் மெதுவான குரலில் சொல்ல,

''என்னது ரூம் வாசலிலா? அப்படி எழுப்பினா எனக்கு எப்படிப்பா கேட்கும்? பக்கத்திலே வந்து எழுப்பி இருக்க வேண்டாமா? என்னைப் பத்தி தெரிஞ்சும் இப்படி செஞ்சால் எப்படிப்பா?'' என்று அவள் கேட்கவும்,

ராஜன் படக்கென்று நிமிர்ந்தார்.

''இப்ப நீ என்ன சொன்ன?'' அவர் ஆனந்த அதிர்ச்சியுடன் கேட்க,

அவள் பேந்த பேந்த விழித்தாள்.

'நாம அப்படி என்ன சொன்னோம்?!' என்று அவள் விழித்துக் கொண்டே சற்று முன் கேட்ட கேள்வியையே சற்று மாற்றி,

"நான் தான் சரியான கும்பகர்ணின்னு உங்களுக்கு தெரியாதா? அப்படின்னு கேட்டேன்" என்றதும்,

"இல்லை... என்னை என்னவென்று கூப்பிட்டே?" என்று ராஜன் கேட்டதும்,

அவள் முன்னிலும் அதிகமாக விழித்துக் கொண்டு, "என்னப்பா குழப்புறீங்க? என்ன சொல்ல வரீங்க?" என்றதும்,

"அப்பா... அப்பா தானே?! நான் உன் அப்பா தானே?!" என்று கேட்டவரின் கண்களில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது.

அப்பொழுது தான் மதுமதிக்கு அவரது மனநிலை புரிந்தது.

"என்னப்பா? எதை எதையோ சொல்லுறீங்க? என்னாச்சுப்பா?" என்று அவள் பதற,

"என்னை அப்பாவா நீ நினைக்கிறே தானே? வெளி ஆளா நினைக்கலை தானே?" என்று அவர் மீண்டும் வலியுறுத்திக் கேட்க,

"வெளி ஆளாவா? என்னாச்சுப்பா? வாங்க. இப்படி வந்து உட்காருங்க" என்று அவரைக் கை பிடித்து அழைத்துக் கொண்டு போய் சோபாவில் அமர வைத்தாள்.

அவர் அருகில் தானும் அமர்ந்து கொண்டு பேச ஆரம்பித்தாள்.

"உங்களுக்கு எதுக்குப்பா திடீர்ன்னு இப்படி ஒரு சந்தேகம்?" என்று கேட்டு முதலில் அவரின் மனதில் உள்ளதை அறிய முயன்றாள்.

"நீ தான் நேத்து என்னைத் தொட விடாமல் விலகிப் போனே!" என்று அவர் வருத்தத்துடன் கூறவும்,

"அப்பா, நான் நேத்து பயங்கர ஷாக்கிலே இருந்தேன். நான் என்ன செஞ்சேன் என்று எனக்கே தெரியாது. அப்படி இருக்கும் போது இதுக்கு நான் என்ன விளக்கம் சொல்ல முடியும்?

ஒரு குழந்தைக்கு வயித்துக்குள்ள இருக்கும் போதே அந்தக் குழந்தைக்கும் தாய்க்கும் பந்தம் தொடங்கிடும்.

ஆனா வெளியே வந்த பின்னாலே தான் தகப்பனுக்கும் பிள்ளைக்குமான உறவு தொடங்கும். அப்படிப் பார்த்தால் நான் பிறந்ததில் இருந்தே உங்களுக்கும் எனக்குமான சொந்தம் தொடங்கிடுச்சு தானே?

நான் உருவாக காரணமான அந்த அயோக்கியனையா நான் அப்பான்னு கூப்பிடுவேன் என்று எதிர்பார்த்தீங்க" என்று விளக்கமளித்தாள்.

"அப்ப நான் தானடா உன் அப்பா?" என்று அவள் கைகளை பிடித்துக் கொண்டே கேட்டார்.

அவரது கைகளின் நடுக்கத்தை உணர்ந்தவள் தனது கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டே,

"என்னைக்குமே நீங்க தான் என் அப்பா. அதிலே எந்த மாற்றமும் கிடையாது. வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க" என்றாள்.

"நீ ஏன் மது காலையிலே இருந்து என்னை ஒரு தடவை கூட அப்பான்னு கூப்பிடவே இல்லை" என்று அவர் சொல்லவும்,

"அப்பா, வேண்டாம். நான் அழுதிடுவேன். ஒவ்வொரு வாக்கியத்துக்கும் நாம அப்பான்னு சொல்லிக்கிட்டேவா இருப்போம். சாதாரணமா நடந்ததை எல்லாம் நீங்க ஆராய்ச்சி பண்ணினால் நான் என்ன பண்ணுறது சொல்லுங்க" என்றாள்.

"நான் காபி போட்டுத் தரேன் என்று சொன்னேன். அதையும் வேண்டாம் என்று சொல்லிட்டே" என்று அவர் மீண்டும் ஒரு சான்று காட்ட முயல,

மதுமதியோ வாய் விட்டு நகைத்தாள்.

"அது நீங்க போடுற காபியோட லட்சணம் அப்படிப்பா. அம்மா போடும காபியை குடிச்சு வளர்ந்தவளுக்கு உங்க காபி பிடிக்குமா? நீங்களே சொல்லுங்க... உங்களுக்கு காபிப் பொடிக்கும், டீத் தூளுக்கும் வித்தியாசமாச்சும் தெரியுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்கவும்,

ராஜன் அசடு வழிந்தார்.

தகப்பனும், மகளும் சிரித்துக் கொண்டே அரட்டை அடிப்பதைப் பார்த்தவாறே கீதா வீட்டிற்குள் நுழைந்தார்.

அவரது முகத்தில் திருப்தி பரவியது. வாய் விட்டுச் சொல்லவில்லை என்றாலும் கணவனின் முகத்தில் முதல் நாளில் இருந்து தெரிந்த கலக்கத்தை அவர் பார்த்துக் கொண்டு தானே இருந்தார்.

"அப்பா, நீங்க இன்னைக்கு என்னை எழுப்பிவிடலை. அது ஒரு தப்பு. ரெண்டாவது இவ்வளவு நேரம் அரட்டை அடிச்சு என் டயத்தை வேஸ்ட் பண்ண வைச்சிட்டீங்க. இந்த ரெண்டு தப்புக்கும் தண்டனையா என் பாக்கெட் மணியை இன்னைக்கு ஏத்திக் கொடுக்கணும்" என்றாள்.

அவர் சரி என்று தலையாட்டவும், கீதா இடைபுகுந்தார்.

"எதுக்கு உனக்கு பணம் கொடுக்கணும்? உன்னைக் கொண்டு வந்து காலேஜில விடச் சொல்லு. அதிலே ஒரு நியாயம் இருக்கு. அதை விட்டுட்டு பணம் எதுக்கு கேட்கிறே?" என்று கேட்டுக் கொண்டே விபூதியை அவள் நெற்றியில் இட்டுவிட்டார்.



"நாட்டாமை வந்துட்டாங்கப்பா. இப்ப எதுக்கு எங்க பேச்சிலே குறுக்க வந்து நியாயம் சொல்லுறீங்க? உங்களை யாராச்சும் கூப்பிட்டமா?" என்று கேட்டவள் தன் தாயின் காதில்,

"அப்பா வண்டியிலே போனால் நான் நாளைக்கு தான் காலேஜ் போய் சேருவேன்" என்றாள்.

"ஏன் இதை சத்தமா சொல்ல வேண்டியது தானே? பாக்கெட் மணி போயிடுமேங்கிற பயமா?" என்று கீதா கேட்க,

"கரெக்ட்" என்றாள்.

கீதா அவ்விடம் விட்டு நகர்ந்ததும், "ஏய் வாலு! இங்க வா. நான் வண்டி ஓட்டுறதை தானே நீ அம்மாகிட்டே கிண்டல் பண்ணினே? நாம ரெண்டு பேரும் ஒரே ரத்தம் அப்படின்னு சொல்லிட்டு இன்னைக்கு நீயும் அம்மா கூட சேர்ந்திட்டே பார்த்தியா?" என்று அவர் மனத்தாங்கலுடன் கேட்க,

விரக்தியாய் முறுவலித்துக் கொண்டே, "நான் இப்படி ஒரே ரத்தம் என்று சொல்லும் போது மனசுக்குள்ளே சிரிச்சு இருக்கீங்களாப்பா?" என்று கேட்டாள்.

"நான் ஏன் சிரிக்கணும்? நீயும் நானும் ஒரே ரத்தம் தான். ரெண்டு பேருமே பி பாசிட்டிவ்" என்று அவர் மொழியவும்,

'நல்லா ஜோக் பண்ணுறீங்கப்பா" என்று கேலி செய்தாள்.

"பேச்சை மாத்தாதே! என்னை கிண்டல் தானே பண்ணினே?" என்று அவர் அதிலேயே நிற்க,

மதுமதி தன் குரலைத் தழைத்துக் கொண்டு, "அப்பா, காதைக் கொடுங்க. நீங்க வண்டி ஓட்டினீங்க என்றால் நடந்து போறவன் ஓவர் டேக் பண்ண மாட்டான். ஊர்ந்து போற நத்தை கூட ஓவர் டேக் பண்ணிடும். அதான் உண்மை. ஆனால் நான் இதை அம்மாகிட்டே சொல்லலை தெரியுமா... என்ன இருந்தாலும் நீங்களும் நானும் ஒரே ரத்தம் இல்லையா?" என்று கேட்டுக் கண்ணடித்துச் சிரித்தாள்.

"இதுக்கு நான் கேட்காமலே இருந்திருக்கலாம்" என்று புலம்பிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தார்.

சிரித்துக் கொண்டே அவள் கல்லூரிக்கு கிளம்பினாள்.

## 18



கலாவும் கீதாவும் கோவிலில் சந்தித்து பேசிக் கொண்டார்கள்.

"கீதா, நேத்து ஜீவா வந்து விஷயம் சொன்னான். எப்பவும் நிதானமா இருப்பியே! நீ எப்படி இப்படி அவசரப்பட்டு வார்த்தையை விட்டே? ஆனா என்னைக்கிருந்தாலும் நாம அவகிட்ட விஷயத்தை சொல்லுறதா தானே இருந்தோம்" என்று கூறி கலா பெருமூச்சு விட,

"எல்லாம் நல்லதுக்குன்னு நினைச்சுக்குவோம்" என்று கீதா சொன்னதும்,

"இப்ப மது எப்படி இருக்காள்?" என்று கேட்டார்.



"சகஜமாயிட்டா அண்ணி. மனசிலே வருத்தம் இருக்கும். ம்ம்ம் என்ன பண்ணுறது?"

"கீதா, ஜீவா பத்தி என்ன சொல்லுறா என் மருமகள்?" என்று கலா பேச்சை மாற்ற,

"ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிறாள். எனக்கு அதான் கவலையா இருக்கு அண்ணி" என்றார்.

"ஆனா ஜீவா நம்பிக்கையா இருக்கானே கீதா. அப்புறம் ஏன் கவலைப்படுறே?"

"அதை நினைச்சாத் தான் அண்ணி எனக்கு கவலை அதிகமாகுது. இந்த பிள்ளை நம்பிக்கையாக் காத்துக்கிட்டு இருக்கான். ஆனா இவ ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிறாள்" என்று கீதா பெருமூச்சு விட்டார்.

"இப்படியே நாம பேசாமல் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தால் அவங்களுக்கு அறுபதாம் கல்யாணம் தான் நடக்கும்."

"அச்சோ! ஏன் அண்ணி அப்படிச் சொல்லுறீங்க?"

"பின்னே என்ன கீதா. என் பையன் மதுவைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ண மாட்டேங்கிறான். அவளோ எனக்கு அந்த மாதிரி ஆசை இல்லைன்னுட்டாள்.

உன்னை எனக்கு பிடிக்கலை ஜீவான்னு மது சொல்லி இருந்தால் கூட அவளை மறந்திடுடான்னு நானே ஜீவாகிட்டே சொல்லுவேன்.

அவ நடந்துக்கிறதை எல்லாம் வைச்சு நீயே சொல்லு கீதா அவளுக்கு ஜீவாவை ரொம்பப் பிடிச்சிருக்கு தானே?!" என்று கலா ஆற்றாமையுடன் கேட்க,

''கண்டிப்பா அண்ணி. ஜீவாவை நீங்க குறை சொன்னாலே சண்டைக்கு வருவாளே! அது நமக்கு தெரியாதா என்ன? ஆனா கட்டிக்க மட்டும் கசக்குது. என்ன செய்யுறது?'' என்று கீதா புலம்பினார்.

''நாம தான் கீதா ஏதாவது செய்யணும்.''

''என்ன செய்யலாம்? சொல்லுங்க அண்ணி. செஞ்சிடலாம்.''

''இந்த வாரம் என் அண்ணன் பொண்ணு கல்யாணம் வருது இல்ல... அதுக்கு நீ மதுவைக் கூட்டிட்டு வா.''

''மதுவையா? அன்னைக்கு காலேஜ் இருக்கே! வருவாளான்னு தெரியலையே. அத்தையோட அண்ணன் வீடு தானேம்மா நீயும் அப்பாவும் போயிட்டு வாங்கன்னு சொல்லிட்டான்னா...'' என்று சந்தேகமாய் கீதா இழுத்தார்.

''அதெல்லாம் எனக்கு தெரியாது. அவளை அங்கே கூட்டிட்டு வர வேண்டியது உன் பொறுப்பு. அங்க வைச்சு என் உறவுக்காரங்களில் உள்ள முறைப் பொண்ணு யாரை யாவது ஜீவா கூட பேச வைச்சு... அவளை ஜீவாக்கு கல்யாணம் பண்ணி வைக்கலாம் என்று பார்க்கிறேன் என்று மதுகிட்டே நான் சொன்னால் போதும். அவ உடனே பொறாமையில் வெந்து அவனை விட்டுக் கொடுக்க முடியாமல் அவனைக் கல்யாணம் பண்ண சம்மதிச்சிடுவாள்.''

''உங்க ஐடியா நல்லா இருக்கு... பார்ப்போம்'' என்று சொல்லி இருவரும் விடைபெற்றனர்.

பெரியவர்கள் இருவரும் அவர்கள் காலத்து யோசனையாய் ஒன்றை யோசித்து வைத்தனர். அவர்களின் திட்டம் சிறியவளிடம் பலிக்குமா?



வீட்டுக்கு வந்த கீதா தன் மகளிடம் அந்தத் திருமணத்துக்கு வருவது குறித்து பேசினார்.

''மது, நீ அத்தையோட அண்ணன் வீட்டுக் கல்யாணத்துக்கு வருகிறாயா? நானும் அப்பாவும் போறோம்.''

''கல்யாணம் என்னைக்கும்மா?''

''இன்னும் மூணு நாளில் கல்யாணம். அன்னைக்கு உனக்கு காலேஜ் இருக்கு. லீவ் போடுவியா?''

''லீவ் போடணுமா? அருண் வரானா?''

''அவனுக்கு அன்னைக்கு காலேஜே லீவ். அதனால வருவான்னு நினைக்கிறேன். நான் இன்னமும் அவன் கிட்டே கேட்கலை.''

''இல்லைம்மா நான் லீவ் போட்டுட்டு வரலை. நீங்க போயிட்டு வாங்க.''

'அடடா! அண்ணி இவளைக் கூட்டிட்டு வரச் சொன்னாங்க. இவ இப்படி சொல்லுறாளே! என்ன செய்யலாம்?' என கீதா சிந்தித்துக் கொண்டு இருக்க...

அவரது மகளோ, 'அத்தை வீட்டு கல்யாணம் என்பதால் ஜீவா கண்டிப்பா லீவ் போட்டுட்டு போவான். அவன் போறது கூடப் பிரச்சனை இல்லை.

சார் நல்லா அலங்காரம் பண்ணிட்டுப் போவார். அவன் சொந்தக்காரப் பொண்ணுங்க எல்லாம் அவன் மேலே வந்து ஒட்டிக்கப் பார்ப்பாங்க. ஆகா மது! அப்படி நடக்கக் கூடாதே! என்ன செய்யலாம்? பேசாமல் நாமளும் லீவ் போட்டுட்டு போகலாம்' என்று தீர்மானித்தாள்.

''அருணும் வருவான் என்றால் நானும் லீவ் போட்டுட்டு வரேன்ம்மா'' என்று சொல்லிவிட்டு அகன்றாள்.

கீதா தன் மகளைச் சம்மதிக்க வைக்க போராட வேண்டி இருக்கும் என நினைத்தார். ஆனால் அவருக்கு தெரியவில்லை ஜீவா இருக்கும் இடத்தில் மதுமதி இருக்க நினைப்பாள் என்று.

மகள் சம்மதம் தெரிவித்ததும் கீதா சந்தோஷமானார். உடனே இந்த நல்ல செய்தியை தனது அண்ணிக்கு தெரிவித்தார்.

கல்யாண நாள் அன்று கீதாவின் வற்புறுத்தலின் பேரில் மதுமதி பட்டுப் புடவை கட்டிக் கொண்டாள்.

தலை நிறையப் பூவும், மிதமான அலங்காரமும் அவளை அழகூட்டின. அவர்கள் நால்வரும் திருமண மண்டபத்திற்கு சென்று இறங்கினார்கள்.

பட்டு வேஷ்டி சரசரக்க திருமண மண்டபத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஜீவா, அழகே உருவாய் தன் தேவதை அங்கே வரவும் அசையாது நின்று விட்டான்.

'அடடா! ஜீவா இன்னைக்கு உன் பாடு திண்டாட்டம் போலவே! இவ இப்படி இருந்தால் இவள் பக்கம் பார்க்காமல் எப்படி இருக்க முடியும்?! ஆனா அதே சமயம் அவளைப் பார்க்காமல் நாம தவிக்க விட்டால் தானே நம்ம பக்கம் சாய்வாள். கஷ்டம்டா!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

தனது அத்தையையும் மாமாவையும் வரவேற்கும் பொருட்டு அவர்கள் அருகே சென்றவன் மதுமதி பார்க்காத போது அவளின் அழகை ரசித்தான்.

"வாங்க மாமா! வாங்க அத்தை!" என்று அவர்களை வரவேற்றதும்,

"நாங்க ஒரு ஓரமா உட்கார்ந்துக்கிறோம் ஜீவா. நீ போய் கல்யாண வேலையை பாரு" என்று ராஜன் அவனை அங்கிருந்து அனுப்பி வைத்தார்.

'சே! இந்த அப்பா ஏன் அவனை விரட்டுறார்?' என்று தந்தையை திட்டிக் கொண்டே மதுமதி இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

ஜீவா பரபரப்பாக வேலை செய்து கொண்டு இருந்தான். அவனது பெற்றோர்கள் அதை விடப் பரபரப்பாக இருந்தார்கள்.

ராஜனும் கீதாவும் தெரிந்தவர்களிடம் பேச ஆரம்பித்து விட்டனர். அருண் அவன் வயது தோழன் ஒருவனுடன் அரட்டை அடிக்கக் கிளம்பிவிட்டான்.

மதுமதிக்கு பொழுதே போகவில்லை. அவளுக்கு தெரிந்த ஓரிரு பெண்களும் கல்யாணப் பரபரப்போடு மேடையில் நின்று கொண்டிருந்தார்கள்.

அவளுக்கு மேடைக்கு சென்று நிற்பதில் அவ்வளவாக விருப்பம் இல்லை. மிக நெருங்கிய சொந்தங்கள் மட்டுமே மேடையில் நிற்க வேண்டும் என்று நினைப்பவள் அவள்.

அதனால் மதுமதி மட்டும் தனித்து, தவித்து போய் அமர்ந்திருந்தாள்.

அவளது தவிப்பிற்கு இன்னொரு காரணமும் உண்டு. எதையாவது கேட்டுக் கொண்டு ஜீவாவின் சொந்தக்கார பெண்கள் அவனை வட்டமிட்டுக் கொண்டிருந்தனர். அது மதுமதிக்கு அறவே பிடிக்கவில்லை.

'எல்லோருக்கும் ஜீவாகிட்டே தான் சந்தேகம் கேட்கணும் என்று தோணுமே. இது என்ன காலேஜா?

இவங்களுக்கெல்லாம் பாடத்திலா சந்தேகம். வேற யாரையாச்சும் கேட்க வேண்டியது தானே?! இவன் வேற இன்னைக்கு ஆளை மயக்கிற மாதிரி இருந்து தொலைக்கிறானே! நான் என்ன செய்யுறது?' என்று பொருமிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

கல்யாணம் இனிதாக முடிந்தது. ஒரு மணி நேரம் கடந்திருந்த போது நெருங்கிய சொந்தங்கள் மட்டும் ஆங்காங்கே மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்.

சாப்பிட்டு முடித்தாயிற்று. பேச்சு துணைக்கும் ஆள் இல்லை. ஆனாலும் மதுமதிக்கு மண்டபத்தை விட்டுக் கிளம்ப மனமில்லை. ஜீவா இருக்கும் வரைக்கும் நாமும் இருப்போம் எனத் தீர்மானித்தாள்.

ஜீவாவும் மண்டபத்தில் போடப்பட்டிருந்த இருக்கையில் வந்து அமர்ந்தான். அவன் மது அமர்ந்திருந்த இருக்கைக்கு நான்கு வரிசைகளுக்கு முன்பு அமர்ந்திருந்தான். அதுவும் மது பார்க்கக் கூடிய வகையில் அவளுக்கு நேரே அமர்ந்தான்.

அவன் இருக்கையில் சென்று அமரவும் கலா தன் உறவுப் பெண் ஒருத்தியிடம், ''எனக்காக ஒரு உதவி செய்வியா?'' என்று கேட்டார்.

அவள், ''என்னங்க அத்தை, சொல்லுங்க. செய்யுறேன்'' என்றதும்,

''நீ போய் ஜீவா அத்தான்கிட்டே உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்கியா?'' என்றதும் அந்தப் பெண் விழித்தாள்.

அதைப் பொருட்படுத்தாமல் கலா தனது பேச்சினைத்



''முக்கியமா என் நாத்தனார் பொண்ணு மதுமதி முன்னாடி... அவளுக்கும் எங்க ஜீவாவுக்கும்...'' என்று கலா விளக்க முற்பட,

''எனக்கு புரிஞ்சுடுச்சு அத்தை. நான் பார்த்துக்கிறேன். ரெண்டு பேரும் பொருத்தமான ஜோடி'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

கலாவை அவர் அண்ணி அழைத்ததும் கலா அவர் பின்னே போய்விட்டார்.

அந்தப் பெண் ஜீவாவின் அருகே சென்று அமர்ந்து அவனது கல்லூரி வேலையை பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

ஜீவாவும் கடமையாய் அவளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

மதுமதிக்கு வயிறு எரிந்தது. அந்தப் பெண்ணையே முறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அந்தப் பெண்ணோ மதுமதியின் முக மாற்றத்தைக் கணக்கெடுக்க விரும்பி அவளது புறம் பார்வையைத் திருப்ப...

மதுமதி அவளை முறைத்துக் கொண்டே, 'எழுந்து போ. இல்லைன்னால் சங்கை அறுத்துவிடுவேன்' என்று சைகை காட்ட,

அந்தப் பெண் அந்த இடத்தை விட்டு மட்டுமல்ல, அந்த மண்டபத்தை விட்டே பறந்தாள்.

இதைக் கவனிக்காத ஜீவா குழம்பினான்.

'என்னடா இவள்... என் காலேஜை என்னமோ விலைக்கு வாங்கப் போறவள் மாதிரி இவ்வளவு நேரமும்

சந்தேகம் கேட்டுக்கிட்டு இருந்தாள். என் பதிலை முழுசாக் கேட்குறதுக்கு முன்னாலே எங்கே மாயமாய் மறைந்து போனாள்' என நினைத்துக் கொண்டான்.

சென்றவள் கலாவைப் பார்த்து நடந்ததை சொல்லி விட்டுச் சென்று இருக்கலாம்.

தன் தந்தை அழைக்கவும் கலாவிடம் விபரம் எதுவும் தெரிவிக்காமல் சென்று விட்டாள்.

கீதா கலாவிடம் சென்று, "என்ன அண்ணி பண்ணு நீங்க? பொண்ணுங்க ஜீவாகிட்டே பேசினால் மது பொங்குவாள். அப்படி இப்படின்னு சொன்னீங்க. இப்ப பார்த்தால் அதைச் சுத்தமா மறந்துட்டீங்களா?" என்று கேட்டார்.

"என் பையன் கல்யாண மேட்டரை நான் எப்ப கீதா மறப்பேன். அப்பவே ஒரு பொண்ணை ஜீவா பக்கத்திலே போய் பேசச் சொல்லி அனுப்பினேன்."

"அப்படி யாரும் வரலை அண்ணி. ஜீவா அவன் வயசு பையன்களோட உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்கான். நீங்களே பாருங்க" என்று கீதா அவன் அமர்ந்திருந்த திசையைக் காட்டி விட்டுச் சென்றார்.

கலா விழித்தார். அந்தப் பொண்ணு எங்கே என தன் உறவுப் பெண் ஒருத்தியிடம் அவளது பெயரைக் குறிப்பிட்டு விசாரிக்க,

"அவ அப்பவே அவங்க அப்பா கூட வீட்டுக்கு போயிட்டாளே சித்தி" என்றதும்,

'அப்போ வேற யாரையாவது செட் பண்ணணும் போல!' என்று கலா தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர்களது சொந்தக்காரனான ஆனந்த் கலாவின் அருகே வந்தான்.

"என்ன சித்தி பலமான சிந்தனை. ஜீவா கல்யாணத்தைப் பத்தியா?" என்று அவன் சாதாரணமாகக் கேட்க கலா மலர்ந்தார்.

"எப்படி ஆனந்த் இவ்வளவு கரெக்ட்டா சொன்னே?"

"நான் சும்மா கேட்டேன் சித்தி. பொண்ணு பார்த்திட்டீங்களா?"

"நான் எங்கே பார்க்கிறது. அவனே பார்த்துக்கிட்டான்."

"அப்படியா? லவ் பண்ணுறானா? இவ்வளவு நேரமும் பேசிக்கிட்டு இருந்தான். ஆனா சொல்லவே இல்லை. அவனை வைச்சுக்கிறேன்" என்று ஆனந்த் கறுவவும்,

"லவ்வு ஆனா லவ்வில்லை..." என்று கலா கூறவும்,

"என்ன சித்தி குழப்புறீங்க?" என்று கேட்டான்.

"பொண்ணு என் நாத்தனார் பொண்ணு மது."

"ஓ! மதுமதியா? நல்ல பொருத்தமான ஜோடி" என்று அவனும் சொன்னான்.

'கேட்கிறவங்க எல்லாம் பொருத்தமான ஜோடின்னு சொல்லுறாங்க. ஆனா புரிய வேண்டியவளுக்கு புரிய மாட்டேங்குதே!' என்று கலா மனதில் அங்கலாய்த்து கொண்டார்.

"அப்படின்னா கூடிய சீக்கிரம்... அதாவது நம்ம சொந்தக்காரங்களில் அடுத்த கல்யாணம் நம்ம ஜீவாவோடதுன்னு சொல்லுங்க!" என்றதும் தான் கலாவிற்கு

தேவையில்லாமல் ஆனந்திடம் ஏதேதோ சொல்லி விட்டோமோ என்று இருந்தது.

மதுமதி திருமணத்திற்கு சம்மதிக்காத நிலையில் எதற்காக இவனிடம் இதனைச் சொன்னோம் என்று வருந்தினார்.

அதனால் அவனிடம், ''ஜீவா அவளை விரும்புறான். ஆனா அவ மனசிலே என்ன இருக்குன்னு எனக்கு தெரியலை. அவளுக்கு ஜீவாவை பிடிக்கும். ஆனா கல்யாணம் பண்ணச் சம்மதிப்பாளான்னு தெரியலை. அவ படிப்பு முடிஞ்ச பின்னாலே தான் அவகிட்டே இது பத்தி கேட்கணும் என்று ஜீவா சொல்லிட்டான்'' என்று பொய்யுரைத்தார்.

தனது வீட்டுப் பெண்ணைப் பற்றி பிறரிடம் குறை யாகச் சொல்ல கலாவிற்கு பிடிக்கவில்லை.

அதுவுமில்லாமல் உண்மையை சொன்னால் உன்னை மது வேண்டாம் என்று சொல்லிட்டாளாமே என்று ஜீவாவை துக்கம் விசாரிப்பார்கள்.

அதே மாதிரி ஜீவாகிட்டே என்ன குறை கண்டாள். அவனையே வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். இவளுக்கு என்ன ராஜகுமாரனா மாப்பிள்ளையா வருவான் என்று மதுவையும் கேலி செய்வார்கள்.

தன் பையனாவது பரவாயில்லை. ஆனால் மதுமதி... இன்னொரு வீட்டில் வாழப் போகும் பெண். அவளை யாரும் குறை கூறக் கூடாது என்று கலா நினைத்தார்.

ஆனந்தும் கலாவும் பேசிக் கொண்டே இருக்கையில் சென்று அமர்ந்தார்கள்.

சரியாக ஜீவா அந்த சமயம் எழுந்து செல்ல ஆரம் பித்தான். நான்கடி நடப்பதற்குள் யாரோ ஒரு பெண் ஜீவாவிடம் பேச ஆரம்பித்தாள்.

ஜீவாவும் சிரித்தபடியே பதில் சொல்லிக் கொண்டிருந் தான்.

அவள் ஜீவாவின் கல்லூரியில் படிப்பவள், அவள் மாப்பிள்ளை வீட்டு சார்பாக திருமணத்திற்கு வந்திருந் தாள்.

மண்டபத்தில் ஜீவாவை காணவும்... ஜீவா மாப் பிள்ளை சார்பாக திருமணத்திற்கு வந்தானா அல்லது பெண்ணின் சார்பாகவா என்று தெரிந்து கொள்ள விரும்பியே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு நிமிடத்திற்கு மேல் மதுவிற்கு தாளவில்லை. தன் இடத்தில் இருந்து எழுந்து ஜீவாவின் அருகில் சென்று நின்று கொண்டாள்.

அவள் அருகே வந்ததும் ஜீவா அவளிடம், ''என்ன மதி ஏதாச்சும் வேணுமா?'' என்று கேட்டான்.

''இல்லை ஜீவா. நான் சும்மா தான் வந்தேன்'' என்ற வளுக்கு அந்த இடத்தை விட்டு நகரும் உத்தேசம் இல்லை.

ஜீவா மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

ஜீவா அந்தப் பெண்ணுடன் பேசிக் கொண்டே திரு மண மண்டப வாசலுக்கு செல்ல... ஜீவாவை மதுமதியும் பின் தொடர்ந்தாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆனந்த் கலாவிடம், ''சித்தி எனக்கு ஒரு விஷயம் தெளிவாப் புரியுது. ஆனா உங்களுக்கு எப்படிப் புரியாமல் போச்சுன்னு தான் தெரி யலை'' என்றான்.

அப்பொழுது அருணும் அவர்கள் அருகே வந்து உட்கார்ந்தான்.

"எந்த விஷயம்டா உனக்கு புரிஞ்சு எனக்கு புரியாமல் போச்சு?"

"நீங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மதுமதி மனசிலே ஜீவா இருக்கானா இல்லையான்னு தெரியலைன்னு சொன்னீங்க."

"ஆமா சொன்னேன். அதுக்கு என்ன இப்போ?"

"இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இங்கே என்ன நடந்துச்சுன்னு நீங்களும் தானே பார்த்தீங்க!"

"நீ எதைச் சொல்லுறே? மதுமதி ஜீவா பின்னாடி போனதையா?"

"ஆமாம். அதான் சித்தி."

"அதுக்கு இப்போ என்ன ஆனந்த்?"

"ஷப்பா... எனக்கு இப்ப வாய் வரைக்கும் ஒண்ணு வருது. ஆனா வயசிலே பெரியவங்களா இருக்கீங்களேன்னு பார்க்கிறேன்" என்று ஆனந்த் பல்லைக் கடிக்கவும்,

அருண் ஆனந்திடம், "மதுக்கு ஜீவா மேலே இஷ்டமோ இஷ்டம். இதைக் கூட தெரிஞ்சுக்கலைன்னா நீங்க லூசுன்னு தானே சொல்ல வரீங்க?" என்று எடுத்துக் கொடுத்தான்.

"வயசிலே சின்னவனா இருந்தாலும் நீ படக்குன்னு புரிஞ்சுக்கிட்ட டா" என்று சிலாகித்து விட்டு ஆனந்த் அந்த இடம் விட்டு மறைந்தான்.

அவன் சென்றதும் கலா அருணுக்கு மட்டும் கேட்கும் விதமாய் சின்ன குரலில், "டேய் அருண்! ஆனந்த்துக்கு விஷயம் தெரியாது. அதனால இப்படிச் சொல்லிட்டுப் போறான். ஆனா மது ஜீவாவை வேண்டாம் என்று சொன்னது உனக்கு தெரியும் தானே! அப்புறம் எப்படிடா இப்படிச் சொல்லுறே?" என்று கேட்டார்.

"அவ தானே வேண்டாம் என்று சொன்னாள். நாங்க யாரும் சொல்லலையே?!"

"ஏன்டா அவ முடிவு தானேடா முக்கியமானது."

"அப்படியா சொல்லுறீங்க அத்தை?" என்று அவன் ஒன்றும் தெரியாதவனைப் போல கேட்கவும்,

"டேய்! என்கிட்டே அடி வாங்குவே! நானும் உன் அம்மாவும் எவ்வளவு கவலையா இருக்கோம் தெரியுமா?" என்று கலா அழுதுவிடும் குரலில் சொல்ல,

"ஓ! இந்த லூசுக் கூட்டணியில் உங்க நாத்தனாரும் இருக்காங்களா?" என்று கிண்டல் அடித்தவன்,

கலா பரிதாபமாய் அவனை ஏறிடவும்...

"அத்தை முதல்ல உங்க பையனை நம்புங்க. எங்க அத்தான் சாதிச்சு காண்பிப்பார்" என்றான்.

"ஜீவா மேலே உனக்கு அவ்வளவு நம்பிக்கை இருக்காடா?"

"எனக்கு அத்தான் மேலே நம்பிக்கை இருக்கு. அதை விட அதிகமா எங்க அக்கா மேலயும் இருக்கு. அவ கண்டிப்பா அத்தானைக் கல்யாணம் பண்ணிப்பாள்" என்று சொல்லிவிட்டு அகன்றான்.

அருண் சொன்னதைக் கேட்டு கலாவிற்கு கொஞ்சம் நம்பிக்கை வந்தது.

# 19



இன்று மஞ்சுளா தன் மகள் மதுமதியை பார்க்க வருகிறார் என்று வீடே பரபரப்பாய் காட்சி அளித்தது.

அவருடன் அவரது பெற்றோர்களும் தங்கள் பேத்தியை காண வருகிறார்கள். மூவரும் அன்று இரவு விமானத்தில் சிங்கப்பூர் செல்ல இருக்கிறார்கள்.

மதுமதிக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை. தாயை காண ஆவலாக இருக்கிறதா என்பதும் புரியவில்லை. அவரைப் பார்த்ததும் என்ன பேச வேண்டும் என்பதும் தெரியவில்லை.

அவர் செய்தது சரியா என்று விளங்கவில்லை. தான் இது மாதிரி விட்டேற்றியான மனப்பான்மையில் இருப்பது சரியா என்றும் விளங்கவில்லை.

ஒரு மந்தமான மனநிலையில் இருந்தாள். மஞ்சுவை தன் தாயாக ஏற்றுக் கொண்டால் கீதாவை விளக்கி வைப்பது போல் ஆகுமா என்றும் உள்ளம் பதறியது.

தான் என்ன செய்தால் இரு தாயையும் திருப்தி படுத்த முடியும் என்று யோசித்தாள்.

தன்னால் எக்காரணம் கொண்டும் கீதாவை விட்டும், இந்தக் குடும்பத்தை விட்டும் செல்ல முடியாது என்பது தெளிவாகப் புரிந்தது.



அதே சமயம் மஞ்சுளா தன் வாழ்வில் சந்தித்த ஏமாற்றங்களைக் கேட்ட பிறகு எக்காரணத்தைக் கொண்டும் தன்னுடைய செயலால் அவரின் மனம் புண்பட்டு விடக் கூடாது என்று தனக்குள் உறுதி எடுத்துக் கொண்டாள்.

மதுமதி குளித்துத் தயாராகி தன் அறையில் அமைதியாய் உட்கார்ந்திருந்தாள்.

ராஜன் அவளது அறைக்குள் வந்து அவள் அருகே அமர்ந்தார். மகள் ஏதாவது தன்னிடம் பேசுவாள் என்று அவரும் ஓரிரு நிமிடங்கள் அமைதி காத்தார்.

அவள் ஒன்றும் பேசாது அமைதியாய் இருக்கவும், ''மது!'' என்று அழைத்தார்.

அவள் அப்பொழுதும் அவளது கனவு உலகத்தில் இருந்து மீண்டு வரவில்லை என்றதும் அவளைத் தொட்டு உலுக்கினார்.

அவர் உலுக்கவும் தன்னிலை அடைந்தவள், ''என்னப்பா? ஏதாச்சும் கேட்டீங்களா?'' என்று கேட்டாள்.

''என்னாச்சுடா? ஏன் எப்படியோ இருக்க?'' என்றதும் அவரது கைகளை இறுக்கிப் பிடித்தாள். அவளது கைகள் சில்லிட்டு இருந்தன.

''என்னடா இப்படி ஜில்லுன்னு இருக்கு. உடம்பு எதுவும் சரியா இல்லையா? டாக்டர்கிட்டே போகணுமா?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லைப்பா. எனக்கு கொஞ்சம் நெர்வஸா இருக்கு.''

''இதுல பதட்டமடையுறதுக்கு என்னம்மா இருக்கு. எதுவுமே மாறப் போறதில்லை. உனக்கு புதுசா இன்னும்

சில உறவுகள் அதிகமாகப் போகுது. அதை நினைச்சு நீ சந்தோஷப்படணுமே தவிர வருத்தமோ குழப்பமோ படக்கூடாது.''

''மஞ்சும்மா கிட்டே என்ன பேசுறதுன்னு தெரியலை. நம்ம அம்மா என்ன நினைச்சுக்குவாங்க...'' என்று தயங்கி இழுக்கவும்,

''ஓ! இதான் உன் பிரச்சனையா? நீ உன்னை பெத்த அம்மாகிட்டே பேசினால் கீதா வருத்தப்பட மாட்டாள். சந்தோஷப்படுவாள். ஆனால் அவங்க கூடவே போறேன் என்று சொன்னே... காளி அவதாரம் எடுத்திடுவாள். ஜாக்கிரதை!'' என்று சொல்லி முறுவலித்தார்.

மதுமதியும் மெலிதாக புன்னகைக்க முயல...

''சியர் அப் டா மது குட்டி!'' என்று அவளது தலையை பிடித்து ஆட்டிவிட்டு அகன்றார்.

சொன்ன நேரத்திற்கு மஞ்சுளாவும், அவள் பெற்றோர்களும் வந்து இறங்கினார்கள்.

''மது...'' என்று சொல்லிக் கொண்டு மஞ்சுளாவின் தாய் தனது வயதையும் பொருட்படுத்தாது வேகமாக ஓடி வந்தார்.

பேத்தியின் முகத்தை தன் கைகளால் வருடிக் கொடுத்தார். மதுமதி அவரைப் பார்த்து முறுவலித்து விட்டு அவரையும் தாண்டி தன்னைப் பெற்றவளையே இமைக்காமல் பார்த்தாள்.

மஞ்சுளாவும் இமைக்க மறந்து அவளையே பார்த்த வண்ணம் அவளை நோக்கி வந்தார்.



கண்கள் நான்கும் இமைக்க மறந்து ஒன்றை ஒன்று சலிக்காமல் பார்வையிட சுற்றி இருந்த அனைவரும் அவர்களை அமைதியாய் வேடிக்கை பார்த்தனர்.

அந்த அமைதியை கலைக்கும் பொருட்டு கீதா, ''மது வீட்டுக்கு வந்தவங்களை வாங்கன்னு சொல்லாமல் பார்த்துக்கிட்டே நிக்குறே. ரொம்ப நேரமா பாட்டி நீ பேச மாட்டியான்னு ஆசையா உன்னையே பார்க்கிறங்க பாரு'' என்று நினைவூட்டினார்.

''வாங்க!'' என்று அனைவரையும் பொதுவாக வரவேற்றவள்,

தன் பாட்டியின் புறம் திரும்பி, ''நல்லா இருக்கீங்களா பாட்டி?'' என்று சம்பிரதாயமாக கேட்டாள்.

''ஆகா! ஓவர் சென்ட்டிமென்ட் அன்ட் பார்மலா இருக்கே!'' என்று முணுமுணுத்த அருண் மதுமதியின் அருகில் வந்து,

''மதுக்கா நீ எப்போல இருந்த அம்மா பேச்சை தட்டாமல் உடனே கேட்க ஆரம்பிச்சே?'' என்று அக்காவை வம்பிழுத்தவன் மஞ்சுளாவின் தாயிடம் திரும்பி,

''ஏன் பாட்டி உயரமும் பருமனுமா நான் இருப்பது உங்க கண்ணுக்கு தெரியலை. போன தடவை என்னைத் தானே கொஞ்சுனீங்க. இன்னைக்கு என்னைக் கண்டுக்காமல் போறீங்க. நேத்து வந்த பேத்தி உங்களுக்கு பெருசா போயிட்டா இல்ல...'' என்று அங்கலாய்க்கவும்,

அவர் வேகமாக அவன் புறம் திரும்பி, ''ஐயோ! கோவிச்சுக்கிட்டியா ராசா?'' எனவும்,

மதுமதியின் வாய்பூட்டு அகன்றது.

''அவன் கிடக்கிறான் பாட்டி. பொறாமை பிடிச்சவன். உன்னை எதுக்குடா கொஞ்சணும்? இத்தனை நாளா உன்னை மட்டும் தானே கொஞ்சி இருக்காங்க. அதனால இன்னும் கொஞ்ச நாளைக்கு என்னை மட்டும் தான் கொஞ்சுவாங்க. நீங்க வாங்க பாட்டி'' என்று கைப்பிடித்து அவரை அழைத்துச் சென்றாள்.

அனைவரின் முகமும் மலர்ந்தது. அருணும் அவளும் சேர்ந்து பாட்டி, தாத்தா இருவரிடமும் கதை அளந்து கொண்டிருந்தார்கள்.

மதுமதி தன்னுடைய சிறு வயது புகைப்படங்களையும், தான் வாங்கிய பரிசுகளையும் காட்டி மகிழ்ந்தாள்.

ஜீவா மஞ்சுளாவின் குடும்பத்தை பார்க்க முதலில் வந்தான். அவனது பெற்றோர் சிறிது நேரம் கழித்து வருவதாகச் சொல்லிவிட்டனர்.

ஜீவா உள்ளே நுழைந்த பொழுது கீதாவும், மஞ்சுவும் வரவேற்பறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

ராஜன் வெளியே சென்றிருந்தார். மீதி நான்கு பேரும் மதுமதியின் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''வா ஜீவா'' என்று கீதா வரவேற்க,

அவரைப் பார்த்து ஆமோதிப்பாய் தலை அசைத்த ஜீவா மஞ்சுளாவின் புறம் திரும்பி, ''எப்படி இருக்கீங்க அத்தை?'' என்றான்.

மஞ்சுளா ஜீவாவை இதற்கு முன்பு ஒரிரு முறை பார்த்துப் பேசி இருக்கிறார்.



''ஜீவா... உங்க அண்ணன் பையன் ஜீவா'வா?'' பார்த்து ரொம்ப வருஷம் ஆச்சு. ஆளே அடையாளம் தெரியலை'' என்று மஞ்சுளா வியந்தார்.

''நான் நல்லா இருக்கேன் தம்பி. நீங்க எப்படி இருக்கீங்க?'' என்று மஞ்சுளா கேட்டதும்,

''ஐயோ அத்தை! என்னை நீன்னு ஒருமையில கூப்பிடலாம் இல்ல...'' என்று ஜீவா சொன்னான்.

அதற்கு மஞ்சுவை முந்திக் கொண்டு கீதா பதிலளித்தார்.

''டேய் ஜீவா! மஞ்சுவாச்சும் உன்னை மரியாதையா கூப்பிடட்டும். எப்படியும் என்னால உனக்கு மரியாதை கொடுத்துட் பேச முடியாது. அப்புறமா வருங்காலத்திலே, என்னை எங்க மாமியார் மரியாதை இல்லாம பேசுவாங்கன்னு நீ வேற யாரிடமாவது சொல்லிடக் கூடாதில்ல?'' என்றதும்.

மஞ்சுளா ஆர்வமாக கீதாவின் முகம் பார்க்க ஆம் என்னும் விதமாக கீதா தலை அசைத்தார்.

''ரொம்ப சந்தோஷம் அக்கா. உங்க அண்ணன் வீட்டிலே சம்மதம் சொல்லிட்டாங்களா? கல்யாணத் தேதி பார்த்திட்டீங்களா?'' என்று ஆவலே உருவாக மஞ்சுளா கேட்க,

''உன்கிட்டே சொல்லாமல் எப்படி மஞ்சு தேதி பார்ப்பேன்?'' என்று கீதா கடிந்து கொள்ளவும்,

''அவ உங்க பொண்ணுக்கா. அவ கல்யாணத்திலே உங்களுக்கு இல்லாத உரிமை வேற யாருக்கு? ஒரு அம்மாவா நான் இதுவரைக்கும் அவளுக்கு என்ன செஞ்சு இருக்கேன்? கல்யாண விஷயத்திலே மட்டும்

என்னால எப்படி உரிமை எடுத்துக்க முடியும்?'' என்று கேட்டார்.

''அத்தைங்களா உங்க உரிமை பிரச்சனையை விடுங்க. நீங்க ரெண்டு பேருமே ரொம்ப ரொம்ப நல்லவங்க... போதுமா?'' என்று சொன்ன ஜீவா மஞ்சுவின் புறம் திரும்பி,

''அத்தை நான் மட்டும் தான் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லி இருக்கேன். இன்னும் சண்டி ராணி சம்மதிக்கலை'' என்றதும்,

''ஏன்? ஏன் சம்மதிக்கலை?'' என்று குழம்பிப் போய் மஞ்சுளா விழித்தார்.

''உங்களுக்கு முதலில் இருந்து சொன்னால் தான் புரியும்'' என்று ஜீவா தன் கல்யாணக் கதையை சொல்ல ஆரம்பித்தான்.

அவன் கூறியதைக் கேட்ட மஞ்சுளா சிந்தனையில் ஆழ்ந்தார்.

அப்பொழுது தன் அறையில் இருந்து வெளியே வந்த மதுமதி ஜீவாவை பார்த்ததும் முகம் மலர்ந்தாள்.

''நீ எப்போ ஜீவா வந்தே?'' என்று கேட்டாள்.

''இப்ப தான்... ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னாலே'' என்றதும்,

''என்ன நீ வந்து அரை மணி நேரமாச்சா? அப்ப ஏன் என்கிட்டே வந்து ஒரு ஹாய் கூட சொல்லலை?'' என்று சண்டை பிடித்தாள்.

உள்ளிருந்து, ''மதும்மா!'' என்று அவள் பாட்டி அழைக்கவும், ''உன்னை அப்புறமா வந்து கவனிச்சுக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அகன்றாள்.



வெளியே வந்தவள் தன் தாய் அருகே அமர்ந்திருப்பதை பொருட்படுத்தாமல் ஜீவாவை திட்டிவிட்டுச் சென்றுவிட்டாள்.

தாயும் மகளும் பேசிக் கொள்ளாமல்... பேசும் தருணத்தை தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தனர்.

மதுமதி அங்கிருந்து விலகியதும் மஞ்சுளா மெல்லிய குரலில் ஜீவாவிடம், ''மாப்பிள்ளை நீங்க தேதி குறிச்சிடலாம். சந்தேகமே வேண்டாம். அவளுக்கு உங்களை பிடிச்சிருக்கு'' என்றாள்.

''எப்படி அத்தை சொல்லுறீங்க?''

''உங்களைப் பார்த்ததும் அவ கண்ணிலே ஒரு மின்னல் மின்னி மறைஞ்சதை நான் பார்த்தேனே!'' என்றதும்,

ஜீவாவின் முகம் மென்மையாக மாறியது.

''அவளுக்கு என்னை ரொம்ப பிடிச்சிருக்கு தானே?!'' என்று கேட்ட போது அவனது குரலும் மிருதுவானது.

அவனது முகத்தில் தெரிந்த பாவனை அவன் மதுமதியை எந்த அளவிற்கு காதலிக்கிறான் என்று மஞ்சுளாவிற்கு புரிந்து போனது.

அவளது பெற்ற வயிறு குளிர்ந்தது. தன் மகளது பிறப்பின் ரகசியம் தெரிந்த மற்றும் அதைப் பொருட்படுத்தாத குடும்பத்தில் மகள் வாழப் போகிறாள் என எண்ணிப் பார்த்த போது மனதில் நிம்மதி பரவியது.

மதுமதியின் திருமணத்திற்கு தன் மகள் என்ற காரணம் ஒரு பெரிய தடைக்கல்லாய் இருக்குமே என்று இத்தனை ஆண்டுகள் அவர் தவித்திருந்தார். அந்த தவிப்பு இன்று அடங்கியது.

ஜீவா மஞ்சுளாவிடம், "அவ சரின்னு சொல்லுவான். கல்யாணத் தேதி பாருங்கன்னு நீங்க சொல்லுறீங்க அத்தை... ஆனா எங்க அம்மாவும் அத்தையும் அவ வாயால ஒத்துக்கிட்டதுக்கு அப்புறமாத் தான் எதையும் செய்யணும் என்று தீர்மானமா இருக்காங்க. எனக்குமே அப்படித் தான்.

அவ ஒத்துக்குவாங்கிறதிலே எனக்கு சந்தேகமே இல்லை. ஆனா அவ வாயால ஒத்துக்குற வரைக்கும் நான் காத்திருப்பேன்" என்றான்

தன் மகளின் விருப்பத்திற்காக அவர்கள் அனைவரும் பொறுமையாக காத்திருப்பதே அவர்கள் அனைவரும் மதுமதியின் மேல் வைத்திருக்கும் பாசத்தை மஞ்சுளா விற்கு தெள்ளத் தெளிவாக விளக்கியது.

ஜீவாவின் பெற்றோரும் மஞ்சுளாவைக் காண வந்தனர். மதுமதியை அவர்கள் தங்கள் மருமகளாக ஏற்றுக் கொள்ளப் போவதற்காக மஞ்சுளா அவர்களிடம் தன் உள்ளார்ந்த நன்றியை தெரிவித்தார்.

மதியச் சாப்பாட்டிற்கு பின் ஜீவாவின் குடும்பம் கிளம்பியது. தாத்தாவும் பாட்டியும் ஒய்வு என்ற பெயரில் ஒரு ஓரமாய் படுத்துக் கொண்டனர்.

அருண் வெளியே சென்று விட்டான். மஞ்சுளா விற்கும் மதுமதிக்கும் தனிமை கொடுக்க விரும்பி கீதாவும் ராஜனும் தங்கள் அறைக்குள் சென்று மறைந் தனர்.

தன் தாயை தனியே சந்திக்கும் நேரம் வந்துவிட்டது என்பதை மதுமதி உணர்ந்தாள்.



அவள் தன் அறையில் அமைதியாக கட்டிலில் அமர்ந் திருந்தாள். மஞ்சுளா அந்த அறைக்குள் வந்து அங் கிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

இரு நிமிடங்கள் அமைதியில் கழிந்தது. மதுமதி பேசப் போவதில்லை என்பதை உணர்ந்த மஞ்சுளா தானே பேச ஆரம்பித்தார்.

"என் வயித்திலே பிறந்ததுக்காக வருத்தப்படுறியா மது?

இப்படி அப்பன் பேரைச் சொல்லிக்க முடியாத பிறப்பா என்னை பெத்துட்டியேன்னு என் மேல கோபமா வருதா?

நீ கொழுப்பெடுத்து போய் செஞ்ச தப்பு என் மேல 'கெட்டழிஞ்சவ பெத்த பொண்ணு' என்று முத்திரைக் குத்தப்படணுமான்னு கேட்கிறியா?" என்று வரிசை யாகக் கேட்டுக் கொண்டே வந்தவர்,

"உன்னுடைய கேள்விகள் இதுவாக இருந்தால் அதிலே தப்பே இல்லேடா அம்மு. எல்லாமே நியாய மான கேள்விகள்.

நீ சங்கடப்பட நானே காரணமாகிட்டேன்டா அம்மு. நான் செஞ்சதெல்லாம் தப்புன்னு எனக்கு தெரியலை யேடா. நீ உருவான பின்னாடி தான் என் தப்பு எனக்கு புரிஞ்சது. காலங் கடந்த ஞானோதயம்.

அவங்கவங்க செஞ்ச தப்புக்கு தண்டனை அவங்களே தான் அனுபவிக்கணும். ஆனா என் தப்பு உன்னை... உன் எதிர்காலத்தை பாதிக்கும் அப்படின்னு நான் நினைச்சு பார்த்த போது நான் தான் உன்னைத் தத்துக் கொடுக்க முடிவு செஞ்சேன்.

என் நிழல் கூட உன் மேல படக்கூடாதுன்னு தான் உன்னைப் பார்க்கணும் உன் கூடப் பேசிப் பழகணுங்கிற ஆசையை கூட மறைச்சு வைச்சு என் மனசை கடினமாக்கிட்டு இத்தனை நாளா இங்கே வராமல் இருந்தேன்.

நான் இங்கே வந்தது உனக்கு பிடிக்கலையாடா அம்மு?

உனக்கு பிடிக்கலைன்னால் நான் இப்படியே போயிடுறேன் டா. உன்னை தப்பா நினைக்க மாட்டேன். ஆனா போகிறதுக்கு முன்னாடி உன்னை ஒண்ணே ஒண்ணு மட்டும் கேட்டுக்கிறேன். என்னை மன்னிச்சிடும்மா'' என்று உருக்கமாக் கேட்டார்.

அவர் பேச ஆரம்பித்ததில் இருந்து குனிந்த தலையை மதுமதி நிமிர்த்தவே இல்லை. அதனால் அவள் என்ன நினைக்கிறாள் என்று புரிபடாமலே மஞ்சுளா பேசிக் கொண்டிருந்தார்.

அவர் பேச ஆரம்பித்ததுமே மதுமதியின் மனம் உருக ஆரம்பித்தது. அவர் தன்னை யாருமே கூப்பிடாத செல்லப் பெயரிட்டு கூப்பிடவும் அவர் தன் மீது எந்த அளவிற்கு பாசம் வைத்துள்ளார் என்று புரிந்த போது மனம் பாகாய் இளகியது.

நான் வந்தது பிடிக்கவில்லை என்றால் உன் வாழ்வில் இருந்த அடியோடு விலகுகிறேன் என்ற அவரது தியாகம் புரிந்த போது அவளது மனம் என்னும் அணை உடைய தயாரானது.

அத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போல இளையவளான தன்னிடம் அவர் மன்னிப்பை வேண்டி நிற்கவும் மதுமதி உடைந்தாள்.

''அம்மாஆஆஆ...'' என்று கதறிக் கொண்டு அவர் அருகே ஓடியவள் தரையில் மண்டியிட்டு அமர்ந்து அவரது மடியில் முகம் புதைத்தாள்.

மஞ்சுளா கீழிறங்கி அமர்ந்து தன் மகளை அணைத்துக் கொண்டார். மதுமதி கதறினாள் என்றால் மஞ்சுளா மௌனமாக கண்ணீர் வடித்தார்.

தத்து கொடுப்பதற்கு முதல் நாள் தன் பெண்ணை வருடிக் கொண்டு இருந்ததைப் போல இன்னும் வருடிக் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

கண்ணீரில் அவர்களின் பிரிவு ஆற்றாமை கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்தது. மாலை வரை அவர்களை யாரும் தொந்தரவு செய்யவில்லை.

அதன் பின்பு அனைவரும் சேர்ந்து அருகே உள்ள கோவிலுக்கு செல்லக் கிளம்பினர்.

கீதாவும் ராஜனும் வேலை இருப்பதாக சொல்லி வீட்டிலேயே தங்கிக் கொண்டனர்.

மஞ்சு, மதுமதி, அருண், தாத்தா, பாட்டி அனைவரும் கோவிலுக்கு கிளம்ப... மதுமதிக்கு கீதா வரவில்லை என்று சொன்னது உறுத்தலாக இருந்தது.

சமையலறைக்கு சென்றவள், ''ஏன்ம்மா கோவிலுக்கு வரலை?'' என்று கேட்டாள்.

''எனக்கு வேலை இருக்கு மது'' என்று பதிலளித்த கீதா தன் வேலைகளைத் தொடர, மதுமதி அங்கேயே அமைதியாக நின்றாள்.

அவள் அங்கேயே நிற்கவும், ''என்ன மது கிளம்பலையா? எல்லோரும் உனக்காக காத்துக்கிட்டு இருக்காங்க பாரு'' என்று அவளை கிளப்ப முயன்றார்.

அவள் 'ம்ம்ம்' என்று சொல்லிக் கொண்டு அங்கேயே நிற்க...

"உனக்கு என்ன வேணும் மது? என்கிட்டே என்ன கேட்கணும்? பட்டுன்னு கேட்க வேண்டியது தானே? எதுக்கு தயங்கி நிக்குறே?" என்று கேட்டார்.

"நீங்க ஏன் கோவிலுக்கு... என் மேல ஏதாச்சும் கோபமா... நான் மஞ்சும்மா கூட..." என்று மகள் பிச்சு பிச்சு பேசிய அனைத்தையும் முழு அர்த்தமுள்ள வாக்கியங்களாக கீதா கோர்த்து எடுத்தார்.

அவளது முகவாயை பிடித்து தன் பக்கம் திருப்பியவர், "நீ மஞ்சு கூடப் பேசிப் பழகினால் எனக்கு ஏன் கோபம் வரப் போகுது? அம்மாவையும் பிள்ளையையும் பிரிச்சு வைச்சு இருக்கோமோன்னு இத்தனை நாளா நான் கவலைப்பட்டவள் தானே? அப்படின்னா அதைப் பார்த்து சந்தோஷம் தானே படுவேன்.

ஆனா அதே சமயம் உன்னை அவகிட்டே எதுக்காகவும் திருப்பிக் கொடுக்க மாட்டேன். நான் ஏன் இப்ப கோவிலுக்கு வரலைன்னு சொல்லுறேன்னால்... நீங்க ரெண்டு பேருமே என் முன்னால இயல்பா இருக்க மாட்டீங்க. இன்னைக்கு ராத்திரியே அவ சிங்கப்பூர் கிளம்பணும். கொஞ்ச நேரம் தானே இருக்கு. அதை அவளுக்கே முழுசாக் கொடுக்கலாமேன்னு பார்த்தேன். அவ்வளவு தான்" என்றதும்,

அவரது கன்னத்தில் முத்தம் பதிந்தவள், "தாங்க்ஸ் மா" என்று அவளை சொல்லித் திரும்பி இரண்டு எட்டு வைத்தவள் சரேலென கீதாவின் புறம் திரும்பி அவரை



அணைத்துக் கொண்டு, "ஐ லவ் யூம்மா!" என்று சொல்லி விடுவித்துவிட்டு அகன்றாள்.

செல்லும் தன் மகளையே பார்த்திருந்தவர் தன் கண்ணோரம் துளிர்த்த கண்ணீர் துளிகளை தன் சேலை முந்தானையால் துடைத்துக் கொண்டார்.

அன்று மஞ்சுளாவும் அவளது பெற்றோர்களும் திருப்தியான மனநிலையில் விமானம் ஏறிச் சென்றார்கள்.

மதுமதிக்கு உண்மை தெரிந்துவிட்டதால் இனி இந்தியாவிலேயே இருந்து விடலாம் என்ற எண்ணம் மஞ்சுளாவின் மனதில் எழவில்லை.

மதுமதி அன்றும், இன்றும், என்றும் கீதா - ராஜன் தம்பதியரின் மகளாய் தான் இந்த சமூகத்தில் அறியப்பட வேண்டும் என்று மஞ்சுளா விரும்பினார்.

இரு தாய்மார்களும் அருகருகே இருந்தால் சில நேரங்களில் அது தன் மகளுக்கு சங்கடத்தை உருவாக்கலாம் என்பதால் அவர் தன் ஆயுளுக்கும் தள்ளி இருந்தே தன் மகளை ரசிக்க வேண்டும் என்ற முடிவெடுத்தார்.

## 20



கல்லூரி முடிந்து மாணவ மாணவிகள் அரக்க பரக்க தத்தம் இருப்பிடம் நோக்கி பறக்கத் தொடங்கினர்.

மதுமதியும் தன் வீட்டிற்குச் சொல்லுவதற்காக தனது வண்டியில் சாவியை நுழைத்துத் திருகினாள். அப்

பொழுது பக்கத்தில் உள்ள வண்டியை கிளப்பிக் கொண்டிருந்த தோழி ஒருத்தி,

''நாளைக்கு உனக்கு பர்த்டே தானே மது?'' என்று விசாரிக்க,

மதுமதி, ''ஆமாம்'' என்றதும்,

''அப்படின்னா நாளைக்கு ஈவினிங் எங்களுக்கு ட்ரீட் கொடுக்கணும்'' என்றாள்.

''கண்டிப்பா தரேன்'' என்று உற்சாகமாய் சொல்லி விட்டு மதுமதி வண்டியை கிளப்பினாள்.

அன்று இரவு பத்து மணிக்கு அனைவரும் படுக்கச் சென்று விட மதுமதிக்கு தூக்கம் வரவில்லை.

'இந்த ஜீவா எப்பவும் காலையிலே வந்து விஷ் பண்ணுவான். ஆனால் தலைவர் என்னை லவ் பண்ணுறதா சொன்னாரே. அதனால நடு ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு போனில் விஷ் பண்ணுவானோ?' என்று நினைத்தவளுக்கு தூக்கம் வர மறுத்தது.

அதனால் பன்னிரெண்டு மணி வரை விழித்திருக்க முடிவு செய்தவள் தனது பாட சம்பந்தமான வேலைகளை பார்த்துக் கொண்டு நேரத்தைக் கடத்திக் கொண்டு இருந்தாள்.

பன்னிரெண்டு ஆக பத்து நிமிடங்கள் இருக்கும் போதே கைப்பேசியை கையில் எடுத்துக் கொண்டு படுக்கையில் விழுந்தாள்.

கைப்பேசியையே வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தவள் ஜீவா அழைத்தால் கைப்பேசி அலறும் சத்தம் வெளியே கேட்கும் என்று நினைத்தவளாய் அதை சைலண்ட் மோடில் போட்டாள்.



அவள் ஆர்வமாக காத்திருக்க... நேரமும் பன்னிரெண்டு ஆனது. மிகுந்த எதிர்பார்ப்போடு அவள் கண்கள் மின்ன கைப்பேசியை வெறிக்க, அது அமைதியாய் இருந்து அவளை கடுப்படித்தது.

ஒரு வேளை சிக்னல் கிடைக்காமல் போன் பண்ண முடியாமல் தடுமாறுகிறானோ என்று நினைத்தவள் ஜன்னலைத் திறந்து வைத்து காத்திருக்கலானாள்.

ஆனால் அதில் போன் வருவதற்கான அறிகுறி எதும் தென்படவில்லை. பன்னிரெண்டரை வரைக்கும் கூட அவள் பொறுமையாய் காத்திருந்தாள். அதற்கு மேல் அவள் பொறுமை பறந்தது.

'டேய் ஜீவா! நீ ஒரு வேஸ்ட் ஃபெல்லோ டா. உனக்கெல்லாம் எதுக்குடா லவ். நீ பாடம் எடுக்க மட்டுமே லாயக்கு. ராத்திரி முழிச்சிருந்து விஷ் பண்ணக் கூடத் தெரியலை. நீயெல்லாம்...' என்று பல்லைக் கடித்தாள்.

அவனைத் திட்டித் திட்டி களைப்படைந்து ஒருவாறு தூங்கியும் போனாள்.

மதுமதிக்கு காலையில் ஐந்தரை மணிக்கு விழிப்பு வந்தது. வேகமாக கைப்பேசியை எடுத்துப் பார்க்க அதில் அழைப்பு வந்ததற்கான அடையாளம் ஏதும் இல்லை என்றதும் அவளது முகம் வாடியது.

அவள் தனது கைப்பேசியை சைலன்ட் மோடில் இருந்து சத்தம் கேட்குமாறு மாற்றினாள். எழுந்து பல் துலக்கிவிட்டு வெளியே வந்தாள்.

அப்பாவும், அம்மாவும் பிறந்த நாள் வாழ்த்து சொல்லி அவளுக்கு பரிசுகள் தந்தார்கள். மதுவின

அனுப்பியதாகச் சொல்லி ஒரு பரிசுப் பொருளையும் கொடுத்தார்கள்.

''மதுக்கா இந்தா என்னோட பரிசு. ஏதோ எனக்கு தெரிஞ்சதை வாங்கினேன். ஹேப்பி பர்த்டே'' என்று சொல்லி அருணும் பரிசொன்றை நீட்டி விட்டு கல்லூரிக்கு கிளம்ப ஆரம்பித்தாள்.

மஞ்சும்மா, தாத்தா, பாட்டி அனைவருமே போனில் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். முதல் முறையாக அவளது பிறந்த நாளிற்கு அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

நியாயமாகப் பார்த்தால் மதுமதிக்கு மகிழ்ச்சி கரை புரண்டு ஓடி இருக்க வேண்டும். ஆனால் அவள் மனம் முழுவதும் துக்கமே வியாபித்திருந்தது.

மதுமதி கல்லூரிக்கு தயாராகிக் கொண்டு இருந்தாலும் அடிக்கடி வாயிலை எட்டிப் பார்க்க மறக்கவில்லை.

ஜீவா நேரில் வந்து எப்பொழுதும் வாழ்த்து சொல்லுவான் என்பதால் அவனது வரவை ஆர்வமாய் எதிர்பார்த்திருந்தாள்.

காலையில் அவள் தூங்கி எழுந்ததில் இருந்து அவளது கைப்பேசி சிணுங்கிக் கொண்டே இருந்தது. தோழிகள் ஒவ்வொருவராக கூப்பிட்டு வாழ்த்து சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

ஆனால் அவள் எதிர்பார்த்த வாழ்த்து மட்டும் வரவே



அவளது மாமா வீட்டில் இருந்து அவளது கைப்பேசிக்கு அழைப்பு வரவும் வேகமாக அதை இயக்கி காதில் வைத்து, ''ஹலோ!'' என்க,

அவள் அத்தையும் மாமாவும் தங்களது வாழ்த்தை தெரிவித்தார்கள். ஆனால் முக்கியமானவன் பேசவில்லை.

'ஜீவாவைப் பற்றி விசாரிப்போமா வேண்டாமா?' என்று மனம் இரு வேறு அணிகளில் நின்று கொண்டு பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தது.

'அவனைப் பத்தி கேட்க வேண்டாம். நாம என்ன ரோஷமில்லாதவளா?!' என்று மனம் தீர்ப்பளித்தது.

ஆனால் அதையும் மீறி அவளது அத்தை போனை அணைக்கப் போகும் சமயத்தில், ''அத்தை, ஜீவா எங்கே?'' என்று கேட்டாள்.

கலா, ''அவன் காலையிலேயே காலேஜில ஏதோ வேலை என்று கிளம்பிப் போயிட்டானே மது'' என்று சொல்லி அவளது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி விட்டு வைத்தார்.

''ஓ! அப்படின்னா துரைக்கு இப்ப கூட வாழ்த்து சொல்லுற ஐடியாவே இல்லையா? போடா போ!' என்று கறுவிக் கொண்டே கல்லூரிக்கு சென்றாள்.

அன்று முழுவதுமே கைப்பேசியை அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள். தனக்கு போன் வராதா என்று மதுமதி தவித்துக் கொண்டிருந்த சமயம் நிதிஷின் கைப்பேசி அலறியது. அவன் அதை எடுத்துப் பார்த்தான். அவனது நெருங்கிய தோழன் அழைத்திருந்தான்.

''சொல்லு மச்சான்.''

''நிதிஷ், நீ எங்கே இருக்கே?''

''வடபழனியிலே இருக்கேன்டா மச்சான். என்ன விஷயம்?''

''ஏதோ புதுசா ஒரு பொண்ணு சிக்கி இருக்குன்னு சொன்னியே! என்னாச்சு?''

''ஓ! மதுமதியை கேட்கிறியா? சூப்பர் பிகர்டா. கொஞ்சம் கொஞ்சமா தானே மச்சான் கரெக்ட் பண்ண முடியும். அவசரப்பட்டா வேலைக்கு ஆகுமா சொல்லு.''

''புரியுதுடா நிதிஷ். ஆனா சீக்கிரமா வேலையை முடிக்கப் பாரு. இல்லைன்னா உஷாராகி விடுவாளுங்க'' என்று சொல்லி போனை அணைத்தான்.

நிதிஷும் அவனுடைய நண்பனும் அழகான பெண் களுக்கு வலை விரித்து, அவர்களை ஹோட்டல் போன்ற பொது இடங்களுக்கு அழைத்துச் சென்று, அவர்கள் பருகும் பானத்தில் லேசான மயக்கமும் போதையும் ஏற்படுத்தும் மாத்திரைகளை கலந்த கொடுத்து, அவர்கள் அரை மயக்கமாய் இருக்கும் பொழுது அவர்களை அசிங்கமாகப் படம் பிடித்து, பின் அதைக் காட்டி, அவர் களை மிரட்டி பணம் பறிக்கும் கும்பலைச் சேர்ந்தவர்கள்.

இவனது சுயரூபம் தெரியாத அவனது ஒன்று விட்ட தங்கையான மதுமதியின் கல்லூரித் தோழி அடிக்கடி நிதிஷ் தன் கல்லூரிக்கு வந்து தன் தோழிகளிடம் பேசு வதை பொருட்படுத்தவில்லை.

நிதிஷ் அன்று மாலை மதுமதியை அவளது கல்லூரிக்கு சென்று சந்திக்க முடிவெடுத்தான். இன்று அவளுக்கு பிறந்த நாள் என்ற தகவலை அவன் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தான்.

அதனால் அவளை எப்படியாவது ஹோட்டலுக்கு அழைத்துச் செல்ல முடிவெடுத்தான்.

மாலையில் தோழிகள் அனைவரும் மதுமதியிடம் அருகில் இருந்த கடைக்கு அழைத்துச் சென்று பிறந்த நாள் விருந்து வைக்குமாறு கேட்டனர்.

மதுமதி தோழிகளுக்கு விருந்து கொடுக்க தீர்மானித்து முதல் நாளே கீதாவிடம் பணம் கேட்டாள். அவள் தன் தோழிகளுடன் கல்லூரியில் கொண்டாடும் கடைசி பிறந்த நாள் என்பதால் அவரும் அவளுக்கு பணம் கொடுத்து அனுப்பி இருந்தார்.

தோழிகள் அனைவரும் உற்சாகமாக கிளம்பிக் கொண் டிருக்கும் போது நிதிஷ் அங்கு வந்தான்.

''எங்கே கிளம்பிட்டீங்க?'' என்று அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

''இன்னைக்கு மதுக்கு பர்த்டே. அதான் ட்ரீட் வைக்கப் போறாள்'' என்று ஒருத்தி விளக்க,

''அப்படியா?'' என்று கேட்டவன் மதுமதியிடம் திரும்பி, ''ஹேப்பி பர்த்டே!'' என்று வாழ்த்திய கையோடு,

''நானும் உங்க கூட வரலாமா?'' என்று கேட்டு வைத் தான்.

'இவன் ஒரு இம்சை' என்று மனசுக்குள் திட்டிக் கொண்ட மதுமதி வேறு வழியில்லாத காரணத்தால்,

''வாங்க!'' என்று அழைத்தாள்.

அனைவரும் அருகே இருந்த கடைக்கு சென்று பப்ஸ், கட்லட், ஐஸ்-க்ரீம், ஜூஸ் என்று தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வாங்கி உண்டனர்.

நிதிஷ் கவுண்டரில் இருந்து உணவுப் பொருட்களை வாங்கி வந்து மேஜையில் அமர்ந்திருந்தவர்களிடம் கொடுத்து உதவினான்.

மதுமதி அமைதியாக அமர்ந்திருக்க... நிதிஷ் மதுமதியிடம் பழச்சாறை நீட்டி பருகச் சொன்னான்.

''இல்லை வேண்டாம். எனக்கு காலையில் இருந்தே தலைவலி. வெளியிலே ஏதாவது சாப்பிட்டால் வாந்தி வந்திடும். நீங்க குடிங்க'' என்று மதுமதி மறுத்ததும் அருகில் இருந்த தோழி,

''இன்னும் உன் தலைவலி சரியாகலையா மது? பார்த்டே அதுவுமா உன்னைப் போட்டு இப்படிப் படுத்துதே'' என்று உச் கொட்டினாள்.

'ம்ம்ம் ஜீவா தான் என் தலைவலி. வீட்டுக்கு போனதும் அந்த தலைவலிக்கு தலைவலி வர வைக்கலை என்றால் நான் மதுமதி கிடையாது' என்று சூளுரைத்துக் கொண்டு வெளியே புன்முறுவல் காட்டி அமர்ந்திருந்தாள்.

நிதிஷ் அவளிடம், ''அன்னைக்கு நான் வாங்கிக் கொடுத்த காபியை தான் வேண்டாம் என்று சொல்லிட்டீங்க. இன்னைக்கு இந்த ஜூஸ் உங்க காசிலே வாங்கினது தானே? இதையாச்சும் குடிக்கலாமில்ல!'' என்று வற்புறுத்தினான்.

வேறு வழியில்லாமல் புன்னகைத்துக் கொண்டு அவனிடம் இருந்த அந்த பழச்சாறை மதுமதி வாங்கிக் கொண்டாள்.

கையில் பழச்சாறுடன் தனக்குள் மூழ்கிப் போனவளாய் மதுமதி அமர்ந்திருக்க...

''குடிங்க மதுமதி!'' என்று நிதிஷ் வற்புறுத்தினான்.

அவன் அன்றே காரியத்தை முடித்து விடலாம் எனக் கருதி தன் திட்டப்படி அந்த ஜூஸில் மாத்திரையை கலந்துவிட்டான்.

ஆனால் நிறைய பெண்கள் உடன் இருந்ததால் அரை மணி நேரம் கழித்து வேலை செய்யும் மாத்திரையை கலந்தான்.

அப்பொழுது தான் மதுமதி தான் மட்டும் தனியாக பயணம் செய்வாள். அவளால் வண்டியை சரியாக ஓட்ட முடியாது. பின்னோடு போய் உதவி செய்வது போல் தனது இடத்திற்கு அழைத்துச் செல்லலாம் என எண்ணியிருந்தான்.

மதுமதி அந்த ஜூஸை எடுத்து பருகுவதற்காக வாயருகே கொண்டு செல்ல அவளது கைப்பேசி சிணுங்கியது. பழச்சாறை கீழே வைத்துவிட்டு அவள் அதை எடுத்துப் பேசினாள்.

நிதிஷிற்கு மதுமதியின் கைப்பேசிக்கு அழைப்பு விடுத்த அந்த நபர் மீது கடுப்பாக வந்தது.

இவள் இதை பருகுவதற்கு நேரமானால் மாத்திரை வேலை செய்யும் முன்னால் அவளது வீட்டிற்கே சென்று விடுவாளே என்று அவனுக்கு பதட்டமாய் இருந்தது.

இதற்கு தான் பெண்களை எப்பொழுதுமே அவன் தனியாகச் சந்தித்து தன் காரியங்களை சாதிப்பான். ஆனால் இந்த மதுமதி தனியாக மாட்ட மாட்டேங்கிறாளே என நினைத்தே தன் திட்டத்தை இன்று நிறைவேற்ற எண்ணினான்.

அவள் போன் பேசி முடித்ததும் நிதிஷ் மீண்டும் அவளை பழச்சாறை குடிக்கச் சொல்லி வற்புறுத்தினான்.

அவள் வாயருகே கொண்டு போக... அவளது தோழி அவளை அழைத்து ஏதோ கேட்டாள். அதைப் பருகாமல் மதுமதி தோழியிடம் பேசத் துவங்க...

எழுந்து சென்று அந்த பெண்ணை அறையலாமா என்று நிதிஷ் யோசிக்க ஆரம்பித்துவிட்டான்.

தோழிக்கு பதில் அளித்துவிட்டு மதுமதி பழச்சாறை கையில் எடுக்க அருகே இருந்த சர்தார்ஜி ஒருவர் அந்த நேரம் பார்த்து விருட்டென்று திரும்ப பழச்சாறு மதுமதியின் உடை முழுவதும் சிந்தியது.

அந்த சர்தார்ஜி, ''சாரி மேடம்!'' என்று மன்னிப்பு கேட்க,

''இட்ஸ் ஓ.கே.'' என்று மதுமதியும் இலகுவாக எடுத்துக் கொண்டாள்.

ஆனால் தன் திட்டம் நிறைவேறாத ஆத்திரத்தில் இருந்த நிதிஷ் அந்த சர்தார்ஜி இளைஞனின் சட்டையை கொத்தாக பற்ற,

மதுமதி, ''இப்ப எதுக்கு அவரை அடிக்கப் போறீங்க? ஒரு சின்ன ஜூஸ் மேட்டர் தானே?'' என்று முகத்தை சுளித்துக் கொண்டு நிதிஷை பார்த்து கேட்கவும், நிதிஷ் நிதானித்தான்.

தனது கைகளை அந்த இளைஞனின் சட்டையில் இருந்து விலக்கினான். அவனும் தப்பினால் போதும் என ஓட்டம் பிடித்தான்.

நிதிஷ், ''நான் போய் உங்களுக்கு வேற ஜூஸ் வாங்கிட்டு வரேன்'' என்றதும்,

''இல்லை வேண்டாம். நான் அப்பவே எனக்கு வேண்டாம் என்று சொன்னேன். நான் வீட்டுக்கு கிளம்பணும். புது டிரஸ் வேற கறை ஆகிடுச்சு. போய் அதை துவைச்சுப் போடணும்'' என்று மதுமதி இன்னொரு பழச்சாறு தனக்கு வேண்டாம் என்று பிடிவாதமாக மறுத்துவிட்டாள்.

தோழிகள் அனைவரும் விடைபெற்றுச் சென்றனர். அவர்கள் அனைவரையும் வழி அனுப்பிவிட்டு மதுமதியும் தன் ஸ்கூட்டியில் ஏறிக் கிளம்பத் தயாரானாள்.

அப்பொழுது அவளருகே வந்த நிதிஷ், ''மதுமதி, நான் உங்க கூட பிரண்டாகணும் என்று முயற்சி பண்ணுறேன். என்னமோ தெரியலை நீங்க விலகி விலகிப் போறீங்க. ஏன் உங்களுக்கு என்னை பிடிக்கலையா?'' என்று நேரடியாகக் கேட்டான்.

''அப்படியெல்லாம் இல்லை'' என்று மதுமதி மறுக்கவும்,

''அப்படின்னா நீங்க என்னை உங்க பிரண்டா ஏத்துக்கிறீங்களா?'' என்று அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்.

''ம்ம்ம் ஏத்துக்கிறேன்'' என்று மது சொல்லவும்,

''ஓ.கே அப்ப நாளைக்கு நாம அதை செலிபரேட் பண்ணலாமா?''

''செலிபரேஷனா? எப்படி?

''ஜஸ்ட் என் கூட ஹோட்டலுக்கு வாங்க. அவ்வளவு தான். சாப்பிட்டு விட்டு போயிடலாம்'' என்று அவன் சொன்னதும் மதுமதியும் ஒத்துக் கொண்டாள்.

''அப்புறம் ஒரு விஷயம். உங்க பிரண்ட்ஸ் யார் கிட்டவும் சொல்லாதீங்க. அப்புறம் எல்லோரும் ஹோட்டலுக்கு வரேன் என்று சொல்லுவாங்க. என் பாக்கெட் தாங்காதுங்க'' என்றான்.

அவள் அதற்கும் சரி என்று தலையாட்டினாள்.

''நீங்க நேரா காலேஜ் முடிஞ்சதும் ஹோட்டலுக்கு வந்திடுங்க'' என்று ஒரு ஹோட்டலின் பெயரைக் குறிப்பிட்டான்.

அவள் அவனிடம் இருந்து விடைபெற்று வீடு வந்து சேர்ந்தாள்.

# 21



'காலையில் தான் தனக்கு பிறந்த நாள் வாழ்த்து கூடச் சொல்லாமல் ஜீவா கல்லூரிக்கு கிளம்பிப் போனான். இப்பொழுதாவது தன்னை வரவேற்று, வாழ்த்துச் சொல்ல வீட்டில் காத்திருப்பான்' என்ற நம்பிக்கையோடு மதுமதி வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஜீவா வந்ததிற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை என்றதும் மதுமதி கடுப்பானாள்.

''அம்மா, நான் மாமா வீடு வரைக்கும் போயிட்டு வரேன்'' என்று சொன்ன மதுமதி அவரது பதிலைக் கூட எதிர்பார்க்காமல் தனது வண்டியை எடுத்துக் கொண்டு விரைந்தாள்.

கீதா செல்லும் தன் மகளையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றார். அவரது உதடுகளில் புன்முறுவல் தவழ்ந்தது.

'கலக்குறடா ஜீவா!' என்று மருமகனை மனதிற்குள் பாராட்டிக் கொண்டார்.

தொலைப்பேசியை எடுத்துத் தனது அண்ணி கலாவை அழைத்தார்.

''அண்ணி உங்க வீட்டிலே ஏதாவது சமைச்ச பொருளை சூடு பண்ணணுமா?'' என்று கேட்டார்.

''எதுக்கு கீதா கேட்கிறே?'' என்று கலா புரியாமல் கேட்க,

''எதையாச்சும் சூடு பண்ணனும் என்றால் கொஞ்சம் பொறுங்க. ஒரு நடமாடும் கேஸ் அடுப்பு உங்க வீடு தேடி வந்துக்கிட்டு இருக்கு. அதிலே வைச்சு சூடு பண்ணிக்கோங்க. உங்க வீட்டு கேஸை வீணடிக்காதீங்க'' என்றதும்,

''யாரைச் சொல்லுறே? மதுவையா? இங்கே வந்துக்கிட்டு இருக்காளா? அதுவும் கோபமா வந்துக்கிட்டு இருக்காளா?'' என்று கேட்டுக் கொண்டே கலா சிரிக்க,

''அவளே தான். எதையாவது சொல்லி சமாளிச்சு அனுப்புங்க'' என்று கீதா சொன்னதும்,

''நான் ஏன் என் வாயைக் குடுக்கப் போறேன்? அவனாச்சு. அவளாச்சு'' என்று சிரித்துக் கொண்டே கலா போனை வைத்தார்.

மதுமதி மாமா வீட்டிற்கு வந்த போது சபாபதி தொலைக் காட்சியில் ஆழ்ந்திருந்தார். கலா அடுப்படியில் வேலையாக இருந்தார்.

உள்ளே நுழைந்த மதுமதி தன் மாமாவிடம், ''எங்க மாமா உங்க புள்ளை?'' என்று கடுப்புடன் கேட்டாள்.

அவளது கோபத்தை பார்த்தவருக்கு வார்த்தை வர வில்லை. மாடியிலுள்ள அவனது அறையைக் கைகாட்ட மட மடவென்று மாடி ஏறிப் போனாள்.

''என் மகன் இன்னைக்கு செத்தான்'' என்று மெல்லிய குரலில் சபாபதி வாய்விட்டுப் புலம்பினார்.

ஜீவா படுக்கையில் அமர்ந்து தன் மடிகணினியில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான்.

ஆள் அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தவன் நீயா என்பது போல் பார்த்து விட்டு குனிந்து தன் வேலையை தொடர்ந்தான்.

'நம்மைப் பார்த்துவிட்டான் தானே. அவனே நிமிர்ந்து நம்மகிட்டே பேசுவான்' என்று ஓரிரு நிமிடங்கள் அவள் அமைதியாக வேடிக்கை பார்க்க...

அவன் நிமிர்வதாய் இல்லை.

மதுமதி ''க்கும்...'' என்று கனைத்தாள்.

''விக்ஸ் இல்லை ஹால்ஸ் வேணுமா?'' என்று தன் தலையை நிமிர்த்தாமலே ஜீவா கேள்வி கேட்டான்.

'கொழுப்பைப் பாரு! எனக்கு என்ன தொண்டையில் கிச் கிச்சா?' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள்.

'வீட்டிற்கு வந்தும் ஏதோ வேலை செய்து கொண் டிருக்கிறான். ஒரு வேளை இன்று காலேஜிலே நிறைய வேலை இருந்திருக்குமோ! அதனால என் பர்த்டேயை மறந்துட்டானோ?!' என நினைத்தவள்,

அதை உறுதி படுத்துவதற்காக, ''இன்னைக்கு நாள் எப்படிப் போச்சு ஜீவா?'' என்று கேட்டாள்.



''இன்னைக்கா? எப்பவும் போல தான் போச்சு'' என்று அவன் அசுவாரஸ்சியமாய் பதிலளிக்கவும், அவளது கோபம் அதிகரித்தது.

''இன்னைக்கு என்ன தேதி ஜீவா?'' என்று கடித்த பற்களுக்கிடையே கேட்க,

''ஒரு நிமிஷம்'' என்றவன் தனது கைப்பேசியை எடுத்து யாருக்கோ அழைத்தான்.

''ஏன் அத்தை, உங்க வீட்டிலே ஒரு காலண்டர் கூடவா இல்லை?'' என்று கேட்டான்.

''.....''

'எங்க அம்மாகிட்டவா பேசுறான். உனக்கு திமிர்டா!' என்று பொருமிக் கொண்டிருந்தாள்.

''இல்லை இன்னைக்கு தேதி என்னன்னு கேட்டு உங்க பொண்ணு என் வீடு வரைக்கும் வந்திருக்காள். அதான் கேட்டேன்'' என்று செ"ல்லி கைப்பேசியை அணைத்தவன்,

''உங்க வீட்டிலேயே காலண்டர் இருக்காம். போய் பார்த்துக்கோ'' என்று அலட்டாமல் சொல்லிவிட்டு தன் வேலையை தொடர்ந்தான்.

அவனை முறைத்துப் பார்க்கலாம் என்றால் அவன் நிமிர்ந்து பார்த்தால் தானே!

வேறு வழியில்லாமல் தன் ரோஷத்தைக் கை விட்ட வளாய், ''இன்னைக்கு எனக்கு பர்த்டே'' என்றாள்.

''ஓ! அப்படியா?'' என்று மட்டும் கேட்டான்.

''ஒண்ணுமே ஸ்பெஷலா நடக்கலை'' என்று அவள் கடுப்புடன் சொல்ல,

"ஸ்பெஷலா நடக்கணுமா? உனக்கு பர்த்டேன்னால் நீ தான் கொண்டாடணும். நீ என்ன தேசியத் தலைவரா? உன் பிறந்த நாளுக்கு ஸ்கூல், காலேஜ் எல்லாம் லீவு விடுறதுக்கு. உனக்கு வேணுமின்னா நீயே லீவ் போட்டுட்டுக் கொண்டாட வேண்டியது தான்" என்று அவன் இடக்காக பதில் சொல்லவும்,

"நான் ஒண்ணும் தேசியத் தலைவர் கிடையாது. என் பர்த்டேயை ஊரே கொண்டாடவும் வேண்டாம். ஆனால் உனக்கு நான் யாரு?" என்று கேட்டாள்.

"எனக்கா? எங்க அப்பாவோட தங்கச்சியோட பொண்ணு" என்று அவன் தலையை சுத்தி மூக்கைத் தொட முயல,

"ஓ! உனக்கு நான் தூரத்து சொந்தம் இல்ல..." என்று அவள் நக்கலாகக் கேட்க,

"இப்ப எதுக்கு இந்த ஆராய்ச்சி?" என்று அவன் எதிர் கேள்வி கேட்க,

"நீ ஏன் எனக்கு இன்னைக்கு பர்த் டே விஷ் பண்ணலை" என்று கேட்டாள்.

"நான் ஏன் உனக்கு பண்ணணும்?"

"இத்தனை வருஷமா ஏன் பண்ணினே?"

"அப்ப நீ சின்ன பொண்ணு. இனி நீ வேற வீட்டிலே வாழப் போற பொண்ணு. இனிமேலும் உன்கிட்டே முன்ன மாதிரி நெருங்கிப் பழகக் கூடாதில்லையா. அதான்..." என்று அவன் விளக்கம் சொன்னதும்,

அவன் கூறியதை கேட்டு அவள் திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள்.

அவன் குனிந்து தன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தான்.

மதுமதியால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. ஆத்திரமும், அழுகையும் வந்தது.

காலையில் இருந்து எதிர்பார்த்து ஏமாந்து போய் இருந்தவளுக்கு ஜீவாவின் உதாசீனம் கோபத்தை விட அழுகையை அதிகரிக்க கண்ணீர் விடலானாள்.

குனிந்து அமர்ந்திருந்தவன் அவளிடம் இருந்து பதில் வரவில்லை என்றதும் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

அவளது கண்ணீரைக் கண்டவன் முறுவலித்துக் கொண்டே அவள் அருகே சென்று, "ஹேய் லூசு! இப்ப எதுக்கு நீ அழுகிறே?" என்று கேட்டான்.

அவனது சட்டைக் காலரை கொத்தாகப் பற்றி, "ஏன்டா எனக்கு நீ விஷ் பண்ணலை?" என்று மதுமதி கேட்டதும்,

அவனது முறுவல் அதிகமானது.

"காலையிலேயே வந்து இப்படி என் சட்டையை பிடிச்சு நீ என்னைக் கேள்வி கேட்டு இருக்க வேண்டியது தானே! அதை விட்டுட்டு அழுதுகிட்டு இருக்கே" என்று அவன் கிண்டல் பண்ணினான்.

"நீ ஏன் சீக்கிரமா காலேஜ் போனே?"

"நான் எப்பவும் போல தான் போனேன். சரி நேரில் வரலை. எனக்கு ஒரு போனாவது பண்ணியிருக்கலாம் தானே!"

"நான் போன் பண்ணினேன் ஜீவா."

"இல்ல மதி. நீ போன் பண்ணலை."

''நிஜமா ஜீவா, நான் போன் பண்ணினேன்.''

''பொய் சொல்லாதே மதி. நீ பண்ணலை. அப்படி நீ பண்ணி இருந்தா இப்படி அழ மாட்டே'' என்றதும்,

அவள் அவனைப் புரியாத பார்வை பார்த்தாள்.

''இப்போ போன் பண்ணு'' என்று அவன் சிரித்துக் கொண்டே சொல்லவும், அவள் தன் கைப்பேசியை எடுத்து அவனது நம்பரை அழுத்தி காதில் வைக்க, புதிதாக பாடல் ஒலித்தது.

'இவன் எப்போ காலர் டியூன் செட் பண்ணினான்?!' என நினைத்தவள் பாட்டைக் கூர்ந்து கேட்க,

மெழுகு பூக்களின் மேலே
என் காதல் ஏற்றிடுவேன்
நீ ஊதினால் அணையாதடி
நீ வெட்டவே முடியாதடி
உன் கண்களை மூடடி
என்ன வேண்டுமோ நீ கேளடி
ஏனென்றால் உன் பிறந்த நாள்
ஏனென்றால் உன் பிறந்த நாள்

என்று ஹரிஹரனின் குரல் ஒலித்தது.

கண்களில் நீரும், உதட்டில் புன்னகையோடும் அந்த பாட்டைக் கேட்டவள் தனது கண்களை மூடி அவன் பக்கம் கைகளை நீட்ட,

''என்ன? எதுக்கு கை நீட்டுறே?'' என்று ஒன்றும் தெரியாதவனைப் போல் அவன் கேட்க,



''விளையாடாதே ஜீவா. நீ தான் கண்களை மூடி என்ன வேணுமோ கேளுன்னு பாட்டு போட்டே. ஏன் பர்த்டே கிஃப்டை தா'' என்று சிணுங்கினாள்.

அவன் தனது இரு விரலை அவள் முன்னே நீட்டி, ''இந்த ரெண்டிலே ஒண்ணைத் தொடு'' என்றான்.

அவள் தன் கண்களைத் திறக்காமலே, ''எதுக்கு தொடணும்? விளையாடுறதுக்கு இதுவா நேரம். என் கிஃப்டை தா ஜீவா'' என்று மீண்டும் சிணுங்க,

''உனக்கு எந்த கிஃப்டை கொடுக்கணும் என்று என்னால முடிவு பண்ண முடியலை. அதான் உன்னையே தொடச் சொல்லுறேன். தொடு'' என்றதும்,

கண்களைத் திறந்து பார்த்தவள் அந்த இரண்டு விரல்களையும் பற்றினாள்.

''ரெண்டையும் தா ஜீவா'' என்றாள்.

அவளைத் தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்தான்.

பின் தன் அலமாரிக்கு சென்று அங்கிருந்து ஒரு பரிசுப் பொட்டலத்தை எடுத்து வந்து கொடுத்தான்.

''ஓ.கே. ஒண்ணைக் கொடுத்திட்டே. இன்னொண்ணு எங்கே?'' என்று அவள் அதிகாரமாய் மிரட்டிக் கேட்டதும்,

அவள் அருகே நெருங்கியவன் அவள் எதிர்பார்க்கும் முன்பு அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான்.

எதிர்பாராத கிடைத்த முத்தத்திலும், அவனது மீசையின் முடி உராய்ந்ததினால் அவளுள் எழுந்த உணர்ச்சிகளும் அவளை கிறங்கடித்தன. அவள் கண் மூடி அமைதி காத்து நிற்க.

ஜீவா தன் காதலை எல்லாம் திரட்டி குரல் குழைய, ''ஹேப்பி பர்த்டே மது!'' என்று சொல்லிவிட்டு சரே லென அந்த அறையை விட்டு வெளியேறினான்.

அவனது அந்த வாழ்த்து அவள் உயிர் வரை சென்று தாக்கியது. அதிலேயே லயித்துப் போய் சில நொடிகள் கண் மூடி இருந்தாள்.

பின் மெல்ல கண் திறந்து பார்க்க... அங்கே ஜீவா இல்லை என்றதும் அப்பாடா என நிம்மதியாக உணர்ந் தாள்.

'அடப்பாவி! பொசுக்குன்னு முத்தம் கொடுத்திட்டே! நான் ஒரு விரலை மட்டும்... அதுவும் முத்தப் பரிசுன்னு நீ தீர்மானிச்சு வைச்சிருந்த விரலைத் தொட்டால் பைசா செலவு இல்லாமல் அதை மட்டும் தரலாம் என்று பார்த்தி யாடா?' என்று அவனை மனதுக்குள் கேலி செய்து கொண்டிருந்தாள்.

'உன் கையிலே இருக்கிற பரிசு என்னவோ எனக்கு தெரியாது. ஆனால் அதை விட அவன் கொடுத்த இந்த முதல் முத்தம் உனக்கு பிடிச்சதா இல்லையா?' என்று மனசாட்சி கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அங்கிருந்து வெளியேறினாள்.

முதலில் ஜீவா வெளியேறிச் சென்றதை சபாபதியும் கலாவும் கவனிக்கவில்லை.

முகம் கொள்ளா சந்தோஷத்துடனும், கையில் பரிசுப் பொருளுடனும் மாடியில் இருந்து இறங்கிய மதுமதி அவர்கள் கண்களில் பட்டாள்.

''என்ன மது ஜீவாவைப் பார்த்துட்டியா? பிறந்த நாள் பரிசு கொடுத்தானா?'' என்று கலா கேட்க,

''போயிட்டு வரேன் அம்மா'' என்று சொல்லிக் கொண்டே மதுமதி வெளியேறினாள்.

''என்னங்க, போறது உங்க மருமகள் தானா?'' என்று தன் கணவர் சபாபதியிடம் கலா சந்தேகம் கேட்க,

''அந்த டவுட் எனக்கும் இருக்கு கலா. அவ எப்படி தெரியுமா வந்தா...'' என்று அவர் விளக்க முயல,

''எனக்கு தெரியுங்க. அவ வரும் போது நான் பார்க் கலை. ஆனால் உங்க தங்கச்சி எனக்கு போன் பண்ணி நடமாடும் கேஸ் அடுப்பு வருதுன்னு சொன்னாளே! அப்படி வந்தவ என்னைப் பார்த்து அத்தைக்கு பதிலா அம்மான்னு சொல்லிட்டுப் போறாள். உங்க பையன் வேப்பிலை அடிச்சி மந்திரிச்சு விட்டானோ?'' என்று சொல்லிவிட்டு கலா சிரிக்க, சபாபதியும் அந்த சிரிப்பில் கலந்து கொண்டார்.

கலா கடமையாய் தன் நாத்தனாரை போனில் அழைத்து, ''கீதா, உன் வீட்டிலே கொஞ்ச நேரத்துக்கு ஏ.சி போட்டு கரண்டை வேஸ்ட் பண்ணாதே. என் வீட் டுக்கு வந்த அடுப்பு இப்ப ஏ.சி யா மாறி உன் வீட்டுக்கே திரும்ப வந்துக்கிட்டு இருக்கு'' என்றதும்,

''என் மருமகனா கொக்கா!'' என்று கீதா, ஜீவாவை சிலாகித்துக் கொண்டார்.

தனது ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டு தன் வீட்டை நோக்கி பயணப்பட்ட மதுமதியின் பின்னால் அவளுக்கு தெரியாமல் ஜீவா பின் தொடர்ந்தான்.

கனவு லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டு வண்டியை ஒழுங்காக ஓட்டாமல் போய் விடுவாளோ என்று பயந்தே அவளைப் பின் தொடர்ந்தான்.

அவள் பத்திரமாக வீட்டுக்குள் நுழைந்ததும் நேரே தன் வீடு நோக்கிச் சென்றுவிட்டான்.

தனது அறைக்குள் நுழைந்த மதுமதி அந்தப் பரிசுப் பொருளைப் பிரித்துப் பார்க்க அதில் சாட்டின் துணியால் ஆன இரவு உடை ஒன்று இருந்தது. அதன் வேலைப்பாடும் வழுவழுப்புமே அதன் விலையைப் பறை சாற்ற,

''இவ்வளவு காஸ்ட்லியான நைட்டியா?! உனக்கு அறிவே இல்லைடா ஜீவா. பேசாமல் இந்தக் காசுக்கு நீ எனக்கு சுடிதார் வாங்கித் தந்து இருக்கலாம். வெளியே போட்டுக்கிட்டுப் போயிருப்பேன்'' என்று வாய் விட்டுப் புலம்பினாள்.

அந்த இரவு உடையை பத்திரப்படுத்தி விட்டு வெளியே சென்று தொலைக்காட்சியை பார்க்க ஆரம்பித்தாள்.

வீட்டு உறுப்பினர்கள் யாருமே ஜீவா வாழ்த்தினானா என்றோ, அவனின் பரிசு என்னவென்றோ விசாரிக்க வில்லை.

அவர்களுக்கு ஜீவாவின் பரிசு என்னவென்று தெரியாது. ஆனால் அவன் காலையில இருந்து அவளுக்கு வாழ்த்து சொல்லாமல் அவளை அலைக்கழிக்கிறான் என்ற விஷயம் மட்டும் தெரியும்.

அவர்கள் நால்வரும் சாப்பிட்டுக் கதை பேசி அவரவர் அறைக்கு தூங்கச் சென்றனர்.

தூங்குவதற்கென்று அறைக்குள் நுழைந்த மதுமதி அந்த இரவு உடையை அன்றே அணியலாம் என்று முடிவு செய்து அதை அணிந்தாள்.



கண்ணாடி முன் நின்று பார்த்தாள். ஆகாய நீலத்தில் இருந்த அந்த இரவு உடையில் தான் ஏதோ கடல் கன்னி போல இருப்பதாக அவளுக்கு பட்டது.

அந்த உடையை மெல்ல தடவிப் பார்த்தாள். அதன் மென்மையில் மெய் மறந்தாள்.

''சூப்பரா தான்டா இருக்கு!'' என்று ஜீவா தன் எதிரில் இருப்பது போல் சொல்லியவள் படுக்கையில் வந்து விழுந்தாள்.

தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுக்க அந்த உடையின் மென்மை அவளுக்கு சந்தோஷத்தை தந்தது. கூடவே ஒரு நினைப்பையும்.

ஜீவா கொடுத்த பரிசு என்னைத் தழுவிக் கொண்டு இருக்கா? இல்லை ஜீவாவே தானா?

மனதில் எழுந்த கேள்வி அவளைத் தாக்க அவள் படுக்கையில் எழுந்து அமர்ந்தாள்.

'அடடா நான் தூங்கின மாதிரி தான் போல! டேய் ஜீவா! இதானா உன் பிளான். ராத்திரி முழுசும் உன்னை பத்தியே நான் நினைச்சிக்கிட்டு இருக்கணும் என்று நினைச்சியா?

இல்லையில்லை... இன்னைக்கு முழு நாளுமே உன்னைத் தவிர நான் வேற எதைப் பத்தியும் யோசிக்கக் கூடாதுன்னு தானே காலையில் இருந்து என் கண்ணிலே படாமல் ஆட்டம் காண்பிச்சு இருக்கே!

சும்மா சொல்லக் கூடாதுடா ஜீவா. சத்தமில்லாமல் நீ நினைச்ச காரியத்தை சாதிக்கிறே! நான் கூட உன்னை என்னமோன்னு நினைச்சேன். ஆனா நீ...' என்று வியந்தாள்.

என்ன முயன்றும் தூக்கம் வருவதாய் இல்லை என்றதும் தன்னுடைய சிறு வயது புகைப்படங்களை எடுத்து வைத்துக் கொண்டு பார்வையிட ஆரம்பித்தாள்.

அந்த புகைப்படங்களில் இருந்த ஜீவாவை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

# 22



மறுநாள் காலை எழுந்து கல்லூரிக்கு வழக்கம் போல் மதுமதி கிளம்பினாள்.

''அம்மா, நான் இன்னைக்கு பஸ்ஸிலே காலேஜ் போறேன்'' என்றாள்.

அவள் அவ்வப்பொழுது பேருந்தில் போய் வருவதால் கீதா அதை பெரிதுபடுத்தவில்லை.

''அப்புறம் இன்னைக்கு நான் வர கொஞ்சம் லேட்டாகும்.''

''ஏன்? என்ன விஷயம்?'' என்று கீதா விசாரித்தார்.

'பிரண்ட்ஸோடு வெளியே போகிறேன் என்று சொன்னால் நேற்று தானே போனாய் என்று சொல்லி தன்னை தடுத்துவிடுவார்' என நினைத்த மதுமதி,

''காலேஜிலே பிராஜெக்ட் விஷயமா கொஞ்சம் வேலை இருக்கும்மா'' என்றாள்.

கீதா மதுமதியை நம்பினார். அதனால் அதற்கு மேல் தோண்டித் துருவவில்லை.

முதல் நாள் மதுமதி ஜீவாவிடம் இருந்து பிறந்த நாள் வாழ்த்து வராததால் தவித்துத் திண்டாடிப் போனதைப் பார்த்திருந்த கீதா, 'இன்று மதுவிடம் திருமண விஷயமாகப் பேசினால், அவள் ஜீவாவைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதிப்பாள் என கணக்குப் போட்டார்.

கீதா அதன் விடையை உடனே தெரிந்த கொள்ள முயல்பவராய், ''மது, நீ ஜீவாவை கல்யாணம் பண்ணுறதை பத்தி என்ன நினைக்கிறே?'' என்று கேட்டார்.

''அதான் அன்னைக்கே சொன்னேன் இல்லம்மா... இப்ப எதுக்கு காலேஜுக்கு கிளம்பும் போது இந்தப் பேச்ச?'' என்று சொல்லிக் கொண்டே திரும்ப அங்கே ஜீவா நின்றிருந்தான்.

''இல்லை மது...'' என்று கீதா ஏதோ சொல்ல வர,

''அத்தை, எனக்கு ஒரு காபி தாங்க'' என்று அவரைப் பேச விடாமல் தடுத்து சமையலறைக்கு அனுப்பி வைத்தான்.

ஜீவா கவலை தோய்ந்த முகத்துடன் அமைதியாக அமர்ந்திருக்க, மதுவிற்கு அவனைப் பார்க்கவே பாவமாக இருந்தது. எதுவா இருந்தாலும் மாலையில் பேசிக் கொள்ளலாம் என நினைத்தாள்.

அவள் சாப்பிட்டு முடித்துக் கிளம்பும் பொழுது ஜீவா, ''என்ன மது வண்டியிலே போகலையா? இன்னைக்கு பஸ்ஸா?'' என்று கேட்டான்.

''ஆமா ஜீவா'' என்றதும்,

''என் கூட வா. நான் உன்னை பஸ் ஸ்டாண்டிலே டிராப் பண்ணுறேன்'' என்று அவளை அழைத்துச் சென்றான்.

அன்று மாலை மதுமதி தோழிகளிடம் எந்த விவரமும் தெரிவிக்காமல், நிதிஷ் சொல்லி இருந்த அந்த ஹோட்டலுக்கு ஆட்டோவில் வந்து இறங்கினாள்.

அவள் தயங்கிக் கொண்டே உள்ளே நுழைய... அங்கே ஏற்கனவே நிதிஷ் வந்து மதுமதிக்காகக் காத்திருந்தான்.

அந்த ஹோட்டலில் வேலை பார்க்கும் சர்வர் ஒருவன் நிதிஷிற்கு வேண்டப்பட்டவன். அவன் இவர்களுக்கு கொண்டு வரும் பானத்தில் மாத்திரையை கலப்பதாக ஏற்கனவே நிதிஷிற்கு வாக்கு அளித்திருந்தான்.

''என்ன சாப்பிடுறே மதுமதி?'' என்று நிதிஷ் அவளிடம் கேட்டான்.

அவன் தன்னை ஒருமையில் அழைப்பது மதுமதிக்கு புரிந்த போதும், அவள் அதை ஆட்சேபிக்கவில்லை.

''ஈவினிங் டைமிலே எனக்கு சாப்பிட்டுப் பழக்கமில்லையே!''

''அப்போ ஜூஸ் இல்லைன்னா காபி குடிக்கிறியா?''

''ம்ம்ம் சரி ஜூஸ் குடிக்கிறேன்'' என்றதும் நிதிஷிற்கு சந்தோஷம் தாங்கவில்லை.

தன் வேலை இன்று சுலபமாய் முடிந்துவிடும் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்தது.

''ஓ.கே ஜூஸ் குடிக்கலாம். உனக்கு என்ன ஜூஸ் வேண்டும்?''

''எனக்கு சாத்துக்குடி ஜூஸ்.''

அவன் தனக்கு தெரிந்த அந்த சர்வரிடம், ''ஒரு சாத்துக்குடி ஜூஸ். அப்புறம் ஒரு மாதுளை ஜூஸ் கொண்டு



தனக்கும் அவளுக்கும் வெவ்வேறு ஜூஸ் சொன்னால் தான் பார்க்கும் பொழுதே வித்தியாசம் கண்கூடாகத் தெரியும். இல்லை என்றால் தவறிப் போய் மாத்திரை கலந்த பழச்சாறை தான் பருகிவிட்டால் காரியம் கெட்டுவிடும் என்பதால் அவன் எப்பொழுதுமே அது மாதிரி தான் கொண்டு வரச் சொல்லுவான்.

மதுமதியின் வீட்டில் கீதா தனக்குள், ''என்னமோ இன்னைக்கு காலையில் இருந்து மனசே சரியில்லை. இன்னைக்குன்னு பார்த்து ஒருத்தரும் வீடு வந்து சேரலை'' என்று புலம்பிக் கொண்டிருந்தார்.

பூஜை அறைக்குச் சென்று விளக்கேற்றி வைத்து விட்டு ஸ்கந்த குரு கவசம் சொல்ல ஆரம்பித்தார்.

காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்த குரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி

சர்வர் பத்து நிமிடங்கள் கழித்து அந்த பழச்சாறை கொண்டு வந்து தந்தான்.

மதுமதி அதை கையில் வைத்துக் கொண்டே நிதிஷிடம் இரு நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தாள்.

''குடி மதுமதி'' என்று அவன் சொல்லவும், முறுவலித்துக் கொண்டே அதைப் பருகினாள்.

பத்து நிமிடங்கள் போல் இருவரும் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

''கிளம்பலாமா?'' என்று நிதிஷ் கேட்கவும்,

''கிளம்பலாம். லேட்டானால் எங்க அம்மா திட்டு... சொன்னாள்.

அப்பொழுது நிதிஷின் கைப்பேசி சிணுங்கியது. அவன் அதை இயக்கி பேசிக் கொண்டே நடந்தான்.

மதுமதியின் நடை தடுமாறியது. அவள் அருகில் இருந்த மேஜையை பிடித்துக் கொண்டு நின்றாள்.

நிதிஷ் போனில், ''மாத்திரை வேலை செய்ய ஆரம்பிச்சுடுச்சுடா. சக்சஸ்'' என்றான்.

கைப்பை மற்றும் அவளது பொருட்களை பத்திரமாக எடுத்துக் கொண்டான். இங்கேயே விட்டுச் சென்று அதனால் ஏதும் தொல்லை வந்துவிடக் கூடாதே என்ற முன் ஜாக்கிரதையாகச் செயல்பட்டான்.

அவளைக் கைப்பிடித்து வெளியே அழைத்துச் சென்றான்.

''என் காரிலே உன்னை வீட்டிலே கொண்டு போய் விடுறேன்'' என்றான்.

மதுமதி அவன் சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் தலையாட்டி பொம்மை ஆனாள்.

அவளைத் தன் காருக்கு இட்டுச் சென்றவன் அவளை முன் இருக்கையில் அமர வைத்துவிட்டு ஓட்டுநர் இருக்கையில் சென்றமர்ந்து தனது ரகசிய இடத்திற்கு வண்டியை செலுத்தினான்.

கீதா மனக் குழப்பத்தில் இருந்ததால் பூஜை அறையிலேயே அமர்ந்து தொடர்ந்து முருகனை துதித்துக் கொண்டிருந்தார்.

அபயம் அபயம் கந்தா அபயமென் றலறுகின்றேன்
அமைதியை வேண்டி அறுமுகா வா வாவென்றேன்
உன் துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்

வண்டி நிதிஷின் அந்த ரகசிய வீட்டில் சென்று நின்றது. நிதிஷ் மயக்கத்தில் இருந்த மதுமதியை உள்ளே அழைத்துச் சென்றான்.

அது ஒரு சிறிய வீடு. ஒரு பெரிய அறையும், கழிப்பறையும் மட்டுமே இருந்தது.

அவர்கள் புகைப்படம் எடுப்பதற்கும், அது சம்பந்தமானவற்றை பதுக்கி வைப்பதற்கு மட்டுமே அதை பயன்படுத்தி வந்தனர்.

அதனால் அந்த அறையில் ஒரு படுக்கையும், புகைப்படம் எடுப்பதற்கு தேவையான உபகரணங்களும் ஒரு கணினியும் இருந்தன.

நிதிஷ் மதுமதியை அந்த படுக்கையில் படுக்க வைத்தான்.

''என்னடா எல்லாம் ரெடியா?'' என்று நிதிஷ் தன் நண்பனைப் பார்த்துக் கேட்க,

''இல்லைடா மச்சான். ஒரு போன் வந்துச்சு... அதான். முறைக்காதே மச்சான். இதோ இப்ப ரெடி பண்ணிடுறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவன் புகைப்படம் எடுப்பதற்கு வேண்டியவற்றை தயார் செய்ய ஆரம்பித்தான்.

ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரணமடைந்திட்டேன் சந்நிதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னருளாலே நான் உயிரோடிருக்கின்றேன்

''என்னடா இப்படி லேட் பண்ணுறே?'' என்று நிதிஷ் கத்திக் கொண்டிருக்கும் போதே யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

யாராயிருக்கும் என்று அவர்கள் தங்களுக்குள் சைகை மொழியில் பேசிக் கொண்டனர்.

தொடர்ந்து விடாமல் கதவு தட்டப்படவும் நிதிஷ் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

"சார், ஹிந்து பேப்பர் தமிழிலே வர ஆரம்பிச்சிருக்கு. அதோட ஒரு வருஷ சப்ஸ்கிரிப்ஷன் உங்களுக்கு வேண்டுமா?" என்று ஒருவன் விசாரிக்க,

"அதெல்லாம் வேண்டாங்க" என்று நிதிஷ் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே திமுதிமுவென்று துப்பாக்கி ஏந்திய ஆறு போலீசார் நிதிஷை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

நிதிஷிற்கு உள்ளூர பயம் ஆட்டிப் படைத்தாலும் வெளியே தைரியமாக,

"எதுக்கு சார் இத்தனை பேர் என் வீட்டுக்குள்ளே அத்துமீறி நுழையுறீங்க? உங்களுக்கு என்ன வேண் டும்?" என்று கேட்டான்.

"இங்க என்னடா பண்ணுறீங்க?" என்று ஒரு போலீஸ் ஆபீசர் கேட்கவும்,

"என் தங்கச்சிக்கு உடம்பு சரியில்லை" என்று நிதிஷும் அவன் நண்பனும் ஒரே நேரத்தில் ஒரே பொய்யை சொல்ல,

"யாரோட தங்கச்சிடா?" என்று அவர் மிரட்ட,

இருவருமே ஒரே சமயத்தில் அடுத்தவனை கை காட்ட,

"என்னடா விளையாடுறீங்களா? உடம்பு சரி இல்லாத [illegible]



எதுக்குடா கேமரா ஸ்டாண்ட், லைட் எல்லாம் செட் பண்ணி வைச்சிருக்கீங்க? உங்க தில்லுமுல்லு எல்லாம் தெரிஞ்சு தான் வந்திருக்கோம். பாதிக்கப்பட்டவங்க கொடுத்த புகாரின் பேரிலே உன்னை நாங்க ஃபாலோ பண்ணி வளைச்சு பிடிச்சிருக்கோம். இனிமேல் தப்பிக்க முடியாது" என்று சொல்லி அவர்கள் இருவருக்கும் விலங்கிட்டனர்.

"கொழுப்பெடுத்து இத்தனை நாளா நீங்க செஞ்ச வேலைக்கு உங்க தோலை உரிச்சு நாங்க உப்பு கண்டம் போடலை..." என்று மிரட்டிக் கொண்டே அழைத்துச் சென்றனர்.

நான்கு போலீஸ்காரர்கள் மற்றும் இரண்டு கைதி களுடன் அந்த ஜீப் புறப்பட்டது.

இரு போலீசார் அந்த அறையில் உள்ள குறுந்தகடுகள், புகைப்படங்கள் கேமராக்கள் போன்றவற்றை கைப்பற் றினர்.

"மதுமதி, நீங்க எழுந்துக்கலாம்" என்று ஒரு போலீஸ் காரர் சொன்னதும் மதுமதி எழுந்து அமர்ந்தாள்.

"வொன்டர் புல் ஆக்டிங்" என்று அவர்கள் மதுமதியை பாராட்டினார்கள்.

"என்ன நடக்குமோன்னு பயந்துட்டீங்களா?" என்று அவர்கள் கேட்க,

"இல்லை சார். நீங்க சரியான நேரத்துக்கு வந்துடுவீங் கன்னு எனக்கு நம்பிக்கை இருந்துச்சு. அப்படியே இல்லைன்னாலும் பெப்பர் ஸ்பிரேயை யூஸ் பண்ணச் சொல்லி அதை கொடுத்து இருந்தீங்களே. அது என் சுடிதார் பாக்கெட்டிலே இருந்துச்சு.

என்று இந்த டிரஸ் வாங்கின அன்னைக்கு நான் கிண்டல் பண்ணி சிரிச்சேன். ஆனா அது எவ்வளவு உபயோகமானதுன்னு இன்னைக்கு தெரிஞ்சுக்கிட்டேன்.''

''ரொம்ப நன்றிம்மா'' என்று சொல்லி அவளை தங்களுடன் காரில் அழைத்துச் சென்றனர்.

மெயின் ரோடு வந்ததும் அவளை இறக்கிவிட்டனர்.

மதுமதி அந்தச் சாலையில் இரண்டு நிமிடங்கள் நடப்பதற்குள், ''ஹேய் மது! நீ எங்கே இங்கே?'' என்று அவளது ஸ்கூட்டி பெப்பை ஓட்டியபடி அருண் வந்து நின்றான்.

''டேய் அருண்! நல்ல வேளை. நீ இங்கே வந்தாய்'' என்று சொல்லி அவன் பின்னால் ஏறிக் கொண்டாள்.

''அருண், வண்டியை நேரா கோவிலுக்கு விடு. அதுக்கு அப்புறமா வீட்டுக்கு போகலாம்'' என்று சொன்னவள் தனது கைப்பேசியை இயக்கி தனது தாயை அழைத்தாள்.

''மது, எங்கே இருக்கே? இன்னும் ஏன் வீட்டுக்கு வரலை? நான் எவ்வளவு பதட்டமா இருக்கேன் தெரியுமா? காலையிலே இருந்து எனக்கு மனசே சரியில்லை. இன்னைக்குன்னு பார்த்து நீங்க மூணு பேருமே வீட்டுக்கு வரலை. இப்ப தான் அப்பா போன் பண்ணினார். நான் உனக்கு போன் பண்ணும் முன்னாடி நீயே பண்ணிட்டே'' என்று மதுமதி பேச வாய்ப்பே தராமல் கீதா படபடத்தார்.

''அம்மா, ரிலாக்ஸ் பண்ணிக்கோங்க. நான் அருண் கூட வண்டியிலே வந்துக்கிட்டு இருக்கேன். சீக்கிரமா வந்திடுவோம். கோவிலுக்கு போயிட்டு வரட்டுமா?'' என்று அனுமதி கேட்டாள்.

''அருண் உன் கூட இருக்கானா? அப்ப சரி. கோவிலுக்கு போயிட்டு வாங்க'' என்று கூறி அழைப்பை துண்டித்தார்.

''எல்லாம் என் நேரம்டா. நீ என்னை விட மூணு வயசு சின்னப் பையன்... நீ எனக்கு காவலாம். ஷப்பா! என்னால இதை ஒத்துக்க முடியலை'' என்று அங்கலாய்த்தாள்.

அருண் பதில் ஒன்றும் சொல்லவில்லை என்றதும், ''என்னடா என் கூட சண்டை போடுவேன்னு பார்த்தேன். சைலன்ட்டா இருக்கே'' என்று ஆச்சரியப்பட்டாள்.

''இப்ப நான் வண்டியை ஒழுங்கா ஓட்டவா, வேண்டாமா?''

''டேய்! ஆமாடா பார்த்து ஓட்டு. நான் எங்க அப்பாக்கும், என்னோட ரெண்டு அம்மாக்களுக்கும் ஒரே பொண்ணு. உனக்கு ஒரே அக்கா. ஜீவாக்கு ஒரே ஒரு பொண்டாட்டி'' என்றதும் அருண் வண்டியை சடன் பிரேக்கிட்டு நிறுத்தினான்.

''ஹேய் மது! தட் இஸ் அ கிரேட் நியூஸ். நீ கண்டிப்பா ஒத்துக்குவேன்னு எனக்கு தெரியும்'' என்று சந்தோஷ கூச்சலிட்டவனிடம்,

''சார், இது ரோடு. கொஞ்சம் வண்டியை எடுக்கறீங்களா?'' என்று சொல்லி அவனை வண்டியை கிளப்ப வைத்தாள்.

கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் முடிந்த பின் வண்டியில் ஏறிய மது, ''அருண், என்னை மாமா

வீட்டிலே விடுறியா? எனக்கு ஜீவாவை பார்க்கணும்" என்றதும்,

"சரிக்கா" என்றவன் நேராக தன் மாமாவின் வீட்டை நோக்கி வாகனத்தை செலுத்தினான்.

செல்லும் வழியில் மதுமதி அன்று மாலையில் நடந்ததை சுருக்கமாக அவனுக்கு விசாரிக்க...

அருண், "உனக்கு அவ்வளவு துணிச்சலா மதுக்கா?" என்று வியந்தான்.

மாமாவின் வீட்டில் இறங்கிக் கொண்டவள், "நீ வீட்டுக்கு போடா. நான் ஜீவா கூட வந்துடுறேன். நேரா வீட்டுக்கு போ. வழியிலே பிரண்டு கூடப் பேசிக்கிட்டு இருந்தேன் என்று நின்னுடாதே. அம்மா ரொம்ப டிஸ்டர்ப்பா இருக்காங்க" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தாள்.

## 23



"ஹாய் அத்தை! என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?" என்று கேட்டுக் கொண்டே உற்சாகமே உருவாய் மதுமதி ஜீவாவின் வீட்டிற்குள் நுழைந்தாள்.

"பெருசா ஒண்ணும் இல்லை. சும்மா போட்டோ பார்த்துக்கிட்டு இருக்கேன்" என்று கலா சொன்னதும்,

"போட்டோவா? என்ன போட்டோ அத்தை? யாரோடது? தாங்க. நானும் பார்க்கிறேன்" என்றாள்.

"நம்ம ஜீவா கல்யாணத்துக்கு... பொண்ணுங்க போட்டோ சிலதை தரகர் கொண்டு வந்து கொடுத்தார்" என்று கலா சில புகைப்படங்களை காட்டினார்.

"ஹை! அப்படியா... கொண்டாங்க நானும் பார்க்கிறேன்" என்று அவரிடம் இருந்து அவள் அந்த போட்டோவை வாங்கி ஒவ்வொன்றாக பார்வையிட ஆரம்பித்ததும்,

கலா தன் கணவரைப் பார்த்து, 'என்னங்க இவள் இப்படி சந்தோஷமா இருக்காள்?' என்று ஜாடை காட்ட,

அவர், 'எனக்கும் ஒண்ணும் புரியலையேம்மா!' என்பது போல் உதட்டைப் பிதுக்கினார்.

மதுமதி புகைப்படங்களை பார்வையிடுவதை நிறுத்தி விட்டு தனது அத்தை மற்றும் மாமாவின் சைகை பாஷையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். தனக்குள் சிரித்துக் கொண்டவள்,

"அத்தை, இந்த தொலை நோக்கு பார்வை வேணும் என்று பெரியவங்க சொல்லி கேள்விப்பட்டிருக்கேன். ஆனால் இவ்வளவு தொலை நோக்கு பார்வையை இப்ப தான் பார்க்கிறேன்" என்றதும்,

கலா மற்றும் சபாபதி இருவருமே ஒன்றும் புரியாது விழித்தனர்.

"என்ன புரியலையா? இல்ல உங்க பையனுக்கு அடுத்த ஜென்மத்துக்கு இப்பவே பொண்ணு பார்க்கிறீங்களே... அதைச் சொன்னேன்" என்று படு நக்கலாகக் கூறினாள்.

"நீ என்ன சொல்ல வர மது?"

''ம்ம்ம் நேத்து நீங்க செஞ்சு அனுப்பிய குழம்பிலே உப்பு பத்தலைன்னு சொல்லுறேன்'' என்று அப்பொழுதும் இடக்காகவே பதில் சொல்லியவள்,

''இந்த ஜென்மத்திலே மணமேடையில் எவளாவது என் ஜீவா பக்கத்திலே உட்கார்ந்திடுவாளா? இல்ல நான் உட்கார விட்டுவிடுவேனா? போங்க அத்தை. வேற வேலை ஏதாச்சும் இருந்தா போய் பாருங்க'' என்றதும்.

''ஹே மது! அப்படின்னா நீ நம்ம ஜீவாவைக் கட்டிக்கிறேன் என்று சொல்லுறியா?!'' என்று கலா ஆவலே உருவாகக் கேட்டார்.

''அத்தை, உங்களுக்கு புரிய வைக்கிறதுக்காக என்னால உலகத்திலே உள்ள மொழிகளில் எல்லாம் சொல்ல முடியாது. எனக்கு தெரிஞ்ச தமிழில் சொல்லுறேன். நல்லா கேட்டுக்கோங்க. மாமா நீங்களும் தான்'' என்று சபாபதியை பார்த்துச் சொன்னவள்,

''நான் ஜீவாவைக் கல்யாணம் பண்ணிக்க போறேன். கல்யாணம் பண்ணிக்க போறேன். போதுமா?'' என்றதும்.

''ஏங்க நம்ம ஐடியா வேலை செஞ்சிடுச்சு பார்த்தீங்களா?'' என்று கலா பெருமைப்பட,

''எது அத்தை... இந்த கல்யாண பொண்ணு போட்டோ காட்டின உங்க இத்துப் போன ஐடியாவா? இதை விடக் கேவலமா... அரத பழசா ஒரு ஐடியாவை உங்களால கண்டுபிடிக்க முடியலையா? இந்த ஐடியாவை சொன்னது யாரு? எங்க அம்மா தானே?'' என்றதும்,

''ஆமா...'' என்று சுருதி இறங்கிய குரலில் கலா கூற.

''அத்தை, உங்க நாத்தனார்கிட்டே சொல்லுங்க... உன் பொண்ணு... அதாவது என் கூட சேர்ந்து கொஞ்சமாச்சும் புத்திசாலியா மாறச் சொல்லுங்க'' என்று கிண்டல் பண்ணினாள்.

''என்ன மது இப்படிச் சொல்லிட்டே?'' என்று சபாபதி பாவமாகக் கேட்க,

''என்ன மாமா உங்க தங்கச்சியை சொன்னதும் பாசம் பீறிக்கிட்டு வருதா? உண்மையை தானே மாமா சொன்னேன்'' என்று கண்ணடித்துக் கொண்டே கூறியவள்,

''நான் இந்த முடிவை உங்ககிட்டே சொல்லணும் என்ற முடிவோட தான் வந்தேன். அதனால உங்க போட்டோ ஐடியாவால தான் நான் என் மனசிலே உள்ளதைச் சொன்னேன் என்று நினைச்சு பெருமைப் பட்டுக்காதீங்க.

விஷயம் என்னவென்று கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அருண் கிட்டே சொன்னேன். அவன் போய் எங்க வீட்டிலே சொல்லி இருப்பான். அவங்களே உங்களைக் கூப்பிட்டு சொல்லுவாங்க. நீங்க அவங்ககிட்டேயே கேட்டுக்கோங்க. நான் ஜீவாவைப் பார்த்திட்டு வரேன். அவன் எங்கே அத்தை?'' என்று கேட்டதும்,

''மாடியில் அவன் ரூமில் இருக்கான் மது. என் முன்னாடியாவது அவனை கொஞ்சம் மரியாதையா கூப்பிடக் கூடாதா?'' என்று கலா பரிதாபமாகக் கேட்க,

''அது ரொம்ப கஷ்டமாச்சே அத்தை. வெளி ஆளுங்க முன்னாடின்னா அதுவே தன்னால மரியாதை வந்திடும். நம்ம வீட்டு ஆளுங்க முன்னாடி...'' என்று உதட்டைப் பிதுக்கியவள்,

[illegible] முயற்சி பண்ணுறேன். நோட் மை பாயிண்ட் அத்தை. முயற்சி பண்ணுறேன்'' என்று சொல்லிவிட்டு மடமடவென்று படி ஏறிப் போனாள்.

''ஜீவா... ஜீவா!'' என்று கூப்பிட்டுப் பார்த்தாள். பதில் ஒன்றும் வரவில்லை என்றதும் கதவைத் தட்டுவோம் என்று நினைத்து கை வைக்கவும், அது திறந்து கொண்டது.

உள்ளே ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு மேலே விட்டத்தை வெறித்த வண்ணம் ஜீவா அமர்ந்திருந்தான்.

சப்தம் எழுப்பாமல் அவன் அருகே சென்றவள் அவனை மாதிரியே மேல் நோக்கிப் பார்த்தாள்.

அருகே அரவம் உணர்ந்தவன் நிமிர்ந்து நேராக அமர்ந்து கொண்டு, ''வா மதி!'' என்றான்.

''ஹேய் ஜீவா! மேலே என்ன தெரியுது? எனக்கு ஒண்ணும் தெரியலை'' என்றாள்.

அவன் அமைதியாக இருக்க...

''என்னை வெளியே போன்னு சொல்லுவே என்று பார்த்தேன். வான்னு கூப்பிடுறியே. பரவாயில்லை'' என்று சொன்னாள்.

அதற்கும் அவன் பதில் சொல்லாமல் அமைதியை கடைபிடிக்க,

''ஜீவா, இப்படி சோகமா இருக்காதேடா. உன்னைப் பார்க்க சகிக்கலை'' என்றாள்.

''நான் எப்படி இருந்தால் உனக்கென்ன?'' என்று முணுமுணுத்தாள்.

[illegible] சத்தமா சொல்லு. கீழே அத்தை என்னடான்னா உனக்கு பொண்ணு பார்க்க போக ரெடியாகிட்டு இருக்காங்க.

நீ இப்படி அழுது வடிஞ்சுகிட்டு போய் நின்னால் எந்த பொண்ணாவது உன்னைக் கல்யாணம் பண்ண ஓ.கே சொல்லுவாளா? அந்த பொண்ணை விடு. அந்த வீட்டிலே வேலை செய்யுற வேலைக்காரி கூட உன்னை வேண்டாம் என்று சொல்லிடுவாள்'' என்று வெறுப்பேத்த,

ஜீவா கடுப்பானான். சரேலென எழுந்தவன் அங்கிருந்து நகர ஆரம்பிக்க,

அவனைத் தடுப்பதற்காக அவனது கையை பிடித்து அவள் இழுக்க அவன் அதை எதிர்பாராததால் கீழே விழ இருந்தான். இருவரும் மற்றவரை பிடித்துக் கொண்டு தங்களை நிலைபடுத்திக் கொண்டனர்.

அவளது மதி முகம் ஜீவாவின் வெகு அருகில் இருக்க... அவன் தனது கண்களை அகற்றாது அவளையே [illegible] விழி வைத்தபடி பார்த்துக் கொண்டு இருந்தான்.

''ஏன் ஜீவா இந்த சினிமாவிலே எல்லாம் காட்டுவாங்க இல்ல... ஒருத்தரோட ஒருத்தர் மோதியதும் மின்சாரம் பாய்ந்தது அப்படி இப்படின்னு... உனக்கு ஏதாச்சும் அப்படி தோணுச்சா?'' என்று அவனைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டே கேட்க,

ஜீவா தன் வசமிழந்தான்.

அவளை இறுக்கி அணைத்தான். அவளைத் தனக்குள்ளே புதைத்துக் கொள்பவனாய் அவனது அணைப்பு மேலும் மேலும் இறுகிக் கொண்டே போனது.

சற்று முன்பு கூட சினிமா பற்றியெல்லாம் கிண்டல் செய்த மதுமதியும் பேச்சற்று போனாள்.

இது தான் தனக்கான இடம் என்று மனம் உறுதிபட கூறியதால் அவனை விட்டு விலக முயற்சி எடுக்காது அவனது அணைப்பில் கட்டுண்டு நின்றாள்.

அவளது கூந்தலில் முகம் புதைத்தவன் தவிப்புடன், ''மது...'' என்று குரல் குழைய கூப்பிட மது கிறங்கினாள்.

இத்தனை நாளாக தன்னை அவன் மது என்று ஏன் கூப்பிட வில்லை என்று கேள்வி கேட்டவளுக்கு இன்று அவன் அவ்வாறு கூப்பிட்டதும் உலகம் மறந்தது.

''ஒருவேளை மதுன்னு கூப்பிட்டு என்னை இப்படி இறுக்கி அணைச்சு என்னைக் கல்யாணம் பண்ணிக் கிறியா என்று கேட்டிருந்தால் அன்னைக்கே சரின்னு சொல்லி இருப்பேனோ?!'' என்று அவள் கேட்டதும் ஜீவா அவளை படக்கென்று விடுவித்தான்.

அவளது பேச்சு அவனை இவ்வுலகிற்கு கூட்டி வந்தது. ஆனால் அவளது பேச்சின் கருத்து அவனது மூளையைச் சென்று அடையவில்லை.

மாறாக தன்னைத் திருமணம் செய்ய மறுத்த ஒரு பெண்ணை எப்படி நான் அணைத்தேன்? என்ன காரியம் செய்துவிட்டேன்? என்று மறுகினான்.

அவள் முகத்தில் விழிக்க பயந்தவனாய் அங்கிருந்து செல்ல முற்பட... அவனது கைப்பேசி கிணுகிணுத்தது.

தனது பேண்டில் இருந்து அதை வெளியே எடுத் தான். போன் பேசுவதற்காக வெளியே செல்வது போல் காட்டலாம் என்று நினைத்தவன் அதை இயக்கி காதில் வைத்து உற்சாகமே இல்லாமல், ''ஹலோ!'' என்...

அந்த பக்கம் அருண் அதிக உற்சாகத்துடன், ''கங்கி ராட்ஸ் அத்தான். இப்போ சந்தோசமா? மது உங்களைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சுட்டாளே... சந்தோசத் திலே மிதக்குறீங்களா அத்தான்?'' என்று கேட்டதும் சரேலெனத் திரும்பி மதுமதியை வியப்புடன் பார்த்தான்.

அவளது முகத்தில் தெரிந்த சந்தோஷம் அவனுக்கு ஆயிரம் கதைகள் சொல்லியது.

மது அவனது கையில் இருந்த கைப்பேசியை பறித்து அழைத்தது யாரென்று பார்க்க அருண் என்று தெரிந் ததும்,

''டேய் முந்திரிக் கொட்டை! உன்னை யாருடா அதுக்குள்ளே போன் பண்ணச் சொன்னது?'' என்று கேட்டாள்.

ஜீவா சிறிது நேரத்திற்கு முன் அவள் கேட்ட கேள்வி என்னவென்று சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவளது கேள்வி பளிச்சென்று மனதில் உதயமானது. இப்பொழுது அவன் அவளிடம் இருந்து கைப்பேசியை பறித்து அதை அணைத்து படுக்கையில் வீசி எறிந்தவன் மதுமதியை இழுத்து அணைத்தான்.

''மது! மது!'' என்று அவனது வாய் விடாமல் உச் சரித்துக் கொண்டே இருந்தது.

அவளுக்குமே அவனது அணைப்பு தேவைப் பட்டதால் சிறிதுநேரம் அவனுடன் ஒன்றிக் கொண்டு இருந்தாள். ஆனால் விடுவிக்கும் எண்ணம் அவனுக்கு இல்லை என்றதும்,

''அத்தான், போதும். விடுங்க'' என்று முணுமுணுத் தாள்.

அவளது பேச்சைக் கேட்டு அவனது அணைப்பை விலக்கியவன் தனது கைகளால் அவளது முகம் தாங்கி தொடர் முத்தங்களைப் பதித்தான்.

அவள் திக்குமுக்காடிப் போனாள். அவளது இதழிலும் நீண்ட முத்தம் பதித்த பின்பே அவளை விடுவித்தான்.

"ஜீவா, உன்னை எல்லோரும் ரொம்ப நல்ல பிள்ளைன்னு சொல்லிக்கிட்டு இருக்காங்க. நீ என்னடான்னா..." என்று அவள் சிணுங்கிக் கொண்டே அவனிடம் இருந்து விலக,

"மத்தவங்க நினைப்புக்கு நான் எப்படி மது பொறுப்பாவேன்?" என்று கேட்டான்.

# 24



தன் மனம் கவர்ந்தவள் தன்னை திருமணம் செய்ய ஒத்துக் கொண்டாள் என்ற விஷயம் ஜீவாவிற்கு அதிக உற்சாகத்தை கொடுத்தது.

"சொல்லுங்க மேடம். திடீர்ன்னு எப்படி மனசு மாறினீங்க?" என்று அவளைக் கேலியாகக் கேட்டுக் கொண்டே கைபிடித்து அழைத்துக் கொண்டு சோபாவில் அமர, அவளும் அவன் அருகில் அமர்ந்தான்.

"திடீர்ன்னு ஒண்ணும் மாறலை. உன்னை என்னால யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாதுன்னு எனக்கு புரிஞ்சு தான் இருந்தது. ஆனால் உன் மேலே



நான் வைச்சிருக்கும் அன்பு கூடவே வளர்ந்ததால உண்டான பாசமா அல்லது அதுக்கும் மேலவா என்று குழம்பிக் கொண்டு இருந்தேன்.

அன்னைக்கு நான் மஞ்சும்மா பொண்ணுன்னு உண்மை தெரிஞ்ச அன்னைக்கு... நீ தானே என்னை வழியில பார்த்து வீட்டுக்கு கூட்டிட்டு வந்தே! நான் கூட என் பிரண்டோட சண்டைன்னு சொன்னேன் இல்ல. அது பொய், அன்னைக்கு என்ன நடந்துச்சு தெரியுமா?

அந்த நிதிஷ் இருக்கானே... அவன் யாருன்னு உனக்கு தெரியுமா? பொண்ணுங்களுக்கு போதை மாத்திரை கொடுத்து அவங்களை ஆபாசமா போட்டோ, வீடியோ எடுத்து நெட்டிலே உலவ விடுற ஆசாமி!" என்றதும், அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவனது இதயத் துடிப்பு தாறு மாறா எகிறியது மதுமதிக்கு புரிந்தது. இதுக்கே இப்படி பயப்படுறானே என்று மதுமதி எண்ணிக் கொண்டாள்.

"அத்தான், அதான் நான் நல்லா இருக்கேனே. எனக்கு ஒண்ணும் ஆகலை. இப்போ எதுக்கு இப்படி நடுங்குறீங்க?" என்றதும்,

"புத்திக்கு புரியுதுடா மது. ஆனா மனசு கேட்க மாட்டேங்குது" என்றவன் அவளை தன் மேல் சாய்த்துக் கொண்டு அமைதியாய் இருந்தான்.

"ம்ம் மேலே சொல்லு."

"நீ என்னை வழியில பார்த்து வீட்டுக்கு கூட்டிட்டு வந்த அன்னைக்கு... நானும் என் பிரண்ட்ஸ் ரெண்டு பேரும் ஒரு மாலுக்கு போயிருந்தோம். என் பிரண்ட்ஸ் ஷாப்பிங்கில் மூழ்கிப் போயிட்டாங்க. நான் அந்த மால்'ஐ சுத்தி வந்தேன்.

அப்போ நான் நிதிஷை அந்த மாலில் பார்த்தேன். அவன் என்னைப் பார்க்கலை. அவன் யார்கிட்டவோ போனில் பேசுவதை நான் கேட்டேன். அவன் யாரு, எப்படிப்பட்டவன் என்பதை தெரிஞ்சுக்கிட்டேன்.

நான் அப்படியே நடுங்கிப் போயிட்டேன். அன்னைக்கு நான் இருந்த நிலையை இப்ப நினைச்சுப் பார்த்தா கூட நடுக்கமா இருக்கு. அவன் என்னை பார்க்கும் முன்னாடி அந்த இடத்தில் இருந்து ஓடி வந்திட்டேன்.

நாம ஒரு இக்கட்டில் மாட்டிக்கிட்டோம் என்றால் ஒண்ணு கடவுளை நினைப்போம். இல்லைன்னா மனசுக்கு நெருக்கமானவங்களை நினைப்போம்.

எனக்கு எங்க அம்மா, அப்பா, அருண் இவங்க யார் நினைவும் வரலை. நான் உன்னை மட்டுமே மனசிலே நினைச்சு பார்த்தேன்.

ஜீவா தப்பிச்சுட்டேன். நான் தப்பிச்சுட்டேன் ஜீவா, என்று சொல்லிக்கிட்டே வந்தேன். நீ சரியா என் எதிரே வந்து நின்றாய். உன்னைப் பார்த்ததும் என் மனசிலே ஒரு நிம்மதி பரவுச்சு பாரு... நடுரோடுன்னு கூடப் பார்க்காமல் உன்னைக் கட்டிப் பிடிச்சுக்கணும் என்று தோணுச்சு.

அப்போ எனக்கு ஒரு விஷயம் புரிஞ்சது. என் மனசு பூராவும் நீ தான்... நீ மட்டும் தான் இருக்கே.

உன்னை எப்படி என்னால யாருக்காச்சும் விட்டுக் கொடுக்க முடியும்?

எனக்கு எங்க அம்மாவை பார்க்கணும் என்று தோணலை. உன்னை பார்க்கணும் போலவும், உன்



மடியிலே படுத்துக்கணும் போலவும் இருந்துச்சு'' என்றதும் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''டேய்! இது தான் சாக்குன்னு திரும்பவும் என்னைக் கட்டிப் பிடிக்கிறே! படவா!'' என்று அவள் செல்லமாக மிரட்ட,

''எனக்கு எதுக்குடி சாக்கு? நீ இந்த ரூமை விட்டுப் போற வரைக்கும் நான் உன்னை விடப் போறதில்லை. உன்னால முடிஞ்சதை செஞ்சுக்கோ'' என்றான்.

''உனக்கு ரொம்ப துணிச்சல்டா'' என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவனது மேனி மெல்லியதாய் நடுங்குவதும், இதயம் வேகமாக அடிப்பதையும் உணர்ந்தவள்,

''அத்தான், இங்கே பாருங்க. நான் முதலில் இருந்து நிதிஷ் கதையை சொல்லுறேன். நீங்க பதட்டப்படாதீங்க. கீப் ஒன் திங் இன் மைண்ட். மது இஸ் சேஃப். எனக்கு ஒண்ணும் இல்லை. அதை மட்டும் மனசிலே பதிய வைச்சுக்கோங்க. நான் சொல்லப் போறதை குறுக்கே பேசாமல் கேளுங்க.

அன்னைக்கு நிதிஷ் பத்தி உண்மை தெரிஞ்ச அதிர்ச்சியிலே அம்மாகிட்டே வாய்க்கு வந்ததை பேசிட்டேன். அம்மாவும் உண்மையை போட்டு உடைச்சிட்டாங்க.

முதல்ல நான் நிதிஷ்கிட்ட இருந்து தப்பிச்சிட்டோம். நிம்மதி என்று மட்டுமே உணர்ந்தேன்.

ஆனா நான் யாருங்கிற உண்மை தெரிஞ்ச பின்னாலே யோசிக்க ஆரம்பிச்சேன். இந்த நிதிஷை போல ஒரு அயோக்கியனால் தானே நான் பிறப்பெடுத்தேன்.

இவனுங்களை இப்படியே விடக் கூடாதுன்னு தோணுச்சு.

ஆனால் என்னால என்ன சாதிக்க முடியும் என்றும் தோணுச்சு. நான் நெட்டிலே ஒரு குட்டிக் கதை படிச்சிருக்கேன். அது என்னன்னா...

ஒரு நாட்டிலே யார் வேணா ராஜாவா இருக்கலாமாம். ஆனா நாலு வருஷத்துக்கு மட்டும். அந்த நாலாவது வருஷ கடைசியில் அவனைப் படகில் வைத்து கூட்டிட்டு போய் அக்கறையில்... ஒரு அத்வானக் காட்டில் விட்டுவிட்டு வந்திடுவாங்களாம்.

அங்க போன யாருமே உயிர் பொழைச்சதில்லையாம். ஏன்னா அந்தக் காட்டில் வனவிலங்குகள் இருந்துச்சாம். அதோட சாப்பிடவும் எதுவும் கிடைக்காதாம்.

அதனால ராஜா பதவிக்கு வரும் மனிதன் அந்த நாலு வருஷத்தோட தன் ஆயுள் காலம் முடியப் போகுது என்று தன்னால முடிஞ்சு அளவுக்கு வாழ்க்கையை அனுபவிச்சிட்டு படகில் ஏறி வருத்தத்தோட போவாங்களாம்.

ஒரே ஒரு மனிதன் மட்டும் தன் நான்கு வருஷ ராஜா காலம் முடிஞ்சு படகிலே போகும் போது சிரிச்சுக்கிட்டே போனானாம்.

எல்லோரும் அவனுக்கு பைத்தியம் பிடிச்சிடுச்சு போலன்னு நினைச்சாங்களாம்.

அந்த படகோட்டி அந்த மனுஷனிடம் உனக்கு சாவை நினைச்ச பயமில்லையா என்று கேட்டானாம். சாவைப் பார்த்தால் யாருக்கு பயம் வராது என்று அவன் திருப்பிக் கேட்டானாம்.



அப்புறம் எப்படி நீ சந்தோஷமா இருக்கே? நீ அந்த காட்டிலே செத்து தானே போவாய்? என்று அந்த படகோட்டி கேட்டதும், அந்த மனுஷன் சிரிச்சுக்கிட்டே சொன்னானாம். எனக்கு நாலு வருஷத்துக்கு முன்னாடியே இப்படி நடக்கும் என்று தெரியும் தானே.

அதனால் நான் பதவி ஏற்றவுடன் முதலில் வேட்டைக்காரர்களை அனுப்பி அங்குள்ள விலங்குகளை சிறை பிடித்தேன். பின்பு அங்குள்ள நிலங்களை விவசாய நிலமாக மாற்றினேன். விவசாயிகளை அனுப்பி அந்த நிலத்தில் பயிரிடச் செய்தேன்.

இப்போ அந்த இடம் மிருகங்கள் நிறைஞ்ச காடு கிடையாது. மனுஷங்கள் வாழும் ஒரு குட்டி நாடு. இப்பவும் அங்குள்ளவர்களுக்கு நான் தான் ராஜா. நான் மீண்டும் ராஜாவா வாழப் போகிறேன்'' என்று சொல்லிச் சென்றானாம்.

திட்டமிடல்... இது தான் இந்த கதையின் மூலக் கருத்து. அதே திட்டமிடலை நானும் செஞ்சேன். நேரா கமிஷனரை போய் பார்த்தேன். திட்டத்தை அவர் போட்டார். அதை நான் செயல்படுத்தினேன்.

நிதிஷ் பணக்காரன் என்பதால் ஆதாரம் இல்லாமல் அவனை அரெஸ்ட் பண்ண கமிஷனர் ரொம்ப யோசிச்சார். அவனோட அந்த தனி இடத்தை தெரிஞ்சுக்கிறதுக்காக போலீஸ் அவனை ஃபாலோ பண்ணியும் பிரயோஜனம் இல்லை.

அவன் என் காலேஜுக்கு வந்து ரெண்டு மூணு தடவை என் கூடப் பேசினான். என்னாலயும் அவனிடம் பேசி அதைத் தெரிஞ்சுக்க முடியலை.

அந்த தனி இடத்தைத் தெரிஞ்சுக்காமல் அவனோட வீட்டையோ இருப்பிடத்தையோ சோதனை பண்ணினால் அவன் உஷாராகிவிடுவான் என்று போலீஸ்காரர்கள் நினைச்சாங்க.

ஏதாவது ஒரு பொண்ணு அவனிடம் மாட்டினால் அவன் தன்னோட இடத்துக்கு கூட்டிட்டு போவான். அங்க அவனை அரெஸ்ட் பண்ணிடலாம் என்று கமிஷனர் முடிவு பண்ணினார்.

எந்தப் பொண்ணை நடிக்க வைக்கலாம் என்று அவங்க யோசிச்சப்ப... நான் அவங்க திட்டத்துக்கு உதவுறதா சொன்னேன்.

பூனைக்கு மணியை கட்டுவது யாருன்னு எல்லோருமே யோசிச்சால் என்னவாகும்? பாதிக்கப்பட்ட ஒரு தாய் வயித்தில் பிறந்த நானே எப்படி ஒதுங்கிப் போவது? அதான் துணிஞ்சு இறங்கினேன்.

ஏற்கனவே அவன் எனக்கு வலை விரிச்சு காத்திருந்ததால வேலை சுலபமா முடியும் என்று முடிவு கட்டினோம்.

கமிஷனர் என்னிடம், நிதிஷ் என்னைக்காவது என்னை தனியா வெளியே கூப்பிட்டால் மறுநாள் வருவதா ஒத்துக்கச் சொன்னார். அதுக்கு முன்னால அவன் தரும் எதையும் குடிக்க வேண்டாம் என்று எச்சரித்தார்.''

''உனக்கு அவ்வளவு துணிச்சல் எங்கே இருந்து மது வந்தது? என் எங்க யார்கிட்டவும் சொல்லலை?''

''இனி ஒரு பொண்ணு அவனால பாதிப்பு அடைஞ்சிடக் கூடாதுன்னு ஒரு எண்ணம்... ஒரு வெறி. அதான் என்னைத் துணிஞ்சு போராட வைச்சது.

உங்ககிட்டே ஏன் சொல்லலை என்றால்... அம்மாக்கு தெரிஞ்சால் என்னை வீட்டை விட்டு வெளியே போக விட மாட்டாங்க. எல்லாத்தையும் வெற்றிகரமா நடத்திட்டு வந்துட்டேன் என்று சொல்லிக்கிட்டே இருக்கேன். இப்பக் கூட நீ பயப்படுறே. அப்படி இருக்கும் போது எப்படிச் சொல்ல முடியும்? அதை விடு. நீ கதையை கேளு.

கமிஷனர் என்கிட்டே என்ன தெரியுமா சொன்னார்? என்று கேட்டவள் கமிஷனர் தன்னிடம் கூறியதை அப்படியே அவனிடம் கூறினாள்.

உன் துணிச்சலை நான் பாராட்டுகிறேன் மதுமதி. நீ பயந்திடாதே. நீ பயந்து நம்மை காண்பிச்சு கொடுத்திட்டா நம்மோட மொத்த உழைப்பும் வீணா போயிடும். நீயும் சிக்கலில் மாட்டிக்குவே! இதை சக்சஸ் புல்லா முடிச்சிட்டா உன் பேரே வெளியே வராமல் நான் பார்த்துக்குவேன்.

எனக்கு உன் வயசிலே ஒரு பொண்ணு இருக்காம்மா. நீயும் என் பொண்ணு மாதிரி. நாங்க உன்னைத் தொடர்ந்துகிட்டே தான் இருப்போம். அதனால நீ பயப்படாமல் இயல்பா நடி. உன்னோட நடிப்பில் தான் நம்மளோட வெற்றியே அடங்கி இருக்கு.

அவர் என்னிடம் சொன்ன மாதிரி அவங்களோட பாதுகாப்பு வளையத்துக்குள்ளே நான் இருந்தேன்.

குடிப்பதற்கு கொண்டு வந்து கொடுத்த கூல் டிரிங்க்ஸில் மாத்திரையைக் கலந்துட்டதா அவனோட ஆண்... அந்த ஹோட்டல் சர்வர் வந்து நிதிஷிடம் கண் ஜாடை காட்டிவிட்டுப் போனான்.

நிதிஷ் என்னைக் குடிக்கச் சொன்னதும் நான் அதை இயல்பா கையிலே எடுத்துக்கிட்டு குடிக்காமல் வேடிக்கை பார்ப்பது போல் சுற்றும் முற்றும் பார்த்தேன்.

அங்கே போலீஸ் ஆள் ஒருத்தர் என்னை குடிக்கும்படி ஜாடை காட்டினார். அதாவது எங்க திட்டப்படி அந்த சர்வரிடம் நைசா பேச்சுக் கொடுத்து அந்த போதை மாத்திரை கலந்த ஜூஸ் மாற்றப்பட்டு விட்டது என்று அர்த்தம்.

அதை நான் குடிச்சிட்டு அவன் கூடக் கிளம்பும் போது காலிலே ஏதோ இடறியதால லேசா நடை தடுமாறினேன். அந்த நிதிஷ் போனில் மாத்திரை வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சுன்னு அவன் பிரண்டு கிட்டே சொன்னான்.

ஓகோ! உடனே வேலை செய்ய ஆரம்பிச்சிடுமான்னு நினைச்சிக்கிட்டு நானும் மயங்கிய மாதிரியே நடிச்சேன்.

அதுக்குப்புறம் சினிமா க்ளைமேக்ஸ் மாதிரி போலீஸ் வந்து வில்லன் கும்பலை அரெஸ்ட் பண்ணிட்டு போயிட்டாங்க. இந்த ஹீரோயினும் ஹீரோவை தேடி வந்துட்டேன்.''

''இதெல்லாம் எப்ப மது நடந்துச்சு?''

''ஜஸ்ட் இப்போ... கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவன் நேத்து என் பர்த்டே ட்ரீட் [illegible]

பண்ணினான் போல. என்னை ஜூஸை குடி குடின்னு நச்சுப் பண்ணிக்கிட்டு இருந்தான். நானும் பொருத்தமா, அவன் நம்பும் படியா என்ன சாக்கு சொல்லலாம் என்று யோசிச்சுக்கிட்டு இருந்தேன்...'' என்று சொல்லிக் கொண்டு இருந்தவளை இடையிட்டு,

''இந்த மதுவுக்கு இருக்கிறதே கொஞ்சூண்டு மூளை. அந்த மூளைக்குள்ளே நிதிஷை சமாளிக்கிற மாதிரி காரணம் ஒண்ணும் உதிக்காதுன்னு சர்தார்ஜி உனக்கு ஹெல்ப் பண்ணிட்டானோ?'' என்று ஜீவா கண்ணடித்துக் கொண்டே கேட்க,

''ஜீவா! உனக்கு எப்படித் தெரியும்?!'' என்று அவள் ஆச்சரியமாகக் கேட்டாள்.

## 25



மதுமதிக்கு ஜீவாவின் கேள்வி அளவிட முடியாத ஆச்சரியத்தை கொடுத்தது.

அவளது ஆச்சரியத்தைக் கண்டு முறுவலித்துக் கொண்டே, ''எனக்கு எல்லாமே தெரியும்டா மது'' என்று அவள் தலையில் செல்லமாக முட்டினான்.

''ஹேய்! முதல்ல இருந்து முழுசா சொல்லு'' என்றதும்,

''அவனை நான் முதன் முதலா காபி ஷாப்பிலே பார்த்தேன் இல்ல... அப்பவே எனக்கு அவன் பார்வை

சரியாப் படலை. காலேஜிலே தினமும் எத்தனை பேரைச் சந்திக்கிறேன். அதனால எனக்கு நல்லா தெரிஞ்சது அவன் உன்னை சைட் அடிக்கலை என்று.

அவன் பார்வை சாதாரணமா வயசுப் பசங்க பொண்ணுங்களை பார்க்கிற பார்வை இல்லைன்னு புரிஞ்சது.

அதனால அவன் நடவடிக்கையை பிரைவேட் டிடக்டிவ் வைச்சு கண்டுபிடிக்க ஏற்பாடு செஞ்சேன். அவன் தப்பானவன் என்று சொன்ன அவங்க என்ன தப்பு செய்யுறான் என்று கண்டுபிடிக்க கொஞ்சம் டைம் கேட்டாங்க.

ஆனா என்னால காத்திருக்க முடியாமல் உடனே கமிஷனரை போய் பார்த்தேன். அவர் என் ஸ்டூடண்டோட அப்பா.

அடுத்த நாளே நீ நிதிஷ் பத்தின முழு விவரத்தோட கமிஷனரைத் தேடி வந்தே. நீ துணிஞ்சு இதைச் செய்யட்டும் என்று தான் நாங்க திரை மறைவில் வேலை செஞ்சோம். நாங்கன்னா நான், அப்பா, மாமா, அருண் நாலு பேருமே.

நேத்து நீ என் கிட்டே பர்த்டே கிஃப்டை வாங்கிட்டு போனதுக்கு அப்புறம் கமிஷனருக்கு போன் பண்ணி நிதிஷ் இன்னைக்கு வரச் சொன்னதா சொல்லி இருக்கே. அவரும் எனக்கு போன் பண்ணிச் சொன்னார். அப்போல இருந்து எனக்கு திக் திக்குன்னு இருந்துச்சு.

நாங்க நாலு பேருமே உன் பின்னாலேயே தான் மது வந்தோம். என் ஸ்டூடண்ட் ஒருத்தன் வினோத் என்று பேரு. நான் கமிஷனர் மக கூட அடிக்கடி பேசுறதை பார்த்து விஷயம் என்னன்னு அவளை நச்சரிச்சு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டான்.

அவனும் நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பத்து ரவுடிகளையும் அனுப்பி வைச்சான். ஆக மொத்தத்திலே நீ தனி ஆளா போகலைடா.

இந்தக் காலத்திலே பொண்ணுங்களுக்கு ஆபத்து எந்த நேரத்திலே எந்த ரூபத்திலே வரும் என்று யாரால சொல்ல முடியும்? நான் எல்லா நேரமும் உன்னைக் கண்காணிச்சுக்கிட்டே இருக்க முடியாது இல்லையா. அதான் நீ துணிஞ்சு தைரியமா தனியா செயல்படட்டும் என்று நினைச்சேன்.''

''எல்லாம் தெரிஞ்சிருந்தும் ஏன்டா இவ்வளவு நேரம் என்கிட்டே கதை கேட்டே?'' என்று அவனைப் பார்த்து முறைக்க,

''ரீடர்ஸ்க்கு கதை தெரியணும் இல்ல'' என்று சொன்னதும் அவனுக்கு ரெண்டு அடி கொடுத்தாள்.

''இல்லைடா மது. இத்தனை நாளா எங்க யார்கிட்டவும் சொல்லக் கூடாதுன்னு மறைச்சு வைச்சு காரியம் செஞ்சே. ஆனால் உன்னுடைய ஃபீலிங்ஸை என்கிட்டே நீ சொல்ல வேண்டாமா? அதான் உன்னைச் சொல்லவிட்டு கேட்டுக்கிட்டு இருந்தேன்.

வயசுப் பொண்ணை வீட்டில் உள்ளவங்களோட பெர்மிஷன் வாங்காமல் இவ்வளவு பெரிய ஆபரேஷனில் ஈடுபடுத்துவாங்களான்னு கூடவா மது யோசிக்க மாட்டே?'' என்று கேட்டதும்,

"ஆமாலல் நான் யோசிக்கவே இல்லை அத்தான். அதான் போலீஸ் என்னை இறக்கிவிட்டதும் அருண் சரியா அந்த இடத்திலே வந்து நின்னானா?"

"ஆமாடா மது. அவனோட ஆள் வேற யாராவது போலீஸை பாலோ பண்ணினால் நாங்க எல்லோரும் உன் முன்னாடி வந்து நிக்குறதை பார்த்தாலே அந்த நிதிஷ்க்கு நீ தான் அவனைப் போலீஸில் காட்டிக் கொடுத்திட்டே என்று தெரிஞ்சிடும் இல்ல... அதான் நாங்க வெளியே தெரியாமலே உன்னை பாலோ பண்ணினோம்" என்று விளக்கினான்.

"இவ்வளவு ஏற்பாடு பண்ணி இருக்கே. அப்புறம் ஏன்டா உனக்கு இப்போ கூட இதயம் தாறுமாறா துடிக்குது?"

"நான் அப்பவே சொன்னேன் இல்ல மது. புத்திக்கு தெரியுது. ஆனா மனசுக்கு புரியலை. அதான் காலை யிலே இருந்து ஒரே டென்ஷனா இருந்தேன்."

"அப்படின்னா ஜீவா இன்னைக்கு காலையிலே எங்க வீட்டுக்கு நீ வந்தப்போ இதை நினைச்சு தான் சோகமா இருந்தியா? நான் கூட நான் உன்னைக் கல்யாணம் பண்ண மாட்டேன் என்று சொன்னதால அப்படி இருந்தி யோன்னு நினைச்சேன்."

"சே! சே! எனக்கு அந்த பயமே கிடையாது. நானெல்லாம் ரொம்ப அறிவாளிடா மது. என் மனசிலே உள்ளதையும் கண்டுபிடிப்பேன். உன் மனசிலே உள்ளதையும் கண்டுபிடிப்பேனாக்கும்" என்று பெருமை பீற்றியவன்,



"ஆமா காலையிலே ஏன் அப்படி சொன்னே? ஜீவாவைக் கல்யாணம் பண்ண மாட்டேன் என்று" என்று விசாரித்தான்.

"இன்னைக்கு இந்த நிதிஷ் பிரச்சனையை முடிச்ச துக்கு அப்புறமா தான் வீட்டிலே சொல்லணும் என்று நினைச்சேன்."

"அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்?" என்று அவளைத் திட்டியவன்,

"கேட்க மறந்துட்டேன். லவ் பிரபோஸ் பண்ணும் போது கார்டு கொடுக்கணும், பூ கொடுக்கணும் என்று கொஞ்ச நாளைக்கு முன்னாடி யாரோ கதை சொன்னாங்க. எங்கேம்மா கார்டு, பூ?" என்று அவளைப் பார்த்துக் கேட்டதும்,

சில நொடிகள் விழித்தவள், "நான் ஒண்ணும் உன்னை லவ் பண்ணுறேன் என்று சொல்லலையே. கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று தானே சொன்னேன்" என்று கூறி சமாளிக்க முயன்றாள்.

"அப்படியா? ஆனா நான் லவ் பண்ணித் தான் கல் யாணம் பண்ணனும் என்று முடிவு பண்ணியிருக்கேன்!"

"இந்த பொக்கே கொடுப்பது, கார்டு கொடுப்பது... அதெல்லாம் சினிமாவிலே தானே நடக்கும் என்று கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு மகான் என்கிட்டே சொன்னார் ஜீவா."

"ஆனா அந்த மகான் தன் தத்துவத்தை மாத்திக் கிட்டார்" என்றதும் அவனைப் பரிதாபமாகப் பார்த்

''ஹேய் மது! இப்போ உன் முகம் ஏன் சோகமாகுது? நான் என் தத்துவத்தை தானே மாத்தினதா சொன்னேன். உன்னை இல்லையே!''

''ஓ! வாத்தியார் சார்க்கு அப்படி ஒரு நினைப்பு இருக்கா?'' என்று முறைத்துக் கொண்டே கேட்டாள்.

''எனக்கு என்னைக்குமே என் மது மட்டும் போதும்'' என்றவன் தன் அலமாரியில் இருந்து அந்த வாழ்த்து அட்டைகளை எடுத்து வந்து நீட்டினான்.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''அத்தான் நீங்களா கிரீட்டிங் கார்டு வாங்கினீங்க?'' என்று கேட்டுக் கொண்டே பிரித்துப் பார்த்தாள்.

தனக்காக... தன்னுடைய விருப்பத்துக்காக என்று வாழ்த்து அட்டை வாங்கி சொந்தமாக அவன் எழுதிய கவிதைகளைப் பார்த்ததும் மதுமதி பேச்சிழந்தாள்.

''நீ சொன்ன அன்னைக்கே வாங்கிட்டேன். ஆனா நீ என்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்ச பிறகு தான் கொடுக்கணும் என்று நினைச்சேன். என் கவிதை எப்படி? அதை பத்தி சொல்லு. ரொம்ப கேவலமா இருக்கா?''

''நீங்க சொல்ல வருவது புரிஞ்சா போதாது அத்தான். எனக்கு மட்டும் கவிதைக்கான இலக்கணம் தெரியுமா என்ன?''

''எப்படி இருக்குன்னு சொல்லு மது'' என்று அவன் வலியுறுத்தவும்,

அவள் அந்தக் கவிதையின் மீது தன் இதழ் பதித்து நிமிர்ந்தாள்.



''இது போங்கு ஆட்டம். எழுதினது நான். அதனால நீ இங்கே கிஸ் பண்ணு'' என்று ஜீவா தன் கன்னத்தைக் காட்ட,

''நீங்க... அதாவது உங்க கை தானே எழுதுச்சு. அப்ப சரி'' என்று அவனது கையைப் பற்றி அவனது உள்ளங் கையில் முத்தம் பதிக்க அவனுக்கு குறுகுறுவென்று இருந்தது.

''ஆனா இந்தக் கவிதையை யோசிச்சது என் மூளை ஆச்சே!'' என்றதும்,

''அதுக்காக என்ன பண்ணனும்?'' என்று அவள் விழிக்க,

''என் நெத்தியிலே கிஸ் பண்ணு'' என்றான்.

முறைத்துக் கொண்டே அவன் சொன்னதை செய லாற்றினாள்.

அருகே... வெகு அருகே அவள் இருக்க தன்னோடு அவளை இறுக்கியவன் அவளது காதில், ''மது, நான் வேணா அந்தக் கவிதையை உன் வாயால உனக்கு படிச்சுக் காட்டட்டுமா?'' என்று கிறங்கிய குரலில் கேட் டதும்,

முதலில் விழித்தாள். அதன் அர்த்தம் புரிந்த பின், ''சீ போடா!'' என்று வெட்கியவள்,

''இது தான்டா போங்காட்டம்'' என்று சொல்லி அவனது பிடியில் இருந்து விலகியவள்,

''கொஞ்ச நாள் முன்னாடி உன்னைக் கல்யாணம் பண்ண மறுத்தவளை, இன்னைக்கு நீ இல்லைன்னால் நான் இல்லைன்னு சொல்ல வைச்சிட்டியே! என்ன மாயம் செய்தாய், ஜீவா?'' என்று கேட்டாள்.

''மாயமும் இல்லை. மந்திரமும் இல்லை. என்னை லவ் பண்ணுறதை உணராமல் நீ ஒரு டியூப் லைட்டா இருந்தே. நான் விலகி நின்று வெறுப்பேத்தினதும் நீ பிரகாசமா எரிய ஆரம்பிச்சிட்டே'' என்று ஜீவா சொன்னதும்,

''அப்படின்னா நான் பிரகாசமா இருக்கணும் என்றால் உன்னை விட்டு விலகி இருக்கணுமா ஜீவா?'' என்று மதுமதி குறும்புடன் கண்ணடித்துக் கொண்டே கேட்க,

''அம்மா தாயே! நான் சொன்னதை அழிச்சிடு'' என்று வேகமாக கூறியவன்,

''கீழே அத்தை வந்து இருக்காங்களோ? அத்தை குரல் கேட்குது தானே! மாப்பிள்ளையை வரவேற்க அவ்வளவு அவசரமா?'' என்று ஜீவா நக்கல் பண்ண,

மதுமதி வாய் மூடிச் சிரித்தாள்.

''இப்ப எதுக்கு சிரிக்கிறே?'' என்று அவன் விழித்துக் கொண்டே கேட்க,

''நீ தான் அடுத்தவங்க மனசிலே உள்ளதைக் கண்டு பிடிக்கிற அறிவாளி ஆச்சே! எங்க அம்மா மனசிலே உள்ளதைக் கண்டுபிடி பார்ப்போம்'' என்று சவால் விட்டாள்.

''நான் உன் மனசிலே இருக்கிறதை பற்றி தானே சொன்னேன். எங்க அத்தை பத்தியெல்லாம் எனக்கு தெரியாது'' என்று சவாலை ஏற்காமல் அவன் பின் வாங்க,

''சரி விடு. நானே சொல்லுறேன். எனக்கு தெரிஞ்ச வரைக்கும் எங்க அம்மா உனக்கு மாலை போட வந்து இருக்க மாட்டாங்க. பட்டாசு வெடிக்க வந்து இருப்பாங்க. வா கீழே போகலாம்'' என்று அவனை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

அவர்கள் இருவரும் படி இறங்கி வந்ததும் கீதா அவன் சட்டைக் காலரை பற்றி அவனது இரு கன்னத்திலும் அறைந்தார்.

மதுமதி ஜீவாவை இழுத்து பின்னுக்கு தள்ளி, ''அம்மா ரிலாக்ஸ்!'' என்றாள்.

''மது, இதான் நீ சொன்ன பட்டாசா?'' என்று அவள் பின்புறம் இருந்து அவன் முனங்க,

''யாரைக் கேட்டுடா என் பொண்ணை அனுப்பி வைச்சே?'' என்று கீதா ஜீவாவை கேட்டதும்,

''யாரைக் கேட்கணும்? அவ என் பொண்டாட்டி'' என்றான்.

மதுமதிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் வாய்விட்டு நகைத்துக் கொண்டே,

''அம்மா, ஜீவா, நீங்க ரெண்டு பேருமே டூ மச்சா பண்ணுறீங்க. அவன் என்னை பொண்டாட்டின்னு சொன்னதும் டூ மச். நீங்க அவனை அவங்க அம்மா முன்னாடி அறைஞ்சதும் டூ மச்'' என்றதும்,

கீதா கலாவின் புறம் திரும்பி, ''அண்ணி சாரி'' என்று மன்னிப்பு கேட்டார்.

''நீ அறைஞ்சதிலே தப்பே இல்லை கீதா. மது ஜீவாவை தேடி மாடி ஏறிப் போன பின்னாடி உங்க அண்ணன் நடந்த விஷயத்தை என்கிட்டே சொன்னார். எனக்கும் செம கடுப்பு'' என்று சொல்லிக் கொண்டே ...வரை முறைக்க,

''அப்போ அவங்கவங்க வீட்டுக்காரரை கேள்வி கேட்க முடியாமல் தான் என்னை அறையுறீங்களா? இதெல்லாம் நல்லா இல்ல சொல்லிட்டேன்'' என்று ஜீவா புலம்ப,

மதுமதி ''ஆனா ஜீவா. நீ அம்மாவையும், அத்தையையும் பார்த்து என்னை எடை போடக் கூடாது'' என்று சொன்னாள்.

''நீ எதைச் சொல்லுறே மது?'' என்று அவன் விழித்தான்.

''உன்னை அடிக்க மாட்டேன் என்று கனவு காணாதே'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள்,

''அச்சோ! அத்தை மறந்துட்டேன். நீங்க ஜீவாவை மரியாதையா கூப்பிடச் சொன்னீங்க இல்ல. மாத்திக்கிறேன். இந்த நொடியிலே இருந்து மாத்திக்கிறேன்'' என்று கலாவைப் பார்த்து சொன்னவள்,

தனக்கு பின்னால் நின்று கொண்டிருந்த ஜீவாவின் புறம் திரும்பாமலே, ''அத்தான் இனிமேல் நான் உங்க கிட்டே ரொம்ப மரியாதையா பேசப் போறேன்'' என்று அறிவித்தாள்.

''பெட் ரூமிலே கூடவாடா மது?'' என்று அவன் குனிந்து அவள் காதில் கிசுகிசுக்க,

'எல்லோர் முன்னாடியும் என்ன சொல்லுறான் பாரு! இவனை...' என்று கடுப்பானவள் திரும்பி அவன் கைகளில் இரண்டு அடி வைத்தவள்,

''அத்தை, நானே மரியாதை கொடுக்கணும் என்று நினைச்சா கூட உங்க பையன் விட மாட்டான் போல!''



பின் தன் தாயை அணைத்தவள், ''எனக்கு ஒண்ணும் இல்லைம்மா. நான் தைரியமா செயல்பட்டு இருக்கேன் என்று நீங்க சந்தோஷப்படணும்'' என்றாள்.

ஜீவாவைப் போலவே அவரது உடலும் அதிர்ந்தது. கீதா தன் மீது வைத்திருக்கும் பாசம் அவளை நெகிழ்த்தியது. ராஜன் அவள் அருகே வந்து அவளது தலையை வருடிக் கொடுத்தார்.

அப்பொழுது அருண் கையில் ஒரு கவருடன் உள்ளே நுழைந்தான்.

''வாடா அருண்'' என்று வரவேற்ற ஜீவா அவனிடம் சென்று அந்தக் கவரை வாங்கினான்.

''அத்தை, மாமா பக்கத்திலே போய் நில்லுங்க'' என்று சொல்லி அவரை இழுத்துக் கொண்டு போய் ராஜன் அருகில் நிற்க வைத்தான்.

மதுமதியையும் இழுத்துக் கொண்டு வந்த, ''ஹேப்பி ஆனிவெர்சரி மாமா அண்ட் அத்தை. எங்க மூணு பேர் சார்பாவும் இந்த கிஃப்ட்' என்று சொல்லி அவர்கள் கால்களில் விழுந்தான். மதுமதியையும் தன்னோடு சேர்த்து அவர்கள் கால்களில் விழ வைத்தான்.

''தாங்க்ஸ்டா ஜீவா!'' என்றவர்களுக்கு, காலில் விழுந்திருப்பவர்களுக்கு என்ன வாழ்த்து சொல்லுவது என்று தெரியவில்லை.

சில நொடிகள் திகைத்த கீதா, ''சுபஸ்ய சீக்கிரம்'' என்று வாழ்த்தினார்.

எழுந்த ஜீவா, ''ம்ம்ம் இத இதைத் தான் நான் எதிர் பார்த்தேன்'' என்று கண்ணடித்துக் கொண்டே சொன்

''அத்தை, வாழ்த்தினா மட்டும் போதாது. அதுக்கான வேலையை தொடங்கணும்'' என்றான்.

மதுமதியும் நிமிர்ந்து கொண்டே, ''அலைஞ்சான் கேஸ்'' என்றாள்.

''யாரு நான் அலையுறேனா? சரி விடு. அத்தை, உங்க பொண்ணு இன்னும் கொஞ்ச நாளிலே காலேஜ் முடிச்சிடுவாள். அதுக்கு அப்புறம் வேலையிலே ஜாயின் பண்ணும் போது போஸ்டிங் எந்த ஊரிலே போடுவாங்கன்னு தெரியாது. அவ எப்போ சென்னைக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டு வராளோ அன்னைக்கு கல்யாணத்தை வைச்சுக்கலாம்'' என்றதும்,

''ஐயோ! நான் இதை யோசிக்கவே இல்லையே. நான் எப்படி வேற ஊருக்கு வேலைக்கு போவேன்?'' என்று சப்தமாக புலம்பிய மதுமதி ஜீவாவிடம்,

''ஏன் ஜீவா, நான் பேசாமல் எம்.ஈ. படிக்கட்டுமா? நானும் காலேஜ் லெக்சரரா ஆகட்டுமா?'' என்று கேட்டாள்.

''ஹேய் மது! எனக்கு பிடிச்ச வேலையை செய். எனக்காக ஏன் மாற நினைக்கிறே?'' என்று ஜீவா சொன்னதும்,

அருண் ஜீவாவின் காதில், ''அத்தான், நீங்க இதை மது மேல உள்ள அக்கறையிலே சொல்லலை இல்ல. அவ கிட்டே படிக்கப் போற ஸ்டூடண்ஸோட எதிர் காலத்தை மனசிலே வைச்சுத் தானே சொன்னீங்க?'' என்று கேட்கவும்,

ஜீவா முறுவலித்துக் கொண்டே, ''நீ என் மச்சான் டா!'' என்று அவனைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.



''என்னைக் கவுக்கிறதுக்கு என்னடா பிளான் போடுறீங்க?'' என்று மதுமதி கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை மது'' என்று அருண் சொன்னதும்,

''நான் உன்னை நம்ப மாட்டேன் டா அருண். ஜீவா தனியா இருந்தா அவனை நம்பலாம். ஆனா உன் கூட இருந்தான்னா, அவனையும் நான் நம்ப மாட்டேன். உன்னை எனக்கு தெரியும்டா. எத்தனை வருஷமா பார்க்கிறேன்'' என்று தம்பியை பார்த்து நக்கல் பண்ணியவள்,

தன் அப்பா அம்மாவிடம், ''சாரிம்மா. சாரிப்பா. நான் சுத்தமா உங்க ஆனிவர்சரியை மறந்தே போனேன். ஹேப்பி ஆனிவெர்சரி அப்பா. ஹேப்பி ஆனிவெர்சரி அம்மா'' என்று வாழ்த்தியவளை தொடர்ந்து அனைவரும் வாழ்த்தி முடித்தனர்.

''நானுமே உன்னோட டென்ஷனில் மறந்துட்டேன்டா மது'' என்று ராஜன் சொன்னார்.

அவர் தன் மனைவியிடம் திரும்பி, ''நீ எப்படி மறந்தே கீதா?'' என்றார்.

''எனக்கு காலையிலே இருந்தே மனசே சரியில்லாமல் இருந்தது. என்னமோ பிரச்சனை என்று உள்ளுணர்வு சொல்லிக்கிட்டே இருந்தது'' என்றதும் மதுமதி தாயை அணைத்துக் கொண்டாள்.

''சரி அண்ணா நாங்க கிளம்புறோம்'' என்று கீதா கிளம்ப எத்தனிக்க,

''மது, வீட்டுக்கு போனதும் செமஸ்டர் எக்ஸாம்க்கு ஒழுங்காப் படி. நீ ஒரு வாரமா ஒண்ணும் படிக்காமல்

ஓ.பி அடிச்சிட்டே'' என்று அவளைப் பார்த்துக் கூறிய ஜீவா,

தன் அத்தையிடம், ''நாளையில் இருந்து காலங் கார்த்தாலே அவ முகத்திலே தண்ணியை ஊத்தியாச்சும் எழுப்பி படிக்க வைங்க அத்தை'' என்று கூறினான்.

மதுமதி ஜீவாவை முறைத்துக் கொண்டு நிற்க,

அருண் தன் அக்காவிடம், ''மது நீ அத்தானைக் கல் யாணம் பண்ணும் ஐடியாவை மறுபரிசீலனை பண்ண விரும்புறியா?'' என்று கேட்டான்.

அவள் ஆமாம் என்று தலை ஆட்டியதும்,

''இப்போ எதுக்குடா எனக்கு ஆப்பு அடிக்குறே?'' என்று ஜீவா அவனைப் பார்த்து பரிதாபமாகக் கேடக,

''வெயிட் அத்தான். உங்க சார்பா நானே இதுக்கு பதிலும் சொல்லுறேன்'' என்றவன்,

''செல்லாது செல்லாது. நீ யெஸ் சொன்னது சொன் னது தான்'' எனவும் அனைவரும் முறுவலித்தனர்.

அந்த அழகிய குடும்பத்தின் ஆனந்தம் என்றென்றும் நிலைத்திருக்கட்டும் என்று வாழ்த்தி விடைபெறுவோம்.

அவளது பேச்சைக் கேட்டு அவனது அணைப்பை விலக்கியவன் தனது கைகளால் அவளது முகம் தாங்கி தொடர் முத்தங்களைப் பதித்தான்.

அவள் திக்குமுக்காடிப் போனாள். அவளது இதழிலும் நீண்ட முத்தம் பதித்த பின்பே அவளை விடுவித்தான்.

"ஜீவா, உன்னை எல்லோரும் ரொம்ப நல்ல பிள்ளைன்னு சொல்லிக்கிட்டு இருக்காங்க. நீ என்னடான்னா..." என்று அவள் சிணுங்கிக் கொண்டே அவனிடம் இருந்து விலக,

"மத்தவங்க நினைப்புக்கு நான் எப்படி மது பொறுப்பாவேன்?" என்று கேட்டான்.

# 24



தன் மனம் கவர்ந்தவள் தன்னை திருமணம் செய்ய ஒத்துக் கொண்டாள் என்ற விஷயம் ஜீவாவிற்கு அதிக உற்சாகத்தை கொடுத்தது.

"சொல்லுங்க மேடம். திடீர்ன்னு எப்படி மனசு மாறினீங்க?" என்று அவளைக் கேலியாகக் கேட்டுக் கொண்டே கைபிடித்து அழைத்துக் கொண்டு சோபாவில் அமர, அவளும் அவன் அருகில் அமர்ந்தாள்.

"திடீர்ன்னு ஒண்ணும் மாறலை. உன்னை என்னால யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாதுன்னு எனக்கு நல்லா புரிஞ்சு தான் இருந்தது. ஆனால் உன் மேலே



நான் வைச்சிருக்கும் அன்பு கூடவே வளர்ந்ததால உண்டான பாசமா அல்லது அதுக்கும் மேலவா என்று குழம்பிக் கொண்டு இருந்தேன்.

அன்னைக்கு நான் மஞ்சும்மா பொண்ணுன்னு உண்மை தெரிஞ்ச அன்னைக்கு... நீ தானே என்னை வழியில பார்த்து வீட்டுக்கு கூட்டிட்டு வந்தே! நான் கூட என் பிரண்டோட சண்டைன்னு சொன்னேன் இல்ல. அது பொய், அன்னைக்கு என்ன நடந்துச்சு தெரியுமா?

அந்த நிதிஷ் இருக்கானே... அவன் யாருன்னு உனக்கு தெரியுமா? பொண்ணுங்களுக்கு போதை மாத்திரை கொடுத்து அவங்களை ஆபாசமா போட்டோ, வீடியோ எடுத்து நெட்டிலே உலவ விடுற ஆசாமி!" என்றதும், அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவனது இதயத் துடிப்பு தாறு மாறா எகிறியது மதுமதிக்கு புரிந்தது. இதுக்கே இப்படி பயப்படுறானே என்று மதுமதி எண்ணிக் கொண்டாள்.

"அத்தான், அதான் நான் நல்லா இருக்கேனே. எனக்கு ஒண்ணும் ஆகலை. இப்போ எதுக்கு இப்படி நடுங்குறீங்க?" என்றதும்,

"புத்திக்கு புரியுதுடா மது. ஆனா மனசு கேட்க மாட்டேங்குது" என்றவன் அவளை தன் மேல் சாய்த்துக் கொண்டு அமைதியாய் இருந்தான்.

"ம்ம் மேலே சொல்லு."

"நீ என்னை வழியில பார்த்து வீட்டுக்கு கூட்டிட்டு வந்த அன்னைக்கு... நானும் என் பிரண்ட்ஸ் ரெண்டு பேரும் ஒரு மாலுக்கு போயிருந்தோம். என் பிரண்ட்ஸ் ஷாப்பிங்கில் மூழ்கிப் போயிட்டாங்க. நான் அந்த மால்'ஐ சுத்தி வந்தேன்.

அப்போ நான் நிதிஷை அந்த மாலில் பார்த்தேன். அவன் என்னைப் பார்க்கலை. அவன் யார்கிட்டவோ போனில் பேசுவதை நான் கேட்டேன். அவன் யாரு, எப்படிப்பட்டவன் என்பதை தெரிஞ்சுக்கிட்டேன்.

நான் அப்படியே நடுங்கிப் போயிட்டேன். அன்னைக்கு நான் இருந்த நிலையை இப்ப நினைச்சுப் பார்த்தா கூட நடுக்கமா இருக்கு. அவன் என்னை பார்க்கும் முன்னாடி அந்த இடத்தில் இருந்து ஓடி வந்திட்டேன்.

நாம ஒரு இக்கட்டில் மாட்டிக்கிட்டோம் என்றால் ஒண்ணு கடவுளை நினைப்போம். இல்லைன்னா மனசுக்கு நெருக்கமானவங்களை நினைப்போம்.

எனக்கு எங்க அம்மா, அப்பா, அருண் இவங்க யார் நினைவும் வரலை. நான் உன்னை மட்டுமே மனசிலே நினைச்சு பார்த்தேன்.

ஜீவா தப்பிச்சுட்டேன். நான் தப்பிச்சுட்டேன் ஜீவா, என்று சொல்லிக்கிட்டே வந்தேன். நீ சரியா என் எதிரே வந்து நின்றாய். உன்னைப் பார்த்ததும் என் மனசிலே ஒரு நிம்மதி பரவுச்சு பாரு... நடுரோடுன்னு கூடப் பார்க்காமல் உன்னைக் கட்டிப் பிடிச்சுக்கணும் என்று தோணுச்சு.

அப்போ எனக்கு ஒரு விஷயம் புரிஞ்சது. என் மனசு பூராவும் நீ தான்... நீ மட்டும் தான் இருக்கே.

உன்னை எப்படி என்னால யாருக்காச்சும் விட்டுக் கொடுக்க முடியும்?

எனக்கு எங்க அம்மாவை பார்க்கணும் என்று தோணலை. உன்னை பார்க்கணும் போலவும், உன்



மடியிலே படுத்துக்கணும் போலவும் இருந்துச்சு'' என்றதும் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''டேய்! இது தான் சாக்குன்னு திரும்பவும் என்னைக் கட்டிப் பிடிக்கிறே! படவா!'' என்று அவள் செல்லமாக மிரட்ட,

''எனக்கு எதுக்குடி சாக்கு? நீ இந்த ரூமை விட்டுப் போற வரைக்கும் நான் உன்னை விடப் போறதில்லை. உன்னால முடிஞ்சதை செஞ்சுக்கோ'' என்றான்.

''உனக்கு ரொம்ப துணிச்சல்டா'' என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

அவனது மேனி மெல்லியதாய் நடுங்குவதும், இதயம் வேகமாக அடிப்பதையும் உணர்ந்தவள்,

''அத்தான், இங்கே பாருங்க. நான் முதலில் இருந்து நிதிஷ் கதையை சொல்லுறேன். நீங்க பதட்டப்படாதீங்க. கீப் ஒன் திங் இன் மைண்ட். மது இஸ் சேஃப். எனக்கு ஒண்ணும் இல்லை. அதை மட்டும் மனசிலே பதிய வைச்சுக்கோங்க. நான் சொல்லப் போறதை குறுக்கே பேசாமல் கேளுங்க.

அன்னைக்கு நிதிஷ் பத்தி உண்மை தெரிஞ்ச அதிர்ச்சியிலே அம்மாகிட்டே வாய்க்கு வந்ததை பேசிட்டேன். அம்மாவும் உண்மையை போட்டு உடைச்சிட்டாங்க.

முதல்ல நான் நிதிஷ்கிட்ட இருந்து தப்பிச்சிட்டோம். நிம்மதி என்று மட்டுமே உணர்ந்தேன்.

ஆனா நான் யாருங்கிற உண்மை தெரிஞ்ச பின்னாலே யோசிக்க ஆரம்பிச்சேன். இந்த நிதிஷை போல ஒரு அயோக்கியனால் தானே நான் பிறப்பெடுத்தேன்.

இவனுங்களை இப்படியே விடக் கூடாதுன்னு தோணுச்சு.

ஆனால் என்னால என்ன சாதிக்க முடியும் என்றும் தோணுச்சு. நான் நெட்டிலே ஒரு குட்டிக் கதை படிச்சிருக்கேன். அது என்னன்னா...

ஒரு நாட்டிலே யார் வேணா ராஜாவா இருக்கலாமாம். ஆனா நாலு வருஷத்துக்கு மட்டும். அந்த நாலாவது வருஷ கடைசியில் அவனைப் படகில் வைத்து கூட்டிட்டு போய் அக்கறையில்... ஒரு அத்வானக் காட்டில் விட்டுவிட்டு வந்திடுவாங்களாம்.

அங்க போன யாருமே உயிர் பொழைச்சதில்லையாம். ஏன்னா அந்தக் காட்டில் வனவிலங்குகள் இருந்துச்சாம். அதோட சாப்பிடவும் எதுவும் கிடைக்காதாம்.

அதனால ராஜா பதவிக்கு வரும் மனிதன் அந்த நாலு வருஷத்தோட தன் ஆயுள் காலம் முடியப் போகுது என்று தன்னால முடிஞ்ச அளவுக்கு வாழ்க்கையை அனுபவிச்சிட்டு படகில் ஏறி வருத்தத்தோட போவாங்களாம்.

ஒரே ஒரு மனிதன் மட்டும் தன் நான்கு வருஷ ராஜா காலம் முடிஞ்சு படகிலே போகும் போது சிரிச்சுக்கிட்டே போனானாம்.

எல்லோரும் அவனுக்கு பைத்தியம் பிடிச்சிடுச்சு போலன்னு நினைச்சாங்களாம்.

அந்த படகோட்டி அந்த மனுஷனிடம் உனக்கு சாவை நினைச்சு பயமில்லையா என்று கேட்டானாம். சாவைப் பார்த்தால் யாருக்கு பயம் வராது என்று அவன் திருப்பிக் கேட்டானாம்.

அப்புறம் எப்படி நீ சந்தோஷமா இருக்கே? நீ அந்த காட்டிலே செத்து தானே போவாய்? என்று அந்த படகோட்டி கேட்டதும், அந்த மனுஷன் சிரிச்சுக்கிட்டே சொன்னானாம். எனக்கு நாலு வருஷத்துக்கு முன்னாடியே இப்படி நடக்கும் என்று தெரியும் தானே.

அதனால் நான் பதவி ஏற்றவுடன் முதலில் வேட்டைக்காரர்களை அனுப்பி அங்குள்ள விலங்குகளை சிறை பிடித்தேன். பின்பு அங்குள்ள நிலங்களை விவசாய நிலமாக மாற்றினேன். விவசாயிகளை அனுப்பி அந்த நிலத்தில் பயிரிடச் செய்தேன்.

இப்போ அந்த இடம் மிருகங்கள் நிறைஞ்ச காடு கிடையாது. மனுஷங்கள் வாழும் ஒரு குட்டி நாடு. இப்பவும் அங்குள்ளவர்களுக்கு நான் தான் ராஜா. நான் மீண்டும் ராஜாவா வாழப் போகிறேன்'' என்று சொல்லிச் சென்றானாம்.

திட்டமிடல்... இது தான் இந்த கதையின் மூலக் கருத்து. அதே திட்டமிடலை நானும் செஞ்சேன். நேரா கமிஷனரை போய் பார்த்தேன். திட்டத்தை அவர் போட்டார். அதை நான் செயல்படுத்தினேன்.

நிதிஷ் பணக்காரன் என்பதால் ஆதாரம் இல்லாமல் அவனை அரெஸ்ட் பண்ண கமிஷனர் ரொம்ப யோசிச்சார். அவனோட அந்த தனி இடத்தை தெரிஞ்சுக்கிறதுக்காக போலீஸ் அவனை ஃபாலோ பண்ணியும் பிரயோஜனம் இல்லை.

அவன் என் காலேஜுக்கு வந்து ரெண்டு மூணு தடவை என் கூடப் பேசினான். என்னாலயும் அவனிடம் பேசி அதைத் தெரிஞ்சுக்க முடியலை.

அந்த தனி இடத்தைத் தெரிஞ்சுக்காமல் அவனோட வீட்டையோ இருப்பிடத்தையோ சோதனை பண்ணினால் அவன் உஷாராகிவிடுவான் என்று போலீஸ்காரர்கள் நினைச்சாங்க.

ஏதாவது ஒரு பொண்ணு அவனிடம் மாட்டினால் அவன் தன்னோட இடத்துக்கு கூட்டிட்டு போவான். அங்க அவனை அரெஸ்ட் பண்ணிடலாம் என்று கமிஷனர் முடிவு பண்ணினார்.

எந்தப் பொண்ணை நடிக்க வைக்கலாம் என்று அவங்க யோசிச்சப்ப... நான் அவங்க திட்டத்துக்கு உதவுறதா சொன்னேன்.

பூனைக்கு மணியை கட்டுவது யாருன்னு எல்லோருமே யோசிச்சால் என்னவாகும்? பாதிக்கப்பட்ட ஒரு தாய் வயித்தில் பிறந்த நானே எப்படி ஒதுங்கிப் போவது? அதான் துணிஞ்சு இறங்கினேன்.

ஏற்கனவே அவன் எனக்கு வலை விரிச்சு காத்திருந்தால வேலை சுலபமா முடியும் என்று முடிவு கட்டினோம்.

கமிஷனர் என்னிடம், நிதிஷ் என்னைக்காவது என்னை தனியா வெளியே கூப்பிட்டால் மறுநாள் வருவதா ஒத்துக்கச் சொன்னார். அதுக்கு முன்னால அவன் தரும் எதையும் குடிக்க வேண்டாம் என்று எச்சரித்தார்.''

''உனக்கு அவ்வளவு துணிச்சல் எங்கே இருந்து மது... ... எங்க யார்கிட்டவும் சொல்லலை?''



''இனி ஒரு பொண்ணு அவனால பாதிப்பு அடைஞ்சிடக் கூடாதுன்னு ஒரு எண்ணம்... ஒரு வெறி. அதான் என்னைத் துணிஞ்சு போராட வைச்சது.

உங்ககிட்டே ஏன் சொல்லலை என்றால்... அம்மாக்கு தெரிஞ்சால் என்னை வீட்டை விட்டு வெளியே போக விட மாட்டாங்க. எல்லாத்தையும் வெற்றிகரமா நடத்திட்டு வந்துட்டேன் என்று சொல்லிக்கிட்டே இருக்கேன். இப்பக் கூட நீ பயப்படுறே. அப்படி இருக்கும் போது எப்படிச் சொல்ல முடியும்? அதை விடு. நீ கதையை கேளு.

கமிஷனர் என்கிட்டே என்ன தெரியுமா சொன்னார்? என்று கேட்டவள் கமிஷனர் தன்னிடம் கூறியதை அப்படியே அவனிடம் கூறினாள்.

உன் துணிச்சலை நான் பாராட்டுகிறேன் மதுமதி. நீ பயந்திடாதே. நீ பயந்து நம்மை காண்பிச்சு கொடுத்திட்டா நம்மோட மொத்த உழைப்பும் வீணா போயிடும். நீயும் சிக்கலில் மாட்டிக்குவே! இதை சக்சஸ் புல்லா முடிச்சிட்டா உன் பேரே வெளியே வராமல் நான் பார்த்துக்குவேன்.

எனக்கு உன் வயசிலே ஒரு பொண்ணு இருக்காம்மா. நீயும் என் பொண்ணு மாதிரி. நாங்க உன்னைத் தொடர்ந்துகிட்டே தான் இருப்போம். அதனால நீ பயப்படாமல் இயல்பா நடி. உன்னோட நடிப்பில் தான் நம்மளோட வெற்றியே அடங்கி இருக்கு.

அவர் என்னிடம் சொன்ன மாதிரி அவங்களோட பாதுகாப்பு வளையத்துக்குள்ளே நான் இருந்தேன்.

குடிப்பதற்கு கொண்டு வந்து கொடுத்த கூல் டிரிங்க்ஸில் மாத்திரையைக் கலந்துட்டதா அவனோட ஆண்... அந்த ஹோட்டல் சர்வர் வந்து நிதிஷிடம் கண் ஜாடை காட்டிவிட்டுப் போனான்.

நிதிஷ் என்னைக் குடிக்கச் சொன்னதும் நான் அதை இயல்பா கையிலே எடுத்துக்கிட்டு குடிக்காமல் வேடிக்கை பார்ப்பது போல் சுற்றும் முற்றும் பார்த்தேன்.

அங்கே போலீஸ் ஆள் ஒருத்தர் என்னை குடிக்கும்படி ஜாடை காட்டினார், அதாவது எங்க திட்டப்படி அந்த சர்வரிடம் நைசா பேச்சுக் கொடுத்து அந்த போதை மாத்திரை கலந்த ஜூஸ் மாற்றப்பட்டு விட்டது என்று அர்த்தம்.

அதை நான் குடிச்சிட்டு அவன் கூடக் கிளம்பும் போது காலிலே ஏதோ இடறியதால லேசா நடை தடுமாறி னேன். அந்த நிதிஷ் போனில் மாத்திரை வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சுன்னு அவன் பிரண்டு கிட்டே சொன் னான்.

ஓகோ! உடனே வேலை செய்ய ஆரம்பிச்சிடுமான்னு நினைச்சிக்கிட்டு நானும் மயங்கிய மாதிரியே நடிச்சேன்

அதுக்குப்புறம் சினிமா க்ளைமேக்ஸ் மாதிரி போலீஸ் வந்து வில்லன் கும்பலை அரெஸ்ட் பண்ணிட்டு போயிட்டாங்க. இந்த ஹீரோயினும் ஹீரோவை தேடி வந்துட்டேன்.''

''இதெல்லாம் எப்ப மது நடந்துச்சு?''

''ஜஸ்ட் இப்போ... கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவன் நேத்து என் பார்த்டே ட்ரீட்டிலேயே முயற்சி



பண்ணினான் போல. என்னை ஜூஸை குடி குடின்னு நச்சுப் பண்ணிக்கிட்டு இருந்தான். நானும் பொருத்தமா, அவன் நம்பும் படியா என்ன சாக்கு சொல்லலாம் என்று யோசிச்சுக்கிட்டு இருந்தேன்...'' என்று சொல்லிக் கொண்டு இருந்தவளை இடையிட்டு,

''இந்த மதுவுக்கு இருக்கிறதே கொஞ்சுண்டு மூளை. அந்த மூளைக்குள்ளே நிதிஷை சமாளிக்கிற மாதிரி காரணம் ஒண்ணும் உதிக்காதுன்னு சர்தார்ஜி உனக்கு ஹெல்ப் பண்ணிட்டானோ?'' என்று ஜீவா கண் ணடித்துக் கொண்டே கேட்க,

''ஜீவா! உனக்கு எப்படித் தெரியும்?!'' என்று அவள் ஆச்சரியமாகக் கேட்டாள்.

## 25



மதுமதிக்கு ஜீவாவின் கேள்வி அளவிட முடியாத ஆச்சரியத்தை கொடுத்தது.

அவளது ஆச்சரியத்தைக் கண்டு முறுவலித்துக் கொண்டே, ''எனக்கு எல்லாமே தெரியும்டா மது'' என்று அவள் தலையில் செல்லமாக முட்டினான்.

''ஹேய்! முதல்ல இருந்து முழுசா சொல்லு'' என்றதும்,

''அவனை நான் முதன் முதலா காபி ஷாப்பிலே பார்த்தேன் இல்ல... அப்பவே எனக்கு அவன் பார்வை

சரியாப் படலை. காலேஜிலே தினமும் எத்தனை பேரைச் சந்திக்கிறேன். அதனால எனக்கு நல்லா தெரிஞ்சது அவன் உன்னை சைட் அடிக்கலை என்று.

அவன் பார்வை சாதாரணமா வயசுப் பசங்க பொண் ணுங்களை பார்க்கிற பார்வை இல்லைன்னு புரிஞ்சது.

அதனால அவன் நடவடிக்கையை பிரைவேட் டிடக்டிவ் வைச்சு கண்டுபிடிக்க ஏற்பாடு செஞ்சேன். அவன் தப்பானவன் என்று சொன்ன அவங்க என்ன தப்பு செய்யுறான் என்று கண்டுபிடிக்க கொஞ்சம் டைம் கேட்டாங்க.

ஆனா என்னால காத்திருக்க முடியாமல் உடனே கமிஷனரை போய் பார்த்தேன். அவர் என் ஸ்டூடண் டோட அப்பா.

அடுத்த நாளே நீ நிதிஷ் பத்தின முழு விவரத்தோட கமிஷனரைத் தேடி வந்தே. நீ துணிஞ்சு இதைச் செய் யட்டும் என்று தான் நாங்க திரை மறைவில் வேலை செஞ்சோம். நாங்கன்னா நான், அப்பா, மாமா, அருண் நாலு பேருமே.

நேத்து நீ என் கிட்டே பர்த்டே கிஃப்டை வாங்கிட்டு போனதுக்கு அப்புறம் கமிஷனருக்கு போன் பண்ணி நிதிஷ் இன்னைக்கு வரச் சொன்னதா சொல்லி இருக்கே. அவரும் எனக்கு போன் பண்ணிச் சொன்னார். அப்போல இருந்து எனக்கு திக் திக்குன்னு இருந்துச்சு.

நாங்க நாலு பேருமே உன் பின்னாலேயே தான் மது வந்தோம். என் ஸ்டூடண்ட் ஒருத்தன் வினோத் என்று பேரு. நான் கமிஷனர் மக கூட அடிக்கடி பேசுறதை



பார்த்து விஷயம் என்னன்னு அவளை நச்சரிச்சு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டான்.

அவனும் நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பத்து ரவுடிகளையும் அனுப்பி வைச்சான். ஆக மொத் தத்திலே நீ தனி ஆளா போகலைடா.

இந்தக் காலத்திலே பொண்ணுங்களுக்கு ஆபத்து எந்த நேரத்திலே எந்த ரூபத்திலே வரும் என்று யாரால சொல்ல முடியும்? நான் எல்லா நேரமும் உன்னைக் கண்காணிச்சுக்கிட்டே இருக்க முடியாது இல்லையா. அதான் நீ துணிஞ்சு தைரியமா தனியா செயல்படட்டும் என்று நினைச்சேன்.''

''எல்லாம் தெரிஞ்சிருந்தும் ஏன்டா இவ்வளவு நேரம் என்கிட்டே கதை கேட்டே?'' என்று அவனைப் பார்த்து முறைக்க,

''ரீடர்ஸ்க்கு கதை தெரியணும் இல்ல'' என்று சொன் னதும் அவனுக்கு ரெண்டு அடி கொடுத்தாள்.

''இல்லைடா மது. இத்தனை நாளா எங்க யார்கிட் டவும் சொல்லக் கூடாதுன்னு மறைச்சு வைச்சு காரியம் செஞ்சே. ஆனால் உன்னுடைய ஃபீலிங்ஸை என் கிட்டே நீ சொல்ல வேண்டாமா? அதான் உன்னைச் சொல்லவிட்டு கேட்டுக்கிட்டு இருந்தேன்.

வயசுப் பொண்ணை வீட்டில் உள்ளவங்களோட பெர் மிஷன் வாங்காமல் இவ்வளவு பெரிய ஆபரேஷனில் ஈடுபடுத்துவாங்களான்னு கூடவா மது யோசிக்க மாட்டே?'' என்று கேட்டதும்,

''ஆமால்ல நான் யோசிக்கவே இல்லை அத்தான். அதான் போலீஸ் என்னை இறக்கிவிட்டதும் அருண் சரியா அந்த இடத்திலே வந்து நின்னானா?''

''ஆமாடா மது. அவனோட ஆள் வேற யாராவது போலீஸை பாலோ பண்ணினால் நாங்க எல்லோரும் உன் முன்னாடி வந்து நிக்குறதை பார்த்தாலே அந்த நிதிஷ்க்கு நீ தான் அவனைப் போலீஸில் காட்டிக் கொடுத்திட்டே என்று தெரிஞ்சிடும் இல்ல... அதான் நாங்க வெளியே தெரியாமலே உன்னை பாலோ பண்ணினோம்'' எனறு விளக்கினான்.

''இவ்வளவு ஏற்பாடு பண்ணி இருக்கே. அப்புறம் ஏன்டா உனக்கு இப்போ கூட இதயம் தாறுமாறா துடிக்குது?''

''நான் அப்பவே சொன்னேன் இல்ல மது. புத்திக்கு தெரியுது. ஆனா மனசுக்கு புரியலை. அதான் காலை யிலே இருந்து ஒரே டென்ஷனா இருந்தேன்.''

''அப்படின்னா ஜீவா இன்னைக்கு காலையிலே எங்க வீட்டுக்கு நீ வந்தப்போ இதை நினைச்சு தான் சோகமா இருந்தியா? நான் கூட நான் உன்னைக் கல்யாணம் பண்ண மாட்டேன் என்று சொன்னதால அப்படி இருந்தி யோன்னு நினைச்சேன்.''

''சே! சே! எனக்கு அந்த பயமே கிடையாது. நானெல்லாம் ரொம்ப அறிவாளிடா மது. என் மனசிலே உள்ளதையும் கண்டுபிடிப்பேன். உன் மனசிலே உள்ளதையும் கண்டுபிடிப்பேனாக்கும்'' என்று பெருமை

''ஆமா காலையிலே ஏன் அப்படி சொன்னே? ஜீவாவைக் கல்யாணம் பண்ண மாட்டேன் என்று'' என்று விசாரித்தான்.

''இன்னைக்கு இந்த நிதிஷ் பிரச்சனையை முடிச்சதுக்கு அப்புறமா தான் வீட்டிலே சொல்லணும் என்று நினைச்சேன்.''

''அதுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்?'' என்று அவளைத் திட்டியவன்,

''கேட்க மறந்துட்டேன். லவ் பிரபோஸ் பண்ணும் போது கார்டு கொடுக்கணும், பூ கொடுக்கணும் என்று கொஞ்ச நாளைக்கு முன்னாடி யாரோ கதை சொன்னாங்க. எங்கேம்மா கார்டு, பூ?'' என்று அவளைப் பார்த்துக் கேட்டதும்,

சில நொடிகள் விழித்தவள், ''நான் ஒண்ணும் உன்னை லவ் பண்ணுறேன் என்று சொல்லலையே. கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று தானே சொன்னேன்'' என்று கூறி சமாளிக்க முயன்றாள்.

''அப்படியா? ஆனா நான் லவ் பண்ணித் தான் கல்யாணம் பண்ணனும் என்று முடிவு பண்ணியிருக்கேன்!''

''இந்த பொக்கே கொடுப்பது, கார்டு கொடுப்பது... அதெல்லாம் சினிமாவிலே தானே நடக்கும் என்று கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு மகான் என்கிட்டே சொன்னார் ஜீவா.''

''ஆனா அந்த மகான் தன் தத்துவத்தை மாத்திக் கிட்டார்'' என்றதும் அவனைப் பரிதாபமாகப் பார்த்

"ஹேய் மது! இப்போ உன் முகம் ஏன் சோகமாகுது? நான் என் தத்துவத்தை தானே மாத்தினதா சொன்னேன். உன்னை இல்லையே!"

"ஓ! வாத்தியார் சார்க்கு அப்படி ஒரு நினைப்பு இருக்கா?" என்று முறைத்துக் கொண்டே கேட்டாள்.

"எனக்கு என்னைக்குமே என் மது மட்டும் போதும்" என்றவன் தன் அலமாரியில் இருந்து அந்த வாழ்த்து அட்டைகளை எடுத்து வந்து நீட்டினான்.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அத்தான் நீங்களா கிரீட்டிங் கார்டு வாங்கினீங்க?" என்று கேட்டுக் கொண்டே பிரித்துப் பார்த்தாள்.

தனக்காக... தன்னுடைய விருப்பத்துக்காக என்று வாழ்த்து அட்டை வாங்கி சொந்தமாக அவன் எழுதிய கவிதைகளைப் பார்த்ததும் மதுமதி பேச்சிழந்தாள்.

"நீ சொன்ன அன்னைக்கே வாங்கிட்டேன். ஆனா நீ என்னைக் கல்யாணம் பண்ணச் சம்மதிச்ச பிறகு தான் கொடுக்கணும் என்று நினைச்சேன். என் கவிதை எப்படி? அதை பத்தி சொல்லு. ரொம்ப கேவலமா இருக்கா?"

"நீங்க சொல்ல வருவது புரிஞ்சா போதாது அத்தான். எனக்கு மட்டும் கவிதைக்கான இலக்கணம் தெரியுமா என்ன?"

"எப்படி இருக்குன்னு சொல்லு மது" என்று அவன் வலியுறுத்தவும்,

அவள் அந்தக் கவிதையின் மீது தன் இதழ் பதித்து நிமிர்ந்தாள்.



"இது போங்கு ஆட்டம். எழுதினது நான். அதனால நீ இங்கே கிஸ் பண்ணு" என்று ஜீவா தன் கன்னத்தைக் காட்ட,

"நீங்க... அதாவது உங்க கை தானே எழுதுச்சு. அப்ப சரி" என்று அவனது கையைப் பற்றி அவனது உள்ளங்கையில் முத்தம் பதிக்க அவனுக்கு குறுகுறுவென்று இருந்தது.

"ஆனா இந்தக் கவிதையை யோசிச்சது என் மூளை ஆச்சே!" என்றதும்,

"அதுக்காக என்ன பண்ணனும்?" என்று அவள் விழிக்க,

"என் நெத்தியிலே கிஸ் பண்ணு" என்றான்.

முறைத்துக் கொண்டே அவன் சொன்னதை செயலாற்றினாள்.

அருகே... வெகு அருகே அவள் இருக்க தன்னோடு அவளை இறுக்கியவன் அவளது காதில், "மது, நான் வேணா அந்தக் கவிதையை உன் வாயால உனக்கு படிச்சுக் காட்டட்டுமா?" என்று கிறங்கிய குரலில் கேட்டதும்,

முதலில் விழித்தாள். அதன் அர்த்தம் புரிந்த பின், "சீ போடா!" என்று வெட்கியவள்,

"இது தான்டா போங்காட்டம்" என்று சொல்லி அவனது பிடியில் இருந்து விலகியவள்,

"கொஞ்ச நாள் முன்னாடி உன்னைக் கல்யாணம் பண்ண மறுத்தவளை, இன்னைக்கு நீ இல்லைன்னால் நான் இல்லைன்னு சொல்ல வைச்சிட்டியே! என்ன மாயம் செய்தாய், ஜீவா?" என்று கேட்டாள்.

''மாயமும் இல்லை. மந்திரமும் இல்லை. என்னை லவ் பண்ணுறதை உணராமல் நீ ஒரு டியூப் லைட்டா இருந்தே. நான் விலகி நின்று வெறுப்பேத்தினதும் நீ பிரகாசமா எரிய ஆரம்பிச்சிட்டே'' என்று ஜீவா சொன்னதும்,

''அப்படின்னா நான் பிரகாசமா இருக்கணும் என்றால் உன்னை விட்டு விலகி இருக்கணுமா ஜீவா?'' என்று மதுமதி குறும்புடன் கண்ணடித்துக் கொண்டே கேட்க,

''அம்மா தாயே! நான் சொன்னதை அழிச்சிடு'' என்று வேகமாக கூறியவன்,

''கீழே அத்தை வந்து இருக்காங்களோ? அத்தை குரல் கேட்குது தானே! மாப்பிள்ளையை வரவேற்க அவ்வளவு அவசரமா?'' என்று ஜீவா நக்கல் பண்ண,

மதுமதி வாய் மூடிச் சிரித்தாள்.

''இப்ப எதுக்கு சிரிக்கிறே?'' என்று அவன் விழித்துக் கொண்டே கேட்க,

''நீ தான் அடுத்தவங்க மனசிலே உள்ளதைக் கண்டு பிடிக்கிற அறிவாளி ஆச்சே! எங்க அம்மா மனசிலே உள்ளதைக் கண்டுபிடி பார்ப்போம்'' என்று சவால் விட்டாள்.

''நான் உன் மனசிலே இருக்கிறதை பற்றி தானே சொன்னேன். எங்க அத்தை பத்தியெல்லாம் எனக்கு தெரியாது'' என்று சவாலை ஏற்காமல் அவன் பின் வாங்க,

''சரி விடு. நானே சொல்லுறேன். எனக்கு தெரிஞ்ச ... எங்க அம்மா உனக்கு மாலை போட வந்து



இருக்க மாட்டாங்க. பட்டாசு வெடிக்க வந்து இருப்பாங்க. வா கீழே போகலாம்'' என்று அவனை இழுத்துக் கொண்டு நடந்தாள்.

அவர்கள் இருவரும் படி இறங்கி வந்ததும் கீதா அவன் சட்டைக் காலரை பற்றி அவனது இரு கன்னத்திலும் அறைந்தார்.

மதுமதி ஜீவாவை இழுத்து பின்னுக்கு தள்ளி, ''அம்மா ரிலாக்ஸ்!'' என்றாள்.

''மது, இதான் நீ சொன்ன பட்டாசா?'' என்று அவள் பின்புறம் இருந்து அவன் முனங்க,

''யாரைக் கேட்டுடா என் பொண்ணை அனுப்பி வைச்சே?'' என்று கீதா ஜீவாவை கேட்டதும்,

''யாரைக் கேட்கணும்? அவ என் பொண்டாட்டி'' என்றான்.

மதுமதிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் வாய்விட்டு நகைத்துக் கொண்டே,

''அம்மா, ஜீவா, நீங்க ரெண்டு பேருமே டூ மச்சா பண்ணுறீங்க. அவன் என்னை பொண்டாட்டின்னு சொன்னதும் டூ மச். நீங்க அவனை அவங்க அம்மா முன்னாடி அறைஞ்சதும் டூ மச்'' என்றதும்,

கீதா கலாவின் புறம் திரும்பி, ''அண்ணி சாரி'' என்று மன்னிப்பு கேட்டார்.

''நீ அறைஞ்சதிலே தப்பே இல்லை கீதா. மது ஜீவாவை தேடி மாடி ஏறிப் போன பின்னாடி உங்க அண்ணன் நடந்த விஷயத்தை என்கிட்டே சொன்னார். எனக்கும் செம கடுப்பு'' என்று சொல்லிக் கொண்டே ...வரை முறைக்க,

''அப்போ அவங்கவங்க வீட்டுக்காரரை கேள்வி கேட்க முடியாமல் தான் என்னை அறையுறீங்களா? இதெல்லாம் நல்லா இல்ல சொல்லிட்டேன்'' என்று ஜீவா புலம்ப,

மதுமதி ''ஆனா ஜீவா, நீ அம்மாவையும், அத்தையையும் பார்த்து என்னை எடை போடக் கூடாது'' என்று சொன்னாள்.

''நீ எதைச் சொல்லுறே மது?'' என்று அவன் விழித்தான்.

''உன்னை அடிக்க மாட்டேன் என்று கனவு காணாதே'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள்,

''அச்சோ! அத்தை மறந்துட்டேன். நீங்க ஜீவாவை மரியாதையா கூப்பிடச் சொன்னீங்க இல்ல. மாத்திக்கிறேன். இந்த நொடியிலே இருந்து மாத்திக்கிறேன்'' என்று கலாவைப் பார்த்து சொன்னவள்,

தனக்கு பின்னால் நின்று கொண்டிருந்த ஜீவாவின் புறம் திரும்பாமலே, ''அத்தான் இனிமேல் நான் உங்க கிட்டே ரொம்ப மரியாதையா பேசப் போறேன்'' என்று அறிவித்தாள்.

''பெட் ரூமிலே கூடவாடா மது?'' என்று அவன் குனிந்து அவள் காதில் கிசுகிசுக்க,

'எல்லோர் முன்னாடியும் என்ன சொல்லுறான் பாரு! இவனை...' என்று கடுப்பானவள் திரும்பி அவன் கைகளில் இரண்டு அடி வைத்தவள்,

''அத்தை, நானே மரியாதை கொடுக்கணும் என்று நினைச்சா கூட உங்க பையன் விட மாட்டான் போல!'' என்றாள்.

பின் தன் தாயை அணைத்தவள், ''எனக்கு ஒன்னும் இல்லைம்மா. நான் தைரியமா செயல்பட்டு இருக்கேன் என்று நீங்க சந்தோஷப்படணும்'' என்றாள்.

ஜீவாவைப் போலவே அவரது உடலும் அதிர்ந்தது. கீதா தன் மீது வைத்திருக்கும் பாசம் அவளை நெகிழ்த்தியது. ராஜன் அவள் அருகே வந்து அவளது தலையை வருடிக் கொடுத்தார்.

அப்பொழுது அருண் கையில் ஒரு கவருடன் உள்ளே நுழைந்தான்.

''வாடா அருண்'' என்று வரவேற்ற ஜீவா அவனிடம் சென்று அந்தக் கவரை வாங்கினான்.

''அத்தை, மாமா பக்கத்திலே போய் நில்லுங்க'' என்று சொல்லி அவரை இழுத்துக் கொண்டு போய் ராஜன் அருகில் நிற்க வைத்தான்.

மதுமதியையும் இழுத்துக் கொண்டு வந்த, ''ஹேப்பி ஆனிவெர்சரி மாமா அன்ட் அத்தை. எங்க மூணு பேர் சார்பாவும் இந்த கிஃப்ட்' என்று சொல்லி அவர்கள் கால்களில் விழுந்தான். மதுமதியையும் தன்னோடு சேர்த்து அவர்கள் கால்களில் விழ வைத்தான்.

''தாங்க்ஸ்டா ஜீவா!'' என்றவர்களுக்கு, காலில் விழுந்திருப்பவர்களுக்கு என்ன வாழ்த்து சொல்லுவது என்று தெரியவில்லை.

சில நொடிகள் திகைத்த கீதா, ''சுபஸ்ய சீக்கிரம்'' என்று வாழ்த்தினார்.

எழுந்த ஜீவா, ''ம்ம்ம் இத இதைத் தான் நான் எதிர்பார்த்தேன்'' என்று கண்ணடித்துக் கொண்டே சொன்னவன்,

''அத்தை, வாழ்த்தினா மட்டும் போதாது. அதுக்கான வேலையை தொடங்கணும்'' என்றான்.

மதுமதியும் நிமிர்ந்து கொண்டே, ''அலைஞ்சான் கேஸ்'' என்றாள்.

''யாரு நான் அலையுறேனா? சரி விடு. அத்தை, உங்க பொண்ணு இன்னும் கொஞ்ச நாளிலே காலேஜ் முடிச்சிடுவாள். அதுக்கு அப்புறம் வேலையிலே ஜாயின் பண்ணும் போது போஸ்டிங் எந்த ஊரிலே போடுவாங் கன்னு தெரியாது. அவ எப்போ சென்னைக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டு வராளோ அன்னைக்கு கல்யாணத்தை வைச்சுக்கலாம்'' என்றதும்,

''ஐயோ! நான் இதை யோசிக்கவே இல்லையே. நான் எப்படி வேற ஊருக்கு வேலைக்கு போவேன்?'' என்று சப்தமாக புலம்பிய மதுமதி ஜீவாவிடம்,

''ஏன் ஜீவா, நான் பேசாமல் எம்.ஈ. படிக்கட்டுமா? நானும் காலேஜ் லெக்சரரா ஆகட்டுமா?'' என்று கேட் டாள்.

''ஹேய் மது! எனக்கு பிடிச்ச வேலையை செய். எனக் காக ஏன் மாற நினைக்கிறே?'' என்று ஜீவா சொன்னதும்,

அருண் ஜீவாவின் காதில், ''அத்தான், நீங்க இதை மது மேல உள்ள அக்கறையிலே சொல்லலை இல்ல. அவ கிட்டே படிக்கப் போற ஸ்டூடண்ஸோட எதிர் காலத்தை மனசிலே வைச்சுத் தானே சொன்னீங்க?'' என்று கேட்கவும்,

ஜீவா முறுவலித்துக் கொண்டே, ''நீ என் மச்சான் டா!'' என்று அவனைத் தோளோடு அணைத்துக் கொண் டான்.



''என்னைக் கவுக்கிறதுக்கு என்னடா பிளான் போடுறீங்க?'' என்று மதுமதி கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை மது'' என்று அருண் சொன்னதும்,

''நான் உன்னை நம்ப மாட்டேன் டா அருண். ஜீவா தனியா இருந்தா அவனை நம்பலாம். ஆனா உன் கூட இருந்தான்னா, அவனையும் நான் நம்ப மாட்டேன். உன்னை எனக்கு தெரியும்டா. எத்தனை வருஷமா பார்க் கிறேன்'' என்று தம்பியை பார்த்து நக்கல் பண்ணியவள்,

தன் அப்பா அம்மாவிடம், ''சாரிம்மா. சாரிப்பா. நான் சுத்தமா உங்க ஆனிவர்சரியை மறந்தே போனேன். ஹேப்பி ஆனிவெர்சரி அப்பா. ஹேப்பி ஆனிவெர்சரி அம்மா'' என்று வாழ்த்தியவளை தொடர்ந்து அனை வரும் வாழ்த்தி முடித்தனர்.

''நானுமே உன்னோட டென்ஷனில் மறந்துட்டேன்டா மது'' என்று ராஜன் சொன்னார்.

அவர் தன் மனைவியிடம் திரும்பி, ''நீ எப்படி மறந்தே கீதா?'' என்றார்.

''எனக்கு காலையிலே இருந்தே மனசே சரியில்லாமல் இருந்தது. என்னமோ பிரச்சனை என்று உள்ளுணர்வு சொல்லிக்கிட்டே இருந்தது'' என்றதும் மதுமதி தாயை அணைத்துக் கொண்டாள்.

''சரி அண்ணா நாங்க கிளம்புறோம்'' என்று கீதா கிளம்ப எத்தனிக்க,

''மது. வீட்டுக்கு போனதும் செமஸ்டர் எக்ஸாம்க்கு ஒழுங்காப் படி. நீ ஒரு வாரமா ஒண்ணும் படிக்காமல்

ஓ.பி அடிச்சிட்டே'' என்று அவளைப் பார்த்துக் கூறிய ஜீவா,

தன் அத்தையிடம், ''நாளையில் இருந்து காலங் கார்த்தாலே அவ முகத்திலே தண்ணியை ஊத்தியாச்சும் எழுப்பி படிக்க வைங்க அத்தை'' என்று கூறினான்.

மதுமதி ஜீவாவை முறைத்துக் கொண்டு நிற்க,

அருண் தன் அக்காவிடம், ''மது நீ அத்தானைக் கல் யாணம் பண்ணும் ஐடியாவை மறுபரிசீலனை பண்ண விரும்புறியா?'' என்று கேட்டான்.

அவள் ஆமாம் என்று தலை ஆட்டியதும்,

''இப்போ எதுக்குடா எனக்கு ஆப்பு அடிக்குறே?'' என்று ஜீவா அவனைப் பார்த்து பரிதாபமாகக் கேடக,

''வெயிட் அத்தான். உங்க சார்பா நானே இதுக்கு பதிலும் சொல்லுறேன்'' என்றவன்,

''செல்லாது செல்லாது. நீ யெஸ் சொன்னது சொன் னது தான்'' எனவும் அனைவரும் முறுவலித்தனர்.

அந்த அழகிய குடும்பத்தின் ஆனந்தம் என்றென்றும் நிலைத்திருக்கட்டும் என்று வாழ்த்தி விடைபெறுவோம்.